ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



இராமநாடகமென்று வழங்குகிற

குசலவநாடகம்

இதனுள் ஸ்ரீராமர் அரசிருக்தல்
சீதைபிரிதல் வால்மீகாசிரமத்திற் பிள்ளைபெறல்
லவன் குசலன் உயுத்தம், அஸ்வமேதயாகம்
குசலனுக்குத் திருக்கலியாணம் இளவரசு
பட்டம் இவைஅடங்கியிருக்கின்றன.

இவை திருவண்ணாமலை
வெங்கடராஜலுமுதலியாரால் பரிசோதித்தபிரதிக்கிணங்க
இஃது
திருத்தணிகை
செங்கல்வராயசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு

தக்கோலம்,
இராமசாமிநாயுடு
அவர்களால் தமது
ஸ்ரீ லட்சுமிநாராயணவிலாச
அச்சுயந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

MADRAS,
1893



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



ஹரிஓம்.   நன்றாக   குருவாழ்க   குருவேதுணை.

குசலவநாடகம்

விநாயகர்-தோத்திரம்.

காப்பு-வெண்பா.

இ-ம்-சங்கராபரணம்.

திசைகள்புகழ்ஸ்ரீராமர் செல்வனெனவேயுதித்தே
குசலவனாடகத்தனைக் கூறுதற்குச்-சுதிகரஞ்சேர்
இந்தணியுஞ்சங்கரனா ரீன்றவுயர்தும்பிமுகன்
கந்தமலர்ச்செஞ்சரணங் காப்பு.

முருகர்துதி திபிதை

மயிற்பரியமர்ந்தேதெய்வ மயிலொருபுரத்திற்கொஞ்ச
மயிற்குறவள்ளிநாட வடிவழகொருங்கேகொண்டு
மயிற்சமர்புரியும்வஞ்ச வலுகிசாசரனைமாய்க்கு
மயிற்சரத்தணிந்த வேலராருள்பதந்துதித்துவாழ்வாம்.

சங்கரர்துதி திபிதை,

பூமுடிச்சுமந்தசேடன் புகழருஞ்சிவனார்கொன்றைப்
பூமுடிபுனைந்தவீசன் புரமொருமூன்றுஞ்செற்றோன்
பூமுடிதிருமாலொன்றாய்ப் புணர்ந்தவெம்பெருமான்பாதப்
பூமுடிதரித்தேயானும் புகலுவேனிசையத்தானே.

திருமால் திபிதை.

மா காய்கூப்பித்துதித்துமாமடியிற்சேவிக்கமகிழ்ந்தன்பாலே (ன்
மாராம்பொன்னெட்டுத்தன்னுளுடன் கொஞ்சுமாகுணத்தோன்றந்தமு

மாகாத்தைமுடிமிசைக்கொண்டுரைசொலவந்தருளிட்சிரசாகரத்தில
மாகாததவெணப்பணியபரியந்தமுதமளித்தவன்றாள்வணங்குவேனே.

பார்வதிதுதி-விருத்தம்,

குலிசனருமகனெனுநற்குயின்மொழியாள்வாமிமலைக்குமரியாழ்த்த
வலிசனனக்கடல்படியுவடணமதவிரடியர்தமைமனலுவிற்காக்கு
மலிசடையவள்ளல்பரசிவனிடதுபாகத்தேவியங்குந்தூய
கலிசதங்கைபதசரணக் கமலமுடிமிசைக்கணியக்கவசந்தானே.

இலக்குமிதுதி-பின்முடுகு-வெண்பா.

நெஞ்சமலர்மீதினித நின்றுசுகசுபாகல
மிஞ்சவுதவித்தருள வேண்டுமேகிஞ்சுகநேர்
சொற்புகலுமைக்கணுயர் சொற்பதமுமுற்றுலவி
விற்பனமுகந்தனுரமின்

சரஸ்வதிதுதி-விருத்தம்.

வல்லிநுண்ணிடையாளெங்கள் மறைக்கொடிகலைகளாய்ந்த
வல்லிவெண்சலசமுற்ற மலர்க்கொடிமறையோனின்
வல்லிபெண்டிருவாமின்னங் கொடிசரஸ்வதிபவச்செவ்
வல்லியெம்முடிமேற்சூடி வணிபெறவறைகுவேனே.

குருதுதி-கொச்சகம்.

பாசமிகும்ராஜர்மிகப் பரவிநிதம்போற்றிசெயும்
வாசமிகும்ஸ்ரீராமர் மைந்தனெனவேயுதித்த
தேசமிகுங்குசலவன்றன் றிகழ்கதையைநாடகமாய்ப்
பேசுவதற்குக்குரவனடி பிரியமுடன்பணிகுவம்யாம்.

அவையடக்கம்-விருத்தம்.

சந்தமிலக்கணத்தொடிலக்கியத்தின்
சாரமுறுமாரணங்களாகமத்தின்
பந்தமுஞ்ஜோதிடங்கள்ஜோசியங்கள்
பழுதின்றிக்கற்றபெரியோர்கள்முன்னே
சுந்தரஞ்சேர்குசலவன்றன்னாடகத்தைச்
சுதனன்னையப்பன்முனந்துள்ளியாடி
அந்தமிகுமதலைச்சொற்கூறும்வண்ணம்
ஆடினெனவர்தாட்கொண்டாடினேனே.

முருகர்வணக்கம்-தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

வேலாவுனைநம்பினேன் அசுரர்குல காலாவுனைநம்பினேன்

அநுபல்லவி.

வேலாவுனைநம்பினேன் வேறுவினைதாராமல்
சீலாவெள்ளிதெய்வானை நோலாபிறைவராமல் வேலா

சரணங்கள்.

பத்தர்கள்பணிபாதா அடியவர்சித்தமகிழுநீதா
உத்தமகுருநாதா வறுமைபிணியற்றிடவருள்போதா
முத்தமிழ்பாடத்தெரியாதமூடர்வாய்க்
குற்றநவின்றாலுங்கொண்டருள்செய்குவாய் வேலா

சங்கரியருள்பாலா வஞ்சகரைச்சங்கரித்திடுமேலா
இங்கிதபரிபாலாதேவாகளிதையத்துணையசீலா
திங்களணிந்தஅரன் செவியிற்பிரணவத்தை
மங்காமலுச்சரிக்கும் வானேயருள்பவத்தை வேலா

பரமசிவன்வணக்கம்-தரு-இ-ம்-காம்போதி அடதாளம்

பல்லவி.

சம்போசதாசிவ-சம்போசதாசிவ-சம்போசதாசிவ-சம்போசதாசிவ

அநுபல்லவி.

சம்போ அரகரதவனபுரகர
ஆங்கசிதாகரதேவதிவாகர சம்போ

சரணங்கள்.

மங்கைமணவாளா மறவியையுதைதாளா
பொங்கரவணிதோளா புனிதகங்காளா சம்போ

மானுமழுவுமலர்க் கையிலேந்திய
மாதவனே சிவபோதகனே சம்போ

வெள்ளைவிடைமீதில் மெள்ளநடந்திடுங்
கள்ளமறவிடுவுள்ளவனே சம்போ

வாசாகையிலையில ஈசாபிரகாச
நேசாவனுதினம் வாசகனே சம்போ

வாடிமுனிவோர்கள் நாடித்தொழுவோர்க்கு
வாய்த்தவனே கிருபைபூத்தவனே சம்போ

அத்திபுரித்தருள வித்தகனேதினம்
பத்தியனுக்கிரகம் வைத்தருள்வாய் சம்போ

பொங்கியகங்கையுந் திங்களுங்கொன்றையும்
பூண்டவனேயென்னையாண்டவனே சம்போ

காமன்றனைக்கண்டு மாமன்றனைவெட்டும்
காத்திரனே திரிநேத்திரனே சம்போ

ஆலந்தனைத்தின்றும் காலன்றனைவென்றும்
அம்பரனேநற் றிகம்பரனே சம்போ

பிள்ளைநகர்வாழும் புனிதகங்காளா
பொற்கொடியம்பிகை போற்றுங்குணாளா சம்போ

காட்டை-தரு-திரிபுடைதாளம்-கண்ணிகள்.

ஜெயஜெயவம்பிகைநாதா ஜெயஜெயவும்பர்கள்போத
ஜெயஜெயவன்பர்கள்நீதா ஜெயஜெயகண்ணியபாதா ஆ-ஆ

ஜெயஜெயசுந்தரிபாலா ஜெயஜெயகுஞ்சரிலோலா
ஜெயஜெயசம்மாரசீலா ஜெயஜெயராஜசெவ்வேலா ஆ-ஆ

ஜெயஜெயகுசலராசன் ஜெயஜெயநாடகந்தன்னை
ஜெயஜெயவென்றேநாடி ஜெயஜெயவென்றேபாட ஆ-ஆ

ஜெயஜெயவெண்கமலமிசை ஜெயஜெயவென்றேவிளங்கும்
ஜெயஜெயசாஸ்வதியே ஜெய்தருகத்துணையே ஜெ

மங்களம்.

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-திரிபுடைதாளம்.

பல்லவி.

மங்களம்-ஜெயமங்களம்-சுபமங்களம்

அநுபல்லவி.

அங்குசபாசற்கும் ஆறுமுகவற்கும்
அருள்தந்திடு சங்கரற்கும்
அழகுற்றிடு முமையவளுக்கும்-மங்

சரணங்கள்.

சங்குசக்கரங்கையிற் றரித்தநெடுமாற்கும்
சகமுற்றுந்துதிபெற்ற தாயாந்திருவிற்கும்
பொங்குங்கலைமகட்கும் புலோமிசைமுதலோற்கும்
புகழும்பன்னிருவற்கும் போததபோதனற்கும்
பொற்புற்றிடு புலவர்களுக்கும்
புகழ்பெற்றிடு தலைவர்களுக்கும்-மங்க

அண்டமெங்கணும்புக மூர்ந்தகுசலவர்க்கும்
ஐவர்வான்மீகர்க்கும் அம்பரத்தவர்கட்கும்
மண்டலத்தவர்கட்கும் மறைபவாதங்கட்கும்
வழுத்தும்ஆரணததிற்கும வளருமாகமட்கும்
வந்திப்பொடு மன்னவர்கட்கும்
வளமாயிதைச் சொன்னவர்கட்கும்-மங்க

அம்புவியினிலிதை அழகாயாடுபவர்க்கும்
அகமிகமகிழ்ந்தோங்கி அன்பாய்ப்படிப்பவர்க்கும்

சம்பிரமதாயிருந்து தயவாய்கேட்பவர்க்கும்
தாம்பூலத்துடனொரு தட்சணைதருவோர்க்கும்
தக்கதாய்சௌபாக்கியஞ் சேருமே
தனகனகமுண்டாகும் பாருமே-மங்க

விஷ்ணுவணக்கம்-இ-ம-காம்போதி-ஏகதாளம்

கண்ணிகள்.

கோதண்டராமா கோதண்டராமா
கோதண்டராமா கோதண்டராமா

மூவருமோருருவாகினின்றீரே
முத்திதசரதன்மைந்தனென்றீரே கோதண்ட
தேவர்கள்வல்வினை தீர்க்கவந்தீரே
ஜெகதலம்போற்றிய ராமனென்றீரே கோதண்ட
கோசிகன்வேழ்வி முடிக்கவந்தீரே
கோதைதாடகைதன்னை வென்றுநின்றீரே கோதண்ட
கல்லைப்பெண்ணாக்கியே சொல்லிநின்றீரே
காதல்ஜனகன்றன் வில்லைவென்றீரே கோதண்ட
வல்லிசீதைதன்னை மணங்கள்செய்தீரே
வாகாயயோத்தியில் வந்துநின்றீரே கோதண்ட
மாதாமொழியால் வனங்கள்சென்றீரே
வனத்திற்கந்தமூலந் தின்றுவென்றீரே கோதண்ட
சூரானவாலியைக் கொல்லநினைந்தீரே
சுக்ரீபனுக்குமகுடந்தந்தீரே கோதண்ட
வாதானராவணன் மாளவென்றீரே
மங்கைசீதைசிறைவாங்கிவிட்டீரே கோதண்ட
நாதாசரணம் விநோதாசரணம்
நான்மறைபோற்றிய பாதாசரணம் கோதண்ட
ஐயாசரணம் மெய்யாசரணம்
ஆலிலைமேற்றுயில் செய்யாசரணம் கோதண்ட

கதையின்வரலாறு-இபிதைகள்.

நாமருமயோத்திதன்னில் ரசகன்றன்வார்த்தைகேட்டு
காமியமில்லாமற்றான் தம்பிமார்களையழைத்து
காமியஞ்சீதைதன்னைக் காட்டினில்விடுவீரென்றார்
பூமியின்மகளார்தன்னைப் பூதலந்தன்னில்விட்டார்

அ

மாவிடதேவியான மகலட்சுமிசீதைதானும்
கோலமாம்வனத்தில்விட்ட குறையினாற்சலித்திருக்க
வால்மீகாவ்வனத்தில் வந்துலட்சுமியைக்கண்டு
சிமலாமாசிரமத்திற் செயலுடனழைத்துப்போனார்
போயுமுஞ்சீதைதானும புத்ரனைப்பெற்றநாளில்
மாயவனருளினாலே வால்மீகர்பேர்குறித்து
ஆயுதவனுமனென்றே யழைத்திடுமம்மாவென்று
ஆயுதவில்வின்வித்தை அவர்தமக்கோதிவைத்தார
அப்படிவனத்திருக்க அயோத்தியில்ராமச்சந்திரர்
செப்பமாயசுவயாகஞ் செய்யவேவேணுமென்று
கொப்பெனக்குதிரைதன்னைக் குணமுடன்விட்டபோது
நற்பதிவனத்தைநாடி நண்ணியசந்தவம்சம்
வந்திடுங்குதிரைதன்னை வாழையிற்சேர்த்துக்கட்டி
முந்தவேசேனைதன்னை முறியவேசிதறடிக்க
சந்மாய்லவனைதேறிற் சத்துருக்கர்பிடித்துக்கட்டி
இந்திர்முனிவர்பாக்க வேகினாரயோத்திநோக்கி
சடுதியிற்குசலனங்குச் சத்துருக்கனைசெயித்து
முடுகிலட்சுமணர்பாதர் முடியுள்ளராமரோடும்
படைதனிலவீழ்ந்தபோது பரிவில்வாலமீகர்வந்து
கடுகியேயெழுப்பிவிட்ட கதைதனைப்பாடுவோமே

வினாயகர்வருகிற-பொது திபிதை,

மூஷிகந்தன்னிலேறி முக்கனியமுதுட்கொண்டு
பாசமாயன்பர்மீதிற் பரிவுடன்கிருபைகூர்ந்து
நேசமாயாள்வதற்கு கைலாக்கைலைவாச
மாசிலாவீசரீன்ற வைங்கரன்வருகின்றாரே.

வினாயகர்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி.

நிர்த்தகணபதிவந்தார் மூஷிகமேறி
நிர்த்தகணபதிவந்தார்

அநுபல்லவி.

நிர்த்தகணபதிவந்தார் நினைத்தவரமளிகக்
தத்திமிதத்திமி தக்கிடதிக்கிட
ஜெம்தரி குணதிரி திரிதிரியெனவே நிர்த்தக்

சரணங்கள்.

தந்திமுகமுந் துதிக்கையும் வெண்கோடுந்
தொந்தியுஞ்செம்பவள மெய்யுங்கடனமாக
அங்குசபாச மிலங்கவலங்கிர்த
தங்கும்பதக்கங்கள்சதங்கைகுலுங்க

குசலவநாடகம்.

கந்தரகந்துநிக்கவந்துசொருபமாய்
இந்தைதகலங்கக்குறமங்கையையுறவே
தொங்தொங்தொங்தொந்திரிகிடதிமியென
திந்தோந்திந்தோமென வந்துவந்த (நிர்த்தக்)

கோவில்குருக்கள்வருகிற—இபதை.

வண்ணமாமயோத்திதன்னில் வாசிக்கிரோயர்க்குத்
திண்ணமாம்பூசைசெய்யுஞ் சிவயோகத்தினிலுயர்ந்த
தண்ணறுநேமநிஷ்டை தவராயன்பாய்ப்படித்துக்கொண்டு
பண்ணுலுங்குருக்களங்கே பாங்குடன்றோன்றினரே.

கண்ணிகள்—இ—ம்·சங்கராபரணம்—அடதாளம்.

கோவில்பூசைசெய்யும்பிராமணக்குருக்களையர்தோணினரே
தாவிக்காழ்கமலநல்லதரித்தபூனூலுந்தானசைய
மாவிக்குயில்மொழிபோல்பேசிவகையுள்ளகுருக்களுந்தோணினரே
தீர்த்தங்களாடிகுருக்கள்ஜெபதபநேமந்தான்முடித்து
சாத்துமலரெடுத்துக்குருக்கள்சனுதியில்வந்துதோணினரே
உடுத்தகாவியுடன்பலருத்திராக்ஷங்கள்தானசைய
வெடித்தசொல்லுடனேகுருக்கள்வேடிக்கையாகவேதோணினரே
பண்டிபலாப்பழமும்நல்லபச்சரிசிக்கனிமாம்பழமும்
கொண்டுவிநாயகர்க்குப்பெரியகுருக்கள்வந்துதோணினரே
கதலிச்சிறுகரும்பாம்நல்லகற்கண்டுசீனிசருக்கரையும்
பலந்தரும்கரிமுகற்கொண்டுபடைக்கக்குருக்கள்தோணினரே
அரியதாமழையுடனேகுருக்கள் அதிருகலரியைத்தானெடுத்து
திருவாய்ப்பூசைசெய்யகுருக்கள்கடிகியேவந்துதோணினரே
தாயார்தகப்பனுக்குக்குருக்கள்தண்ணீரொருநாள்வார்த்தறியான்
ஆயாளொழியவன்நம்பிடஐயர்குருக்கள்தோணினரே
சுந்தரசாஸ்திரியாம்நம்பிடகோயில்குருக்களுந்தோணினரே
குந்துகாலுபார்ப்பான்நம்பிடகோயில்குருக்களுந்தோணினரே.

வேறு—தரு.

ஆண்டவன்றன்னைஅர்ச்சனைசெய்யும்தாண்டவகுருக்களுந்தோணினரே
வடையுடனிரசமாநல்லவாழைபலாச்சுளைமுக்கனியாம்
அடையுடன்தோசையைப்பொடிபொடியாய்ப்புட்டு
வகையுடன்விநியோகப்பண்ணினரே
மாட்டியானைதனிலேகுடலைமல்லிகையாம்பல்முல்லையுடன்
கோட்டியாகரிமுகநாதற்குப்படைத்திட குருக்கள்கொண்டுவந்துதோ
[illegible]க்குயில்லையென்றுகுருக்கள்அடக்கமாகக்கொண்டுவந்து [illegible]ணினரே
[illegible]டனேயர்த்தத்தேவடியாளுக்குத்திருத்தனமாவடையெடுத்தனரே
[illegible]க்கரியவள்நல்லகன்னங்கறுப்பிவளவுதனில்கண்டுங் காணமற்போ
[illegible]வருவார்நமச்சிக்குருக்களுந்தோணினரே (ரோ
ஆண்டவன்றன்னைஅர்ச்சனைசெய்யும் தாண்டவகுருக்களுந்தோணின

குருக்கள்போகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்- அடதாளம்.

பல்லவி.

அந்தணர்போருரே உல்லாசமாய்
அந்தணர்போருரே

அநுபல்லவி.

அந்தணர்போருரே சந்தனஞ்சாத்தியே
அக்குளிலின்னையாகா பசுமையாய்த்தூக்கி அந்தணர்

சரணங்கள்.

காதிற்கடுக்கன் கனத்துடனேயாட
சருத்தமார்பில் ருத்திராக்ஷமணிகளசைந்திட அந்தணர்
ஆமைவடைக்கி உளுந்துமெத்தவேணும்
அன்னசத்திக்கொரு தொன்னைநிறையவேணும் அந்தணர்
சோமனில்லைமேல் போர்க்கவேஷ்டிவேணும்
சுப்பிக்கொருவிக்கைத் துண்டம்வேணுமென்று அந்தணர்
நாகரீகத்தோடு நார்மடிகட்டியே
யேகபோகந்துட ஸிருகைவிசிக்கொண்டு அந்தணர்
தீண்டாதேதீண்டாதே தாண்டியெட்டிப்போங்கள்
வேண்டாமருகில்வந்தால் தீண்டிபடுப்பேனென்று அந்தணர்

கட்டியக்காரன்வருகிற-திபிதை.

அட்டதிக்கும்போற்றும அயோத்திபாசக்குவேந்தன்
கொட்டமிட்டவரைவெல்லுங் கொடிமேலயிராமபத்ர
பட்டணந்தன்னிலுள்ள பரிசனங்களுக்கிதயஞ்செய்ய
கட்டியக்காரன்வந்து களரியிற்றோன்றினனே.

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்- ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரனும்வந்தான் ஒய்யாரமதாகவே
கட்டியக்காரனும்வந்தான்

அநுபல்லவி.

கட்டியக்காரனும்வந்தான் திட்டமாயயோத்தியாளும்
நிட்சயாகுராமரண்டை உச்சிதச்சேவகனன் (கட்டி)

சரணங்கள்.

கண்டத்திற்சரப்பளியுங்கதித்தனிரல்போதிரமும்
செண்டுதூராப்பதச்சங்கொண்டு ஜெகஜெகஜெகவென்று ( )

கொத்துப்பதக்கம்பூண்டு கோலமாய்த்தடியுங்கொண்டு
சத்தஞ்செய்தாலுங்களோநான் கொத்திக்கொத்திக்கொல்லுவேனென்று ()
சிரச்சிகையுங்கட்டி உல்லாசமாய்க்கையைவீசி
கோரத்தடியுங்கொண்டுகோணகொம்புநாமமிட்டு (கட்டி)
சட்டமாய்த்திகர்தமிட்டுசரிகைசாலுவைபோட்டு
பட்டுகம்பிபாகைசிரம் பளபளென்றேசொலிக்க (கட்டி)

ஆஸ்தானசந்தோஷிவருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி- அடதாளம்.

விக்கிவிக்கிக்கொண்டுவேடிக்கையாகவே
 சுந்தரஆஸ்தான சந்தோஷிவந்தான்
மெத்தசொருசுகாரன் நித்தியமங்களமென்று
 சொத்மதப்பல்லாஸ்தான சந்தோஷிவந்தான்
இளசானசுரக்காயை யிருதுண்டமாய்வெட்ட
 தளகர்த்தஆஸ்தான சந்தோஷிவந்தான்
கோணைகள்ளிமேலேகொழுந்துக்காய்க்குமென்று
 கூறிசொல்லுமாஸ்தான சந்தோஷிவந்தான்
பாவற்காய்கசப்பென்று பரபரபதித்துசொல்லும்
 பார்புகழாஸ்தான சந்தோஷிவந்தான்
கோணப்புளியங்காய்க் கோடாலியால்வெட்டும்
 மதிகெட்டஆஸ்தான சந்தோஷிவந்தான்

ஆஸ்தானசந்தோஷிசொல்- திபிதை.

கன்றுகன்றிவைக்கவிட்டு நாட்டுஎருமைகள்போல்சோற்றைத்
தின்றுவந்தாலோபிட்டுத் திரிகிறீர்முற்றில்வாழும்
பன்றிபோலிக்கூட்டம் பண்ணைமக்களைப்பார்த்து
வென்றியாமென்னைக்கொண்டு வீட்டுக்குப்போகுவீரே.

தரு-இ-ம்-சங்கராபரணம்- மிசுரதாளம்.

பல்லவி.

கூப்பிடாதிருங்கள் ஜனங்களே
கூப்பிடாதிருங்கள் ஜனங்களே
கூப்பிடாதிருங்கள்

அனுபல்லவி.

சாப்பிட்டுவந்தீரோ தாம்பூலங்கொண்டீரோ
சட்டமாயுட்கார்ந்து திட்டமாய்ப்பாருங்கள் கூப்பிடா

சரணங்கள்.

வெட்கஞ்சிக்கிக்கொண்டு மேன்மைதனைவிட்டு
இக்கட்டுக்குட்பட்டு இறைச்சலேனிடுகிறீர் கூப்பிடா

அஷ்டதிக்பரமரிஷிபரத்திகளையாரும்
பண்டலிராமர்வருகிறார்சேவைசெய்வீர் கூப்பிட

பட்டவர்த்தனர்முதல்படைமன்னர்புடைசூழ
திட்டமாய்த்தர்மிமார்சிதையுடனேவாரார் கூப்பிட

கட்டியக்காரன்சொல்-திபதை.

அக்கரைசெறிக்குங்கல்ப ஹரிசூராதர்தானும்
இரக்கமாய்த்தம்பிசூழ யிறைவர்கள்வந்துபோற்ற
[illegible]வானரங்களெல்லாம் சதிருடன்வந்துதாழ
சாக்கேதஅயோத்தியாளும் ரகுராமர்வருகின்றாரே.

வ-ம். இந்தவிதப்படியென்றால் ஸ்ரீராமரானவர் இராட்சதாளைச் சம்மாரஞ்செய்துவிட்டு தம்பிமார்முதல் அனுமார் அங்கதன் சுக்ரீவன் சாம்புவன் விபீஷணன் பதினெட்டுப்படைத்தலைவர்களும் இராமாபாணனும் எழுபதுவெள்ளம் சேனைபோடுபின்னையும் அளவற்ற சேனைகளுடனே கொலுவுக்குவருகிறார் எச்சரிக்கை.

ஸ்ரீராமர்-கொலுவுக்குவருகிற-தரு--இ--ம்--சாவேரி- ஆதிதாளம்.

பல்லவி.

ராமர்வந்தாரே தசரதராமர்வந்தாரே

அனுபல்லவி.

ராமர்வந்தார்வெகு நேமமதாகவே
சாபனிட்டத் தடங்கையிற்சிலைகொண்டு (ராமர்)

சரணங்கள்.

லட்சுமணர்பாதருஞ்சத்ருக்கனுங்கூட
இஷ்டமுடனேசூழ அஷ்டதிசையும்போற்ற (ராமர்)
சுக்ரீவன்சாம்புவன் நலன்குமுதன்சூழ
அக்கினிவெள்ளங்கோடி யிசைந்தவானர்சூழ (ராமர்)
நவரத்நக்கிரீடம் ஞாயிறொளியெனவே
நவமுத்துபுஜகீர்த்தி சோதிபளபளென்ன (ராமர்)
காவலர்சேவகர் கட்டியங்கூறவே
மேதினிநாவலர் விஜயங்கொண்டாடவே (ராமர்)
பேரிகையொலியது வாரிபோல்நிறையவே
பூரிபேளதாளம் பொம்பொம்மென்றாதவே (ராமர்)
துண்டராவணன்றன்னைக் கண்டனஞ்செய்தபின்பு
பண்டிஅயோத்திவந்து கண்டிராட்சித்திட்ட (ராமர்)
மடமயில்போல்மாதர் நடனங்களாடவே
[illegible]மங்களஞ்சொல்லிக் கிருக்கமாயாலத்தி (ராமர்)

கொலுவிருத்தம்—ஒரடி தரு-இ-ம்-பைரவி- மிசுரதாளம்.

பல்லவி.

ராஜராஜ—ராஜராஜராஜ— தசரதகுமாரா

சரணங்கள்.

ராமரும்லட்சுமணரும் நலமுள்ளதம்பிமாரும்
பரதரும்சத்துருக்கர் பாங்குள்ள அனுமாரும்
சுக்ரீபருஞ்சாம்புவரும் சுகிர்தமுள்ள அங்குதரும்
மிக்காரசர்புடைசூழ விருதுகொடிதான்பறக்க
சித்திரக்கொடிபிடிக்க ஸ்ரீராமர்கொலுவானார்
முத்துவெண்சாமரம்வீச மோகமானசீதைகூட
ரத்தினசிம்மாதனத்தில் ரகுராமர்கொலுவானார்
வெற்றியுள்ளராமனென்று விருதுசின்னந்தான்முழங்கி
எத்திசைமன்னரும்வந்து யிணையடியைப்போற்றிசெய்ய
பத்தியுடன்முனிவர்வந்து பண்புடனேமலர்கள்தூவ
அங்கவளநாட்டோர்போற்ற அரிராமர்கொலுவானார்
துங்கமுள்ளராஜரெல்லாஞ் சுற்றிலுமேசூழ்ந்துவர
முடிமன்னர்புடைசூழ முழங்கினார்பேரியெல்லாம்
படைமன்னர்புடைசூழ பலவெண்சாமரம்வீச
சேடியர்கள்சூழ்ந்துவர ஸ்ரீராமர்கொலுவானார்
கூடியமன்னர்சூழ கொலுவானார்ராமபத்திரர்

ஸ்ரீராமர்சொல்—திபிதை.

வேதமோர்நான்கும்வாழ்க விண்ணவர்மிகவும்வாழ்க
பூதலமன்னர்தங்கள் புகழுஞ்செங்கோலும்வாழ்க
மேதினிகுடிகள்வாழ்க விளைபலபயிர்கள்வாழ்க
யாதொருதுயரில்லாமல் யாவரும்வாழ்கத்தானே.

ராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்—திபிதை.

அரியசாமரஞ்சேர்த்து அன்புடன் காவற்காரன்
கரியதிண்டலைக்கைபோத்தக கட்டியக்காரனேநீ
அரிதயாய்கொலுவில்வந்து துலங்கியநடனஞ்செய்ய
பிரியமாய்நடனசாலைப் பெண்களைவரச்செய்வாயே.

வ-ம். அகோராமரும்பிள்ளாய் கட்டியக்காரா அதிசீக்கிரத்தில் நடனசாலைப்பெண்களை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன்ராமருக்குச்சொல்- திபிதை.

அட்டதிக்கதனிற்செங்கோ லணிந்திடுமரசரெல்லாம்
திட்டமாய்வணங்குமன்னு யிணையடிபோற்றிவுந்தன்

கட்டளைப்படியேநடனக் கன்னியர்தம்மைநானும்
அட்டியில்லாமலிப்போதழைப்பிப்பேனடியிங்ஙனே.

வசனம்.

இராஜாதிராஜமாராஜரெல்லாம் வந்திருக்கின்ற ராஜசபைக்குள்ளே ராஜகெம்பீர அயோத்தியாபுரியையரசாளுந் தேவரீருத்தரவுப்படி நடனசாலைப்பெண்களை யழைப்பிப்பேன்சுவாமி.

கட்டியக்காரன்—நடனமாதருக்குச்சொல்—கவி.

மாதர்கட்கரசே பூதலமாளும்
கோதிலாவரசன் றீதிலாதழைத்தார்

வசனம்.

அகோகேளும் நடனமாதர்களே உங்களைராமர்வரச்சொன்னார் உங்களுடையகருவிகளையெடுத்துக்கொண்டுவாருங்கள்மாதர்களே.

நடனமாதர்சொல்—கவி.

இராஜாதிராஜன் தேசமான்போஜன்
வாசந்தனக்குப் பேசியுமுண்டோ

வசனம்.

அப்படியே வருகிறோமையா.

நாட்டியப்பெண்கள்வருகிற—பொது—திபிதை.

அயிலெனும்விழியார்தில்லிய அணிமணிமுகத்தார்கூவுங்
குயிலெனுமொழியார்கானிக்குவ்விய அன்னபான
மயிலெனுநிறத்தருன வாசங்கொள்நடனமாதர்
ஒயிலுடனிராமச்சந்திரர் முனிசபைவருகின்றாரே.

வசனம்.

அகோஇதப்படிவென்றால் வெண்டாமரைக்கப்போன்றகண்ணினையும் சந்திரனைப்போன்றமுகத்தினையும் குயிலைமருட்டுஞ்சொல்லையும் மயிலைப்போன்றசாயலையுடைய நடனமாதர்கள் ராஜர்கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

நாட்டியப்பெண்கள்—வருகிற—தரு—இ-ம-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

நாட்டியப்பெண்களும்வந்தாரே நடனஞ்செய்ய
நாட்டியப்பெண்களும்வந்தாரே

அநுபல்லவி.

நாட்டியப்பெண்களும்வந்தார் அட்டங்களிலுயர்ந்த
பாட்டுமேளதாளங்களுடன் மிருதங்கம்வீணைமுழங்க (நாட்டி)

சரணங்கள்.

சொக்கநடக்குதுலங்கவே இருகாலசலங்கையுடன்
கோர்வைபட்டிமங்கிலை
தங்கப்பதுமையென்னத் துலங்கக்கலையணிந்த (நாட்டி)

சோமன்முகத்தினழகும் சுநிலையையானஞ்
சொருகுமிருகண்ணழகும்
காமன்மருளுநபிருகணமுப்படைத்தநல்ல (நாட்டி)

காலிற்சிலம்புகொஞ்சவே கமகமென்றுமணங்
கமழ்ந்துநடனமிஞ்சவே
ஜலிக்கிரசொல்லாம் பாலித்துடன்மயங்கி (நாட்டி)

திக்கிடஜெகுணகு தரிகிடதிமிமென
தக்கிடஜெகுணகு தரிகிடதிமிமென
தக்கடதித்திம் தளங்குதோமென (நாட்டி)

நாட்டியப்பெண்கள் ராமனைப்பணிகின்ற—திபிதை.

தேட்டமாய்மறைவிளங்க சீருடன்பயிர்தழைக்க
நாட்டமாய்தருமம்போங்க நவநிதியிகச்செழிக்க
வாட்டமொன்றின்றியாரும் வாழ்ந்திடவேவயோத்தி
நாட்டினைக்காக்கும்ராமச் சந்த்ரனேநின்றுட்போற்றி.

வசனம்.

இராவணசம்மாரா லட்சுமிமனோகரா நாரணகிர்பாகரா பூரணகெம்பீரா நாகலோகத்தேவா அட்சயதேவா அயோத்தியாபுரிச்சந்திரா நித்தியதுரந்தரா சகலலோகேசேந்திரா ஸ்ரீராமச்சந்திரா சுவாமியராக்கு சுவாமியராகே.

நிர்த்தனத்தரு—இராகம்-கலியாணி—ஆதிதாளம்.

பல்லவி.

நிர்த்தனஞ்செய்கிறோம்பாரீர் ராமச்சந்திரரே
நிர்த்தனஞ்செய்கிறோம்பாரீர்

அநுபல்லவி.

தத்தரிகிடதக தகதரிகிடதக
தளங்குதத்திமி ததிங்கணத்தோமென (நிர்த்)

சரணங்கள்.

சதகோடிபாஸ்கரரே தனியில்கிர்பாகரரே
காருண்யகராரே சர்வசிவதயாபரரே
தச்செய்செகதக தரிதகணகஜெனு

தரிதகணகஜெனுஜெகணகஜெம்தரி
தரிததஞதெய்தரிதஜனுதெய்
தரிததனுத்தெனுததிமிதகிடதரி (நிர்த்)

ததிமிதருட்கண்பாரும் தந்காதெந்சகீக்காரும்
தருமமென்பதுசேரும் தட்சணங்கருணைகூரும்

தாட்டுதனக்தரிகுத் தருதகணக்தரிதெய்
தாட்டுதனந்தரி தரிதனந்தரிக்குந்த

திரிபுர்செரித்தமதகரியுரித்த
தக்கதின்னதிலதரிதகணகஜெணு
தகுர்தச்செணுதகதிமிதக்கிடதக
தளங்குகருதிமிதிங்கணதோபெண. (௫௰௩)

ஸ்ரீராமர் கட்டியனுக்குச்சொல்- திபிதை.

மிஞ்சியநன்னடனஞ்செய்யு மீன்விழிமாதருக்கு
கொஞ்சிடுஞ்சதங்கைமுத்துக் கோர்வையும்பதக்கமாழி
சஞ்சமென்படிமுகத்திற் கட்டிடுஞ்சுட்டிதொங்கல்
அஞ்சனம்வர்னப்பட்டு மளித்துடனனுப்புவாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா இங்கே நடனஞ்செய்த சேற்செல்லடைப்போலிருக்கும் பெண்களுக்கு இப்பெண்களுக்குக்காலுக் கிணைத்சதங்கையு முத்தாரமுடை அடையாபரண முதலாகியதுங் கொடுத்து அனுப்பிவையும் பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன்சொல்— வசனம்.

அப்படியேகொடுத்து அனுப்புகிறேன் சுவாமி.

கட்டியககாரன் நாட்டியப்பெண்களுக்குச்சொல்- வசனம்.

அகோகேளுங் நாட்டியப்பெண்களே உங்களுக்கு நம்முடைய ராமமூர்த்தி அடையாபரணங்களைக்கொடுக்கும்படியாய் ஆக்கியாபித்தார் அப்படியே தருகிறேன் ஸ்ரீராமமூர்த்தி மகிழும்படியாகச்சற்றேகும்மியடியுங்கள் பார்ப்போம்.

நாட்டியப்பெண்கள் ராமர்முன் கும்மியடிக்கிற - தரு.

கும்மியடிப்பெண்கள்கும்மியடி காங்
கூப்பிடுகேன்முந்திக்கும்மியடி
நம்மையாளும்ராமமூர்த்தியை
நாடிக்கும்மியடியுங்கடி அவனைப்
பாடிக்கும்மியடியுங்கடி
சங்கமிக்கும்அயோத்தியாபுரியை யர
சாட்சிசெய்திடும்பானுகுலச்
சுந்திரராமச்சந்திரமூர்த்தியைத்
துதித்துக்கும்மியடியுங்கடி நன்றாய்
மதித்துக்கும்மியடியுங்கடி
மல்லிகைமுல்லைமணக்கும்பெண்கள் சா
வளைகுலுங்கவுமார்ப்பரித்து

துல்லியராமச்சந்திரர்பாதத்தை
 தொழுதுக்கும்மியடியுங்கடி-இப்
 பொழுதுகும்மியடியுங்கடி

கட்டியக்காரன்-நடனப்பெண்களுக்குச்சொல்-வசனம்.

ஆ-ஆ-நன்றயிருக்கிறது இதோமுத்தாரபோசனஆரம் வஸ்திரந் சொர்ணமுதலாகியதுங்கொடுத்தேன்சந்தோசந்தோடேபோங்கள்.

ஸ்ரீராமர்கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நமதுபட்டணத்தி லிருக்கப்பட்டமல்லுகஜெட்டிகளையழைப்பியும்பிள்ளாய்.

கட்-வ-ம். அப்படியேஅழைக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன்-மல்லுகஜெட்டிகளுக்குச்சொல்-கவி.

ஜெட்டிகாளும்மை திட்டமாயராசன்
 பொட்டெனவாவே கட்டளையிட்டார்

கட்-வ-ம். வாரும்பிள்ளாய் ஜெட்டிகளேஉங்களைநம்முடையஆண்டவராகியராமர்அழைத்துவரச்சொன்னார்ஓடிவாருங்கள்பிள்ளாய்.

மல்லர்-வசனம் அப்படியேவருகிறோமையா.

ஜெட்டிகள்வருகிற-பொது-திபதை

கல்லிரும்புகளையெல்லாங் காத்தில்நீறுகச்செய்யும்
வல்லவராகிவீறு மதங்கொண்டகெஜங்கள்போலே
வெல்லவேவிருதுகட்டி ஸ்ரீராமர்கொலுவைநாடி
மல்லுகஜெட்டிமார்கள் வருகுடன்தோன்றினரே.

மல்லுகஜெட்டிகள்வருகிற-தரு-இ-ம-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெட்டிகள்வந்தாரே மல்லுகஜெட்டிகள்வந்தாரே.

அநுபல்லவி.

ஜெட்டிகள்வந்தார் திட்டமாயராசாளும்
மட்டில்லாராமர் பட்டணந்தன்னில் (ஜெட்டி)

சரணங்கள்.

மீசைகள்படபடென்ன மல்லர்கள்
 மேல்மீசைதான்விடவே
மோசமில்லாமற்றன்னை மல்லர்கள்
 கும்பிட்டுபோட்டுக்கொண்டு {ஜெட்டி}

திருநாமமிட்டு மல்லர்கள்
 திரியெனவிடுபட்டு
மீறுசதைகொழுப்பும் மல்லர்கள்
 கூச்சலாய்வந்தனரோ (ஜெட்டி)

பூச்சல்லடந்தொடுத்த மல்லர்கள்
 புலியெனவேகுதித்து
இச்சுக்குரலுடனே மல்லர்கள்
 கூச்சலால்வந்தனரோ (ஜெட்டி)

மல்லுகஜெட்டிகள்—ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

கெடிபெறுகீர்த்திதன்னிற் கீர்த்திகொண்டேயகண்ட
புடைநிறைந்தடைகுழ்வையப் புரவலர்தன்னில்துஷ்ட
அடையலர்தமையடக்கி அயோத்தியைக்காக்கும்வச்ர
முடியணிராமச்சந்திர மூர்த்தியேநின்றாட்போற்றி.

வ-ம் அகோராஜாதிராஜகெம்பீரஸ்ரீராமச்சந்திரமூர்த்தியே சரண
ஞ்சரணஞ்சுவாமி.

ஸ்ரீராமர்பரதருக்குச்சொல்—திபதை.

பரதனே சொல்லக்கேளும் பாங்குள்ள அயோத்திதன்னில்
அரசர்கள்மற்றுமுள்ளோ ரனைவரும் சுகமதாமோ
திறமதாய்ராசர்தங்கள் சேவகமதையெனக்கு
விரகுடனின்னதென்று விளம்புவாய்விரைவிற்றானே.

வ-ம். அகோவாருந்தம்பிபரதா நம்முடையஅயோத்தியாபுரிபட்
டணமுமைம்பத்தாறுதேசமும் சேனைசமுத்திரமுங்குடிபடைகள்யாவ
ரும்சுபேக்ஷமோ சொல்லுந்தம்பிபரதா.

பரதர்—ராமருக்குச்சொல்-திபதை.

கதிர்குலத்தரசர்கோவே காரணஞ்சொல்லக்கேளும்
துதிபடைகள்ளர்தம்மைத் தாக்கியேசிந்துணிந்தோம்
மதிபடையரசர்மூவர் வானவர்சிலரானோர்
மதிகதிருலகேழு மன்னவர்சுபேட்சமையா.

வ-ம். அகோவாருஞ்சுவாமி நம்முடைய அயோத்தியாபுரிபட்ட
ணமுமைம்பத்தாறுதேசமும் சேனைசமுத்திரமுங்குடிபடைகள்யாவரு
ம்சுபேக்ஷஞ்சுவாமி.

ஸ்ரீராமர்சொல்—வ-ம்.

அதுக்குநம்முடையராமுகத்திலேயிருந்தம்பிபரதா,

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

இலட்சுமணசத்துருக்கா நல்லனுமாரேகேளீர்
குலகுருமாபாக்கர்சேனைக் குலத்தைநாம்வெராறுத்தோம்
துலக்கமாஞ்ஜனங்களெல்லாஞ் சுகமுடன்றழைக்கவேணும்
மலர்க்கணனருளினலே மனமதுமகிழ்ந்துவாழ்வீர்.

வ-ம். அகோவாருந்தம்பிலட்சுமணா சத்துருக்கா அனுமாரே நீங்களனைவருஞ்சுகமோ சொல்லுந்தம்பிலட்சுமணா.

இலட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

உங்கள்தன்கிருபையாலே வுகந்தநம்மயோத்திராச்யம்
எங்கெங்குமணிதசெல்லாம் இன்பமாய்த்தழைத்துப்பின்னும்
மங்களமாகவாழ்ந்து வருகிறார்சுவாமியானும்
இங்குந்தனருளினலே யிலையொருகுறைவும்போற்றி.

வ-ம். அகோகேளும்ரகுநாயகரே அயோத்தியாபுரிபட்டணம் யாதுங்க்ஷேமம் தங்கள்கிருபையினலே அடியேனும்சுகந்தான்சுவாமி.

ஸ்ரீராமர்சொல்-வ-ம். ஆனல்நம்முடைய அருகாமையிலிரும் பிள்ளாய் (லட்-வ-ம்) மகாபாக்கியஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய்கட்டியக்காரா நம்முடையவிபீஷணனை அழைப்பியும்பிள்ளாய் (க-வ-ம்.) அப்படியேஅழைக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன்-விபீஷணர்க்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணம்விபீஷணரே தங்களைராமமூர்த்திவரச்சொன்னர் சுவாமி (விபீ-வ-ம்.) ஆனலிதோவருகிறேன்.

ஸ்ரீராமர்-விபீஷணர்க்குச்சொல்-திபதை.

வீறுசேரிலங்கையாளும் விபீஷணசொல்லக்கேளீர்
தேறவேயைம்பத்தாறு தேசத்தார்தரும்பணத்தை
பேருளதேவதாயம் பிராமணர்தங்களுக்குக்
கூறியேபதானஞ்செய்தாற் குலமதுதழைத்துவாழ்வீர்.

வ-ம். அகோவாருந்தம்பிவிபீஷணா மன்னர்கள் தரும் பகுதிபணத்தைவேதியருக்கும் ஆலயங்களுக்குந்தருமஞ்செய்வாய் மேலும்நம்பிட—லங்காபுரிபட்டணம் சுபிக்ஷமோசொல்லுந்தம்பிவிபீஷணா.

விபீஷணர் ராமருக்குச்சொல்-திபதை.

வண்டணிநிறத்தையுள்ள மானிடவடிவையுள்ள
தண்டுசேர்கரத்தையுள்ள தனுவினில்வலிமையுள்ள
தொண்டனானும்லங்கை சுகத்துடன்க்ஷேமமாக
தெண்டனுக்கன்றிவ்ய திருவடிபோற்றிபோற்றி.

வ-ம். [illegible] சுவாமி அப்படியே [illegible] பிராம [illegible] அவ்வளவுன் [illegible] நம்முடைய லங்கையும் [illegible] வாவரு படி [illegible] சுவாமி.

ஸ்ரீரா-சொல்-வ-ம். ஆனால்நம்முடையசமூகத்திலிருக்கும்விபீஷணா (விபீ-வ-ம்.)மகாபாக்கியஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அடேகாவலாளிப்பிள்ளாய் கட்டியக்கார நம்முடைய அங்கதனை யழைத்துவாப்பிள்ளாய் (கட்-வ-ம்.) அப்படியேவழைக்கிறேன்சுவாமி.

(கட்டியக்காரன்-அங்கதனுக்குச்சொல் வசனம்.) அடேகாவலாளுமையா அங்கதரே ஸ்ரீராமமூர்த்தி வரச்சொன்னாரையா (அங்-வ-ம்.) இதோவருகிறேனப்பா.

ஸ்ரீராமர்-அங்கதனுக்குச்சொல்-திபதை.

அங்கதாசொல்லக்கேளாய் ஆனதோர்கிஷ்கிந்தராச்யம்
[illegible] வைரிகொள் [illegible]
எங்குமேதானஞ்செய்தா லென்னிடசீர்மைபோலே
[illegible]

வ-ம். [illegible] நம்முடைய [illegible] த்தைப்பேசதபோய்சொல்லிப்பிள்ளாய்.

அங்கதன்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

ஜானகிசமேதரான சற்குணமாமேலதிகளீர்
ஆனதோர்கிஷ்கிந்தராச்யம் அடியேனுக்களித்ததட்டில்

வானவர்தேசம்போல மனைமருங்கிருந்துவாழ்வார்
தானவர்தேவரெங்ங் ளின்ணைசரணமையா.

வ-ம். அகோவாருஞ்சுவாமி கிஷ்கிந்தாபுரிபட்டணமும் அடியேனு
ந்தேவரீருடைய கிருபாகடாட்சத்தினுலே சுபேக்ஷத்தான்சுவாமி(ஸ்ரீ
ராமர்—வ—ம். ஆனல் நம்முடையஅருகாமையிலிரும்பிள்ளாய்.

ஸ்ரீராமர்கட்டியக்காரனுக்குச்சொல்வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடையசுக்கிரீவனை அழை
ப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன்—ராமருக்குச்சொல்—வ—ம்.

அகோவாருஞ்சுவாமி நான்போயழைத்தால்வரவில்லைசுவாமி.

ஸ்ரீராமர்—கட்டியக்காரனுக்குச்சொல்வசனம்.

அகோவாரும்பிள்ளா அந்தப்பேதை வாலியைச்சங்கரித்தராமபாணமி
ருக்கிறதென்று சொல்லும்பிள்ளாய்.

கட்டியக்காரன்-சுக்கிரீவனுக்குச்சொல்—வசனம்.

அகோவாருமையா சுக்கிரீவரே ஏதுநாயகர்வரவில்லையோவென்றுகேழ்
க்கச்சொன்னர்சுவாமி. (சுக்—வ—ம்.) இதோவருகிறேனப்பா.

சுக்கிரீவர்-ஸ்ரீராமனைப்பணிந்துசொல்-தரு

இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

சரணஞ்சரணமையா ஸ்ரீராமசந்திராசரணஞ்சரணமையா

அநுபல்லவி.

சரணஞ்சரணமையா கோபாலராம
கருணையாயெங்களைக் காத்துரட்சித்தாரே (சர)

சரணங்கள்.

வானவில்லைவளைக்க வந்துமிதிலைக்கே
கருணையுடனேநல்ல காத்துரட்சித்தீரே (சர)

அக்ஷயராமா பட்சமென்மீதில்வைத்து
ரட்சியுமென்தனை அக்ஷயவைகுந்தா (சர)

ஜனகன்மகள்சீதை தன்னைமணம்புணர்ந்தீர்
கனகஅயோத்திவந்து காத்துரட்சித்தீரே (சர)

சுக்ரீபர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

வண்டணிகுளப்பக்கோனே மாரநமதுடத்தோனே
கண்டனுந்தன்பாதங் கண்களாற்காட்சிபெற்றேன்
தெண்டிரையயோத்தியாளுந் தசரதன்மைந்தாயானும்
அண்டினேனுந்தன்பாதம் ஆபத்தைக்காருமையா.

ஸ்ரீராமர்-சுக்ரீபருக்குச்சொல்வசனம்.

அஹோவாருந்தம்பிசுக்ரீபா இந்த மோகனமாலையைத் தரித்துக்கொள்ளும்பிள்ளாய்.

சுக்கிரீபன்-ஸ்ரீராமருக்குச்சொல்வசனம்.

அப்படியே தரித்துக்கொண்டேன்சுவாமி.

ஸ்ரீராமர்-சுக்ரீபருக்குச்சொல்வசனம் ஆனால்நம்முடைய சமுகத்திலிரும்பிள்ளாய் (சுக்-வ-ம்.) மகாபாக்கியஞ்சுவாமி.

பொதுதிபதை.

முனிவர்களருளினாலே மொய்குழல்சீதைகூட
தனுவிறல்வலிமையுள்ள தம்பிமாரவர்கூட
அனைவரும்போற்றவந்து அயோத்திமாநகரந்தன்னில்
மனமதுகளித்தேயிந்த வையகத்தரசாளுனார்.

இதுவுமது.

வெற்றிபராம்ரவிகுலத்தில் வெகுசனத்துடனோராமா
புத்திரனில்லாசொர்க்கம் புகுவமோபதவியென்று
மெத்தவேசோபமாகி வியாகூலமனதிலெண்ணி
உத்தமராமச்சந்திர ருண்மையாய்ப்புலம்புவாரே.

கட்டியக்காரன் சொல்-வசனம்.

அஹோ கேட்பதென்றால் ரகுநாயகருக்கு ஒன்பதினாயிரம்வருஷம்புத்திரனில்லாமற்போனபடியினாலேபுத்திரசோபப்படுகிறவிதங்காண்க

ஸ்ரீராமர்-புத்திரசோபத்தால்- விசனப்படுகிறகண்ணிகள்.

இ-ம்-கண்டா-ஆதிதாளம்.

ஞாலம்புகழயோத்தியாளுந் நல்மொழிஜானகியாற்கு
பாலரில்லாதசொர்க்கம் பாருலகெனுங்கொடோசொல்வீர்

வள்ளலயோத்திவாழு மான்விழிஜானகியாற்குப்
பிள்ளைகளில்லாதசொர்க்கம் பெறுவதுமுண்டோசொல்வீர்

சத்தியசைபுகழுந்திவ்ய இளங்கொடியாள்சீதையாற்குப்
புத்திரரில்லாதுசொர்க்கம் பெறுவதுமுண்டோசொல்வீர்
அக்கிரமங்களாகவேதான் யாசுபதியாண்டோமோநாம்
விற்குப்விலைகுறைத்தோமோ வேதியர்பூசை தவிர்த்தோமோ
நந்தவனம்வைத்திடாமல் நச்சுமரம்வைத்திட்டோமே
கூலிகளைக்குறைத்தோமோ குறைமரக்காலளந்தோமோ
அங்காடிகூடைகளை அதிரவிலைவிட்டோமோநாம்
பங்கல்லாபங்குகளைப் பதறியேயெடுத்தோமோநாம்
சத்தியந்தவறிநிந்தை சாசங்கள்செய்தோமோதான்
பத்தினிமார்களுக்கோர் பழுதுகளைச்சொன்னோமோ நான்
வாழைமரம்வெட்டினோமோ வழியில்முள்ளையடைத்தோமோ
வழையாதிரட்டு மென்னபழிசெய்தோமோநாம்
நித்திரையைத்தவிழ்த்தோமோ நீரிலேபணைந்செய்தோமோநாம
பத்தியோடுதவம்புரிந்தாற் பாலகனில்லாமற்போமோ

ஸ்ரீராமர்-தம்பிகளுக்குச்சொல்-திபதை.

இணைபிரியாதிருக்கு மென்னுயிர்த்துணைவரே கேள்
குணமுடனுமிப்போ கூறிநித்திரையேசெய்வேன்
துணையெனவிருந்துநீங்கள் சொந்தமாய்ப்பிரிந்திடாமல்
அணையெனக்கார்தனுசுற்றி யணைவருமிருந்திடுமே.

வ-ம். அகோ வாருந்தம்பிமார்களே எனக்கு நித்திரை வருகின்றது ஆகையால் நீங்கள் என்னைப்பாதுகாத்திருங்கள் தம்பிமார்களே.

லட்சுமணர்சொல்-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

நித்திரைபோராரோ ரகுராமர் நித்திரைபோராரே

அநுபல்லவி.

நித்திரைபோராரோ நேசன்றசாதர்
புத்திராகிய பூமதிரகுராமா (நித்தி)

சரணங்கள்.

தங்கத்திறுலேசமைத்தபிதாம்பரம்
சாமிஅணைதனிலே என்னண்ணா சாமிஅணைதனிலே (நித்தி)

சந்திரசூரியபொன்றாய்விளங்கிய
சக்கரபொருகையிலே என்னண்ணா சக்கரமொருகையிலே (நித்)

இங்கிதமான புனுகுசவ்வாதுகள்
எங்குங்கமகமென்ன என்னண்ணா எங்குங்கமகமென்ன (நித்தி)

[illegible]
சேவித்துநின்றிடவே என்னன்று சேவித்துநின்றிடவே (நித்)

காக்குமரவிகுல தசரதமகாராஜன்
போர்க்குமலிந்த புஜபலரகுராமன் (நித்தி)

மார்க்கமதாகவேவளை துந்தவாசகர்
பார்க்கடல்மீதினிற் பள்ளிகொள்வாறுபோல் (நித்தி)

[illegible]
சித்திரமணிமண்டப மெத்தையின்மீதினிற் (நித்தி)

ஒன்பதினாயிரம்வருஷம்புத்திரனில்லை
பொன்பதுமனதினி லெண்ணிவிசாரமாய் (நித்தி)

துள்ளியெழுந்தாரோ ரகுநாதருள்ளமகிழ்ந்தாரோ—அவர்
சொற்பனங்கண்டல்லவோ ரகுராமர் திடுக்கிட்டெழுந்தாரோ (நித்)

ஸ்ரீராமர்—சொற்பனங் கண்டு-லட்சுமணருடன் சொல்லுகிற

தரு—இ—ப்எது குலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

சொற்பனங்கண்டேனடா லக்ஷ்மணனானுஞ்
சொற்பனங்கண்டேனடா (சொற்)

அநுபல்லவி.

சொற்பனங்கண்டேனே சோதியிலேநானும்
விற்பனங்களாக வேடிக்கையாகவே (சொற்)

சரணங்கள்.

அன்னமெனுஞ்சீதை ஐந்துமாதங்கெர்ப்பம்
மன்னியவயிற்றினில் வளதாயிருக்கவே (சொற்)

சோலையிலுஞ்சீதை கொஞ்சிக்கொஞ்சிக்கொண்டு
நீலவனம்பார்க்க நின்றுவரச்சேழ்க்கச் (சொற்)

பொது நிபதை.

ஆழியிற்றுயிலுமாயன் அரிரகுராமர்தானும்
வாழியாந்தப்பிருழ வசந்தநித்திரையேசெய்ய
[illegible]
[illegible] ராமர் [illegible] சொற்பனங்கண்டாரே.

[illegible]

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

நலந்திகழ்லட்சுமணகேள் நானிழிவனரும்போது
நிலந்தனிற்சீதையார்க்கு நிறைந்திடுகெர்ப்பமடைந்தாம்
கலங்கிர்தகனவிலேநான் கண்டதையறியவேறும்
மலந்தனைக்கடந்தமேனி வசிஷ்டனையழைப்பிப்பாயே.

வ—ம். அகோவாரும்தம்பிலட்சுமணா அவசரமாகச்சொற்பனங்கண்டபடியால் அதைப்பரிசோதிக்கவேணும் நம்முடைய குலகுருவாகிய வசிஷ்டனைச்சீக்கிரமாயழைப்பியும்பிள்ளாய் தம்பிலட்சுமணா.

லட்சுமணர்சொல்-வசனம்.

அப்படியேஅழைப்பிக்கிறேன் சுவாமி.

இலட்சுமணர்-வசிஷ்டருக்குச்சொல்போற்றிகவி.

அல்லலையகற்றி வல்லமைமிகுத்த
தொல்லைமாதவத்தி னெல்லையீர்போற்றி

இதுவுமது.

அரசிளையாளும் வரகுணராமா
திரமுடனும்மை வரவழைத்தனரோ

வ—ம். வாரும்சுவாமி என் தமையனாகிய ரகுநாயகர் தங்களையழைத்துக்கொண்டு வரச்சொன்னார் சுவாமி.

வசிஷ்டர்சொல்-கவி.

அப்படித்தானே இப்பொழுதியானும்
செப்பமாஞ்சபைக்குச் செப்பெனவருவேன்

வ-ம். அப்படியேபோவோம் வாரும்பிள்ளாய்லட்சுமணா.

வசிஷ்டர்வருகிறபொது-திபதை.

நீதிக்குமுன்னூலாம்பூண்டு விளங்கவேநாமமிட்டு
ஆதித்திடுங்காவிவேஷ்டி சொகுசுடனணிந்துநின்று
பதித்திடுஞ்சொறடுபூண்டு பரிவுடன்தருப்பையேந்தி
மதித்திடராமர்முன்னே வசிஷ்டரும்வருகின்றாரே.

வசிஷ்டர்-சீஷனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் சிஷ்யா நம்முடைய தண்டு கமண்டலத்துடனெடுத்துக்கொண்டுவாரும்பிள்ளாய்.

சிஷ்யன் வசிஷ்டருக்குச்சொல்-வசனம்.

அப்படியேயெடுத்துக்கொண்டுவருகிறேன் சுவாமி.

வசிஷ்டர்வருகிறதரு—இ—ம்-சாவேரி மிசரதாளம்.

பல்லவி.

வசிஷ்டர்வந்தாரோ குலகுரு வசிஷ்டர்வந்தாரோ

அனுபல்லவி.

வசிஷ்டர்வந்தாரோ யிதஷ்டமாகவே
மாமுனியோர்குரு வாகவிளங்கியே வசிஷ்டர்

சரணங்கள்.

அண்டர்முனிவர்கள் கண்டுபணிந்திட
குண்டலமாடக் குளிர்ந்தநடையுடன் வசிஷ்டர்
தண்டுகமண்டலங்கொண்டு கரத்தினில்
தெண்டிசையோர்களுங் கண்டுதொழுதிட வசிஷ்டர்
பாதக்குறடுபளில்பளிலென்னவே
பாரித்தபுலித்தோல் தேருடன்மின்னவே வசிஷ்டர்

வசிஷ்டர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாருங்கள்ளாய் கட்டியக்கார ரகுநாயகருடன் வசிஷ்டமகாமுனிவந்திருக்கிறாரென்று சொல்லும்பிள்ளாய்.

கட்டியக்காரன்—ஸ்ரீராமருக்குச்சொல்— வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி நம்முடைய குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிஆசாரவாசலில் வந்திருக்கிறாரென்று சொல்லும்பிள்ளாய்.

ஸ்ரீராமர் தம்பிமார்களுக்குச்சொல்—திபதை.

வருத்தமாய்வசிஷ்டர்தாமும் வந்துமாமணிமுகப்பில்
இருக்கிறாரென்றுகாவற் காரனுமியம்புகின்றான்
கருத்துளபரதசத்துருக்க லட்சுமணநாமுஞ்சென்று
அருத்தியாயவரையிங்கே அழைத்துடன்வருவோம்பாரீர்

வ-ம். அகோவாருந்தம்பிமார்களே நம்முடைய குலகுருவாகியவசிஷ்டமகாமுனிவர்வந்திருக்கின்றாராம் நாம்போய்வந்தனைப்பண்ணிக்கொள்வோம் வாருங்கள் தம்பிமார்களே.

தம்பிமார்கள் ஸ்ரீராமருக்குச்சொல்—வசனம்.

அப்படியேவருகிறோம் அண்ணாவே.

ஸ்ரீராமரும் தம்பிமார்களும் வசிஷ்டரைப்பணிகிற— ஆநந்தக்களிப்பு.

பல்லவி.

சரணஞ்சரணமுனிநாதா எங்களைத்தற்காத்திரட்சியுஞ் சற்குருநாதா.

அனுபல்லவி.

காத்தினிற்றெண்டையுடையீர் இப்போ
சகினையாவெங்களைக் காத்தாட்சிப்பீர் சரணந்

சரணங்கள்.

குலகுருவாகியபொருளே—உம்மைக்
கொண்டாடினெல்லாங்குடிபோடேவருளே சரணஞ்
வேதாவெங்கட்கிரிவாசா—அந்த
விமலர்க்குச்சரியானவசிஷ்டமுநீசா சரணஞ்
நாதாவுன்பாதமேபோற்றி—என்னை
ரட்சிப்பதேயுந்தன்மலரடிபோற்றி சரணஞ்
புண்டரீகப்பதத்தாளா-எங்கள்
பூருவவசத்திலுள்வந்தோனேயாளாய் சரணஞ்
அண்டர்கள்போற்றியஐயா-இப்போ
அடியேங்களையாளத்தருவீதுமெய்யா சரணஞ்

ஸ்ரீராமர்—வசிஷ்டருக்குச்சொல்- திபதை.

வேதங்களுணர்க்கஞான வித்தகாபோற்றிபோற்றி
நாதங்கள்கழிப்பிறந்த நாயகாபோற்றிபோற்றி
பாதங்கள்பணிந்தோமிந்தப் பன்மணிபாசனத்தில்
மாதவவசிஷ்டரோநீர் மகிழ்ச்சியாயிருந்திடீரே.

வசிஷ்டர்சொல்-வாழி- திபிதை.

சுபமஸ்துராமச்சந்திரா சுபமஸ்துபரதாயின்னம்
சுபமஸ்துலட்சுமணநீ சுபமஸ்துசத்துருக்கா
சுபமஸ்துசீதையாரும் சுபமஸ்துஅயோத்திநாடு
சுபமஸ்துயானைசேனை சுபமஸ்துவாழிதானே.

இதவும்-வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்—திபதை.

சுடர்குலத்தாசர்கோவே சுந்தராராமச்சந்திரா
திடமுடனமையழைத்த செய்திபாதெனக்கிப்போது
அடல்மிகும்பூசைவேளை யாகுதுபோகவேண்டும்
தடையெனச்செய்திடாமற் சடுதியிற்சொல்லுவீரே.

வ-ம், அநேகவாரும்பிள்ளாய் ராமசந்திரா சுமக்குப்பூசைவேளையா
கின்றது நாம்போகவேண்டும் நம்மையழைப்பித்தகாரியமிஇன்னதெ
ன்றுசொல்லும்பிள்ளாய்.

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-தரு

இ-ம்—எதுகுலகாம்போதி-மிசுரதாளம்.

பல்லவி.

கண்டேனுன்சொற்பனங்கள் நித்திரையிற்சுவாமி
சுருக்தாகச்சொல்லுகிறேன் கேளுமையா

தெண்டனீர்விழியாள் சீதைபாருஞ்சுவாமி
கெர்ப்பிணியாயிருக்கவுங்கண்டேனையா (கண்)

வண்டணிசீதைதன்னைக்காட்டில்விடசுவாமி
வருத்தமாய்க்கண்டேனையாசொற்பனத்தில் (கண்)

கொண்டல்நிகர்கொண்டையுள்ளசீதைபாருஞ்சுவாமி
கொடும்பெரியகானகத்தில்விழுந்தழவே (கண்)

கண்டேதோர்முனிநாதர்ஆசிரமத்தில்வனக்
கன்னிகளுடன்கூடயிருந்திடவே (கண்)

சிந்தைமகிழுமந்தசீதைவயிற்றிற்சுவாமி
சிறுவரிருவர்களுற்பிறக்கக்கண்டேன் (கண்)

விந்தையிருந்தசிறுபயல்களாலேசுவாமி
மிருதியாய்ச்சேனையெல்லாமடியக்கண்டேன் (கண்)

சந்தமிருந்தஅந்தவால்மீகர்தருணத்தில்
வந்துஎன்னையெழுப்பவுங்கண்டேனையா (கண்)

கந்தமலர்சூடியசீதையுடனேகூட
கனமானஅயோத்திவந்துசேரக்கண்டேன் (கண்)

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்- திபதை.

சொற்பனம்வசிஷ்டரோநான் சொல்லுவேஞ்சீதையார்க்கு
அப்பொழுதைந்துமாதம் ஆகவேவயிற்றிற்கெர்ப்பம்
செப்பருஞ்சீதைதன்னைத் தெண்டகாவனத்திலோட்ட
இப்படியாகக்கண்டே னிதனைநீர்சொல்லுவீரோ.

வ-ம. சானைச்சானாம் குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவரோநான் சப்பிரமஞ்சத்தில் நித்திரைசெய்கிறபோது சீதாலட்சுமிஐந்துமாசக்கெர்ப்பமாயிருக்கத்தக்கதாகவும் லட்சுமணப்பெருமாள் தெண்டகாரணியங்கொண்டுபோய்விடத்தக்கதாகவும் இப்படிஅதிசயமானசொற்பனங்கண்டேன் அதனைப்பரிசோதித்துச்சொல்லுஞ்சுவாமி.

வசிஷ்டர்ராமருக்குச்சொல்—தரு—இ-ப-தோடி— அடதாளம்.

பல்லவி.

பாக்கியம்ரகுராமா கண்டகனவுயோக்கியம் அரிராமா.

அநுபல்லவி.

பாரியமனதுடன் பைங்கிளிசீதையர்க்கு
வாக்கின்படியேபுத்திரன் வந்துகிடைத்தது (பாக்கி)

சரணங்கள்.

கண்டசொற்பனமிப்போ கைகூடுந்தடையில்லை
கொண்டன்லட்சுமணராலே சேதிபிறவேறும் (பாக்கி)

ஆருடம்பார்த்தாலும் ஆமாமென்றுசொல்லுகுது
மாறாட்டமாகாது மகிழ்ச்சியடையவேணும் (பாக்கி)
நல்லோர்கள்சொற்பனங் கல்லின்மேலெழுத்தாமே
இல்லாதுகாணுது சொல்லாலறியவேணும் (பாக்கி)

வசிஷ்டர்—ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

துன்றிடாதிரமாயிந்தச் சொற்பனம்பொய்யாகாது
இன்றுந்தன்றாய்மார்கிட்ட இபலுடனினியதாகச்
சென்றுந்தன்தம்பிமாரைச்செய்தியையறியச்சொல்லும்
நன்றுடன்சீமந்தங்கள் நடவேமுடிக்கவேணும்

வ-ம். அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா உன்தம்பியாகிய லட்சுமணப்பெருமாளை உன்தாயார்களிடத்திற்கனுப்பிச்சீதைகெர்ப்பமாயிருக்கிறதுமெய்தானுவென்று விசாரித்துவரச்சொல்லும்பிள்ளாய் ராமபத்திரா.

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்— வசனம்.

அப்படியே விசாரிக்கச்செய்கிறேன் சுவாமி.

ஸ்ரீராமர்லட்சுமணருக்குச்சொல்-திபதை.

தம்பிலட்சுமணனேகேளாய் தையலாள்சீதைக்கிப்போ
சம்பிரமாயைந்துமாதந் தனிவளர்கெர்ப்பமென்று
கம்பிதஅனந்தல்தன்னிற் கண்டதால்தாயைக்கண்டு
இன்பமாயறிந்துநீயு மிட்சணம்வருகுவாயே.

வ-ம். அகோவாருந்தம்பி லட்சுமணு நீநம்முடைய தாய்மார்அரண்மனைக்குப்போய் சீதைகெர்ப்பமாயிருக்கிறது மெய்தானுவென்று விசாரித்துவாருந்தம்பிலட்சுமணு.

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்—வசனம்.

அப்படியே விசாரித்துவருகிறேன் சுவாமி.

இலட்சுமணர்சொல்—தரு—இ—ம்-எதுகுலகாம்போதி- மிசுரதாளம்.

பல்லவி.

அறிந்துவருவேனே அந்தரங்கம் அறிந்துவருவேனே

அனுபல்லவி.

அறிந்துவருவேனே அந்தரங்கந்தன்னில்
வருந்துந்தாயாராலே மாதுசீதைசேதி அறிந்து

சரணங்கள்.

சூரியகுலத்தினில் ரகுநாதர்பேரோங்கும்
சேயிழைலட்சுமிக்குச் செனித்தவிபரத்தை
துங்கைநிகராம்ராமர்தனதுரைசிரங்கொண்டு
தாயாருஞ்சீதைகெர்ப்பந்தன்னையக்ஷணத்தினில் அறிந்து

அப்படியிலிலைக்கும் அன்னைபிதைகாட்டுஞ்
செப்பியசெப்பத்தைதாயார்வாக்கினுலே அதிந்து

லட்சுமணர்-தாயாருக்குச்சொல்- திபதை.

எங்கேப்பெற்றதாயேயிணையடிகமலம்போற்றி
மங்களராமபதரர் வாய்மைகளறியச்சொன்னர்
பொங்கமயச்சீதையார்க்குப் பொருந்தவேகெர்ப்பமாக
இங்கிதகனவுகண்டா ரிதையறிந்துரைத்திடீரே.

வ-ம். கேளுந்தாயே ரகுநாயகருடைய சொற்பனத்தில்சீதைக்குக் கெர்ப்பமாகக்கனவுகண்டாராம் அதுவுண்மைதானே சொல்லுமம்மா.

தாய்மார்கள்-லட்சுமணருக்குச்சொல்- திபதை.

ஆதிதமெய்தான்மைந்தா அருங்கிளிசீதையார்க்கு
வாமனை நளினுலே வயிற்றிளிற்கெர்ப்பமானுள்
ஓமெனஸ்ரீமந்தங்க ளுவமையாய்ச்செய்யவேணும்
பூமகன்ராமனேடே போயிதைப்புகலுவாயே.

வ-ம். அதோகேளுமைந்தாலட்சுமணுசீதைக்கு ஐந்துமாதங்கெர்ப்பமாயிருக்கிறது மெய்தான் சீக்கிரமாய்ஸ்ரீமந்தமுகூர்த்தஞ்செய்யவேணுமென்று சொல்லும்பிள்ளாய் லட்சுமணு.

லட்சுமணர்-தாய்மாருக்குச்சொல்-வசனம்.

அப்படியேசொல்லுகிறேன் அம்மா.

இலட்சுமணர்சொல்கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

தாய்மொழியைக்கேட்டவுடன் ருன்களித்துலட்சுமணன்
மன்பாயண்ணனெதிரில்வாரார் பட்சமுடனே
தரைபுகழ்சீதைகெர்ப்பந் தானெனவேசதிசொல்ல
வாயிதலட்சுமணரும் வருகின்றார்
அன்னைசொன்னவார்த்தைகேட்டு அநுஜனிலட்சுமணன்
தன்னைமரந்தோடிவாரார் தமையனண்டையில்

இலட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல் திபதை.

அதிக்கவாசென்றுரைத்த அன்றுமேபோற்றிபோற்றி
வெருந்திபதாரைக்கன்னிவாய்மைகளறியும்போது
பரக்கிமுகத்தாள்சீதை பார்த்திடக்கெர்ப்பமைந்தாம்
தரைபுகழ்தாயார்சொல்லச் சந்தோஷமாகவந்தேன்.

வ-ம். கேளும் அண்ணாவே சீதாலட்சுமிக்கு ஐந்துமாதங்கெர்ப்பமெய்தாரென்று சொன்னார்சுவாமி.

ஸ்ரீராமர்—வசிஷ்டருக்குச்சொல்-திபதை.

குலகுருவசிஷ்டரேநீர் கூறியபடிக்குந்தானே
கலகமில்லாமற்சீதைக் காவதுகெர்ப்பமைந்தாம்
இலங்கையதனிலிப்போ தியாம்செய்யும்விபமென்ன
துலக்கமாயெந்தனுக்குச் சொல்லுவீர்சொல்லுவீரே.

வ-ம். அநேகமாருஞ்சுவாமிகுலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவரே உம்முடைய விஷ்டப்படிக்குச் சீதைக்கு ஐந்துமாதங்கெர்ப்பமெய்தான் இனிமேல் நடக்கவேண்டியகாரியம் அருளிச்செய்யும்சுவாமி.

வசிஷ்டர்—ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அஞ்சுமாசபக்ஷியந்தான் ஸ்ரீமந்தமுகூர்த்தஞ்செய்யவேணும் சீதையையழைப்பியும் பிள்ளாய் ராமபத்திரா.

ராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

இந்திரசித்தைவென்றவென் னுயிர்த்துணைவனேகேளாய்
சுந்தரச்சீதையாளைத் துலக்கமிப்போதுதானே
அந்தமாந்தா திருமு அழகுதன்னுடைகையில்வைத்து
தொந்தமையழைத்துக்கொண்டு சுருக்கினில்வருகுவாயே.

வ-ம், கேளுந்தம்பிலட்சுமணரே அந்தப்புறத்திற்குப்போய் சீதையை அதிசீக்கிரமாய் அழைத்துவாருந்தம்பிலட்சுமணரே.

லட்சுமணர்—ராமருக்குச்சொல்வசனம—அப்படியேயாகல்லதையா.

லட்சுமணர்—சீதைக்குச்சொல்—திபதை.

அருந்ததிக்கிணையாய்வந்த அன்னமேயென்றாய்ச்சீதாய்
பரிந்துடன்ராமபத்திரர்பட்சமாயுன்னையிப்போ
வருந்தியேவரவேசொல்லி வண்மையாய்ச்சிலவுதந்தார்
மருங்கினிலதிகமான மங்கையேவருகுவாயே.

வ-ம், கேளுமம்மா சீதாய் உன்னைரகுநாயகர் அதிசீக்கிரமாயழைத்துவரச்சொன்னார் வருவாய்தாயே.

சீதை—லட்சுமணருக்குச்சொல்— வசனம்.

அப்படியேவருகிறேன் இளையபெருமாளே.

சீதாதேவிவருகிறபொழுது—திபதை.

ஒயில்நடையாய்விசித்ர வொளிவுகள்பளபளென்ன
தோழிமாருடனேவார்குழல் கொண்டைக்காரந்தியேந்த
[illegible] கனத்தபெருமையிலங்கச்
செயா [illegible] சீதாதேவியுங்கொலுவில்வந்தாள்.

வ-ம. அப்போதப்படியென்றன் குயிலைப்போன்ற குரலையுடையதா யிகள்காளாஞ்சியேந்தவு வெண்மேவடிக்கையான பொன்றுபாதைக்காள் பிரகாசிக்கவும் சீதாதேவியானவள் கொலுவுக்குவருகிறபடிதங்காண்க.

சீதைவருகிற - கஉ - இ-ம் - எதுகுலகாம்போதி - சாபுதாளம்.

பல்லவி.

சீதைவந்தாளே கொலுவுக்குத்தேவிவந்தாளே

சீதைவந்தாளே மாதுசிரோன்மணி
தாதியர்கள்வந்துபாதம்பணியவே (சீதை)

சரணங்கள்.

கௌத்துசரப்பளி ரத்னபதக்கங்கள்
முத்துமூக்குத்தி விசித்திரமாய்மின்ன (சீதை)

எத்திசையும்புகழ் பெற்றசீதாதேவி
பத்தனைமாத்துப் பசுந்தங்கமென்னவே (சீதை)

சுந்திராபச் சந்திரன்தேவி
மந்திரவேதவசிஷ்டனைக்காணச் (சீதை)

தண்டைசிலம்பு கலீல்சலீலென்ன
பண்டுபெருவர்பள்பளென்றுமின்ன (சீதை)

மேவியவெண்சா மரங்களும்வீசவே
நாவியசிர்த்தனம் தானதுபுரியவே (சீதை)

சிற்றிடைதுவளவே யெத்திசையும்கீர்த்தி
பெற்றகுமார் சித்தமகிழவே. (சீதை)

சீதை - ராமனைப்பணிதல் - கண்ணிகள்

இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

பொற்பாதமேசரணம் அடியாள்போற்றும்
பொற்பாதமேசரணம்

அநுபல்லவி.

பொற்பாதசரணங்கள் போற்றித்துதிசெய்யும்
தப்பிலாரகுபதி தாளிணைசரணம் பொற்

அண்டபுவனமெல்லாம் ஆளும்ரகுபதியே
யெண்டிசையுந்துதிக்கும் இணையடிசரணம் பொற்

வேதமுறைமைகளை மிகவுமறிந்திட்ட
மாதவவசிஷ்ட மாமுனியேயுந்தன் பொற்

ஐயாகுலகுருவே அருந்தவப்பொருளே
பொய்யாமொழியுடைய புண்ணியமுனிவரே பொற்

சீதை ஸ்ரீராமருக்குச் சொல்-த்விபதை.

வாதுசோரர்கள் தம்மை வதைத்து [illegible] கொண்டு
மாதவர் தம்மைக் காக்கும் மகிபதி [illegible]
ஏதுகாரியம் [illegible] பின் வீட்டை [illegible] சொல்லுஞ்
சீதை [illegible] திருவுள மேனே.

வசனம்.

அக்கோவா [illegible] பின்வீட்டில் வாசமைத்து [illegible]
[illegible] வேண்டும் [illegible].

ஸ்ரீராமர்-சீதைக்குச் சொல்-த்விபதை.

அன்னமே தேவமாமேனே அழகு [illegible] பெண்ணைக்
சொன்னபேதையே [illegible] கொண்டு வருவாயிப்போ
கன்னி [illegible]
மின்னவே [illegible] பெண்மையாய் வாழ்வாய் பெண்ணே.

வசனம்.

கேளாய் ஞான [illegible] வாழ்ந்திரு
ப்பாய் பெண்ணே.

ராமர்-வசிஷ்டருக்குச் சொல்-வசனம்.

அக்கோவா [illegible] பட்டாபிஷேகத்திற்கு ஒரு நாள்பார்த்துச்
சொல்லவேணுமென்னுங்ஸ்வாமி.

வசிஷ்டர்-ராமருக்குச் சொல்

தரு-இ-ட-கேதாரகௌளை-ஆடதாளம்.

பல்லவி.

பார்த்துச் சொல்லுவேனே முகூர்த்தங்கள்
பார்த்துச் சொல்லுவேனே

அநுபல்லவி.

பார்த்துச் சொல்லு [illegible]
[illegible] (பார்)

சரணம்.

[illegible] (பார்)
[illegible] (பார்)
[illegible] (பார்)
[illegible] (பார்)

இராமர்க்குஞ்சிறைதக்கும் நல்லாயிருக்குது
பூமாபார்த்தசாஸ்திரம் பொய்யில்லாதாவாராது (பார்)

அஞ்சுமாதங்செல்ப்ப முண்டாயிருக்குது
[illegible] பிறக்கவேதோணுது (பார்)

சந்ததிபிறக்கிறார் சண்டைக்கழைக்கிறார்
மைந்தன்பிழைக்கிறார் மல்லுக்கழைக்கிறார் (பார்)

[illegible] வேதோணுது
கனத்தவால்மீகிரிஷி காக்கவேதோணுது (பார்)

வசிஷ்டர்—ராமருக்குச்சொல்-திபதை.

சுடர்குலத்தரசர்கோவே சுந்தரராமபத்ரா
திடமுடன்முகூர்த்தம்பார்க்கத் தேர்ந்ததையென்னசொல்வேன்
கடகமாம்ராசிகன்னி கனத்ததோர்சிம்பந்தள்ளி
அடல்புனர்பூசமொன்று மானநாள்வெள்ளிதானே.

வ-ம். அதோவாரும்பிள்ளாய்ராமபத்திரா [illegible] முகூர்த்தம் புனர்பூசநட்சத்திரம் கடகலக்கினம் [illegible] வெள்ளிக்கிழமையில் முகூர்த்தமாயிருக்கிறது [illegible] ராசர்களுக்கும்முகூர்த்தவோலை யெழுதியனுப்பிவரச்செய்யும்ராமபத்திரா.

ராமர்சொல்—வ-ம். அப்படியேசெய்கிறேன்சுவாமி.

ராமர்—லட்சுமணருக்குச்சொல்—திபதை.

[illegible]
[illegible]
வாசமாம்நாளிசுக்ர வாரத்தில்முகூர்த்தமென்று
விசியேவருவதாக விடுகுவாய்தூதனைத்தான்.

வ-ம். அதோவாருந்தம்பிலட்சுமணா [illegible] தேசத்துராசாக்களுக்கு [illegible] வெள்ளிக்கிழமையதினத்தில் ராசருக்கும் [illegible] முகூர்த்தமென்று [illegible] யெழுதியனுப்பிவையுந் தம்பிலட்சுமணா.

லட்சுமணர்-ராமருக்குச்சொல்-வசனம்.

அப்படியேயெழுதியனுப்பிவைக்கிறேன்சுவாமி.

லட்சுமணர்—கட்டியக்காரனுக்குச்சொல்—வசனம்.

அதோவாரும்பிள்ளாய்கட்டியக்காரா நம்முடையராசாக்கள் [illegible] ராசாக்களுக்குஞ்சிறைக்கும் [illegible] வெள்ளிக்கிழமையதினத்தில் [illegible] முகூர்த்தமென்று ஓலையெழுதியனுப்பிவையும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

இதோ தங்கள்சொற்படிக்கு இராயசக்காரனை அதிசீக்கிரமத்தில அழைப்பிக்கிறேனையா.

கட்டியக்காரன்-இராயசனுக்குச்சொல்-கவி.

மடமைசேர்லட்சு மணரிப்போதுன்னை
அடவுடனழைத்தா ராசர்குவாமே.

லட்சுமணர்-இராயசக்காரனுக்குச்சொல்-கவி.

நல்லதப்படியே நடந்திடும்பின்னால்
ஒல்கையில்யானு முயர்சபைவருவேன்.

இராயசக்காரன்வருகிற-பொதுதிபதை.

தாய்மொழிதவறாராமர் தலைமையாய்க்கொலுவினின்று
சாய்வுறாராயசத்தில் சமர்த்தனன்மூத்தபிள்ளை
காயமேசுத்திபண்ணி களபகஸ்தூரிபூண்டு
நேயமாகணக்கெழுத்து நிமிஷத்தில்வருகின்றானே.

ராயசக்காரன்வருகிற-தரு-இ ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தானேராயசக்காரன் வெகு
வகையுடன்கணக்குகள் தொகையுடன்சொல்ல

அனுபல்லவி.

பொன்னெழுத்தாணிகொண்டு ராமர்
பொக்கிஷக்கணக்கெழுத அக்கரைகள்கொண்டு (வந்தா)

சரணங்கள்.

சுங்கிட்டுப்பாகைகள்கட்டி நல்ல
சிறப்பர்ப்சட்டப்பணிகள் சொருகுடன்யாட்டி (வந்தா)
கையிலறாமாலை [illegible] வெகு
காரியமெல்லாமிவனைக் கண்டவுடன்கூட (வந்தா)
ஒய்யாரமாகவேநடந்து மிக
வொங்கிவப்பயிட்டு [illegible]ரைக்கடந்து (வந்தா)
காதிற்சோடுகடுக்கன்மாட்டி அதிகக்
[illegible] னரிக்குளிப்பாட்டி (வந்தா)

கட்டியக்காரன்-ராயசனுக்குச்சொல்-வசனம்.

அகோ [illegible] ராயசக்காரரே [illegible] நாயகருக்கும் சீதாங்கனி [illegible] உதயத்திற் [illegible] கூடிநடக்கு மென்றும் [illegible]த்தாறுதேசத்துராஜாக்களும் வருப்படி ஓலையெழுதும்பிள்ளாய் ராயசக்காரரே,

இராயசக்காரன்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அப்படியேயெழுதுகிறேன்பிள்ளாய்சட்டியக்காரா.

ஸ்ரீராமருக்கும்—சீதாதேவிக்கும்—விவாகமுகூர்த்த நிருபம்

ஜனகமகாராஜருக்கும் மற்றராஜாக்களுக்கும் அறிக்கை.

வ-ம். ஸ்ரீ[illegible] தண்டபாணிசெம்பிர ராஜபார்த்தான்
டா[illegible] ருக்கும் ஜனகமகாராஜாவுக்கும் நிருபமா
னதென்னவென்றால் [illegible] மாசம் இந்த சோமவாரத்தேதி வெள்ளிக்கிழ
மை [illegible] பிரபுக்களான [illegible] நாயகருக்கும் பிராங்
[illegible] படி [illegible] வங்கணர்-கொங்கணர்-லா
ட[illegible] மத்ததேசம்-[illegible]-சௌராஷ்ட தே
சமுதலாகியசர்வத்திராஜரும்வரவேண்டியது.

கட்டியக்காரன்—தூதருக்குச்சொல்—திபதை.

[illegible] ருபத்தன்னைத்
[illegible] சொல்லுந்
[illegible] க்குமிப்போ
[illegible] வருகுவீரே.

வ-ம். அப்போ வாருங்கள் தூதர்களே இந்தத்திருமுகத்தைஜனகமகா
ராஜருக்கும் இப்பத்தாறுதேசராஜர்களுக்குங் காண்பித்து சீக்கிரமாக
இவ்விடம்வந்துசேருங்கள் தூதர்களே.

தூதர்கள்—வசனம்.

அப்படியேகாண்பித்துவருகிறோமையா.

பொதுகண்ணிகள்—இ-ம்-சங்காபரணம். மிசுரதாளம்.

ஸ்ரீமுகங்கண்டானே ஜனகன் மெத்த
சிந்தை மகிழ்ந்தானே

பட்டணப்நாற்புறஞ் ஜோடித்தான் ஜனகன்
பாங்குடன்பேரிகை யடித்தான்

எட்டுத்திசையெங்குங் காட்டினான் ஜனகன்
எல்லோரும்வாருமென் றோட்டினான்

பவழத்தாற்கால்களை நாட்டினான் ஜனகன்
பட்டாற்றுசங்கொண்டு சூட்டினான்

வாழை[illegible] நாட்டினான் ஜனகன்
மலர்தொடுத்தேமுகத்தைச் சூட்டினான்

ஒட்டைமேற்பேரிகை கட்டினான் ஜனகன்
உலகமதிரவே தட்டினான்

ஆனைமேல்பாரி கட்டினான் ஜனகன்
ஆர்ப்பரித்தேதாளந் தட்டினான்

குதிரைமேல்டங்காவை நீட்டினுன் ஜனகன்
கோவென்றுஓங்காரம் பூட்டினுன்
ஸ்ரீமுகங்கண்டானே ஜனகன் மெத்த
சிந்தை மகிழ்ந்தானே

பொதுதிபதை.

துங்கமிகுஞ்ஜனகராஜருமற்றேருஞ்
சூழவிருதுகளொலிக்கத்தோரணமாரும்
பங்களமாய்கடனமிடராஜரியாரும்
வரிசையுடனயோத்திநகரதனில்வந்து
தங்கியபின்முனிவர்பலர்நெருங்கவேயந்
தணர்கிலர்சூழவசிஷ்டருமப்போது
பொங்கமுடன்சிமந்தமுகூர்த்தந்தன்னைப்
புகழ்பெறவுமுடித்திடவேபுகலுவாயே.

வ-ம். அகோ தெப்படியென்றல்ஜனகமகாராஜருர் ஐம்பத்தாறுதேசத்தாசர்களும் அயோத்தியாபுரிவந்து சேர்ந்தபின்பு வசிஷ்டமகாமுனிவரால்ராமருக்கும்சீதாங்கனிக்கும் சிமந்தமுகூர்த்தம் நடக்கிறவிதங்காண்க.

வசிஷ்டர்—ஸ்ரீராமருக்குச்சொல்—வசனம்.

அகோவாரும்பிள்ளாய்ராமச்சந்திரா சீதசாலமாகின்னதுசீக்கிரமாகநீயும் சீதாலட்சுமியும் மணக்கோலமாயும் அலங்கிர்தஞ் செய்துக்கொண்டுவாரும்பிள்ளாய்ராமபத்திரா.

ஸ்ரீராமர்—வசிஷ்டருக்குச்சொல்—வசனம்.

அப்படியேசெய்துவருகிறேன்சுவாமி.

வசிஷ்டர்—சிமந்தமுகூர்த்தஞ்செய்துவைக்கிற—கண்ணிகள்
இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

ஸ்ரீராமாஜெயஜெய சீதைமனோகரா
சாருண்யசாகரா கருணைகடாட்சகரா (ராமா)
சீதையுடன்ரகுபதியைச் சிம்மாசனத்திருத்தி
போதமுடனலங்கிட்டார் புண்ணியமாதர்கள்வந்து (ராமா)
வண்டுமொய்க்குஞ்சண்பகப்பூ வாசமுள்ளமருக்கொழுந்து
தண்டுமல்லி அலரிசரம்கொண்டையீதில்தான்முடித்தார் (ராமா)
குங்குமப்பூச்சந்தனமுங் கோரோஜனைபுனுகுமஞ்சள்
மங்கைமார்கள்பின்னியிரில் வகைவகையாய்த்தானெழுதார் (ராமா)
மாணிக்கத்தால்கால்நிறுத்தி மரகதத்தாற்பந்தலிட்டு
மேல்முத்தால்விரிப்பரப்பி அலங்கிருதஞ்செய்தாரே (ராமா)
மல்லிகைப்பூமுல்லையுடன் மருவுமிருவாட்சியிருவேல்
ஆலிமிசைநஞ்சிதையார்க்குச் சிறப்பதனைச்செய்தாரே (ராமா)

தேவர்களு முனிவர்களுஞ் சிறப்புடைய அந்தணரும்
நாவலர்கள்பாடிவர ராமரிடசிபந்தத்தில் (ராமா)

கவுசலையுஞ்சுமித்திரையுங் கனமுடையமாதவரும்
ஜனகருடன்மற்றவருஞ் சந்தோஷங்கொண்டாரே (ராமா)

கஸ்தூரிகந்தமிட்டு கதம்பஞ்சவ்வாதுடனே
பச்சிலையுங்கமகமென்ன யிருவர்க்குமலங்கரித்து (ராமா)

புலவர்கள்பார்த்திருக்கப் புட்பவனம்பார்த்திருக்க
கண்ணியமுடன்மாதரெதிர் காணவந்தாரகுபதியை (ராமா)

அத்தன்ரவிகுலத்தில்வந்த அரிரகுநாதருக்குச்
சித்தர்கின்னரர்புடைசூழ சீமந்தஞ்செய்தாரே (ராமா)

செந்திருவாஞ்சீதையார்க்கும் தசரதனார்பாலனுக்கும்
கந்திருவர்புடைசூழ கலியாணஞ்செய்தாரே (ராமா)

மங்கலமாம்ராமருக்கும் வாகுள்ளசீதையர்க்கும்
சிங்காரமாகவேதான் சீமந்தஞ்செய்தாரே (ராமா)

மங்களம்-கன்னிகள்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

தசரதசுதபதி
ஜனகன்மனமகிழ்
அசைவில்லாஅண்டருக்கும்
வசைபுரியுமிலட்சுமிக்கும்
ஸ்ரீராமச்சந்திரர்க்குஞ்
சீதைசெல்வியர்க்கும்
ஆதிமாலவர்தனக்கும்
மாமறைக்கும் (ஜெ)

தாய்மொழிதவறாத
தாடகைதனைவதைத்த
உபாயமாகவாலிக்கு
சகாயமாய்தேவ
சத்தியஞானிராமருக்கும்
நாயகர்க்கும்
உம்பர்பதிதந்தவர்க்கும்
இடர்தனைத்தீர்த்தோர்க்கும் (ஜெ)

ராவணசம்மாரனுக்கும்
தேவாநுகூலனுக்கும்
பூமகள்திருசேர
தாமணிதரித்தோங்குந்
நான்முகனையீன்றவர்க்கும்
ஸ்ரீராமருக்கும்
புகழும்பிராட்டியர்க்கும்
தார்வேந்தர்க்கும் (ஜெ)

ஸ்ரீராமர்-நட்டுவக்காரனுக்குச்சொல்-திபதை.

மனுநெறிப்படிக்கொருமுறைச்செய்தபடியாலிப்போ
கனமுடனன்னஞ்சொர்ணந் தனிக்கிடுபிராசகர்க்கும்
டனமதுபொருந்தியும் வந்தவர்க்குதண்டென்றிப்போ
சனம்பெறவேபாலித்துக் கடிதினிலோடிவாராய்.

வ-ம். அகோவாருமப்பிள்ளாய் நட்டுவக்கார நமக்கு ஸ்ரீமந்தமுகூர்த்தமானபடியினாலே ஏழைபரதேசிகளுக்கு வேணுமதி சொரிந்தருளப் பிவையும்பிள்ளாய்.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அப்படியேகொடுக்கிறேன்சுவாமி.

நாணம்வாங்கப்பண்டாரமும் பண்டாரச்சியும்வருகிற

கன்னிகள்-நொண்டிச்சிந்து.

பண்டாரச்சிபண்டாரத்துக்குச்சொல்லல்.

பண்டாரமே ஓய் பண்டாரமே
பாமரைக்காணாத பண்டாரமே

உண்டானபோதல்லோ பண்டாரமேகை
யொடுங்கினாலென்னவுண்டு பண்டாரமே

மாலையிட்டுச்கோலம்வந்தீர் பண்டாரமே
மணிக்குவழியைக்காணோம் பண்டாரமே

கூலிக்குக்குத்தினாலும் பண்டாரமேஒரு
குறுணிக்கறுப்பேனையா பண்டாரமே

பழனியில்சேதையா பண்டாரமேநாம்
பார்த்துவருவோம்காணும் பண்டாரமே

அண்ணாமலையைக்கண்டு பண்டாரமேநாம்
அநேகநாளாச்சுதுகாண் பண்டாரமே

சும்மாகிடந்தாலும் பண்டாரமேநமக்கு
துட்டாக்கொடுப்பார்கள் பண்டாரமே

அயோத்திரகுநாதர் பண்டாரமேஇப்போ
அரியமணஞ்செய்கிறாராம் பண்டாரமே

கைகோர்த்துநான்வருவேன் பண்டாரமேநாம்
கடுகெனவேபோய்வருவோம் பண்டாரமே

பண்டாரம்-பண்டாரச்சிக்குச்சொல்-கண்ணிகள்.

இதுநல்லவிதிவசமோ ஆண்டிச்சாயி- இனி
யென்னாலேயாவதில்லை ஆண்டிச்சாயி

மாங்காய்போலிருந்ததெல்லாம் ஆண்டிச்சாயி-எனக்கு
தேங்காய்போலாச்சுதடி ஆண்டிச்சாயி

தேங்காய்போலிருந்ததெல்லாம் ஆண்டிச்சாயி-பெரிய
சித்தைபோலாச்சுதடி ஆண்டிச்சாயி

பருஞ்சித்தைபோலிருந்ததெல்லாம் ஆண்டிச்சாயிஇப்போ
பஞ்சுபொதியாச்சுதடி ஆண்டிச்சாயி

எடுத்துநடப்போமென்றால் ஆண்டிச்சாயினக்கு
இடுப்புவிட்டுப்போகுதடி ஆண்டிச்சாயி
தூக்கிநடப்போமென்றால் ஆண்டிச்சாயி
சுமையாகக்காணுதடி ஆண்டிச்சாயி
ஒருமூட்டையிருந்தால் ஆண்டிச்சாயி—இந்த
உலகமதிக்காதடி ஆண்டிச்சாயி
இருமூட்டையாயிருந்தால் ஆண்டிச்சாயி-உலகில்
எல்லவரும்புகழ்வார்கள் ஆண்டிச்சாயி

கட்டியக்காரன்சொல்—வசனம்.

ஆ. ஆ-பண்டாரமே இதென்னஅப்பா கீழேயிருக்குஞ் சுவாமிஜி துவாபரஞ்சபொதி இப்படியாமெத்தசந்தோஷம் உங்களுக்குப்பரிசுதந்தேன்வாங்கிக்கொள்ளுங்கள்.

பொது-திபதை.

பரிவுடனந்தரங்கம் பஞ்சணைதன்னில்நின்று
பருமணிமாலைபூண்டு பைங்கிளிசீதையோடும்
ஹரிரகுராமர்தானும் ஆனந்தக்களிப்பாய்சேர்ந்து
உருகியவிரகத்தாலே பொன்னொடிகூறுவாளே.

சீதை-ஸ்ரீராமருக்குச்சொல்—திபதை.

நவமணிவைத்திழைத்த நாகரீகங்கள்பெற்ற
நவமுறமுடியைப்புனைட சுவாமியேயென்வயிற்றில்
நவமுறவுதித்தசொற்பந் தன்னைப்போற்சௌரியந்திரம்
விவரமாய்ப்பெறவதாக வெனக்கருள்செய்குவீரே.

வ-ம். ஆகோவாரகுநவாமிரகுநாயகரே என்வயிற்றில்தரித்த கெர்ப்பம் உம்மைப்போலசவுரியபராக்கிரமம் உண்டாகும்படியாய் அனுக்கிரகம்பண்ணவேண்டுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்—சீதைக்குச்சொல்-திபதை.

சிந்தைமகிழ்ந்தேன்மானேகேசந்திரிகர்ப்பமுள்ள
சுந்தரமாதர்க்காசை தோன்றுமெப்பொருளிலாவ
தந்தனுக்கெதின்மேலிச்சை சொல்லுவாய்தருவேன்திவ்ய
கொந்தளக்கொடியினாளே கோகிலவாணியே.

வ-ம். அகோவாருப்பெண்ணே நீசாய் உலகத்திலே கெர்ப்பமாயிருக்கப்பட்ட ஸ்திரிகளுக்கு எதன்பேரிலாகிலும் இச்சையாயிருக்கும் ஆகையால் உனக்குஎதன்பேரில் இச்சையுண்டாயிருக்கிறதோ அதைத்தெரியச்சொல்லாய்பெண்ணே.

சீதைக்கும்—ராமருக்கும்—தர்க்கம்—கண்ணிகள்

இ-ம்-நாதநாமக்கிரியை—அடதாளம்.

சீதைசொல்லல்.

வனம்பார்க்கவேணும் அடியாள்நானும்
வனம்பார்க்கவேணும்
வனம்பார்க்கவேநானும் வள்ளலேயிப்போது
சினந்துக்கொள்ளாமல்நீர் செலவுகொடுக்கவேணும் வனம்
உமைப்போல்ரூபமும் உமதுசவுரியமும்
எங்குநான்கண்டதில்லை யெனக்கருள்செய்யவேணும்
நேசமாகினனே என்சுவாமி ரவிகுலத்தரசே இந்தவரந்
தருவீரோயானால் அடியாள் மெத்தசந்தோஷமாவேன் வனம்

ஸ்ரீராமர் சொல்லல்.

அந்தப்படியேயுனக் கருள்செய்கிறேன்பெண்ணே
என்னவரங்கள்வேணு மென்னைநீகேளாயிப்போ
கோகிலப்பெண்ணே கண்ணே சந்தோஷமானேன்
அன்னமேசீதாய் தையலேமானே

இதுவு—ஸ்ரீராமர்சொல்லல்.

நினைத்தநெஞ்சந்தன்னில் நீவனம்போகத்
துணிந்தவகையெனக்குச் சொல்லடிமயிலே கோகில

சீதைசொல்லல்.

அந்தவனத்திற்சென்று அருமுனிவரைக்கண்டு
தெண்டஞ்செய்துநானும் திரும்பியேவருகிறேன் நேச

ஸ்ரீராமர்சொல்லல்.

அந்தவனத்திலுள்ள தந்திகரடிபுலி
முந்தியேசென்றுநாம் மோகமாய்ப்பார்த்தோமே கோகில

சீதைசொல்லல்.

கந்தமலைகளும் காவிற்குயில்களும்
கண்டுமகிழ்ந்துநான் கடுகவருகிறேன் நேச

ஸ்ரீராமர்சொல்லல்.

கந்தமலையிலுள்ள கல்லுமுள்ளுகளெல்லாங்
காலிற்றைக்கதாம் கடுகநடந்தோமே கோகில

சீதைசொல்லல்.

அரியமயில்களும் அன்பாய்க்குயில்களும்
நாடும்வனங்களும் நான்கண்டுவருகிறேன் நேச

ஸ்ரீராமர்சொல்லல்.

ஆடிமயில்களும் அன்பாய்க்குயில்களும்
அன்னங்களிங்குண்டு வனங்கண்டுபோவாயினன் கோகிலே

சீதைசொல்லல்.

வேணுமடியாளுக்கு வேண்டியவரமிது
அன்றுமகிழ்ந்தாப்போ லின்றுமகிழ்ந்தேனே நேச

ஸ்ரீராமர்சொல்லல்.

மதிபோல்மலர்முகமும் மயிலின்வளர்கொண்ட
ரதியேயுதவாது ரஞ்சிதமேசீதாய் கோகிலே

சீதைசொல்லல்.

தேசம்புகழவந்த ஜெயராமச்சந்திராநீ
பாசம்வையும்நல்ல விஸ்வாசமாயென்மேல் நேச

ஸ்ரீராமர்சொல்லல்.

ஆகமாய்வேதமாய் வேதப்பொருளாயெந்தன்
மோசமானசீதா யோகஜனகன்பெண்ணே கோகிலே

சீதைசொல்லல்.

அதிபதிநீராச்சே சதிசர்ப்பனைகளாமோ
மதியினிலொருநாளும் நெறிதப்பிநடவேனே நேச

ஸ்ரீராமர்சொல்லல்.

சின்னநாளையிற்பெண்ணே சீதையேயுனைமணஞ்
செய்யவந்தபோது ஜனகன்வில்லொடித்தேனே கோகிலே

சீதைசொல்லல்.

தெண்டகாவனத்தினில் ரிஷிகளென்பவர்தம்மை
கண்ணேமனமகிழ கருத்தில்நினைந்தேனையா

ஸ்ரீராமர்சொல்லல்.

பாலப்பிராயத்திற் பரிந்துன்னைமணஞ்செய்தேன்
கோலம்பொருந்துஞ்சீதை தேனேயென்பானே கோகிலே

ராமர்—சீதைக்குச்சொல்—வசனம்.

அகோவாரும்பெண்ணே சீதாய் அப்படியே வனம்போக உனக்குத்திரவுதருகிறேன் நீஅந்தப்புரம்போம் பெண்ணே.

சீதைசொல்—வசனம்.

ஆனால் மகாபாக்கியம் நான்போய்வருகிறேன் சுவாமி.

ராமர்—கட்டியக்காரனுக்குச்சொல்—திபதை.

கட்டியக்காராகேளாய் கடிகியேயோடியிப்போ
சட்டமாய்காவலோனைச் சனதியில்வரவேசொல்லி

திட்டயேசெய்தாநீயுஞ்சீறியபுலியைப்போலப்
பொட்டெனக்கொலுமுன்பாகப் புகழுடனோடிவாடா.

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய அயோத்தியாபுரியைக்காக்கப்பட்ட தலையாரிகளை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அப்படியேயழைக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன்தலையாரிகளுக்குச்சொல்-கவி.

நிலைமைசேரயோத்தித் தலைவனாருபமை
கொலுவுக்குவரவே வலுவினிற்சொன்னார்

வ-ர். அகோகேளும் தலையாரிகளே நமதாசனாகிய ஸ்ரீராமர் உங்களை அதிசீக்கிரமாயழைத்துவரச்சொன்னார் ஓடிவாருங்களப்பா.

தலையாரிமார்கள்-கட்டியக்காரனுக்குச்சொல்-கவி.

திட்டமாயரசுசெய்யும் பட்டாபிராமர்சொன்ன
கட்டளைதனக்கேதேனு மட்டியுமுண்டோவாரும்

வ-ம். கேளுமப்பா கட்டியக்காரா நமதாசன்சொல்லுக்குமோரட்டியா இதோவருகிறோமப்பா.

தலையாரிகள்வருகிற-பொதுதிபதை.

கெட்டியதடியுங்கொண்டு நேரிசங்கையிலேந்தி
மட்டின்றியாப்பரித்து மகிபதியழைத்தாரென்று
தட்டியேதுடைகட்டனைத் தாண்டியேலகுவெடுத்து
கட்டுடன்காவலாளர் களறியில்வருகின்றாரே.

தலையாரிகள்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

காவற்காரர்நாங்களே ஊரிற் காவற்காரர் நாங்களே.

அநுபல்லவி.

கோபக்காரர்போலே விழிகளைக்
கூட்டிமுழித்து நாட்டுக்குள்வரும் (காவற்)

சரணங்கள்.

தண்ணீர்மேலடி யெடுப்போம்-வெள்ளத்
தலைந்துகள்ளரைப்பிடிப்போம்
உன்னிதமாக நடந்தடியைப்பற்றி
நின்றுநின்றென்று மன்னர்முன்னேசொல்வோம் (காவ)
அயோத்திமுழுதுந் திரிவோம்பகல்
அர்த்தராத்திரியில் வருவோம்

வையகத்தோரெவரெல்லாமப்பழித்தாலும்
வாட்டுவமெங்கள் பேர்நாட்டுவோம்பூமியில் (காவ)

நிகண்டதடிகள்பிடிப்போம் கையில்
நேரிசயபல்லயந் தொடுப்போம்
அகண்டபதியாம் அயோத்திவாழ்ராமர்
ஐயன்பாதந்தன்னை மெய்யென்றுநம்பியே (காவ)

தலையாரிகள் ஸ்ரீராமருக்குச்சொல்—திபதை.

மெய்ப்பொருளானசேனை மிகுதியாய்ப்படைத்தவீரா
செப்பரையடியார்தப்பைச்சீக்கிரமாயழைத்துவிதன்னை
கொப்பெனச்சொல்வீரெங்கள் கொற்றவர்அயோத்திராமா
நற்பதம்சரணம்ராமச் சந்திரசரணமையா.

வ—ம். அகோவாருந்சுவாமி ரகுநாயகரே எங்களை அழைப்பித்தகாரியம்அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்தலையாரிகளுக்குச்சொல்—திபதை.

தலையாரிமாரேவாரீர் சாற்றுமென்மொழியைக்கேளீர்
நிலமையாம்நமதுநாட்டில் நிகழ்ப்வருணாக்கும்பேச்சும்
தலையதோர்பட்டணத்தின் வாய்மையுமுளவாய்க்கேட்டு
நலமுடன்வந்தெனக்கு நவிலுவீர்காவலோரே.

வ—ப். அகோவாருந்தலையாரிகளே நீங்கள்நகர்சோதனைக்குப்போய் அவாளவாள் என்னசொல்லிக்கொள்ளுகிறார்களோ அந்தவார்த்தையைஒன்றும் ஒளியாமல் நம்முடன்வந்து அறிக்கையிடுவீர்களப்பா.

தலையாரிகள்—வ—ம்.

அப்படியேவந்து அறிக்கையிடுகிறோம்சுவாமி.

தலையாரிகள் உளவறிகிற—தரு

பல்லவி.

இ-ம்—கதுகுலகாம்போதி- சாபுதாளம்.

அநுபல்லவி.

அறிந்துவருவோம்வாரீர் நகரின்சேதி
அறிந்துவருவோம்வாரீர்

சரணங்கள்.

அறிந்துவருவோம்வாரீர் அவனிதன்னிலேசேதி
வந்தேதியவர்சொல்லு வார்த்தைதனையிப்போது (அறி)
நாலுதிசையெங்குந் தேடுவோம்மெள்ள
நயனபாஷைகள்சொல்லி கூடுவோம்
மேலும்நகரிலுள்ள காரியத்தைக்கண்டு
பரிவாயருக்கிப்போ பகருவோமண்ணயரே (அறி)

பல்லிகளைப்போலே பதுங்குவோம்-நல்ல
பழையச்சுவரின் கீழே தங்குவோம்
செல்லியபல்லைக் கடித்தாற்போல்பூமியில்
வல்லமையாகவே கல்லின்மேற்பாயுவோம் (அறி)

ராஜாந்தணர்வீதி செல்லுவோம்
நண்ணும்வீதியினிற் புல்லுவோம் வடுகர்
மாசில்வைசியர்வீதி வணிகர்வீதிகளும்
வாகாணமற்றவர்வாழ் வீதியுஞ்சென்று (அறி)

வண்ணான் வருகிற--பொதுதிபதை.

அசைவிலாதயோத்திதன்னி லனுதினங்கலைவெளுக்கும்
இசைபெறும்ரசகனென்றே னெடுபடாமூட்டைதூக்கி
வகையுடன்பேசிக்கொண்டு மங்கையுந்தானுமாகப்
புஜபலராமர்நாட்டிற் பொருந்தியேவருகின்றனே.

வ-ர், அகோதெப்படியென்றால் இந்தச்சமையத்திலே தலையாரிக ள்நகர்சோதனைக்குப்போய் உளவாயிருக்கிறபோது அயோத்தியாபுரி பட்டணத்திலிருக்கப்பட்ட வண்ணான்வருகிற விதங்காண்க.

வண்ணான்வருகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

வண்ணான்வந்தானே அயோத்தியில்
வண்ணான்வந்தானே

அநுபல்லவி.

வண்ணான்வந்தான்வெகு விண்ணணம்பேசியே
கண்ணனயோத்தியிற் கலைகள்வெளுக்கின்ற வண்ணான்

சரணங்கள்.

வாட்டமாசப்பெரு மூட்டைமுதுகில்வைத்து
போட்டிபோட்டியாக நாட்டம்பேசிக்கொண்டு வண்ணான்
சந்திசந்தியூட்டிற் கெஞ்சிக்கொஞ்சிவாங்கி
சோறுஞ்சிக்கொஞ்சியிவன் மிஞ்சிசலவைசெய்யும் வண்ணான்
வண்ணானும் வந்தானே மனைவியாளையேகியே
வண்ணான்மல்ராமருக்கு யினங்கள்பேசியே வண்ணான்
மன்னவர்மெச்சிட மரியாதையாகவே
சன்னித்துறைநகிறேன் சோமனைநானென்று வண்ணான்
துறையுங்குப்பிட்டுக்கொண்டு ஐய உங்கள்குடி
வண்ணானென்று தெருமட்டுஞ்சண்டைபோட்டு வண்ணான்
கல்லாடிக்கள்ளாடிக்கொண்டு தாயும்பிள்ளையுமாகக்
கோவிலவர்தனதன்னை கூறவுபாயங்கொண்டு வண்ணான்

வண்ணான் தன்மனைவிக்குச்சொல்-திபதை.

இக்கற்றுணிகளெல்லாம் யிவளுடன்கொண்டுபோய்நீ
அக்கரைதனில்தோய அடங்கலுங்கொடுத்துப்பின்பு
[illegible] விடுகள்தோறும்போய்நீ
[illegible] சோறுவாங்கி சுருக்கினில்வருவாய்பெண்ணே.

வ-ம் அதிகாலையில்பெண்ணே இக்கற்றுணியைக்கொண்டுபோய் அக்கரையில் [illegible] பொதிக்காக்கொண்டுபோய் [illegible] சோறுவாங்கிக்கொண்டு ராத்திரிகாலமானபடியால் சீக்கிரம் நிவேசத்திற்குள்வருவாய்பெண்ணே.

வண்ணாத்தி வண்ணானுக்குச்சொல்- வசனம்.

நீர்சொன்னபடியேசெய்கவருகிறேன் பிராணநாயகா

வண்ணாத்திவீடுகளில் சோறுவாங்குகிற தரு

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

சோறுபோடம்மா ஓ அம்மா கொஞ்சஞ்
சோறுபோடம்மா

அநுபல்லவி.

கீரையுடன்பசுற் கறியிருந்தாலிடு
நோவாகுது ஆரம்மாகூழ்கொடு (சோறு)

சரணங்கள்.

பகல்பழையசாதத்தண்ணீர் யிருந்தாலிப்போ
பரிவாய்க்கொடுத்திடம்மணி
சோறுடன்பழந்தண்ணீர் யிருந்தாலுங்கொடுவாய்
[illegible] இட்டமுடன் தந்திடுவாய் (சோறு)

கம்புகளிகருவாய் வாகுசோற்றைக்
காந்திகொண்டுநீவருவாய்
குப்பலென்னவம்மா கூவிக்கூவித்தாவுறேனே
[illegible] நாடிநாடிமேவுறேனே (சோறு)

புளிக்கக்கூழேனும் அம்மாஅம்மா
போடாய்நீகாணும்
[illegible] வெறுக்கத்தருகிறேன்
[illegible] [illegible] (சோறு)

வண்ணாத்திவண்ணானுக்குச்சொல் திபதை.

என் [illegible] நேசனாம்
சொன்னவர் [illegible]

பல்லிப்பாண்டங்கொண்டு பரிவுடன்சோறுவார்த்தி
முன்னமேவைத்தேனியானுன்னைவைத்திடவே.

ல-ர். அகோவாருமென்கணவா நீசொன்னபடியே கல்லால்கொண்டுகொடுத்த சோறுவாக்கிவைத்தேன் சாப்பிடவாருமென்கணவா.

என்றாள் வண்ணாத்திமீது கோபங்கொண்டடித்தல் — நிபாசர.

எத்தனைநேரமுண்டு நீக்கிருந்தேகரையில்தீ
பத்தினியில்லையோடி பயமுனக்கில்லையோடி
சித்தினியாளைப்போலத் திரிகிறாயுன்னைக்கையாற்
குத்தியெயிர்பறித்துக் குப்புறவிழவுதைத்தேன்.

ல-ம். அகோவாரும்பெண்ணே நீயிங்கேயிருந்துபோகிறபோது எனோமுண்டு இப்போது எவ்வளவுநேரமாச்சு தெரிஞ்சதாகிறதும் பயமில்லாமல் போச்சுதல்லவா இராக்காலமென்று சிக்கிரமாய்வரச்சொன் னேல் சித்தினியாளைப்போல எங்கேயோ திரிந்துவந்தாய் என ன்றைக்கிருந்தாலுமுன்னைவிட்டுப் பறக்கடிக்கப்போறேன் இனிமேல் உனக்குத் தேவையில்லை இதோ அந்தன் உனக்கேதனைப்போபோ.

என்றுத்திபுலம்பல்-கண்ணிகள்—இ-ம்-சண்டா-அதிதாளம்.

எக்குப்போகுதே அடித்தடியெத்தபோதே
பொங்கிப்பாகுதே கண்ணீராயே போதகதே
பெற்றதாயில்லையோ எனக்குற்றதோரில்லையே
சுற்றத்தாரில்லையே இப்புவியில் துணைத்தகப்பாரில்லையே
பக்கத்தோருமே உனக்கருத்ததை பார்க்கவில்லையே
திருக்காமினே தெய்வமேயிந்தச் சென்னம்வந்தாமே.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோ இந்தப்படியென்றால் வண்ணாத்தி முறையிட்டபோது வண் ணானானவன் தன்மகளுக்காகச் சொல்லுகிறதைக்கேட்க.

தரு—இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

இப்படிபடிக்கலாமோ நான்பெற்றபெண்ணே
இப்படிபடிக்கலாமோ

அநுபல்லவி.

இப்படிபடிக்கலாமோ தப்பிலிப்பறப்பயலே
கொப்பனவோழியோன் அப்பறப்போட்டேனையால் (இப்)

சரணங்கள்.

செச்செவன்றிடனுஞ்சிறிதிவிபோய்விடாதே
சேர்வேளைவழுத்த சொல்லுபாலைத்திடமாய் (இப்)

காலையுங்கையையுங்கட்டிக் கழுத்துக்குச்சுருக்கிட்டு
சோலமுடன்கொண்டுபோய் குளத்திலேதள்ளாமல் (இப்)

பெற்றஅருமையென்ன பேரிட்டநேத்தியென்ன
வளர்த்தஅருமையென்ன வைத்திருந்தநேத்தியென்ன (இப்)

ஓடியொளித்திட்டாலும் உலக்கைத்தடியெடுத்து
பாடிப்பாடியடித்திட்டானே பச்சுடம்புபிச்சுவா (இப்)

வண்ணான் தாயார்-வண்ணானுக்குச்சொல்-திபதை.

மட்டியாமவனேநீயும்வாயுளைசெய்யாமல்வீணாத்
திட்டெனவடித்தாலச் சிறுக்கியும்வீட்டைவிட்டுப்
பட்டணங்கோடிதன்னிற் பருத்ததோரகம்போயுற்றாள்
சட்டெனச்சென்றேயுன்றன் றாரத்தையழைத்துவாடா.

வ-ம். அகோவாடாவென்மகனே உன்மனைவியைவாயால் திட்டாமல் அடிஅடியென்று நீயடித்தபடியால் அவள் இந்தப்பட்டணத்துக் கடக்கோடியில் ஒருவீட்டில்போயிருக்கிறாள் நீபோய்அழைத்துவாடா மகனே.

வண்ணான் தாயாருக்குச்சொல்-திபதை.

இன்னிதாயழையுமென்றீரின்றொருவீடுபோன
பன்னிதானேதுக்காகும் பாராளும்ராமற்கல்லால்
மன்னியசீதைபோலே வருந்திநானழைத்தேனாகில்
என்னிடக்குலத்துக்கெல்லாம் ஈனத்தம்வருமேதாயே.

வ-ம். அகோகேளுந்தாயே பெண்சாதியானவள் அயல்வீடுபோனால்அழைக்கலாமோ ரகுநாயகரானவர் சீதையை யெடுத்துக்கொண்டு போனராவணனைச்சம்மாரம்பண்ணி சீதையை அழைத்துக்கொண்டு வந்துஅயோத்தியில் ராச்சியபாரம்பண்ணுகிறாரோ அவருக்கு அடுக்குமேயொழிய அயல்வீடுபோன பெண்சாதியைநானழைத்தேனாகில் என்னுடையசகுலவம்சத்திற்கு யீனத்தும்வருந்தாயே.

தலையாரிகள் ஒருவரோடொருவர்சொல்லல்- திபதை.

கேட்டீரோசணகன்வார்த்தைக் கேட்டீரோயெல்லோருந்தான்
தேட்டமாம்ராமபத்ரர் தேவிமேல்தோஷஞ்சொன்னான்
வாட்டியேயவனைநாமும் வாய்கொழுப்படக்கவேண்டும்
நாட்டியபட்டணத்தில் நகரிசோதனைகள்காரே.

வ-ம். அகோவாருங்களண்ணமாரே ரசகனானவண்ணான் என்னவார்த்தைசொன்னான் அந்தவார்த்தைக்குஅவனையென்னசெய்யவேணும்ஒன்றுஞ்செய்யப்போகாது ரகுநாயகருடனே அந்தவார்த்தையைச் சொல்லுவோம் வாருங்களண்ணமாரே.

தலையாரிகள்சொல்—தரு—இ-ம்-எதுகுலகாம்போதி—ஆதிதாளம்.

பல்லவி.

நாவெழுந்தென்னசொல்வோம் ராமரோடே
நாவெழுந்தென்னசொல்வோம்

அனுபல்லவி.

நாவெழுந்தென்னசொல்வோம் நகைக்கப்புவியின்மீதில்
பாவிரசகன்வார்த்தைப்பாராமற்சொன்னவார்த்தை (நா)

சரணங்கள்.

என்னென்று சொல்லப்போறோம் ராமரோடே
ஏதென்று சொல்லப்போறோம்
என்னென்றுசொல்லுவோ மிந்தச்சேதிதன்னை
காதினிற்கேட்கவுங் காரணமோஅறி (நா)
சொல்லுவ தெப்படிநாம்—ராமரோடே
சொல்லுவ தெப்படிநாம்
சொல்லுவதெப்படிதுஷ்டரசகன்வார்த்தை
தொல்புவியுள்ளவர்செவிதனிற்கேற்குமோ (நா)

தலையாரிகள்—ஸ்ரீராமருக்குச்சொல் திபதை.

ஐயரோநாங்களிப்போ அஞ்சுவோஞ்சேதிசொல்ல
உய்யவோரசகன்பேச்சு உலகினிலடாதுகண்டீர்
வையகமனிதர்வாய்மை வாய்த்தசீதாசிதைதகளென்று
பையவேகுற்றஞ்சொன்னான் பாதமேசரணமையா

வ-ம். சரணஞ்சரணஞ்சுவாமி எங்களைநகரிசோதனைக்கனுப்பினைத்தீர்களே நம்முடையபட்டணத்தில் ரசகனெனவொருவன் சீதாலட்சுமியின்பேரில் தோஷஞ்சொன்னான் அதையெப்படி சொல்லப்போகிறோம் சுவாமி.

ஸ்ரீராமர் தலையாரிகளுக்குச்சொல்—திபதை.

ஏதுநான்சொன்னேன்சொல்வீ ரென்மீதுபழுதாய்வந்தாற்
பாதகனென்னகண்டீர் பரிவுடனறிவேயுள்ளான்
சீதைதானுனிலென்ன திட்டுவோர்க்குற்றமாகில்
நீதியாய்ச்சொல்லும்வார்த்தைநிமித்தத்திலுரைத்திடுமே.

வ-ம். அகோவாருங்கள்பிள்ளாய் தலையாரிகளே ஆராகிலும் என்னகுற்றங்களிருந்தால் சொல்லுவார்கள் ரசகனெனவொருவன் என்னவார்த்தைசொன்னானென்றுமொளியாமற்சொல்லுங்கள் தலையாரிகளே.

தலையாரிகள்—ஸ்ரீராமருக்குச்சொல்—திபதை.

ரசகனுமனையாள்தன்னை நாடியேயடித்தானென்று
வசையறப்பிணங்கிப்போனாள் மானிலந்தன்னிலந்த

அரசர்போலபெண்டை அழைப்பிருவழைமேனைத்த
தசரதராமர்கல்லோ துருப்பிதென்றுரைத்தாரீனயா.

வ-ம். அரிராமாராஜ்ஜனமி சுகிசோதரனைத்தப்போனதில்சரஜு வண்ணான் தன்பெண்சாதியையடித்தான் அவள்பிணங்கி அப்பவீ டுபோனாள் அவள்தாயானவள் மறுவுமுண்டானபெரும் அவனைத்தன் பெண்சாதியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் போகச்சொன்னாள் அவன் அதற்கு வண்ணான்சொன்னதாவது நாயகரல்லவோ சீதைதனைப்பெ ரொத்துக்கொண்டுபோன ராவணனைச்சம்மாரம்பண்ணி சீதையைக்கொ ண்டுவந்து தொடையின்மேல் வைத்துக்கொண்டு இராச்சியபாரம் ப ண்ணுகிறார் அப்படிக்கொத்த ராமருக்கேசெல்லுமேயல்லாமல் அயல் வீடுபோன பெண்சாதியையழைத்தால் தன்சகுலத்துக்குயீனம்வரு மென்றுசொன்னான்சுவாமி.

ஸ்ரீராமர்—தலையாரிகளுக்குச்சொல்—வசனம்.

அதுக்குஉங்கள்வீடுகளுக்குப்போய்வாருங்கள்பிள்ளாய் தலையாரிகளே,

தலையாரிகள்—வசனம்மகாபாக்கியஞ்சுவாமி

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்— வசனம்.

அகோவாருப்பிள்ளாய் கட்டியக்கார தம்பிபரதனை அழையும் பிள்ளாய்.

கட்டியக்காரன்-வசனம். அப்படியே யழைப்பிக்கிறேன்சுவாமி

கட்டியக்காரன்பரதருக்குச்சொல்-வசனம்.

அகோவாரும் பரதமகாராசாவே தங்களை நாயகர் அழைத்துவரச்சொன்னார்சுவாமி.

பரதர்—வசனம்— ஆனால்போவோம் வாரும்பிள்ளாய்.

பரதர்வருகிற-ராகம்—தரு—இ-ம்— பூரிகல்யாணி.

பல்லவி.

சதிர்குலபதிபரதன் வருகிறான்—ஸ்ரீராமர்தம்பியாய
சதிர்குலபதிபரதன் வருகிறான்

அநுபல்லவி.

அதிபதியெனவரு குணபதி
திசைதருமபுகழ்வித ரணபதி (சதிர்)

சரணங்கள்.

அண்டாண்டமெங்கும் நடுங்கவேஎக்காளமூதி
அதிகசின்னமுரசு முழங்கவே
சண்டபேரிகைதண்ட விட்டவே
வித்தாரவிருதுகள் கலின்பட்டவே
வண்டானிருமல் மாதர்காட்டியாம்
வாரணபந்தின் சேதிகொட்டவே (சதிர்)

பாதர்-ராமருக்குச்சொல்-வசனம்.

ராஜாதிராஜாஸ்வாமி அடியேனை அழைப்பித்தகாரியமென்ன தெரியவேணுஞ்ஸ்வாமி.

ஸ்ரீராமர்சொல்கண்ணிகள்—இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

அல்லவேதப்பிடாமோ நானொருசேதி
சொல்லுகிறேன்கேளுந்தீரோ

அநுபல்லவி.

வல்லவராகநாமும் வாழ்ந்ததெல்லாம்வசையாச்சே
மெலவியசீதையாலே நம்மிட
வெட்கமெல்லாம் விணாய்ப்போச்சே (அல்ல)

சரணங்கள்.

சீதையென்றழைத்தபேர்க்கு உலகத்திலொருவர்க்கிடமாச்சே
வதுகாரியமுறையாம லேவிபிவிர்வனத்திற்கு (அல்ல)

ஸ்ரீராமர்—பாதருக்குச்சொல்— திபதை.

எந்தன்மீதினிகுற்றமிருக்கவேபாதாகேளாய்
முந்தியேசொன்னாகில்மோசமேயாகிடாதோ
செந்திருவானசீதை செகந்தனிலீனமானாள்
வந்திடும்கீர்த்திவசத்தை மலரயன்றடுக்கமாட்டான்.

வ—ம். அதோவாரும்பிள்ளாய் தம்பிபாதா இந்தசீதையிருக்கிறபடி. யிருக்கட்டுமுடைய வமிசத்திற்கு யினத்துவவருகிறது தசரதராம னென்கிற கீர்த்தியும்போகின்றது அப்படிக்கொத்த சீதையிருந்தாலு ம்நமக்காகாது பொழுதுவிடியுமுன்னமேசீதையையழைத்துக்கொண் டுபோய் வனத்திலேவிட்டுவாருந்தம்பிபாதா.

பாதர்-பிரலாபிக்கிற-கண்ணிகள்—இ-ம்—ஆகிரி-ஆதிதாளம்.

ஐயாவேபாவிசைகைநன்றோ அறிக்குமோவனத்திலேவிட்ட
என்னுலகிலுள்ளதேவர்வேந்தருமறிகிலாரோ
சென்றடனேஇலங்கைவிட்டுத்திரும்பிவரும்போதுதன்னில்
திண்மையானஅக்கினிமேல்சென்றடனுதவப்வந்தாள்
என்னசெய்வேன்ராகவரோயிணையடிசரணமையா

பாதர்சொல்—வேறு— கண்ணிகள்

இ-ம்-எதுகுலகாம்போதி— ஆதிதாளம்.

மல்லிகைமலர்வாசம்பொருந்திய
வாகுள்ளசீதையாமோ என்னண்ணா
சல்லியஞ்சொல்லித்தனிக்காடுபோகத்
தகுந்ததிடலாமோ என்னண்ணா
மூன்னாளிற்பட்டகலம்களிப்போ
முகமுந்தெளியவில்லை என்னண்ணா

இச்சுமித்திரையைத்தேனுமென்றேசொன்னீர்
இவ்விதத்துக்கென்னசெய்வேன் என்னண்ணா
பாருக்குள்ளேசீதைலட்சுமியைப்போலே
பதிவிருந்தவளோ என்னண்ணா
கானகந்தன்னில்பெண்போலேவிதையை
காட்டில்விட்டாயோ என்னண்ணா
முச்சாணபோலிருமுகங்கறுத்து
முகமுந்தளர்ந்திடுமே என்னண்ணா
பத்தினிசீதைபதிவிரதைதன்னைப்
பகைக்கவிடலாமோ என்னண்ணா
குற்றங்கள்சொல்லிகாட்டினிலேவிட்டால்
குலத்திற்குதீங்குவரும் என்னண்ணா
இதுயாராலேவந்தவனர்த்தமோவறியேனே
அரிகரிதெரியேனே என்னண்ணா

பரதர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

என்னிடஅண்ணாகேளீரோநாதாநீர்சொன்னாலும்
பத்தினிசீதைதன்னைக்காட்டினில்விடவொண்ணாது
முன்னமேரவிகுலத்தில் முக்கியமாய்வந்தார்மா
என்னிடாதமையைக்கொண்டே இக்கோபமாறவேணும்.

வ-ம். ஸ்ரீராமசந்திரசுவாமி அக்கினி சொருபமாயிருக்கப்பட்ட சீதையைநீர்குற்றஞ்சொல்லிக்காட்டில்விடலாமோ இப்பிழையை என்னைக்கொண்டு பண்ணியுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-பரதருக்குச்சொல்- திபதை.

பரதாகேள்தேர்மலென்ன அடர்க்கிறபாரிகமென்ன
ஜானகிதானுமென்ன தப்பியார்மூவரென்ன
மானமில்லாதொன்று வையகத்தவர்களேச
காடென்னவீறுபென்ன கன்றாலுமடர்த்தில்லாய்

வ-ம். அரோகராரும்பிள்ளாய் தம்பியாரதா அதேதா ... உத்தரத்திற்கு உத்தரஞ்சொல்லாதே ... இல்லாவிட்டால் ... அப்புறத்தேபோம்பிள்ளாய்.

பரதர்சொல்-வசனம். அரிகரிகோதண்டபாணி

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அரோகராரும்பிள்ளாய் கட்டியக்காரா லட்சுமணனை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன்-வசனம். அப்படியே அழைக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன்-லட்சுமணருக்குச்சொல்-வசனம்.

சாமிசாமி லட்சுமணப்பெருமாளே தங்கள்சகோதரராய ன் அழைத்துவரச்சொன்னாரகவாம்.

லட்சுமணர்கட்டியக்காரனுக்குச்சொல் வசனம்.

அதற்கென்போவோம்வாரும்பிள்ளாய்.

லட்சுமணர்வருகிற-தரு-ராகம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

தந்திரக்கிலிநூயர்ந்த இந்திரசித்தைவென்ற
சந்திரலட்சுமணரும்வந்தார் ஜெயஜெய (தந்திர)

அநுபல்லவி.

அந்தரத்தவிநூயர்ந்த சந்திரனைநூவதனர்
சுந்தரஸ்ரீராமரது வித்தைசேர்சேவையைசெய்ய (தந்திர)

சரணங்கள்.

அன்னைத்தந்தையை வெறுத்தோன்-தன
தன்னைச்சொற்படிவன முறுத்தோன்
பன்றுபலகனிகளைப் பறித்தோன்-அன்றும்
பரிவாய்தமையன்காக்க குவித்தோன்
பகைக்கும்படைத் தலைக்கும்-வெகு
திடக்குகனை யெதிர்க்கொண்டவன்
இடக்கும்படைதொடை சுகிர்விசிநிகன்
சகுனிர்க்குருத்தவ நிகருமொளிபெற (தந்திர)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

சாமிசுவாமி அடியேனை அழைப்பித்தகாரியம் அருளிச்செய்யவேணும்சுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

வன்னமாம்லட்சுமணனேயென் வார்த்தையைக்கேளு
கன்னியிட சீதைதானு [illegible] கன்னில்
பின்னைமினவைத்தாக்பார்க்கப் பிரியமாயிருந்ததென்றன்
மன்னியவளை [illegible] வனந்தனில்விட்டுவாராய்.

வ-ம். அப்பொழுதேலட்சுமணர் சீதையாளைப்பார்க்கவே ண்டுமென்றுசொல்லித் [illegible] போய்பொ [illegible].

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-கண்ணிகள்.

இராகம்-கண்டா-ஆதிதாளம்.

[illegible] அப்போது பெருமாளே [illegible] ராமராம

வெகுநிதிகளைச்சொன்னசொல்வார்போ லிலிக்குவார்த்தையல்லோ ராமரா
வண்ணமானமேனிசீதைமெலிந்துபோகொணுது ராமராமா
கண்ணாமல்ராமபத்திரா மேதுசெய்வேன்ராகவனே ராமராமா
பாக்குள்ளஅயோத்தியென்றுபாக்கொழியான்சீதைதன்னை ராமராமா
திக்கிலைவனத்திலேகொட்ட நீதியல்லராகவனே ராமராமா
[illegible] நிறைமாதம் சீதைபாருளும்வெந்தாள் ராமராமா
நீங்களன்பீர்சொல்லவேண்டாந் தெவீர்களைப்பொறுப்பீர் ராமராமா

லட்சுமணர்-ராமருக்குச்சொல்-திபதை.

அக்கினிமூழ்கிவந்த அலங்கிர்தசீதைதன்னை
உக்ரமானவார்த்தை யுரைப்பதுநீதியல்ல
இக்குலந்தன்னில்வந்து மியலுடன்வாழ்ந்திருந்தோம்
மிக்கசீதைவனத்திற்போனால் மீண்டுபோஞ்செல்வமெல்லாம்.

வ-ம். அண்ணாவாருங்களாயிரகுநாயகரே அக்கினிவளர்த்தி அதில் முழ்கினசீதையின்பேரில் தோஷஞ்சொல்லிக்காட்டில் விடலாமோ நம்முடையகுலத்திற்கு நிந்துவரும் இந்த வார்த்தையை என்னைக்கொண்டுமன்னியுஞ்சுவாமி.

ராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

தம்பிநீகேளாயிப்போ தாரணிமணிதமெல்லாம்
வம்புண்ணசொல்லவுநம் வம்சத்திற்கீனமாகும்
பிம்பமைதபரிசிக்கப் பிசகிக்குமொளிதீயாகும்
என்னுயிர்துணைவர்தம்பி யென்றுணைகடக்கநல்லாய்.

வ-ம். அண்ணாவாருந்தம்பிலட்சுமணரே நம்முடையகுலத்திற்கு யீனமாகுமென்றுசீதையைவனத்தில் விட்டுவரச்சொன்னால் ஒருநாளுமில்லைவார்த்தைஉத்திரத்திற்கு உத்தாரஞ்செல்லுகிறாய் சீதையைவனத்திலேவிட்டுவந்தாலாயிற்று விடாமற்போனால்என்முகத்தின்முன்னேவரவேண்டாம் அப்புறம்போம்பிள்ளாய்.

ராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அடேகாவாரும்பிள்ளாய் கட்டியக்காரா லட்சுமணப்பெருமான்போய்விட்டாரா பாரும்பிள்ளாய்.

கட்டியக்காரன்சொல்-வசனம்-போய்விட்டார்சுவாமி.

ஸ்ரீராமர்சொல்வசனம்.

அனால்நம்முடையசத்துருக்கனை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியன்-வசனம்-அப்படியேயழைக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன்-சத்துருக்கனுக்குச்சொல்-வசனம்.

[illegible] தங்களைரகுநாயகர் அழைத்துவரச்சொன்னார் வாருஞ்சுவாமி.

சத்துருக்கன்-நட்டுவக்காரனுக்குச்சொல்-வசனம்.

ஆனாற்போவோம் வாரும்பிள்ளாய்.

சத்துருக்கன்வருகிற-ஜாதிதரு-இராகம்-நாதநாமக்கிரியை — அடதாளம்.

பல்லவி.

சத்துருக்கன்வந்தார் சபைதனில் சத்துருக்கன்வந்தார்

அனுபல்லவி.

மித்துருக்கள்புகழ் எத்திசைதனிலுயர்
வுற்றிருக்குமணி முடியினைசிரசி லங்கவே (சத்து)

சரணங்கள்.

தசரதமகிபாலன் தோள்வலி தாவுமதிசீலன்
அதிசுதற்சுதிரான் புகழ் பெறும்யானைசேனைவீரன்
திசைகடலொலிபோக யிருபுசமோசைகள்
ஜெயஜெயஜெயவென முறவவொலிபெற (சத்து)

சத்துருக்கன்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி அடியேனை அழைப்பித்த காரியந்தெரிய ச்சொல்லுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-சத்துருக்கனுக்குச்சொல்-திபதை.

தம்பிசத்துருக்கா நீதான் சதிருடன்ரதத்தைக்கொண்டு
வைதேகிசீதைதன்னை வனத்தினில்விட்டுவாராய்
அப்புவிமேல்சத்தாயிரத்தையால்நீபுவிப்போ [ம்
நான்பகர்வதற்கெதிர் யாதொன்றுஞ்சொல்லவேண்டா

வசனம். அதோவாருந்தம்பிசத்துருக்கா நீயாதொன்றுஞ் சொன்னமாய்ஒன்று ஞ்சொல்லாமல் சீக்கிரமாய்சீதையை வனத்திலேவிட்டுவாருந்தம்பி சத்துருக்கா.

பொது-கொச்சகம்.

அப்பமெழுதுங்கோங்கை சீதையாஞ்சீதைதன்னை
வையகத்திலுள்ளவர்கள் வழுத்துபவசைபறிந்து
வெப்பவனமதனில் விட்டுவாவென்றவுடன்
இதோவெனச்சத்துருக்கன் அழுதுபுலம்புவனே.

சத்துருக்கன்சொல்-கண்ணிகள்-இராகம்-கண்டா-மிசரதாளம்.

மாதாவென்சீதையைவனந்தனில்விடச்சொன்னீர் அண்ணாவே-இந்த
வன்மைசெய்தக்கெல்லாம் வார்த்தைதானல்லவோ சகோதரா
பேதையாஞ்சீதையை யேதுசொன்னீரையா அண்ணாவே-நல்ல
பேறுபெறவாழ்வு பெண்களானல்லவோ சகோதரா
செகதிக்குயர்ந்த திலகமிடும்போது அண்ணாவே-அவள்
செப்பியசாபமும் செப்பிடவேதுமோ சகோதரா
அன்னைசீதைதன்னை யென்னசொன்னீரையா அண்ணாவே-இந்த
பாவமேன்செய்தவர் யாரதுவேயினை சகோதரா

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]
   [illegible]

[illegible]
   [illegible]

[illegible]
   [illegible]

[illegible]
   [illegible]

வர்ணமானபெண்ணெல்லாம்
   [illegible]

அந்நாளத்தைப்பிடித்து
   [illegible]

பாங்குடன்சிதைதனைக்காட்டி
   பரிவாய்[illegible]

[illegible]
   தசரதராமசந்திரா

சத்துருக்கர்சொல்·வசனம்.

[illegible]

சத்துருக்கர்-பிரலாபிக்கிற-[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
மன்னவனேராமச்சந்திர [illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]

நேசத்தோடிக்கிளிதன்னிற் சீதையுமுற்றேவைத்தான்
இங்குகன்சொல்லவேண்டாந் தசரதராமச்சந்திரா.

வ-ம். அரசரேபெருமையையா ரகுநாயகரே சீதையின்பேரில் குற்றமி
ருக்கிறதென்று நீ நம்பாமலிருந்தாலே பதிவிரதையாகிய தப்பட்ட சீ
தையைக் குற்றஞ்சொல்லிக் காட்டுக்கனுப்புவது நியாயமா இந்தக்கோபத்தைய
டக்கிச் சகலரோடும் மனங்கொண்டிருக்கவேணும்.

ஸ்ரீராமர்சத்துருக்கனுக்குச்சொல்-இயைத.

சக்கராயுதக்கரத்தான் தம்பியென் றிருந்தவேளை
செந்தமிழ்ப்புலவன்றென்னிச் சேர்த்திட காண்டாலேன்
முத்தைக்குறைகளொல்லா முடித்திடவேணுமாங்கே
வந்தன்கையைவில்லுமெய்யின் தூரிமாய்த்துக் கொள்வேன்.

வ-ம். அதிகாரகுருக்கள்சத்துருக்கா இதுகாலமட்டுஞ் சாதுவானத்
தம்பியென்று நினைத்திருந்தேன் தக்காய் லவகுசர்களுக்கு சீதை
யைக் கொண்டுபோய்க் காட்டிலே விட்டு வந்தாலல்லாமல் நானிருக்க மாட்டே
னென்று பிராணத்தியாகம் பண்ணுகிறேன் அப்புறத்தைப்போய
வின்னாய் சத்துருக்கா.

பொது-இயைத.

மானதவுருதுப்போதா மனைவிசொன்னமையைத்தாலும்
நின்கரங்குலிக்குறிக்கத நீதிக்கச் செய்கொண்டு
கோனேசெய்புராயர் ...
பின்வேவியோடிவந்து விசையுடன்பிடித்திட்டாரே.

ஸ்ரீராமர்லட்சுமணருக்குச்சொல்- கண்ணிகள்

இ-ம்-முகாரி-அடதாளம்.

கையைப்பிடித்த
காரியமுண்டானாற் — தம்பி-ஒரு
சொல்லுத்தம்பி

சென்னைப்பிடித்த
சேதிரகுண்டானாற்சொல்லுந் — தம்பி-ஒரு
தம்பி

காலைப்பிடித்த
கார்த்தைதருண்டானாற்சொல்லுந் — தம்பி-ஒரு
தம்பி

அடியைப்பிடித்த
அநுக்காரியமென்னசொல்லுந் — தம்பியென்னும்
தம்பி

கடியைப்பிடித்த
கருத்தெந்தனைச்சொல்லுந் — தம்பி-என்ன
தம்பி

ரி

இதுவும்-ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்கண்ணிகள்
இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

எதுக்கடதம்பியென்கைபிடிக்கிறாய்
எனக்குச்சொல்லிப்போடாஅப்புறத்தே (எது)
சந்ததந்தாரத்தால்தன்னுயிர்மாய்க்கவும்
எந்தன்கைவாளினாலேஎன்னுயிர்போக்கிறேன் (எது)
சீதையாலேயெந்தன்சிவனைப்போக்கிறேன்
கோதையானுயிரைக்கொடும்வாளுக்கிரைசெய்வேன் (எது)

லட்சுமணரும்-ஸ்ரீராமருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்.
இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

லட்சுமணர்- சொல்லல்.

அகபாதகாட்டினில் ஆரோசொன்னாரென்று
நயமாய்சீதையைவிட நீதியோராமா

ஸ்ரீராமர்-சொல்லல்.

நீதிநீதியென்று நீங்களென்னோமும்
வாதுகளென்னோடு வாதிக்கலாமா

லட்சுமணர்- சொல்லல்.

பாவப்பொய்வார்த்தையை வண்ணான்சொன்னானென்று
நேயசீதையைத்தள்ள நீதியோராமா

ஸ்ரீராமர்-சொல்லல்.

நீதியல்லவென்றும் நீர்மனம்பொறுமென்றும்
வாதித்தெந்தனோடு வசிக்கக்கூடாது

லட்சுமணர் - சொல்லல்.

வசிக்கக்கூடாதென்றீர் வனத்திற்சீதையைவிட
செய்யாதகுற்றங்கள் செய்தாளோஅண்ணா

ஸ்ரீராமர்சொல்லல்.

செய்யாமலேகுற்றஞ்சேருமோவுலகத்தில்
எய்யாதவார்த்தையை யேன்சொல்லிவாராய்

லட்சுமணர்-சொல்லல்

எய்யாதவார்த்தையை யினித்தள்ளதர்மமோ
ஐயாநீர்பிழைபொறும் அவள்நமக்கெதிரோ

ஸ்ரீராமர்- சொல்லல்.

எதிரில்லையென்றவனில்லாத்தைசொன்னாலும்
அதிகாரிநானென்று அவளைத்தள்ளுவேனே

லட்சுமணர்- சொல்லல்.

தள்ளுவதுநமக்குத் தர்மமோசீதையைத்
தெள்ளும்புகழயோத்தி தசரதராமா

ஸ்ரீராமர்-சொல்லல்.

பாவம்பாவமென்று பரமார்த்தம்பேசுறாய்
கோபமானவார்த்தை கூறாதேபோடா

லட்சுமணர்-சொல்லல்.

சொல்லுவதேதகுற்றஞ் சொன்னாரோநாட்டினில்
எல்லோருமக்கினியி லிரங்கினதறியாயோ

ஸ்ரீராமர் அறிந்தாலுமுலகவாய் ஆராலேமூடலாம்
தாருசானவண்ணானைச் சொல்லச்சொன்னேனே
லட்சுமணர் என்னசெய்தாளென்று யேந்திழைசீதையை
வானக்காட்டில்விட வருத்தீரோஅண்ணா
ஸ்ரீராமர் வருத்துச்சொல்வதென்ன மாதுசீதையாலே
அவத்தினில்கோத்திரம் அசடாகுந்தம்பி
லட்சுமணர் அசடாகச்சொல்வது ஆரெனக்குச்சொல்லும்
கசடனைவாளினாற் கண்டிப்பேன்அண்ணா
ஸ்ரீராமர் கண்டிப்பதேதினி காரிகைசீதையைக்
கொண்டுபோய்வனத்தினிற் குறித்துவிடாயோ
லட்சுமணர் விடுவதென்னகுற்றம் வந்ததுசீதைமேல்
கொடுமையானகாட்டில் கொண்டுவிடேனே
ஸ்ரீராமர் கொண்டுவிடேனென்று குவலயத்தோராண்மை
கண்டபடிநகைக்க காட்சியோதம்பி
லட்சுமணர் காட்சியாவதென்ன கலக்கமில்லாச்சீதை
யிஷ்டமுடனேதீயில் மூழ்கிவந்தாளே
ஸ்ரீராமர் மூழ்கிவந்தாளென்று மேன்மைகள்சொல்லுறாய்
ஏழைவண்ணான்சொன்ன இகழ்ச்சிகேளாயோ
லட்சுமணர் வண்ணானேதோபித்தன் வாயாலுளறினான்
எண்ணமற்குற்றங்களேர்வைகொள்வீரோ.

லட்சுமணர்சொல்—தரு-இ-ம்—கியால்- ஆதிதாளம்.

பல்லவி.

பொறுங்களண்ணா அண்ணா

அநுபல்லவி.

பொறுங்களண்ணா மனம் பொறுங்களண்ணா கோபம்
பொறுங்களண்ணா மலர்பாந்தகண்ணா

சரணங்கள்.

களிவுசற்றுமில்லாமல் கலந்துமொழிபேசாமல்
களிமேயபுத்திசொல்லாமல் தர்மநீதியில்லாமல் (பொறு)
கண்டபேர்கள்நகையாரோ காவலர்பழியாரோ
அண்டர்முனிவோரறிந்தால் பண்டுபாவமென்பாரே (பொறு)
கொண்டபெண்டுக்காக பண்டுபழிகொண்டீர்
ரெண்டுக்கும்வாளாலுமினை கண்டதுண்டஞ்செய்கிறீர் (பொறு)

பாதமலர்பணிகின்றோம்பணிந்தும்மைத்தொழுகின்றோம்
[illegible] விடுகின்றோம். (பொ-ள)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

[illegible] பார்த்தால்
[illegible] இத்தவார்த்தைக
வண்டனிசீதைதனைவனத்தினில்விட்டுவாரேன்
தெண்டனுந்தன்பாதந்திருவுளமகிழையா.

ல-ட். [illegible] கொண்டபெண்சாதிக்காக [illegible] சொல்லாமல் நகைப்பார்கள் அந்த [illegible] சீதையைவனத்தில்விட்டுவருகிறேன் கோபமில்லாமல்சந்தோஷமாகச்செலவுகொடுஞ்சுவாமி.

[illegible] ருக்குச்சொல்-வசனம்.

[illegible] முன்னைச்சீதையாலல் [illegible] கொண்டு பொ [illegible] முன்னமேவனத்தில்விட்டுவாரும் தம்பிலட்சுமணா.

லட்சுமணர்சொல்-வசனம். அப்படியேசெய்கிறேன் சுவாமி.

லட்சுமணர்—துயரத்துடனேசொல்— கண்ணிகள்
இ-ம்—எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

தென்திசைராவணனர் அண்ணா
சிறைதவனத்திற்சிறையிருந்தாள்
செந்தணல்மூழ்கிவந்தாள் அண்ணா
செந்திருவாமெயகண்மணியே
சந்தேகமென்பார்களோ அண்ணா
ஜானகியாளென்னுநாயகியை

நிந்தனைசொன்னாலேவெகுதோஷங்கள்வந்திடும்நீதியல்ல
தாயானசீதையருஞ்செய்ததர்மங்கள்பொய்த்துதோகாரணத்தால்
பாயபேராபர்சொன்னவாக்குத்தவராதுமன்னரேஷ
சன்னலேநீசொரியசீதைகாடுதனிற்போசவேண்டாமண்ணா
மன்னைநாராமா அண்ணைமனுக்கனோக்கார்த்திடும்மதிபதியே
[illegible] பார்களே, ஐயோகண்டகனவின்படிநீதுவோ
[illegible] சூரியகுலத்திறுக்கேற்காது
[illegible] கொள்ளிவாய்ப்பேய்களுமுனிகள்
[illegible] களுநல்ல புலர்கன்னிகளுள்ளவனம்
[illegible] புலிகள்காடுகளும்
[illegible] நல்லகாண்டாமிருகங்களேனைக்களும்
[illegible] நக்கள்தானுமுண்டு
[illegible] செய்துவிடே

இதுவும்-லட்சுமணர்சொல்-கண்ணிகள்-இராகம் கண்டா-சாப்புதாளம்.

பெண்ணைக்காட்டில்விட்டுப் பேருலகையாள்வதுண்டோ ராமராமா
கண்டோர்கள்சொல்லுமென்பார் காட்டில்விடநீதியுண்டோ ராமராமா
மங்கையைநாட்டைவிட்டு வனத்தில்விடநீதியல்ல ராமராமா
பெண்கொலையாகநிந்தை பேசவொண்ணாதுகாண் ராமராமா
புலிபசித்தாலந்தப் புல்லைபொசித்திடுமோ ராமராமா
வலியஜானகிதன்னை வனத்தில்விடநீதியல்ல ராமராமா
எத்தனைப்புடம்போட்டாலும இரும்புபசும்பொன்னாமோ ராமராமா
பத்தரைமாத்துள்ளதங்கம் பழுதென்றுஞ்சொல்லலாமோ ராமராமா
திக்குத்திசைகளெங்கும் ஜெயமானகீர்த்திபெற்ற ராமராமா
அக்கினியில்மூழ்கிவந்த அன்புடையசீதையடா ராமராமா
என்னையாள்வனத்தில்விட போகுமோவனக்காணகத்தில் ராமராமா
அன்னைதனைப்காட்டில்விட அடுக்குமோவையகத்தில் ராமராமா
ஈதோபாவமென்செய்வேன் அண்ணிதவார்த்தைக்குளானேன் ராமராமா
தப்பிதமிதவார்த்தை சொல்லவொண்ணாதேஐயோ ராமராமா
வையகம்புகழ்சீதையை உப்பவனமேவுகின்றீர் ராமராமா
பொய்யாவோகாட்டில்விட வேந்தனேமுறைமையல்ல ராமராமா
குற்றங்கள்குறையவள் செய்தவும்மைச்செய்தாளோ ராமராமா
சித்தமுற்றிடுஞ்சீதையை செத்தவனமேவுகின்றீர் ராமராமா
சிறையாசலங்கைதன்னில் சீதையாயிருந்தபோது ராமராமா
குறையில்லாமேனி கோதைசிறைமீட்டுவந்தீர் ராமராமா
லங்கைதனைபழித்திட்ட நாயகியாள்சீதையாரை ராமராமா
இக்கோதத்திலேற்றி பேசுவதுநீதியுண்டோ ராமராமா
என்னையாள்வனந்துனிந்த போதுமேவனுங்காணகத்தில் ராமராமா
முன்னமேசீதைக்குஆபன் என்னவென்றெழுதினாரோ ராமராமா
தந்தைக்கெதிரேபோயவர் தாயனாரிலேதன்னீர்போல் ராமராமா
இந்தவைதேகிசீதையைக் குற்றஞ்சொல்லியோட்டொண்ணாதுரா
ஆதிபெண்புலியோரிட்ட சாபமோவறிகிலேனே ராமராமா
சோதியாம்பசீதைக்கு பேதநாணம்வந்ததோ ராமராமா

லட்சுமணர்சொல்-திபதை.

ஜானகியென்னைப்பெற்றதாயினுமதிகமான
[illegible] தன்னைபனமதுள்ளிந்துராமர்
[illegible]
[illegible] டப்பதந்திதானே.

[illegible] சீதாதேவியைவனத்திற்கொண்டுபோய் விடச்சொ
[illegible] தன்னையாள்சொன்னார் நான்என்னயாய் விடப்

போகிறேன் விடாமற்பே ஹல்அண்ணனுக்கும் மனநிற்கோபமாயிருக்கும் அழைத்துக்கொண்டுபோய் விட்டுவருவோம் ராகவா.

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-திபதை.

என்னிடதாயேசேளி ரியனுடகீயுமுன்பு
பின்னிபவனங்கள்பார்க்கப் பிரியமாயிருக்குதென்று
சொன்னதுமுன்பிடவமா தோகையோமயோடு
அன்னைமேபசிலவுந்தார் அடவியில்புதுமைபார்க்க

வ-ம். அம்மாவு நந்தாயே தண்டகாரண்ணியம் பார்க்கவேண்டுமென்று ரகுநாயக[illegible] சொன்னீயாம் இப்போது வனம்பார்க்கச்செலவுகொடுத்தார்போவோம் வாருந்தாயே.

லட்சுமணர்-சீதையை அழைக்கிறதரு
இ-ம்-எதுகுலகாம்போதி-மீசுரதாளம்.

பல்லவி.

அன்னையேவாருமம்மா வனம்பார்க்க அரிவையேவாருமம்மா

அநுபல்லவி.

அன்னையேவாருமம்மா அடவிப்புதுமைபார்க்க
சொன்னபடியேராமர் என்னையனுப்பிவைத்தார (அன்)

சரணங்கள்.

அஞ்சுகாஞ்சிதமோமருடன்கொஞ்சங்குயிலன்னமே
பஞ்சவர்ணக்கிளியைவனந்தனில்பார்க்கலாம்வேடிக்கையாய் (அன்)
மானுமயிலினங்கள்வனந்தனிலேவாழ்கின்றபட்சிகளும்
கானகந்தன்னில்போயென்னம்மணிகண்டுதெரிசிக்கலாம் (அன்)
மாடப்புறவினங்கள்வனந்தனில்வாழ்கின்றபட்சிகளும்
ஜோடுஜோடாகவேதான்என்னம்மணிசொகுசுடன்விளையாடும் (அன்)

சீதை-லட்சுமணருக்குச்சொல்- திபதை.

என்னிடவதிஷ்டந்தானோ பியனுடன்வனங்கள்பார்க்க
சொன்னதுமுண்டுநானும் ஜோபிதாராமரோடே
இன்றுமாமிமார்க்கு மியனுடன்சொல்லிவாரேன்
நன்றிதாய்கீயுந்தம்பி ரதத்தையுமலங்கரிப்பாய்.

வ-ம். அகோவாருந்தம்பி லட்சுமணா முன்பு ரகுநாயகருடனே தண்டகாரண்ணியவனம்பார்க்கவேணுமென்று நான் சொன்னதுண்டு இப்போதுசெலவுகொடுத்தாரோ நான்செய்தபாக்கியந்தான் இப்பவும் கவுசலை சுமித்திரை கைகேசிளாகிய அத்தைமார் மூன்று பேருக்கும் நான்சொல்லிசெலவுவாங்கிக்கொண்டுவருகிறேன் ரதத்தைச் சிங்காரியுந்தம்பிலட்சுமணா.

சீதை-லட்சுமணருக்குச்சொல்-கண்ணிகள்
இ-ம்-எ[illegible]காம்போதி-அடதாளம்.

உம்மைத்துணையோமென்றுஉத்தாரஞ்சொன்னேனே லட்சுமணரே
என்[illegible]திலுமக்குப[illegible]ளை[illegible]முண்டோசொல்லும் லட்சுமணரே

வேடிக்கையாகவேதேனைவிளங்கச்சோடியுந்தம்பி லட்சுமணரே
அத்தைகவுசலைக்கும் அடிபணிந்துவாரோன்தம்பி லட்சுமணரே
அம்மாமிகைகேசிக்கு அடிபணிந்துவாரோன்தம்பி லட்சுமணரே
மாமிசுமித்திரையாள் மலரடிபோற்றிவாரோன்தம்பி லட்சுமணரே
அத்தைமூவருக்கும் அடிபணிந்துவாரோன்தம்பி லட்சுமணரே
ஆலோசனைபண்ணுகிறீர் ஐயையோயேதோதம்பி லட்சுமணரே
பொன்னும்ரதத்தையிப்போ பூட்டசொல்லுந்தம்பி லட்சுமணரே
தங்கரதத்தையிப்போ தாள்பூட்டசொல்லுந்தம்பி லட்சுமணரே
முத்துரதத்தையிப்போ முடுகிநடத்திவாரும் லட்சுமணரே
வச்சிரரதத்தையிப்போ வாசலில்வரவழையும் லட்சுமணரே
மைச்சினர்பரதருக்குப் பத்திரங்கள்சொல்லிவாரோன் லட்சுமணரே
தம்பிசத்துருக்கருக்குத் தைரியங்கள்சொல்லிவாரோன் லட்சுமணரே

சீதைமாமிமாரிடம்வருகிற—கண்ணிகள்-இ—ம்—எதுகுலகாம்போதி.

ஜம்பைதாளம்.

சீதையாள்கவுசலையாள் தேவிதன்னண்டைக்கு
யோகத்துடனேவாராள் முல்லைநகையாளும்
அன்னநடையானமாது அரிவையாஞ்சிரோன்மணி
மின்னலெனுங்கவுசலையாள் விடுதிக்குவாராள்
சின்னமலர்கொண்டு சிலசேடியர்கள்சூழ்ந்துவர
வர்ணமானசீதையாரு மாமிவீட்டுக்குப்
பொன்னிறவளையல்மின்ன பொருந்தினயிடைதுவள
மின்னலெனுங்கவுசலையாள் விடுதிக்குவாராள்
கன்னிபாலாத்தியேந்த காரிகைமார்சூழ்ந்துவர
மின்னியசிலம்பசையவே மெள்ளவேநடந்தாள்
நித்தநித்தஞ்சுத்தமான பத்தினியாள்சீதையாளும்
அத்தையினற்பாதம் போற்றிவெற்றிபெறவே
தண்டையுஞ்சதங்கைமிகத் தானிசையவேபூட்டி
வெண்டையப்புலம்பிடவே மெள்ளநடந்தாளே
பொன்னின்மணிகிண்கிணி சிலம்புபுலம்பிடவே
மின்னுமேகலைகள் மேனியில்தழைக்க
அன்னமென்னும்வடிவழகி அரிவையர்கள்சிரோன்மணியும்
மின்னலெனுங்கவுசலையாள் வீட்டுக்குவாராள்

பொது—திபிதை.

சீருடனயோத்தியாண்ட தசரதன்பாரியான
காரிகைகவுசல்யாளும் கைகேசிசுமித்திரையோடு
சீருள்ளமூன்றுபேருஞ் சிலாடிபோற்றவேதான்
தரணிதன்னில்மீது தானிதோவருவதாலும்

வசனம்.

அதோதேப்படியென்றால் ஸ்ரீராமருடைய தாய்மார்கள் வருகிற
விதங்காண்க

மாமிமார்கள்மூவர்வருகிற—தரு—இ-ர்-மத்தியமாவதி—ஆதிதாளம்.

பல்லவி.

தாய்மார்கள்மூவரும்வந்தார்-ஸ்ரீராமச்சந்திரன்
தாய்மார்கள்மூவரும் வந்தார்

அநுபல்லவி.

தாய்மார்கள்மூவரும்வந்தார் தாஞ்சுடனயோத்தியாளும்
மாயவன்ராகவனை மைந்தனைப்பெற்றெடுத்த (தாய்)

சரணங்கள்.

சீருள்ள அயோத்தியாண்ட தசரதற்குப்பாரியான
கார்முகில்குழலியாள் கைகேசிசுமித்திரையாள் (தாய்)
சத்தியமுள்ளராகவற்கும் தயவுள்ளலட்சுமணர்க்கும்
அட்சயபரதருக்கும் அன்புள்ளசத்துருக்கருக்கும் (தாய்)
வருத்தமதாகவேயிருக்கின்றநடந்து
ஒருத்திமிக்கொருத்தியாய்த்திருத்தமதாகவே (தாய்)

சீதைமாமிமாருக்குச்சொல்-அமிரிக்கைகளது-குலகாம்போதி-மிசுரசாபுதாளம்

பல்லவி.

சரணஞ்சரணமம்மா மாமிமாரே தாயேசரணமம்மா

அநுபல்லவி.

சரணஞ்சரணமம்மா தாயேகமுசலே
காணிகாடுபார்க்கத் தாயேவிடைதாரும் (சரணஞ்)

சரணங்கள்.

எந்தன்மனக்கவலை ஸ்ரீராமர்தீர்த்து
சந்தோஷித்தனுப்பிவைத்தார்
உந்தனிருபதத்தை உரந்துநான்பணிகிறேன்
சிந்தைமகிழ்ந்துநீங்கள் செலவுகொடுக்கவேணும் (சரணஞ்)
அந்தப்புரத்திலொருநாள் ராமருடன்
சிந்தைமகிழ்ந்துரைத்தேன்
எந்தன்மனதைப்போலே யிருந்ததவர்மனதும்
அந்தப்படிக்குநீங்கள் அருள்செய்யவேணுமே (சரணஞ்)
அச்சுதராமரும் மனமகிழ்ந்து
லட்சுமணனையனுப்பினார்
அட்சாதங்கொண்டு வைச்சினர்வந்தார்
இட்சணம்போய்வாரோம் இணையடிபணிசரணம் (சரணஞ்)

சீதை—மாமிமாருக்குச்சொல்கிறது.

உந்தன்மாமைந்தன்தன்னை யொருவரங்கேட்டுக்கொண்டேன்
எந்தனற்கவலைராம பத்ரரோதீர்த்தாரம்மா
முந்திவனத்திற்சென்று முனிவரைசரணம்பண்ணி
சிந்தைதான்தெளியப்பார்த்து திரும்பியேவருவேனம்மா

வசனம்.

அதோகேளுங்களம்மா மாமிமார்களே முன்னாலே ரகுநாயகருடனே நான் தண்டகாரண்யவனம் பார்க்கவேணுமென்று சொல்லியிருக்

தேன் இப்போது செலவுகொடுத்து தப்பியாகிய லட்சுமணப்பெருமா ளையும் அனுப்பிவைத்தார் இளையபெருமாள் அதோவாசலில் வந்திருக் கிறார் நான்வனத்திற்குப்போய் ரிஷீஸ்வரரைத்தரிசனஞ்செய்துவரு கிறேன் நீங்கள்சந்தோஷமாய்ச் செலவுகொடுத்தனுப்பவேணும் அம்மா மாமிமார்களே.

மாமியார்கள்—சீதைக்குச்சொல்—திபதை-

அன்னையேசீதாயிப்போ அடர்குபோவனத்திற்கேக
பன்னியவயிற்றிற்கெர்ப்ப பாக்கியமிருக்கும்போது
மன்னவராமபத்ரன் மனமகிழ்ந்தனுப்பினரோ
என்னமாய்மனந்துணிந்து ஏகுவாயிப்போதம்மா.

வ-ம். அகோவாரும்மாசீதாய் உன் வயிற்றில் ஐந்துமாதகெர்ப்ப பாக்கியமிருக்கையில் ரகுநாயகருன்னை என்னமாய் மனம்வந்து வனம் போகச்செலவுகொடுத்தார் நீதான்எப்படிப்போகப்போறாய்சீதாய்.

சீதைமாமிமார்களுக்குச்சொல்-திபதை.

தவமதுசெய்யும்ராமர் தருக்குடனனுப்பிவைத்தார்
மவுனமாயுங்களுக்கு மனதிலேகிலேசம்வேண்டாம்
இவையினால்ரிஷிகள்பாத மிபலுடன்காணவேணும்
அவமதுசெய்திடாமலனுப்புவீர்சந்தோஷமாக.

வ-ம். அகோவாருங்கள்மாமாமிமார்களே ரகுநாயகர் செலவுகொ டுத்தபோது நான்வனத்திற்குபோகாமலிருந்தால் அவருக்குக்கோப மவராதாநான்போகவேணும் சந்தோஷமாய்அனுப்பவேணும்மாமா மிமார்களே.

மாமிமாருக்கும்—சீதைக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-எதுகுலகாம்போதி-மிசிரதாளம்.

மாமிகள் அடிபணிந்துவனத்திற்கு அனுப்புமென்றேசொல்ல
அங்கமுருகுதடி — சீதையாரே

சீதையார் அடியாளைராமர் ஆரண்ணியம்பார்க்க
அன்பாய்வரமளித்தார் — என்னிடமாமி

மாமிகள் கடியவிருகஞ்சூழ்ந்த கானகந்தன்னிற்போகக்
காரணமோசொல்லடி — சீதையாரே

சீதையார் கடியவிருகஞ்சூழ்ந்த கானகந்தன்னிற்சென்று
கடிதில்வருவேனே — என்னிடமாமி

மாமிகள் கொடியமிருகம்பாளி கூளிகள்சூழ்வனத்தில்
குறித்தங்கேசெல்லலாமோ — சீதையாரே

சீதையார் கொடியமிருகமென்னை அணுகாமலிளையவரும்
கூடவருகிறாரே — என்னிடமாமி

மாமிகள் வாடிக்கைகன்மொழியுன்னை வனம்போவதென்றிட
மனந்துணியுமோகண்ணே — சீதையாரே

சீதையார் வடிவுள்ளகேகயிதேவிமந்திரியுடனும்
வருவேனிந்தக்ஷணம் பெண்ணிடமாமி

மாமிகள் எய்யுங்கணைகள்போலே யிருசெவியில்நாராசு
மேற்றிவிட்டாப்போலாச்சே சீதையாரே

சீதையார் எய்யுங்கணைகளென்று பெண்ணைவேண்டாமம்மா
இக்ஷணம்போயவாரேன் மாமிமாரே

மாமிகள் செய்யுந்தவங்கள்பொய்யோ தெய்வமிப்படிதானோ
செய்வதொன்றறியேனே சீதையாரே

சீதையார் செய்வேநீங்களிப்போ தியங்கவேண்டாமம்மா
திருப்பிவருகுவேனே மாமிமாரே

மாமிகள் ஐயோநானென்னசெய்வே னாரண்யந்தனிலுன்னை
அனுப்பவோநானிருந்தேன் சீதையாரே

சீதையார் அப்போதியாருநம்ராமர் ஆரண்யம்பார்க்கவென்னை
அனுப்பினார்போய்வாரேன் மாமிமாரே

மாமிகள் மெய்யென்றிருந்ததெல்லாம் விழலுக்குநீரிறைத்து
விட்டகதைபோலாச்சே சீதையாரே

சீதையார் வெய்யவனந்தனில் மேவுங்கன்னிமாரின்
வேடிக்கைபார்த்துவாரேன் மாமிமாரே

சீதை-மாமிமாருக்குச்சொல்-திபதை.

வெடிநேரமாகுதிப்போ மெல்லியேமாமிமாரே
நெடியகானகமேசென்று நிமிஷத்தில்வருவேனிப்போ
தடையொன்றுஞ்சொல்லிடாமற் சலுதியிற்சிலவுதாரீர்
அடியிணைபணிவேனென்னை யனுப்புவீர்விரைவிற்றானே.

வ-ம், சேனுமப்பமாமாமிமார்களே பொழுதுவிடியப்போகின்றதுசீக்கிரமாகச்செலவுகொடுத்தனுப்பவேணும்மாமிமார்களே.

மாமிமார்-சீதைக்குச்சொல்கண்ணிகள்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

மாடத்துக்கேற்றமணிவிளக்கல்லவோ சீதையாரே—எங்கள்
கூடத்துக்கேற்றகுயிலன்னமல்லவோ சீதையாரே
மாமனைத்துக்கேற்றபூமணமல்லவோ சீதையாரே—உலகில்
நாமனைத்துக்கேற்றபாமணமல்லவோ சீதையாரே
கோடிகடவாதகோகிலமேகண்ணே சீதையாரே—உன்னை
பாடுபடப்பிரமன்பாவித்துவைத்தானோ சீதையாரே
அந்தபாதப்பிண்டம்பிஞ்சல்லவோகெர்ப்பம் சீதையாரே-உன்னை
அந்தகானகத்தினிற்கொண்டுவிடுவரோ சீதையாரே
போவென்றுசொல்லநாவும்வருமோதான் சீதையாரே-பூமி
மேவுமோ நற்செல்வம்நாமென்றிருந்தோமே சீதையாரே

சீதை-மாமிமார்களுக்குச்சொல்-திபதை.

கிடையாதநகமோறு மிக்கதோர்வனத்திற்சேர
தடையுஞ்சொல்லவேண்டாந் தாயே[illegible]

குசலவநாடகம்.

படையதாமிருக்குராமர் பாதமேநம்பிவெப்போன்
புடையதருழக்காட்டிற் போய்வாரேன்சரணமம்மா.

வ-ம். அகோவாருங்களம்மாமாமிமார்களே உங்களுடையகிருபாகடாட்சத்தினால் இப்பவுநந்தவனத்திற்குப்போகவேணுந்தடைசெய்யாமல்அனுப்பிவையுங்களம்மாமாமிமார்களே.

மாமிமார்கள்—சீதைக்குச்சொல்—திபதை.

அரிவையேசீதாகேளாய் அடுக்குமோவனத்திற்போகத்
தெரிவையர்தோழிமார்கள் சேரவேகூட்டிக்கொண்டு
அருவனந்தன்னிற்சென்று அருமுனிவோரைக்கண்டு
திரமுடன்சரணஞ்செய்து சீக்கிரந்திரும்புவாயே.

வ-ம். அகோவாருமம்மாசீதாய் இப்போது நீ வனத்திற்கு போகவேணுமென்கிறபடியினாலே நம்முடையதாதிமார்களையழைத்துக்கொண்டுசென்று ரிஷிகஸ்வராளைக்கண்டு தெரிசனஞ்செய்து சீக்கிரம் வருவாய்சீதா.

சீதையார்—வசனம்-மகாபாக்கியம்அம்மாமாமிமார்களே.

சீதை—பாதருக்குச்சொல்-திபதை.

மைச்சினபாதசத்துருக்கா வார்த்தைநான்சொல்லக்கேளும்
அச்சுதருங்களண்ணர் அருளினால்வனமேபார்க்க
இசனுஞ்சென்றங்குற்ற விருடிகடமைப்பணிந்து
பட்சமாய்வருவேநீங்கள் பதனமாயிருந்திடீரே.

வ-ம். அகோவாருங்கள் மைத்துனராகியபாதசத்துருக்கரோநான் வனஞ்சென்று ரிஷிகஸ்வரர்களைத் தெரிசனஞ்செய்துவருமளவும் பத்திரமாயிருங்கள் மைத்துனரே.
பாதர்-சத்துருக்கர்-சொல்—வ-ம். அப்படியேபோய்வருவாயம்மா.

லட்சுமணர்—சீதைக்குச்சொல்—திபதை.

உன்னிடதாயேவாராய் யித்தனைநேரமட்டும்
என்னதான்செய்தாயம்மா யிந்நிமிஷத்தில்நானும்
இந்நிலந்தன்னிற்றேரை யியலுடனோட்டுதற்குக்
கன்னிபோலட்சுமிதேவி கடிகினிரதத்திலேறாய்.

வ-ம். அகோவாருந்தாயே எத்தனைநேரமாச்சுது பொழுதுவிடியப்போகின்றது சீக்கிரமாய்வந்து ரதத்தின்பேரிலேறு தாயே.

பொது-திபதை.

பந்தியாமாமிமாரைப் பணிந்தவர்விடையுங்கொண்டு
முத்திசேர்வாமும்பெற்று மொய்குழல்சீதையாரும்
ஸ்திரப்பதக்கமுற்று மாலையுமெடுத்துக்கொண்டு
சித்திரரதத்தின்மீது சீதையுமேறினாளே.

சீதைதேவிகூறுகிறது-தரு-இ-ம்—சுருகுலகாம்போதி—அடதாளம்.

பல்லவி.

சீதாலட்சுமியாதுசிரோமணி- தேரிணிலேறினளே-என்னம்மா-தேரிணிலேறினளே

அநுபல்லவி.

மாதுலட்சுமி மங்கைசிரோன்மணி வனசாரிபோனாளே (சீதா)

சரணங்கள்.

எதுசாரியமென்று மனிதர்க ளெங்கித்தியங்கிடவே
நிதசாரியமென்று மனதில் தியக்கங்கொள்ளாமல் (சீதா)
வாதுபேசியராவணன்சேனையை வதைத்திட்ட நாயகியாள்
சூதுபோலேநடந்திடுங்காரியந்தோகையறியாமல் (சீதா)
வெற்றிபேசியராவணன்சேனையை வேருடனேபிடுங்கிச்
சுத்தமற்றிடலங்கையழித்திடத்தேன்றிட்டநாயகியாள் (சீதா)
முத்துமார்பிலணிந்தபதக்க மொய்த்துநெருங்கிடவே
கொத்துமோகனமாலையசைய கொந்தளவோலைமின்ன (சீதா)
பூமிதன்னிலுதித்திடுஞ்ஜானகி போகதுரந்தரியாள்
மாமிமார்கள்வழிவிட்டனுப்ப மனதுதான்மகிழ்ந்து (சீதா)
கானகந்தன்னில்வாழும்ரிஷிகள் கன்னிமார்தங்களுக்கு
மனமொய்த்திடும்ஆடைகள் பூஷணமாலைகள்கைபிடித்து (சீதா)
வீடுதோறுமிருக்கின்றமாதர்கள் தேடியேவந்துதொழ
காடுதன்னிலிருக்குரிஷிகளைக் காணவேணுமென்று (சீதா)
வேதநாதமுழங்கிடசெல்லியர் வெண்சாமரம்வீச
நாதந்தங்கிதொனித்திட நாரியர்நாட்டியஞ்செய்திடவே (சீதா)

சீதை—லட்சுமணருக்குச்சொல்—வசனம்.

அதோவாருந்தம்பிலட்சுமணா கானகத்தில்வாழும் ரிஷிகளின் கன்னிமாருக்கு ஆடையாபரணம் பூஷணவர்க்கங்கள் எடுத்துக்கொள்ளுந்தம்பிமைத்துனா.

லட்சுமணர்-வசனம். அப்படியேஎடுத்துக்கொண்டேனம்மா

லட்சுமணர்சொல்-தரு இ-ம்—கலியாணி-மீசுரதாளம்.

என்னதுரிதமம்மா வனம்போக ஏதுதுரிதமம்மா
அன்னமொழியாளே கானகந்தனைநோக்கி
உன்னதமாகாத மோடிவருகுதே (என்ன)
கோட்டைகொத்தளமுந் தாண்டிறேந்தாயேசிதாய்
பாட்டைபேட்டைகள் தாண்டிறேம்
நாட்டுக்குநாயகமானசீதாதேவி காட்டுக்குப்போகாதங்கடினமாய் வருகுது (என்ன)

பொது—திபதை.

தேவபோகமொருகாலத்தும் அசைந்திடாதநாளிப்போ
பவெழுந்தொழுந்து பாரினில்விழுந்தெதன்று

கைதனைமுறித்துக்கொண்டு கனத்தமேதாரச்சைப்பூட்டி-
உய்யவேகின்றதேரை யோட்டினர்வனத்தைநோக்கி.

வ-ம். அகோதெப்படியென்றால் ஒருகாலத்திலும் ஒடியாத அச்சு இன்றையத்தினம் ஒடிவானேன் சீதையை அநியாயமாய்க்காட்டில்விடப்போகிறபடியினாலே ஒடிந்தது என்னபிழைவருமோ நல்லதுவேறே அச்சுப்பூட்டிவனத்தைநோக்கி யோட்டுவோமென்று லட்சுமணர்மனதிலெண்ணிப்பூட்டியோட்டுகிறவிதங்காண்க.

லட்சுமணர் பிரலாபிக்கிற-கண்ணிகள்-இ-ம் எதுகுலகாம்போதி-ஆ-ம்.

என்னசெய்யப்போறேன் என்னுயிர்பாங்கனே ராமராமா
முன்னேசெய்தவினை முடிந்துதோயிங்குமே ராமராமா
கற்பெனுஞ்சானகி கடியுற்றபாவமோ ராமராமா
உன்வாக்குதவறாமல் வந்தேனேவனத்திற்கு ராமராமா
கல்லைப்பெண்ணாக்கிய காரணமோராகு ராமராமா
எல்லைகடக்கையில் அச்சுமுறிந்துதே ராமராமா

சீதைசொல்-திபதை.

வன்னமாஞ்சிகரத்தேரும் வனமதுபோகும்போது
புன்னைமாமரமுந்தேக்கும் பொருந்தியவனத்தில்வாழும்
தன்னிகரிணையில்லாத் சற்குணபட்சியெல்லாம்
துன்மைசேர்சகுனமாகத் தோன்றுதுலட்சுமணனே.

வ-ம். அகோபொருந்தம்பிலட்சுமணா அயோத்தியைவிட்டு வனத்திற்குப்போகிறபோது இந்தவனத்தில் வாழப்பட்ட பட்சிகளெல்லாம் அவசகுனமாகுது பாருந்தம்பிமைத்துனா.

சீதைசொல்-சகுனக்கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பூனைக்குறுக்கிடுது தம்பி
போகவொண்ணாதுநாமுங்கானகத்தில் நான்
என்னசெய்வேன்ஏதுசெய்வேன் தம்பி
போகவொண்ணாதுநாமுங்கானகத்தில் அய்யோ
மொட்டைப்பாப்பாத்தியிதோவாராள் தம்பி
மோசம்வருங்காட்டிற்கேகொண்ணாது இதுவும்
என்றலைவிதிப்படியோ தம்பி
போகவொண்ணாதுநாமுங்கானகத்தில் இதோ
பார்ப்பானொருவனிதோவாரான் தம்பி
பாருமையாஎதிராகஓடிக் கொண்டு
இந்தசகுனம்பொல்லாது தம்பி
போகவொண்ணாதுநாமுங்கானகத்தில் இப்போ
விறகுக்கூடையொருவன்வாரான் தம்பி
மேலேநடக்கொண்ணாதுகானகத்தில் நல்ல
எண்ணெய்க்குடமெடுத்துச்செக்கான் தம்பி

எதிராகவருகிறான்பாருமிதோ — தம்பி
ஊரில்நகைசெய்யும்தட்டான்
ஒண்டியாகவருகிறான்பாரும் — தம்பி
கூவியழுகிறாள்வேடச்சி
கூசாமலோட்டுறீர் தர்மதையுமே — தம்பி
வருகுதையாபாம்புமெதிராக
வெறிதனைக்கண்டுநாமும்போகொண்ணாது இதுவும் — தம்பி
என்றலைவிதிப்படியோ
ஏசவொண்ணாதுநாமுங்கானகத்தில்

சீ-ம்-ல-ம்-தர்க்கம்—கண்ணிகள்—இ ம்—காம்போதி-சாபுதாளம்.

சீ தன்மையாய்ச்சகுனங்கள்தோற்றுதுபாரையா — லட்சுமணரே
நன்மையோவனம்போக நன்றல்லவேசாணும் — லட்சுமணரே
ல அன்னமேநீயொன்றும் அஞ்சிடவும்வேண்டாம் — தாயேசீதாய்
மன்னாகுராமனை மனதில்நினைந்துகொண்டு — தாயேவாரும்
சீ வலியனுங்கட்டுது மனத்துயசாருதே — லட்சுமணரே
பெலிவானகாட்டினில் போவவொண்ணாதையா — லட்சுமணரே
ல நலிவானவார்த்தைகள் நவின்றிடவும்வேண்டாம் — தாயேசீதாய்
சலியாதேயுனக்கொரு தாட்சிவாராதொன்றும் — தாயேவாரும்
சீ கருடனுங்கட்டுது நரிதுறுக்கோடுது — லட்சுமணரே
பரிவுடன்வனம்பார்க்க பதறிநடக்கொண்ணாது — லட்சுமணரே
ல தெரிவைபேநீயொன்றுஞ் சிந்தனைபடவேண்டாம் — தாயேசீதாய்
குருவருளாலே குறையொன்றும்வாராது — தாயேவாரும்
சீ வாட்டமாய்நாயாணும் மாரிடமாகுதே — லட்சுமணரே
காட்டுக்குள்ளேபோகவுங் காரணமல்லவே — லட்சுமணரே
ல காட்டிலுள்ளராசர் நம்மைத்தடுத்தாலும் — தாயேசீதாய்
வாட்டியுயிரைவானுலகேற்றுவேன் — தாயேவாரும்
சீ விச்சுளிகட்டுது வைத்துறைஇதோபாரும் — லட்சுமணரே
இட்சணம்அயோத்தியேகுவதேநன்மை — லட்சுமணரே
ல அச்சம்நீபெண்ணேதே அடவிபோறோமென்று — தாயேசீதாய்
இட்சணமிருசத்தை யேற்றுவேனெமலோகம் — தாயேவாரும்
சீ காவென்றுகூவியே காகமுங்கட்டுதே — லட்சுமணரே
வாவென்றுநீயும் வனத்தில்நடக்கிறீர் — லட்சுமணரே
ல ஆவென்றுநீரும்அரற்றுவதேனம்மா — தாயேசீதாய்
உன்னுருவாடுநலங்குதேமேனியுங் — தாயேவாரும்
சீ நெருப்புமெதிர்வர நின்றுவளர்க்குதே — லட்சுமணரே
திருப்புமென்றால்நீகளை திருப்பாமற்போறீரோ — லட்சுமணரே
ல விருப்பமாய்ச்சானகி பேசிவிளங்கேதாமம்மா — தாயேசீதாய்
செப்பியயோத்திசேர்ந்தால்ராமரேதுசொல்வார் — தாயேசீதா

சீ என்னசொன்றாலு மிரங்காமற்போறீரோ லட்சுமணரே
என்னத்தைசொல்லுறீர் ஏதுமறிகிலேனே லட்சுமணரே
ல என்னசொல்வேனம்மா யின்பமாய்முனிவரைத் தாயேசீதா
முன்னேகாணவேணும் முடிகிநடந்துவாரும் தாயேவாரும்

சீதைசொல்—கண்ணிகள்-இ-ட்—எதுகுலகாம்போதி—ஏகதாளம்.

இந்தசகுனமெத்தவிந்தையாய்க் காணுது
என்னலட்சுமணரே என்னையா ஏதையாமைத்துனரே
வந்தபொழுது வலியனுங்கட்டுது
வர்மமோலட்சுமணரே வனம்போக தர்மமோமைத்துனரே
குக்கிக்குத்தியாத்தை கோவென்றுகூவுது
கோலமோலட்சுமணரே இதுவென்ன சீலமோமைத்துனரே
கோவென்றுவேடர்கள் கூடிபழுகிறார்
குறியீர்லட்சுமணரே அதோவெதிர் அறியீர்லட்சுமணரே
இன்றுமனதிற் கவலைக்குள்ளாகுதே
என்செய்வேன் லட்சுமணரே அல்லாமலஞ்சுகிறேன் மைத்துனரே
மிஞ்சிவனத்தினிற் போவதுநலமல்ல
விதியோலட்சுமணரே அல்லாமல் மதியோமைத்துனரே
நாடிநடையுட மாகவருகுது
ஓகோலட்சுமணரே மனத்துயர் ஆகாதுமைத்துனரே
உத்தமராமருக்குக் குத்றம்வருகுது
உரியோலட்சுமணரே வரும்விதி யறியேன்மைத்துனரே

சீதை—லட்சுமணருக்குச்சொல்—திபதை.

லட்சுமணசொல்லக்கேளீர் நலமல்லமிவ்வனத்தில்
துட்சணநிமித்தந்தானுந் தோன்றிட்டதசாதையா
பட்சிகள்சகுனந்தள்ளிப் பார்வனம்போகொணாது
இட்சணமயோத்திநோக்கி யியலுடன்திருப்புந்தேரை.

வசனம். அகோவாரும் தம்பி லட்சுமணரே சகுனங்களெல்லா மெது வாயிருக்கின்றது ரதத்தைத் திருப்பி அயோத்திக்கு நடத்துந் தம்பி மைத்துனரே.

சீதை—பிரலாபிக்கிறகண்ணிகள்-இ-ம்—நீலாம்புரி-திரிபுடைதாளம்.

நாடுயோத்திவிட்டு நான்வாவேகாடதனில்
பாம்புகுறுக்காச்சுதையோ பட்சமுள்ளலட்சுமணரே
காட்டிலுள்ளபட்சியெல்லாங் கனத்ததடையாகுதையோ
காட்டிலில்லை விதிவசமோ நானிதற்கென்னசெய்வேன்
தாங்குகமாகோட்டான்கூவத் தர்மமல்லவனத்திற்போக
கட்டினியன்விதித்த வெழுத்திதுவோ யென்னசெய்வேன்
காட்டுக்குயல்குறுக்கிடுதே கருங்குருமான்கட்டுதையோ
காட்டிலில்லைசகுனமிதோ நானாயுங்கட்டுதையோ

அருமையானசகுனமையா அதோபாரும்லட்சுமணரே
சருடன்வலமாகுதையோவிதற்கென்னசெய்வேன்லட்சுமணரே
சட்டுக்காடைவலமாகக் காகமுந்தான்கட்டுதையோ
பட்டில்லாசகுனமையோவனத்திற்போகவொண்ணுதையோ
வாதுசேர்சகுனமெல்லாம்வழியிற்றடையாகுதையோ
எதுசெய்வேன்லட்சுமணரே யென்மனதுவேகுதையோ
சாகிறபோதனுந்தான் சகுனந்தள்ளிப்போவதுண்டோ
ராகவரேயென்னசெய்வேன் லட்சுமணரேயேதுசெய்வேன்

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

நன்றல்லச்சகுனமெல்லாம் லட்சுமணரேநீர்கேளீர்
இன்றைக்கேதிரும்பி யிரவுக்குநின்றுதங்கி
நன்றுடநாளைக்கெல்லாம் லட்சுமணாவருவோங்கண்டாய்
சென்றிடவயோத்திநோக்கித் திருப்புவீர்தேரைநீரே.

வ-ம். அகோவாருந்தம்பி லட்சுமணா சகுனம் நன்றாயிருக்கவில்லை யென்றுநான்சொன்னால்அதற்குப்பிரதியுத்தரஞ்சொல்லாமல்ரதத்தை நடப்பிக்கிறாய்இன்றைபத்தினம் அயோத்திக்குப்போய்நாளையத்தின ம்வருவோமேயல்லாமல் இன்றைக்குப்போகப்போகாதுரதத்தைத்தி ருப்பிஅயோத்திக்குஓட்டுந்தம்பிலட்சுமணா.

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-திபதை.

அற்பனானிமித்தந் தோன்றுதோதிருப்புந்தேவொன்
றிப்படிச்சொல்லலாமோ என்னிடதாயேவாரீர்
அற்பமாய்வருவதெல்லாம் அகற்றியேசிதறுங்கண்டாய்
நற்பதப்பணியுமாராமர் நல்லருள்நினைந்திடீரே.

வ-ம். அகோவாருமம்மாசீதாய் என்னவார்த்தைசொல்லுகிறாய்இ ப்படிச்சொல்லலாமோ அற்பமாய்வரப்பட்ட பட்சிசாதிகளுக்குப்பய ந்துஅயோத்திக்குப்போய்விடுகிறதா அதுகெட்டது நீரருநாயகனைமெ னநினைப்பானம்பண்ணினால் ஒருதீங்கும் வாராது தாபத்திரியப்படவே ண்டாமம்மாவாருந்தாயே.

சீதை சொல்-பிரலாபிக்கிறகண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

என்னநிக்குவருகுதையோ யெந்தனுக்குலட்சுமணரே
என்னமென்றெழுதினதோ சொன்னசொல்லென்மைத்துனரே
நாட்டிலில்லாவிதியின்வாரோ நானிதற்கென்னசெய்வேன்
காட்டிலிலைன்விதித்த யெழுத்திதுவோவகிலேலனோ
பெண்பிறந்துபட்டதுறை போதுமையாவெந்தனுக்கு
அண்ணன்வார்த்தைதள்ளாமலே அருமைபடவிட்டீரையா
வனம்பார்க்கவந்திடத்தே மனத்துயரம்போதுமையா
[illegible]

சீதை-லட்சுமணருக்குச்சொல்-கொச்சகம்.

இன்னிசித்தங்கண்டீரா இளையவரேமழவருக்கும்
மன்னவர்க்குசண்மையுண்டு மற்றவர்க்குமேசுகந்தான்
துன்னுமுகத்திராசர்களுஞ் சோர்வின்வாழ்வடையார்
மன்னியாமெந்தனி— காரணத்தின்செயலறியேன்

வசனம்.

அகோவாருந்தம்பி மைத்துனா இந்தசகுணத்தின்குணம் அயோத்தியாபுரியையாளப்பட்ட ரகுநாயகருக்கும் மற்றுமுண்டானவர்களும் ஒன்றுமில்லை என்னுடைய விதியின்வண்மை நான் அறியமாட்டேன் தம்பிமைத்துனரே.

சீதைசொல்-பிரலாபக்கண்ணிகள்-இ-ம்-கண்டாசாபதாளம்.

வருகிறவிதியிது வழியில்தங்காதென்பார் லக்ஷ்மணரே-அந்த
மலரயன்சொற்படி யெவராலுந்தவறாது லக்ஷ்மணரே
அருமொழிவார்த்தைக்கு அறியீர்சொல்லுவீர் லக்ஷ்மணரே
ஐயோபெண்பிறப்பு ஆகாதென்பார் லக்ஷ்மணரே
வையகத்தார்சொல்லும்வார்த்தைபோலாச்சுதே லக்ஷ்மணரே இப்ப
ஒருத்திபெண்பிறந்து ஊமையைப்போலானேனே லக்ஷ்மணரே
பருத்திபடாதபாடுபட்டு உழல்கிறேனே லக்ஷ்மணரே-ஐயா
இருப்புந்தேனா அயோத்திக்குப் போய்ச்சேர்வோ லக்ஷ்மணரே
இனிசெய்தவறியேநான் தெரியச்சொல்லுங்காணு லக்ஷ்மணரே

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திபதை

அடவியில்வந்தோமிப்போ ஆனதோரிஷியைக்காணேன்
மிடிபதிமன்னர்கோவே பெரும்புலிமிருகங்கண்டேன்
வடிவுள்ளரிஷிகள்தம்மை வனத்தினிற்காண்கிலேனே
திடமுடனெனக்குச் செப்பிடிளையகோவே

வசனம்.

அகோவாருந்தம்பிமைத்துனா இந்தவனத்தில் முனிவர்களைக் காணவேணுமென்று வந்தோம் ஒருவரையுங் காணகிலோம் துஷ்டமிருகஜாதிகளைக்கண்டோம ரிஷிகளிருக்கப்பட்ட வனம்இன்னமெத்தனை தூரமிருக்கின்றதோ எனக்குத்தெரியச்சொல்லும் மைத்துனரே.

சீதைக்கும்-லட்சுமணருக்கும்-தர்க்கக்கண்ணிகள்
இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

லட்சு தாயேசீதாகேளுமம்மா
தழைச்சவனந்தோப்புக்கப்புறந்தான்
தூயதோர்முனி ஆசிரமங்கள் இதோ
தோணுதுபாரம்மா தூரமில்லை
சீதை தூரமெட்டாத்தூரம்வந்தோர்தம்பி இங்கே
தோணுதுக்கங்கள்தோணுதையா
ஆருங்காணேன்பெருங்காணேன் ஒரு

அருணமரிஷிபேச்சுங்காணேன்
லட்சு. செய்யலாவதென்னவம்மா முன்பு
செய்தவிதிப்படிதப்பாது
அய்யமகீளண்ணாதே மனதில்
அனந்தரிஷிகளைச் சேர்வைசெய்வோம்
சீதை வனத்தில்காளைவந்துரிஷிகளை நாம்
வண்மையுடனேசேர்வைசெய்வோம்
இனித்தான்திருப்புந்தேனை தம்பி
இன்னேரம்போய்ச்சேர்வோம் அயோத்திக்கு

லட்சுமணர்-சொல்லிவிருத்தம்.

முன்னம்நாமடவிதன்னில் மூகரூரவந்தபோது
இன்னிலகததிசயங்க ளியாவையுங்கண்டோமிப்போ
வன்னமாமன்னைப்பட்சி வனக்கிலிற்காணேனையா
என்னதாயெனக்குயிப்போ இளையவாயுரைசெய்வீரே

வசனம்.

அக்காவாருக்தாயிமைத்துனே முன்னால் உங்கள்தமையன் ராமர் யகாருக்கு நீருங்நாணும் கூடவரும் வனத்திற்குவந்தபோ தங்கே ரிஷிகளுடைய பன்னகசாலைகளும் பூங்காவனங்களும் அன்னப்பட்சிகளும் ரிஷிகளையுங்கண்டோமே இப்போது ஒரு அதிசயமுங்காணேம் அந்தவனம் எந்தவனம் சொல்லுந்தம்பி மைத்துனரே.

சீதை-லட்சுமணருக்குச்சொல்லிவிருத்தம்

தாயேகேள்சீதாயிப்போ சந்தேகப்படவேண்டாம்
மேயகாய்வனங்கடந்து மீண்டிடும்போதிலப்பால்
தூயதோர்தென்னந்தோப்புந் துலங்கியமாவிலும்மன்னம்
நேயமாய்நதியுந்தோப்புங் கிரிஷகிர்காண்பிப்பேனே

வசனம்.

அக்காவாரும்மாசீதாய் நீவிசாரப்படத்தேவையில்லை இந்தமூன்றிவனங்க ந்து அப்பாற்போனால் பூங்காவனங்களும் ரிஷிகளுடைய பன்னகசாலைகளும் ஆசிரமங்களும் விநோதமானபட்சிகளும் ஒருநிமிஷத்திற்குள்ளே காண்பிக்கிறேன் சும்மாவாரும்மாசீதாய்

லட்சுமணர்சொல்லுங்கண்ணிகள்-இ-ம்-எருகுலகாம்போதி-ஆதிதாளம்

அன்னையேவாருமம்மா அடவியில்முன்னமேவாருமம்மா
இன்னிதமாகமுனிவோர்கள்வாழ்கின்ற
உண்மையாய்ப்பாருமம்மா என்னம்மணி உண்மையாய்ப்பாருமம்மா
கற்பகச்சோலைகளும் அடவியிலற்புதஆலைகளும்
விற்பனர்வாழ்கின்ற ஆசிரமங்காணுது
மெல்லியேபாருமம்மா என்மதனிமெல்லியேபாருமம்மா
சந்தனதேக்குமரம் அடவியில்செந்தூரப்பாக்குமரம்
இந்தவனத்திலதிகமாய்க்காணுது
என்றுமேவாருமம்மா என்மதனிஎன்றுமேவாருமம்மா

வேதமுனிவோர்கள் தவஞ்செய்யும் வேள்விக்குச் சாலையிது
போதராவாகினோர் ஸ்நானஞ்செய்யும்
புண்யதடாகமிது எம்மதனிபுண்யதடாகமிது
சந்தசிரேசவெல்லா மிவடத்தில்நித்தந்துதிகள்செய்வார்
உத்தமியேசிதாய் பத்தியுடன்றொழுதேன்
சித்தமகிழுமம்மா என்மதனி சித்தமகிழுமம்மா

ஸீதை-லட்சுமணருக்குச்சொல்-திபிதை

நதியிதுகண்டோமிப்போ லட்சுமணாநீதான்பாராய்
விதம்பெறக்குயில்களகூவும் வேதவேயிவகளும்
மகிமையதாயிருந்தபேர்க்கு முழங்கியதபோதனர்க்கும
கெதிபெறவிவர்கட்கெல்லாங் கிளிர்த்துகைகூப்புவேனே

வசனம்.

அகோவாருந்தம்பிலட்சுமணா இதோநதியைக்கண்டேன் இதோ யாகசாலைகளைக்கண்டேன் ரிஷிகள்வாசஞ்செய்யும் ஆசிரமங்களைகண் டேன் ரிஷிகள்படிக்கப்பட்ட வேதகோஷ்டங்கள் என்காதிலே அடிபடு குது இந்தரிஷிகளை தெரிசனம்பண்ணவேணுமென்றால் இந்தக்காரி யெக்கடையாய்ப் பெருகிவருகின்றதுநானென்னசெய்யப்போகிறேன் தம்பிலட்சுமணரே

லட்சுமணர்வசனம்.

அகோகேளுந்தாயே சீக்கிரமாக இந்தநதியில் ஸ்நானஞ் செய்து ஜெபதபமடித்துக்கொள்ளும் இதோ ஓடக்காரனை அழைப்பிக்கிறே னம்மா சிதாய்

பொதுதிபிதை

தெரிசனைகண்டபோது தேன்மொழிசிதையாரும்
பெருகியகங்கைதானும் பொட்டெனவெழுந்துநிற்க
பரிவு டன்தீர்த்தமாடிப் பாங்குடன்பூசைசெய்து
அரிகிளியிருக்கும்போது அண்டையிற்குகன் வந்தானே

ஓடக்காரர்வருகிற-பொது-திபிதை

கோபமாய்குகனைப்பார்த்த கொள்ளைகையக்கங்கைக்கய்யார்
போகவேகாரியமுனைந் பொட்டெனவோடந்தள்ளும்
பாகமையன்றயுமென்ன பரிவாயிப்போதுதானே
ஆகையாலோடக்காரர் சூழ்ந்திடக்குகன்பால்வந்தார்

குகனும்-ஓடக்காரனும்-வருகிறகண்ணிகள்

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

தோணிதுறைநாலைவளைதடியும் நல்லதாழச்சடையருஞ்சல்லடமும்
[illegible]கொண்டு நல்ல குகனுமவந்துதோணிஞன்
ஆணிமுத்துடவழங்களாம் நல்ல ஆயிரமாத்துத்தங்கங்களாம
[illegible]கொண்டு நல்லகுகனும்வந்துதோணிறேன்
[illegible]பிடித்துக்கொண்டுநல்ல ஆறுமூன்றுயிரங்கொடுத்துக்

பொன்னைவிணக்கம்புத்தேனுக்கொண்டு நல்லகுகனும் வந்தான்தானிருவ
தாமரைமலர்கொண்டுஎங்கள் தாயார்சிறைதலையக்காணவேண்டும்
ராமர்க்கடிமையென்று கங்கைகரைதிலேயாடக்காரர்தோணிஞர்

தோடக்காரர்சொல்கண்ணிகள்-இ-ம-சங்கராபரணம்-மிசுரதாளம்.

ஆருக்காணுமிப்போ கர்மைபழுக்கது
அகத்தியஞ்சொல்காணும் — நீங்கள்
ஊனைவிட்டுயிந்தப் பாரிலவந்ததேது
உண்மையைச்சொல்வீர்காணும் — ஆரு
இந்தஅம்மைவிட அழகுமொயிலும்நா
னெங்குங்காணேன்காணும் — ஆரு
இருட்டுவேளைதன்னில் திருட்டுத்தனமாக
யெங்கேபோறீகாணும் — ஆரு
ராஜாதிராஜரோநகரைவிட்டுச்சுடு
காடுடேபோவாரோ — ஆரு
மெய்யுரைசொன்னால்வைகைக்குவேடங்கள்
வேண்டித்தருவேன்காணும் — ஆரு
மானவர்தேவரோவழிதப்பிவிக்க
வனத்திலேவந்தீரோ — ஆரு
அன்னநடையாளும் ரதிபோலுக்காணுது
மகாலட்சுமிசானே — ஆரு

லட்சுமணர்-குகனுக்குச்சொல்கிறது.

வையகம்பிலோடந்தள்ளும் வண்ணையாக்குகனேகேளாய்
செய்கைகொள்ராமர்தேவி சீதையாம்லோகமாதா
உய்யவேவனங்கள்பார்க்க உதிக்குமுன்போகவேணும்
ஐயமில்லாமலோட மருங்கினிலழைத்திடாயே

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் குகனே ரகுநாயகருடைய தேவியாகிய சீதாங்கனியம்மன் சூரியோதயத்திற்கு முன்னே தெண்டகாரணியவனத்துக்குப்போய் ரிஷிபத்தினிபார்களைச் சேர்வைசெய்யவேணுமென்று புறப்பட்டபடியால் சிக்கிரமாகஓடத்தைக்கொண்டுவாரும் குகனே

குகன் வசனம்,

அப்படியேநல்லதையா

ஏலப்பதம்-கண்ணிகள்

ஏலேலோ ஏலேலோ-ராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ

தேக்குமரங்களினாலே ராமஜெயம்
திரள்பலகைதனைச்சேர்த்து

வாகானஅச்சனிந்து வகைவகையாய்வட்டமிட்டு
சீர்க்கமுடன்கழுக்காணி திட்டியதிர்றாணிருத்தி

எக்காளம்பொன்னைதனைல் இராமநு அநில்மச்சனிக்கு
ஆ சிங்காரமாய்ச்சமைத்த ஓடதனின்மீதில்
சீதையும்லட்சுமணனும் வந்துசேர்ந்தார்கள்
வங்காரமாகவேகுகன் மனுஷர்வந்து
ஓடமேதள்ள அலைமோதிதுள்ள அடிபெண்ணேபெண்ணே
ஆடிக்க பாடிக்க தேடிக்க கூடிக்க ஏலேலோ

விசையாகக்கங்கைதனில் விட்டுவருதோடந்தன்னை
அசையாமல்காற்புறமும் அமர்க்கிருக்கும்ஓடக்காரர்
இசையானகுகனுமதில் இடமுடனேசுற்றவர
ஆ அலைக்குதடோதுபுறமாய் அடிமாதகைச்சாய்ந்தது
கிலேசநிலையில்லவிடத்தில் கங்காம்பாச்சி
இதோஆச்சுது சிடம்விட்டுப்போச்சுது ஏலேலோ

கருணைதருமதாமரையும் கல்லகடல்நகைமக்ரமும் அல்லிகளும்
படல்போலேஅலைகளும் பவழக்கொடிகள்களும்
இடமுடனேபாம்புகளும் இராணைநதிதனிலே
ஆ லட்சுமணர்சீதையை சிறந்ததிமெள்ளவேற்றி
இக்கனைமவேடமிட்டு வெந்தரும் சிறுமுக்கி
முன்னைதடியைக்குறுக்கி முன்னேபடித்துப்புட்டு ஏலேலோ

இதுவுமது-ஓடக்காரர்சொல்லல்

ஸ்ரீராமாராமஜெயம்சீதா பதிராமராமஜெயம்
சீர்மேவுங்கோசலையின்மைந்தர் சிவபெருமான்கைவில்லி
கார்மேவுமேனியுள்ள கமலபாதநாதன்தன்னை
ஆ அக்கரைக்கனைந்து சேர்க்கவேணுமிப்போ
அம்பலமின்மேலேறி அடியார்கள்முன்தன்
பச்சரசியின்மேல் பச்சைகிளிதனை
கம்பிலேஒன்றுமறுக்கின் செம்பொன்மலைப்பாதம் ஸ்ரீராம

படல்போலேஅலைகளும் பவழக்கொடிகள்களும்
இடமுடனேபாம்புகளும் சீராமனோடேதன்னில்
ஆ லட்சுமணனும்சீதையாளை சிறந்ததிமெள்ளமெள்ள
காற்புறமும்வந்தவர் போடவேசொல்ல
அந்தனைக்குகன்மனிதர் ஆர்ப்பரித்ததன்
அரிவைசீதைபரு மேதினியுகந்தபின் ஸ்ரீராம

வேலைசிகர்விழிபதினும் வெகுட்டியின்மயாதவாதும்
காளிடமின்சீக்கிரம் காக்கிறதன்னைகடந்துதும்
ஆ தாரணிசேனைவுடனும் யானைகுதிரைத
காரணமேஅரணமே ஆனவனேஆனவே
வேதாகமப்பொருளே வெண்றமேதவா
பேரிப்பணிகைக்குகன் பதநசதர்சிரேறுதே ஸ்ரீராம

ஓயாமல்மோதுகின்ற வோசைநீர்க்கடல்தனிலே
சாயாமலோடுகின்ற சமுசாரமரக்கலத்தில்
து விழாமலெந்தனை நின் பாதத்திற்சேர்க்கும்
விண்ணுமண்ணும்போற்றரிய நண்ணுமணிவண்ணன்
நீடாழியிற்றுயிலும் நீலமணிவண்ணு
நித்தமபணிவைகுந்தன் முத்திதரும்பாதம் ஸ்ரீராமா

பார்புகழுங்கோசலைவாழ் பாலராமன்பதம்பணியும்
சீர்மிகுந்தவால்மீகர் திருவடியைப்போற்றிசெய்து
து ஆசையெனுமோடமதை நேசமாய்க்காட்டி
அடியனுக்கடியனெனு மொருவன்பதம்பற்றி
மீகாமனாகவரும் வாசனையைநிறுத்தி
யின்பமுடன்வைகுந்தன் செம்பொன்மலர்ப்பாதம் ஸ்ரீராமா

தேக்கும்ரமதனிலே தீர்க்கமிந்தக்கப்பலிது
சிந்தையாம்வோடமது லட்சுமணருஞ்சீதை
து தள்ளவேவோடமதை மெள்ளவேஅப்பால்
கங்காநதிவாழும் கனமிகுந்தபச்சைக்
கிள்ளையும்பஞ்சவர்னக் கிள்ளைகள்சூழும்
மங்களமாகவேதான் ஓடத்தைப்பாயிடாயிப்போ ஸ்ரீராமர்

கங்காநதியிலே விஷ்ணுவைவைத்து
சூஸ்திரப்பலகை தொண்ணூற்றொன்பதுகட்டி
து அக்காணுந்தக்கையொரு மிரக்கியேற்றி
அடிமத்தளமொன்று பிலேயாய்ப்பரித்து
நிட்சயமாகவே கோலமீனுபாள்
ஞானமுடன்போகுதடி வால்மீகர்வனமே ஸ்ரீராமா

சீதை-லட்சுமணருக்குச்சொல்-கண்ணிகள்

எதுகுலகாம்போதி-அடதாளம்.

நாமுங்கரையேறிகங்கா நதியோடமுந்தாண்டி
நாமும்வருகையிலே சகுனங்கள்நன்றாகத்தோற்றவில்லை
நானும்வரமாட்டேன் லக்ஷ்மணரேநன்றாகத்தோற்றவில்லை
நானேவருவோனமையா அயோத்திக்கு மதத்தைத்திருப்புமையா
யாளிகள்கூளிகளும் வனங்கள கண்டம்பரண்டங்களும்
கூளிகள்யாளிகளும் வனந்தனில் கூவுதுபாருமையா
இளையபெருமாளே லக்ஷ்மணரே யிந்தசகுனமெல்லாம்
பிழைபாகக்காணுது வனந்தனில் போகவுமொண்ணுது
வனமபார்க்கப்போகையிலே லக்ஷ்மணரே வழிதடையாகுது
இனமாகவூர்சேர்ந்து லக்ஷ்மணரே யின்னொருநாள்வருவோம்
அச்சுமுறிந்ததுவோ லட்சுமணரே ஆகாது ஆகாது
இட்சணமயோத்திக்கு லட்சுமணரே யிபனுடன்போவோர்வாரீர்

லட்சுமணர் சொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-சாபுதாளம்

ஏனம்மாவென்தாயே என்னம்மணி யிந்தசகுனமெல்லாம்
கானகம்போகையிலே யென்னம்மணி கண்டதுமேதாவுமில்லை
அம்மம்மாவென்தாயே யென்னம்மணி ஆலோசனைபண்ணுறீர்
சும்மாக வம்மா வனத்திற்கு வெகுதூரம்வந்துவிட்டோம்

பொது-வ-ம் சீதைமனங்கலங்க லட்சுமணரும் திம்பாயிருக்குதென் றயோத்தைவிட்டுக் குறுக்கே தேரைநடத்திவிட்டார்.

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திபிதை

அக்கரைதாண்டியிப்போ அடவியில்நடக்கும்போது
இக்கெனச்சாலைசோலை யிருடன்கண்டோமிப்போ
நற்குணமுடையவெந்தன் ரகுபதிக்கிளையகோவே
பக்குவமதுடனேயென்முன் பகருவாய்நன்றாய்த்தானே

வசனம்.

ஆனால் கேளுந்தம்பிலட்சுமணா நமக்கு முன்னாலே இருண்டசோலை கள் தோற்றுகிறபடியால் அந்தவனம் யார்வனம் எனக்குதெரியச்சொ ல்லுந்தம்பி மைத்துனா.

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-கண்ணிகள்

இ-ம்-புன்னாகவராளி-சாபுதாளம்

அன்னையேகுருவஷிஷ்டரியவனம் பாராய்
அக்கரைக்குநிக்குஞ் சிக்கிர ஆசிரமம் பாராய்
பன்னுமறையோர்கள்வாழுமபாரவனம் பாராய்
பக்தியுடன்யாகசாலைபன்னகம் பாராய்
கன்னல்விலைசூழுஞ்சோலை அன்னையே பாராய்
காசிபர்வாழ்கின்றவனங்காணுது பாராய்
உன்னிநமிருண்டவனமுன்னிலே பாராய்
கன்னிகளிறையுந்திவ்யகானகம் பாராய்
தென்றிசையுந்தெற்கவனந்தோணுது பாராய்
சித்தியவிஸ்வாமித்திரமுனிசூழ்வனம் பாராய்
வர்ணமானமமரர்வனங்களைப் பாராய்
மாதவர்துர்வாசமுனிவாய்பதி பாராய்

பொது-திபிதை.

அக்கரைதன்னிலேறி ஆரண்யம்பார்த்தபோது
துக்கிதராகவேதான் துறவும்வழிநடந்து
அக்கினியெரியவக்கோ ராவதுபயந்தேயோட
திக்கெனவிருண்டகாட்டிற் சீதையைக்கொண்டுசென்றார்

வ-ம் அந்தச்சமையத்தில் சீதையம்மன் நதியிலே ஸ்நானம்பண் ணி ரதத்தின்மீதேறினபோது லட்சுமணப்பெருமாள் ரதத்தை முடு க்கிக்கொண்டு தண்டகாரண்ணியம் வருகிறபோது அங்கே அக்கினிக்

குயில் குயிலென்றெரிகின்ற இரவிகாணு காலமத்தைக் கொண்டுபோனவிதங்காண்க.

பொது-விருத்தம்.

அரியதாம்புலிகள்சிங்கம் யானையுங்காண்டமானும்
கரியுடன்சிவிங்கிபன்றி நாடியவனத்தில்வந்து
அரிவையையிவ்வனத்தி லகலவிட்டேகென்று
பிரியமாய்க்கருத்திலப்போபிரியவுமவனைநினைத்தார்

வசனம்.

அந்தச்சமயத்தில் தெண்டகாரண்ணிய வனத்தில் முனிவர்களுக்குப்பகையாயிருக்கப்பட்ட அநேகமிருகஜாதிகளிருக்கலட்சுமணப்பெருமாள்கண்டு இந்தவனத்தில்தானே ரகுநாயகர் லட்சுமிதேவியைவிட்டுவரச்சொன்னாரென்று மனதில்வியாகூலப்படுகிற விதங்காண்க

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

என்னசொன்னார்தம்பி யென்னசொன்னார்சுவாமி
என்னசொன்னார்நாத ரேதுசொன்னார்
முன்னேபாவிராவண னென்னைச்சிறையெடுத்தான்
சொன்னகலகத்தாலே உன்னைவிடச்சொன்னாரோ என்ன
மன்னரகுராமருக் கென்னகுறைசெய்தேனோ
தன்னந்தனியாளாக வென்னைவிடச்சொன்னாரோ என்ன
துன்னுங்கமுசலை கைகேசிசுமித்திரைக்குக்
துன்பஞ்செய்தேனென்று யின்பம்விடச்சொன்னாரோ என்ன
பரதசத்துருக்கருக்கு பழுதுசெய்தேனென்று
நிறையக்காட்டிலென்னைத் துறையாய்விடச்சொன்னாரோ என்ன
நிறையும்வசிஷ்டர்பாதம் உறையாய்மறந்தேனென்று
மசையும்புகழும்ராமர் அறையாய்விடச்சொன்னாரோ என்ன
மறையவனெழுதிய குறையோநானறியேனே
பிறையணியீசன்விட்ட. சிறையோநானறியேனே என்ன

சீதை-லட்சுமணருக்குச்சொல்-விருத்தம்.

சந்தனைக்கொண்டுவந்த யினிவரோசொல்லக்கேளும்
உந்தனல்மனதிற்றுக்க முகந்துகோவிருப்பதேனோ
சுந்தரமுகங்களெல்லாஞ் சோர்ந்திடக்காரணமேது
எந்தனுக்கறியநன்று யிட்சணமியம்புவீரோ

வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணா அயோத்தியிலிருந்து தெண்டகாரண்ணியவனம் வருகிறபோது உன்றுடைய முகங்களெல்லாம் செந்தாமரைப் புஷ்பம்போலிருந்ததே இங்கே வந்தமாத்திரத்தில் முகங்களெல்லாம் வியாகூலமானதென்ன எனக்குத் தெரியச்சொல்லுந்தம்பிலட்சுமணா.

லட்சுமணன் - சீதைக்குச்சொல்-தரு-இ-ய-ஆஹிரி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னசொல்லுவே னண்ணா வேதுசொல்லுவேன்

அநுபல்லவி.

அண்ணமேயென் னண்ணன் சொன்னசொல்
வன்னியில்விழுகாரு தே [illegible]

சரணங்கள்.

பாவியானேனென்னம்மா
ஆவியானவெ னண்ணதுரைத்தசொல் செப்புவதெப்படி [illegible]
வாய்திறந்துயான்சொல்வேனென்றால்
மனதுநொந்து வலுமைசெத்து வங்குமெப்படிசெப்புவேன் என்
தசரதர்குலபுண்ணியரே நீக்கவருகுதென்றே
ராமருழக்கில்வனத்தில்விடுமென்றார் என

இதுவும்-லட்சுமணர்சொல்-தரு-இ-ம-எலதுலகாம்போதி

மிசுரசாளம்-பல்லவி.

எப்படிசொல்லப்போறேன் ராமர்சொன்னதை
பேதென்னுசொல்லப்போறேன்

அநுபல்லவி.

எப்படிசொல்லப்போறே னிளசந்திரா நுவார்த்தைதனை
நற்படியாய்ச்சொல்ல வாய்வருமோதாயே எப்ப

சரணங்கள்,

மன்னவன்ராமச்சந்திரன் மனமகிழ்ந்துசொன்னதை
யென்னமாய்மனம்வந்து கியம்புவேனம்மா
அன்னமே அண்ணன் சொன்னவார்த்தை தியா
சின்னமாயிருந்துதா செவிதனிற்கேழ்க்கலாமோ [illegible]
சொல்லிவென்றுமெல்லமனம் துடிக்குதுதிரோக்கெங்கு
மேல்லைகையாலே மொழிவேனோயிவ்வசனம்
அன்னமே ழந்தசீதா மக்குமோ யிந்தவார்த்தை
மனமலைந்துராமா சொன்னவசன மேருதூங்கனடீ [illegible]

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-கொச்சகம்.

என்னுடையதாயேகே ளிசைந்தீதோர்வார்த்தைதனைநீ
மன்னராகுராமருக்கே வனத்திலேவிட்டச்சொல்லுதோ
சொன்னமொழிகேளுநெஞ்சந் துடிக்குதப்பா திரோகவே [illegible]
இன்னவசனங்கள்சொல் லிசைந்திடமோ யனமனதுடைய.

வ-ம்-அகோகேளுதம்மா ரகுநாயகர் சொல்லவேண்டிய தன்மையை என்னவென்று சொல்லப்போகிறேன் சொல்லி வருமென்றும் [illegible] நின்றது எப்படிசொல்லப்போகிறேன் ரகுநாதருக்கு [illegible] சொன்னேன் கேளாமல் உனையனைத்திலில்விட்டு [illegible] கூட்டிக்கொண்டு போகச்சொன்னாரம்மா.

பொது-த்விபதை

உரைத்ததோர்வசனங்கேட்டு வொண்டொடிசீதையாரும்
அறுத்ததோர்கதலிபோலே அலறியேகீழ்விழுந்து
வெறுத்ததுமேகலையுமாகி மேதினிதனிற்பணிந்து
வருத்தமாய்த்துயரத்தோடே மாயனைநினைந்துசொல்வாள்

சீதை-லட்சுமணருக்குச்சொல்-த்விபதை

விதியெனக்கிதுவோவையா விமலரோயிளையகோவே
மதிமிகுசிராமருக்கு வன்பிழைசெய்ததுண்டோ
அதிபிகுமுங்களண்ணர் சொல்லினைக்கவறிடாமல்
மதிமயக்கத்தாலியானும் வனம்பார்க்கவந்திட்டேனே

ஷ்-ம் அகோவாருந்தம்பி லட்சுமணா என்னுடையவிதி இப்படியிருந்தது ரகுநாயகருக்கு நான்செய்த அபசாரங்கள் மெத்த வுண்டோ அவருடையவார்த்தையைத்தள்ளாமல் வனம்பார்க்கவந்தேன் இவ்வனத்தில் பெண்சீவனாகிய நான் என்னசெய்வேன்மைத்துனா

சீதை-பிரலாபிக்கிறகண்ணிகள்-இ-ம்-கண்டா-மீசுரதாளம்.

திருந்திபவனத்திலன்று சீதைநான்பிறந்தபோது
ராகவாஹரிராகவா
வருந்தியஅரக்கனென்னை வலுமையாலெடுத்தபோது
ராகவாஹரிராகவா
மரங்களைத்தழுவிக்கொண்டு வஞ்சியென்றெனையழைத்த
ராகவாஹரிராகவா
திடமுடனோர்ந்தவார்த்தை சிந்தையில்நினைவில்லையோ
ராகவாஹரிராகவா
கன்றிழந்தபசுவைப்போல் கானகத்திற்றேடினீரோ
ராகவாஹரிராகவா
வண்ணமானஅயோத்திதனில் வாழ்ந்துநாமிருந்தோமே
ராகவாஹரிராகவா
இன்றவர்பிரிந்தவகை யெவ்வகையோவறிகிலேன்
ராகவாஹரிராகவா
என்னசெய்வேன்மைத்துனரோ ஏதுசெய்வேன்லட்சுமணரே
ராகவாஹரிராகவா

சீதைக்கும்-லட்சுமணருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

சீ ஐயையோதம்பிலட்சுமணரோ இவ்
வன்னீதமிந்தவுலகிலுண்டோ

ல செய்தவினையாலேயம்மா
தீங்குகளானதையென்சொல்வேன்

சி என்னகுற்றஞ்செய்தேனென்று இந்தவனத்தில்விடவேசொன்னார் சுவாமி

ல அன்னையேவண்ணாவென்றானம்மா அரக்கனெடுத்ததவரவஞ்சொன்னான் உன்னை

சி மாசிலாதஅக்கினியில் மனிதர்வருவதுண்டோலட்சுமணரே தம்பி

ல ஏசுவாருலகமென்று இந்தவனத்தில்விடவேசொன்னார் ராமர்

சி அன்னமாஞ்சநங்கவதியாள் ஆபத்தைச்சொல்லிடவாய்வருமோ பட்ட

லட்சுமணர்-சிதைக்குச்சொல்லுகிறவிதை

காட்டினிலோட்டிவிட்ட காரணஞ்சொல்லுமென்றீர்
வாட்டமாஞ்சிதைபாரோ வண்ணான்றன்மொழியைக்கேட்டு
நாட்டினிலுள்ளபேர்கள் நகையேசுகின்றாரென்று
தேட்டமாம்புகழ்சேரிராமர் செப்பினாரென்னசெய்வேன்

வசனம்.

அகோகேளுமம்மாசிதாய் நாட்டினிலுண்டான பேர்களெல்லாம் தம்மைநகைக்கிறார்களென்று ரகுநாயகர்மகாகோபமாய் உன்னையிந்த வனத்திலே விட்டுவரச்சொன்னாரம்மா

பொருதிவிதை

மைத்துனர்மொழியைக்கேட்டு மயங்கியேமூர்ச்சையாகி
மெத்தவேமனதுவேறாய் மேதினிதனில்விழுந்து
பித்தனைப்போலும்வாயாற் பிதற்றியேயுளறிநின்று
சித்தமும்ராமாவென்று சிதையும்புலம்புவாளே

சிதை பிரலாபிக்கிறகண்ணிகள்-இ-ம்முகாரி-ஆதிதாளம்

என்னசெய்வேன்மைத்துனா இதற்குநான்ஏதுசெய்வேன்லட்சுமணா
ராமர்சொன்னதற்கெழுந்திருந்து என்னையிந்தச்சூதுகள்செய்தீரோ என

சூதுகளறியாதநான்பாவிசொன்னேனொருவார்த்தைஅதை
வாதென்றெண்ணிக்கொண்டுஎன்னை வனந்தனிற்றள்ளிவிட்டீர் என

சித்திரக்கூடந்தனிலேஇருவருஞ்சேர்ந்தங்கிருக்கையிலேஅப்போ
தங்கித்தத்திக்கொண்டுகாகாசுரன் ஸ்தனனிபத்தைகுத்தினானே என

குற்றமேசெய்தானென்றுரகுராமர் கோபத்துடனெழுந்துபிரம
அஸ்திரமிதுவென்றுதர்ப்பையெடுத் தருங்கணையுந்தொடுத்தார் என

[illegible] ராகுரான் எந்நுக்கதியில்லாமல்
[illegible]ளவனென்று ரகுராமனைச்சரணமடைந்தேனே ௧

சரணமடைந்தவனை ரகுராமர் தற்காக்கவேணுமென்று
மரணமடையாமலொருகன்னை வாங்கிவிட்டாரோ ௨

பின்னைபுரியில்லாமல் ரகுராமர் வெகுகாலந்தவமிருந்தார் இப்போ
என்னையுமுடனேபோதே வனத்தினிற்போவென்றுதள்ளிவிட்டார் ௩

[illegible]ல்லைபும்துதிசெய் ரகுராமர் எங்கும்பறந்தஜோதி
[illegible]தி னில்லாதுயரம் என்னைப்போலெவருதனரினரோ ௪

[illegible]தயறியாமல் நான்பாவி சொன்னேனொருசோடியென்றன்
[illegible]றுக்கறியாமல் ரகுராமர் வனத்தனிற்தள்ளிவிட்டார் ௫

[illegible] முசலைப்பான் என்னைவனம் போகவேண்டாமென்றாள் அவரை
சொல்லைத்தடுத்துவிட்டு வனம்பார்க்கத்தூரமேவைத்தாரேயா ௬

பாதகத்துக்கருடனே நாளும் பட்சமாய்சொல்லிவைத்தேன்
பாதகத்துக்கருடன் என்மீதிற் பட்சம்வைத்திருப்பார்களே ௭

பழுதேன்ற இனிமேல ரகுராமர் பரிவாயிருக்கையிலே
அஞ்சலிசெய்துக்கொண்டு ரகுராமர் அடைக்கலஞ்செய்துதந்தார் ௮

சீதை லட்சுமணருக்குச்சொல் [illegible].

கருணைசேர்ராமபத்ரா கட்டுகுறைமறந்திட்டாரோ
வருவதுமுன்புநாளு மாதவர்குறைசெய்தேனே
இருவருமிழ்ச்சியாக பிரிந்துபோவதைகிலோட்ட
குருவரும்பருபதாலோ கொடியபாதகஞ்செய்தேனோ

வசனம்.

அயோ நான் தம்பி லட்சுமணா ரகுநாயகர் கிருபாகடாட்சமில்லாமல் இவ்வனத்தில் விடச்சொன்னது நான்முன்புசெய்த [illegible]யோ அல்லது ருகடாட்சமோ நான்செய்த பாவமோ என்னை யிப்படி மோசஞ்செய்யலாமோ தம்பிலட்சுமணா

சீதைக்கும் லட்சுமணருக்கும் தர்க்கம் கண்ணிகள்

இ-ம் எதுகுலகாம்போதி மிசுரதாளம்

லட்சுமணர்சொல்லல்

எப்படிச்சொல்லுவேனடா என்னம்மா என்மனம்யான் துணிந்து
உன்னைக்கைப்பிடியாக அண்ணருன்னைக்காட்டில்விடச்சொன்னார்

சீதைசொல்லல்

[illegible]விட்டோ என்னை அரக்கரைக்கண்டித்துசிறைமீட்டு [illegible]
[illegible]மாலைத்தின்னைத் தள்ளிவிட்டாரே

லட்சுமணர்சொல்லல்

காட்டிலுள்ளோர்கள் மற்றராஜர்களோசவென்றுஉன்னை
கூட்டியென்னைத்தொடர்ந்து இந்தக்கோலவனம்விடச்சொன்னார்

சீதைசொல்லல்

பாரினிற்பெண்களிலே என்னைப்போல பாவியொருவரில்லை
யாராதிதியெனக்குஐயோ வருந்தேயென்னசெய்வேன்

சீதைசொல்கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்

என்னசெய்வேன்ராகவரே யேதுசெய்வேன்லட்சுமணரே
மன்னவர்தன்னைக்காணேன் வண்மைசேரயோத்திகாணேன்
என்னுடையமாமிகாணே னினிமையுள்ளபரதர்காணேன்
உன்னிபகுருவஸிஷ்ட ரொருவரையுங்காண்கிலனே
பொன்னுமணியாசனத்தைப் புகழுநாங்காண்பதென்றோ
கன்னியர்கள்சேடிகாணேன் கானகத்திலாருங்காணேன்
உன்னிதமாம்சாரிபோற ருசுகக்கண்டிலேனே
என்னுடையநெஞ்சுதானும் இரும்பினுல்வகுத்ததன்றோ
மன்னனைமறந்துநானும் மடியவோயிங்குவந்தேன்
நன்மைபோவனத்திலிட ஞாயமோகாண்மைத்துனரோ
என்னவானமேனியெல்லாங் கருகிடுதுபாருமையா
மன்னரகுராமர்சொன்ன வார்த்தையைத்தவறிடாமல்
என்னையிந்தக்காட்டில்விட்டீ ரிளையவரோயென்னசெய்வேன்

சீதை-லட்சுமணருக்குச்சொல்-இபிதை.

தவமதுசெய்தகெற்பந் தரித்ததோராறுமாதம்
பவமதிமயக்காற்காடு பார்க்கவேவந்தேனையா
கவலையிலண்ணன்சொல்லைக் கருதிநீர்தயையில்லாமல்
அவலமாய்வனத்திலோட்ட வடுக்குமோவிளையகோவே

வசனம்,

அகோவாருந்தம்பிலட்சுமணு என்வயிற்றில் ஆறுமாதத்திபிள்ளைப்பாக்கியமிருக்க நான்மதிமயக்கமாய் வனம்பார்க்கவந்தேன் உங்கள்தமையனார் வார்த்தையைத்தள்ளாமல் நீர்தான் என்மையாய் மனம்வந்து காட்டில்விட்டுப் போரீராயா லட்சுமணு.

சீதைக்கும்-லட்சுமணருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்-இ-ம்-ஜம்பை

சீதைசொல்லல்

என்னசெய்வேன்மைத்துனரே யேதுசெய்வேன்லட்சுமணரே
என்னையிந்தக்காட்டில்விட்டு பேகுரீரோலவயா

லட்சுமணர்சொல்லல்

என்னசென்றுசொன்னீரம்மா யிப்படியுஞ்சொல்லீரோ
மன்னவர்க்குவார்த்தைநிக ழ்ந்திருஞ்சொன்னேன்

சீதைசொல்லல்

உன்னிதமாய்ராமருக்கு மொருகுறையுஞ்செய்தறியேன்
அன்னிதமாய்காட்டில்விட்டா ரலையவிதியாச்சே

லட்சுமணர்சொல்லல்

அலையவேவிதியென்ன அஞ்சிடவேண்டாமம்மா
நிலையுடனேமுனிவர்வந்து நிறுத்துவார்துயரம்

சீதைசொல்லல்

செந்தணலிற்புகுந்தியானும் வந்ததுவுங்கண்டிருந்துஞ்
சந்தேகமாகினரோ சதிர்புனையும்ராமர்

லட்சுமணர்சொல்லல்

சதிர்புனையும்ராமரென்னைத் தயவதாய்வரவழைத்து
அதிதுரையாய்வனத்தில்விட்டு அயோத்திவரச்சொன்னார்

சீதைசொல்லல்

மைந்தனைநான்பெற்றபின்பு வனந்தனிலோட்டொணுதோ
சிந்தைமிகத்தளர்ந்தியானுந் திகைக்கிறேனேஐயா

லட்சுமணர்சொல்லல்

திகைத்திடவேண்டாமம்மா தேவரருளாலே
மகத்வமுள்ளரிஷிகள்வந்து மாற்றுவார்துயரை

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

ஐயனேமுன்னிருந்த அருஞ்சிறையும்போதாமல்
வையகத்தோரேயிப்போ வனத்தினில்விடச்சொன்னாரோ
உய்யுமியல்யறியா துதித்தகர்ப்பபாக்கியத்தைச்
செய்யனேயுந்தன் றிருக்கண்ணாற்பாருமையா

வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணா நான்பெண்பிறந்தது எனக்குப் போதும் முன்புலங்கையிற் சிறையிருந்தேன் இப்போது உங்களண்ணர் ரகுநாயகர் வார்த்தையைத் தள்ளப்போகாதென்று வனத்தில் விட்டுப்போறீரோ என்வயிற்றிலிருக்கும் கெர்ப்பபாக்கியத்தைப் பாருந்தம்பிலட்சுமணா.

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-கொச்சகம்

ஐயையோயிப்பழியை அண்ணையேதொலைக்கவென்றால்
வையகந்தன்னிலிந்த வார்த்தையோவ்வாதுகண்டாய்
செய்வதொன்றில்லையையோ சினனையும்போக்குவேனுன்
வையகந்தனையாள்ராமர் வனத்தினில்வாழ்குவரோ

வசனம்

அகோவாருமம்மா சீதாய் இப்பேர்ப்பட்ட வார்த்தையை நீசொல்லலாமோ உன்வயிற்றின்கெற்பத்தை நான்பார்ப்பேனோ என்னசெய்யப்போறேனம்மா மதனி.

லட்சுமணர்-பிரலாபக்கண்ணிகள்-இ-ம்-பைரவி-சாபுதாளம்

ஏதுகாரணத்தினாலே யிவ்வசனஞ்சேழ்க்கலானேன்
இங்கப்பழிக்காளாகினேன் அரிகரிராமச்சந்திரா
பாதகனாகிவிட்டேன் பரதனைப்போலொளியாமல்
பரதேசியாகினேன் அரிகரிராமச்சந்திரா
சிதான்செய்வகையினாற் சிவனைவிடவுநன்று
யேதுதான்செய்வேனையா அரிகரிராமச்சந்திரா
இளங்கொடிசிதையாரோ யெந்தனுக்குஇந்தப்பாவம்
வந்திடுமென்றறியேனையா அரிகரிராமச்சந்திரா
சிந்தையில்நினைந்துசொல்ல திருமோபழிபாவங்கள்
விந்தையாகவந்துடைதயோ அரிகரிராமச்சந்திரா
நிந்தனையாயிந்தவார்த்தை யெந்தனுக்குநீர்சொல்லவும்
உந்தன்மனதுமிசைந்ததோதான் அரிகரிராமச்சந்திரா

லட்சுமணர்-சிதைக்குச்சொல்-திபிதை.

ஏனம்மாஉந்தன்சிந்தைக் கித்தனை துயரம்வேண்டாம்
கானகம்வந்தோமென்று கருத்தினிலஞ்சவேண்டாம்
வானவரிஷிகளானோர் வந்துமே துணையேசெய்வார்
நானுமே அயோத்திக்கேக நன்மையாய்வாக்குதாராய்

வசனம்

அகோவாருமம்மாசிதாய் இந்தவனத்தில் வந்தோமென்று நீதாபந் தீரியப்படவேண்டாம் உனக்கு இவ்வனத்தில் தேவரிசிகள்வந்துதுணை செய்வார்கள் நான்அயோத்திபோய்ச் சேருவதற்குச் சந்தோஷமாகச் செலவுகொடுமம்மா மதனி

சிதை-லட்சுமணருக்குச்சொல்-திபிதை

உந்தனைவெறுப்பதேனோ உலகமேயாண்டவர்தன்னை
சிந்தையில்நினைத்துக்கொண்டு திமெழுகாவசல்லால்
எந்தலைவிதியேயல்லா லெவனையும்வெறுப்பதேனோ
நிந்தனையானேனென்று நீரதற்கென்னசெய்வீர்

வசனம்

அகோவாருந்தம்பி லட்சுமணா என்றலைவிதி யிப்படியிருந்தால்ள வனையும் மனம்நோகப்போகாது ரகுநாயகனை என்றைக்குக் காணப் போகிறேன் தம்பிமைத்துனா

சிதைபிரலாபக்கண்ணிகள்-இ-ம்-செண்டா-அடதாளம்

பொல்லாத்தாடகைபுஜபலர்தன்னையேராமராமா உந்தன்
வில்லாற்செயித்தோனேமீண்டுங்காண்பதெப்போராமராமா
எல்லையில்லாருவருமெதிரில்லையென்றீரேராமராமா என்னை
கல்லமணஞ்செய்துசம்பிக்கைதந்தீரேராமராமா

ஐயோதம்பி அயோத்தியில்வந்தோமோ ராமராமா ஐயோ
அன்றுமிதிலைதனிலென்னை அருமணஞ்செய்தீரோ ராமராமா

அகலிகைபாணகல்லைப்பெண்ணாக்கிவைத்தீரோ ராமராமா
வல்லமைபோலமனதுருகினீரோ ராமராமா

வையகம்புகழ்கின்ற அயோத்தியில்வாழ்ந்தீரோ ராமராமா வை
எல்லோரையும்போலவேயிப்படிவாழ்ந்தீரோ ராமராமா

மாமிசொல்லாற்காட்டில் தம்பியுடன்போனீரோ ராமராமா அன்று
மாரீசன்வனந்தனில்மானாகவந்தானோ ராமராமா

பொன்னிறமானைப்பிடியென்றுசொன்னேனோ ராமராமா ஐயோ
வந்தமானைத்தேடிவனந்தனிற்போனீரோ ராமராமா

அன்றுராவணன்கையிலகப்பட்டசிறைபோனேன் ராமராமா இன்
இன்றுகாட்டில்விடவெந்தன்விதிப்படியோ ராமராமா

விமலர்பாதந்தன்னைவிட்டுவிட்டுக்காட்டில்வந்தேன் ராமராமா அந்த
கமலபொற்பாதத்தைக்காண்பதென்றைக்கையோ ராமராமா

சிதைசொல்-சிசபத்தியம்-இ-ம்-புன்னாகவராளி

ஓகோலட்சுமணா உமக்கிது ஞாயமோ
ஒவ்வுமோவும்மிடமனதுதானும்
வேகுதேயென்மனம்விகற்பங்களாகுதே
யென்னகாரணமோவென்கர்மந்தானோ
ஜனகன்றன்வயிற்றினிற்பிறந்ததோஷமோதான்
தசரதன்மகனுக்குவாய்த்தசனனமோதான்
அகலவண்ணான்சொல்புதுமைகேட்டு
அழைத்துவந்துவிடலாமோலட்சுமணா

சிதைசொல்-கண்ணிகள்-இ-ம-காம்போதி-ஆதிதாளம்

பெண்பாவமென்றிதையெண்ணாமல்ராமரென்னைப்
புண்போலேமனம்நோகச்செய்தாரோ
இல்லறத்திருந்தவென்னைலட்சுமணா நீதான்
இடந்தனில்விட்டுப்போறீரோ
எல்லோரையும்போலவாழ்ந்திருப்போமென்று
எண்ணினதுகனவாய்முடிந்ததையோ
கோட்டைக்குள்ளேயுலகிற்பழிக்கச்சொல்லிராமர்
கேட்டவுடன்வனத்தில்தான்விடவும்
காட்டிலேகீர்த்திபெற்றமைத்துனாநீயிக்
காட்டிலென்னைவிட்டுப்போறீரோ
பேருலகில்தவங்கோடிபெத்தார்பிள்ளை
பெற்றபின்புகாட்டில்விடலாகுமோ
காருள்ளவனந்தனில்விட்டுவந்தேனென்று
கவுசலைதேவியார்க்குச்சொல்லுமையா

தாரணிபுகழயோத்திராமருக்குஞ்சீதை
 தாரம்பணிந்தாளென்றுசொல்லுந்தம்பி
சீராரிபரதசத்துருக்கருக்குமிந்தச்
 சேதியெல்லாந்தெரியச்சொல்லுமையா
ஐயர்குருவசிஷ்டமாமுனிக்குஞ்சீதை
 அடிதொழுதாளென்றுசொல்லுந்தம்பி
அந்தகன்றுமுகனையுமோர்சாம்புகர்க்கும்
 ஆசிரத்தெண்டஞ்சொல்லுந்தம்பிலட்சுமணரே

சீதை-லட்சுமணருக்குச்சொல்விருத்தம்.

பூமியிற்பிறந்தவெந்தன் பெண்வதைதன்னைக்கொண்டு
ராமருமென்மையோக்கி கருத்துடன்கடிகத்து
தாமிகமாயிற்றென்று சந்திரிறகோபங்கொள்வார்
போமினிபிழையகேர்வே பூபதிஅயோத்திநடே

வசனம்.

அகோவாருந்தம்பிலட்சுமணா பூமியில் நான்பெண்பிறந்தது எனக்குப்போதும் என்தலைவிதி யிட்டபடியிருந்தது நானென்னசெய்யப்போகிறன் உங்கள்தமையனாகிய ரகுநாயகர் இந்தோமென்னென்று உயதுபேரிற் கோபங்கொள்ளப்போகிறார் நீரயோத்திபோய்ச்சேரும் தம்பிலட்சுமணா

பொதுவிருத்தம்.

இடுக்கெனவெழுந்திருந்து சீதையைத்திரும்பிப்பார்த்து
சடுக்கெனவனப்பைவிதான் சலித்தவர்மனதுநொந்து
முடுக்கிடவேநடந்து மொய்குழற்சீதைதன்னை
அடிக்கடிதிரும்பிநின்று அயோதிக்குப்போகின்றாரே

பொது-வசனம்.

அகோவிதப்படியென்றால் அந்தசமையத்தில் சீதாலட்சுமி அனுப்பிவைக்க லட்சுமணரானவரெழுந்திருந்து நின்று சாணம்பண்ணிக்கொண்டு சீதாக்கனியைப்பார்த்து துயரப்பட்டுக்கொண்டு அயோத்திக்குப்போகிற விதந்தான்காண்க

கண்ணிகள்-இ-ம்-கண்டா-ஆதிதாளம்

அண்ணிசீதையைவிட்டு என்னமாய்மனந்துணிந்தேன் — ருரு
அன்னைபெண்ணைசீதைபார்த்து ஆதரவுதருவருண்டோ — ருரு
பாதகனைவிட்டேன் பாதகனைப்போலொளித்திடாமல் — ருரு
மாலைப்புமுலசாதப்பகைந்துகையோகிரோகமெல்லாம் — ருரு
அந்தகாமன்பார்த்தையன்புடனேதந்திடாமல் — ருரு
[illegible] கோதையைவிட்டுத்துணிந்தேன் — ருரு
[illegible] — ருரு
[illegible] — ருரு

இதுவும் லட்சுமணர்-பிரலாபிக்கிற-தரு-இ-ம்
எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

வனதேவதைகளே ரட்சியுங்களம்மா
வனதேவதைகளே ரட்சியுங்களம்மா

அநுபல்லவி

கனமான மிதிலையில் ஜனகன்றன் மகளான
கன்னிசீதையம்மனை நலங்கவிட்டுப்போறேன் வன

சரணங்கள்

இருளானகாட்டினிலொருவர் துணையுமில்லை
ஆநந்தியாகானகத்திலந்தரமாய்விட்டுப்போறேன் வன
அண்டரண்டபட்சிகளா அம்மனைக்காத்திடுங்கள்
வண்டார்சீதைதன்னை வனத்தில்விட்டுப்போறேன் வன
பஞ்சவர்ணக்கிளிகளா பறவையேஅன்னங்களா
அஞ்சாமல்கானகத்திலந்தரமாய்விட்டுப்போறேன் வன

பொதுவசனம்.

இப்படியாக லட்சுமணப்பெருமாள் சொல்லிக்கொண்டிருக்குந்தருணத்தில் சீதையானவள் லட்சுமணரைக் காணாமற் போகிறவனைப்பார்த்துச்சொல்லுகிற விதங்காண்க

சீதைசொல்-கொச்சகம்

மனதுமிகநொந்து மனக்குறைகடன்னுடனே
வனமாகவேசீதை யெடுத்துரைப்பாளிடங்களிலே
எனையிவ்வாறாய்மிருகங்களுக் கெழுதினீரோபிரலாபி
பிணமாகவேநானும் பெண்பிறந்தேனேபாவி

சீதைசொல் பத்தியம் இ-ம்-கண்ட ா

ஓகோலட்சுமணா வுமக்கிதுநாயமோ
போகுதேவும்முடைய புத்திதானோ
வேகுதேயென்மனம் மிகவுவிகற்பங்க
ளாகுதேபிரலாபி யிப்படிவிதித்ததோதான்
சாகிறபேய்போலே தயங்குதேயென்மனம்
தனித்துஇப்படிகாட்டி லிருப்பதேனோ
பூமிதனிற்பெண்ணாகப் பிறந்ததேதோ
புவிஜனகராஜனென்னை யெடுத்துவளர்த்ததேதோ
ராமர்கையிலென்னைக் கொடுத்ததென்னைபோதோ
ராவணன்சிறையெடுத்துப் போனதுண்மை
மாயமாயாக்குல மாண்டதேதோ

சாகிறபேர்போலே தயங்குதேயென்மனம்
தளித்துயிப்படிகாட்டி யிருப்பதேனோ
பூமிதனிற்பெண்ணாகப் பிறந்ததேதோ
புவிஜனகராசனெனை யெடுத்துவளர்த்ததேதோ
ராவணன்சிறையெடுத்துப் போனதுஉண்மை
மாயமாயரக்கர்குலமாண்டதேதோ
மதியிலங்கைவிபீஷணர்க்குவந்ததேதோ
ராமருடனயோத்தியினில் வாய்த்ததேகோ
ரசகனால்வந்ததல்லோ இந்தகூது

பொதுவசனம்

இந்தப்படியாகச்சிதை வனத்திலண்டியாய் இரவிக்ருணமற்புலம்புகிறபோது லட்சுமணர் அயோத்தியைநோக்கி வருகையில் ரகுநாயகர் லட்சுமணர் வரவில்லையென்று அனுமாருடன்சொல்லித் துயரப்படுகிறவிதங்காண்க

ஸ்ரீராமர் அனுமாருடன் துயரப்படுகிற கண்ணிகள்

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

என்னதான்செய்வேனடா — அனுமானே-தம்பி
இந்நகர்வரக்காணேனே — அனுமானே
வர்ணமானமேனியாளை — அனுமானே-தம்பி
வனத்தில்விடப்போனவனை — அனுமானே
என்னகாரணமோதான் — அனுமானே-தம்பி
யின்னம்வரக்காணேனே — அனுமானே
பத்தினிசிதையாளை — அனுமானே-தம்பி
பாங்குடன்கொண்டுசென்றான் — அனுமானே
சித்தத்திலேகோபமாகி — அனுமானே-தம்பி
சினங்கொண்டுசபித்தாளோ — அனுமானே
கன்னிகைசிதையாளும் — அனுமானே-தம்பி
காட்டிற்புலம்பிடவே — அனுமானே
இந்நகர்வாராமலே — அனுமானே-தம்பி
யெங்கேயிருக்கின்றானோ — அனுமானே
காட்டில்விடப்போனதொரு — அனுமானே-தம்பி
காளையைக்காணேனிப்போ — அனுமானே
தாவ்நாடகமாநீயோடி — அனுமானே-தம்பி
தம்பியைப்பார்த்துவாடா — அனுமானே

பொது[illegible]

சொன்னசொல்லதனைக்கேட்டு சுருக்கினில்லுமார்தானும்
[illegible]விட்டு பெழும்பி[illegible]காயத்தில்

மன்னவரிலேயகோவும் மருவிறைவேகக்கண்டு
மன்னவர்க்கதிக்கையிட்டு மகிழ்வுகொண்டிருந்தாரங்கே

வசனம்.

அகோதெப்படியென்றால் அந்தச்சமயத்தில் ஜனபாரபார்த்து லட்சுமணர் ருகொசேதிசொல்ல லட்சுமணர்வந்து ரகுநாயகருக்குச்சரணஞ்செய்து சொல்லுகிற விதக்காண்க

லட்சுமணர் ஸ்ரீராமருக்குச்சொல்லிதை

கட்டளைப்படிக்குநானுங் காரிஷமுகிஷை தன்னை
வட்டமாங்கோரிசேறி வனத்திலே கொண்டுசென்று
சட்டமாய்த்தேவர்காணச் செஜகத்திலுள்ளோர்பார்க்க
இஷ்டமாய்விட்டுவந்தேனினி [illegible]

வசனம்

அகோவாருமையாசுவாமி தங்களுத்தாரப்படிக்கு [illegible] மசிதாலட்சுமியை வனத்தில்விட்டு வந்தேன் சுவாமி

ஸ்ரீராமர்சொல் பத்தியம்-இ-ம்-கண்டா

தம்பிநானென்னசெய்வேன் ஜானகிதன்னையே
நம்பினானிருந்தேனே கஷ்டஞ்செய்தாய்
துன்மையாய்மனதிலே துயரமாயிருப்பாளோ
அஞ்சலுஞ்செய்வாளோசிதைமாது
வம்பிறல்ரசகன்சொல் வார்த்தையால்நானுமே
மன்னவிலைகாட்டினில் விடவுஞ்சொன்னேன்
கொம்புபோற்கருகியே கோதையாள்சிதையுங்
கொலைகளும்நடுங்கியேயுருகிறாளோ
என்னகாலிருந்துமேவருகிறாளோ
மன்னனைத்துர்ஷித்து வருந்தினளோ
அன்னநடையாளவள் மனக்கலங்கினளோ
மின்னற்கொடியாளவ ளென்னசொன்னாள்

ஸ்ரீராமர்சொல்-தரு-இ-ம்-நாதாமக்கிரியை-அடதாளம்

பல்லவி

என்னசொன்னாள்தம்பி லட்சுமணாசிதை ஏதுசொன்னாள்தம்பி

அநுபல்லவி

என்னசொன்னாள்தம்பி யெனதுஜானகிதானும்
சொன்னவசனந்தனைச் சுகமாய்ச்சொல்லுந்தம்பி (என்ன)

சரணங்கள்

வாரணவில்லைவளைத்து மணமுடிப்புணர்ந்தபோது
நம்பி [illegible] சொன்னேனென்று நயந்துசொன்னாளோதம்பி (என்ன)
சிந்தைமகிழக்கலக்க [illegible] மெத்தவும்நொந்து
பேச [illegible] சென்றாளோதம்பி (என்ன)
கடுமாவனத்தினிற் கானிசிதையாரும்
கதறியே துயங்கிக் கலங்கினாளோதம்பி (என்ன)

ஆருமற்றபாவியனுகிப்போனேனென்று
தோழரென்றுயரத்தைத்தீர்ப்பவரில்லையென்று என்ன

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-தரு-பியாகல்-ஆதிதாளம்.

பல்லவி.

பதைக்குதண்ணு மனம் பதைக்குதண்ணுசொல்ல
துடிக்குதண்ணு நெஞ்சு நடுக்குதண்ணு பதை

சரணங்கள்.

வைதேகியாகுநீ தேகந்தக் கோதையைவிட்டபின்பு
தைபடுந்துயரம் ஆதிபேசொல்லமாட்டான் பதை
என்னினிற்காண்பதெப்போ என்தாயார்சிதைதன்னை
... காவனத்தில் ... ச்சொன்னீர் பதை
... தாகமாயென்றுயாரும்
... வீட்டுக்குப்போம் ...யென்ருள் பதை
... யிஷ்டமாய்விடச்சொன்னீரே
... வோட்டில்விட்டு சட்டமாய்வந்தோமென்று பதை

லட்சுமணர் ஸ்ரீராமருக்குச்சொல்விருத்தம்.

என்னென்றுசொல்வேனண்ணு வென்மனம்பதைக்குதிப்போ
அன்னமாஞ்சிதையாளை அடவியில்விட்டபோது
தன்விதிதன்னைநொந்து சாமிக்கோர்சரணமென்று
என்னையேபோகுமென்று பேசியேபுலம்புகின்ருள்

வசனம்.

அகோ! கேளும் அண்ணுவே காட்டில்விட்ட மாத்திரத்தில் பயன
... சுவாமீர்பாதத்திற்கும வசிஷ்டருக்கும் மாமிமார் மூவருக்கும்ச
ரணஞ் சொல்லச்சொல்லி என்னை போகும்படியாய்ச் செலவுகொடுத்
தாள் சுவாமி

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணு சிதையென்னமா யிருக்கிருளோ
எனக்குத் தெரியச்சொல்லுந்தம்பி லட்சுமணு

லட்சுமணா-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி மிகவும் விசனத்துடன் மனம்நொந்திருக்கி
ருள் சுவாமி.

ஸ்ரீராமர்-பிரலாபிக்கிற-தரு-இ-ம்-ஆகிரி-அட-தாளம்

பல்லவி.

மனநுமிகநொந்தாளோ வென்ஜானகி மனநுமிகநொந்தாளோ

அநுபல்லவி.

மனநுமிகநொந்தாளோ மங்கையாள்சிதையும்
அங்கமறுக்கவேணும் அடவியில்விட்டேனென்று மனநு

சரணங்கள்.

என் ... வோ வெனநுஜானகிசிதா
... உபிர்விடுவெனென்ருளோ! மனநு

விந்தையோவென்றவள் சிந்தையில்நைந்திட
அந்தகாரமான அடவிதனிலேயவள் — மனது

மாதுசீதையாளை மணமும்புணர்ந்தபோது
வாதுசொன்னராமர் வார்த்தைதப்பிறென்று — மனது

ஆதியிற்கௌசிகர் அடவுடன்கூடவே
மேதினியில்நடந்துமிதுலைசென்றோமென்று — மனது

இதுவும் ஸ்ரீராமர்சொல்-காம்போதி-இ-ம்-ஆதிதாளம்

பல்லவி.

ஜானகிபெண்ணே ஜானகிநாயகி நானென்னசெய்குவேனடி

சரணங்கள்.

கன்னலேபணி பொன்னலேஅடி
அன்னமேயுனைப்பிரிந்தேனடி — ஜானகி
மருவியசுகந்தருவையே அடி
அருவையுன்னைமறந்தேனடி — ஜானகி
காட்டிவிருப்பையோஉயிர்தரிப்பையோஇனி
யெப்பிறப்பில்நானுன்னைக்காண்பேனடி — ஜானகி
போதும்போதும்போதும்போதும்நீ
பெண்பிறந்துபட்டதொல்லைகள் — ஜானகி

பின்னும்-ஸ்ரீராமர்-பிரலாபிக்கிற-கண்ணிகள்-இ-ம்

எதுகுலகாம்போதி ஆதிதாளம்

கற்புடையசீதைதன்னை தம்பி — அடாதம்பி
காட்டில்விட்டுவந்தபோது தம்பி — அடாதம்பி
அங்கழுருகினாளோ தம்பி — அடாதம்பி
ஆவிதடுமாறினாளோ தம்பி — அடாதம்பி
கன்னிப்பெண்ஜானகியாள்தம்பி — அடாதம்பி
கதறிப்புலம்புவாளோ தம்பி — அடாதம்பி
பொன்மணியாள்சீதையாருந்தம்பி — அடாதம்பி
புலம்பித்தவிக்கிறாளோதம்பி — அடாதம்பி
மாதுபெண்ஜானகியாள்தம்பி — அடாதம்பி
மனமுருகிவாடுறாளோதம்பி — அடாதம்பி
நீதிநெறிபறிந்ததம்பி — அடாதம்பி
நிந்தனைச்செய்தாளே தம்பி — அடாதம்பி
மாதுகுணம்வந்துதோடாதம்பி — அடாதம்பி
வேறுபடச்செய்தாளோதம்பி — அடாதம்பி

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-த்விபதை.

என்னநான்செய்வேன்தம்பி பேசுநிறைப்பவனுக்காக
இம்மிகுந்தவனிலுள்ளோர் யாவருநகைத்திட்டாரோ

மின்னலாஞ்சிதையாளை வெகுதுயரத்தில்விட்டேன்
வன்னமாமலக்ஷ்மணா நீ வனவினிற்செல்லுவாயே

வசனம்.

அதோவாருந்தம்பி லட்சுமணா லோகசிநேகிதனை ஒருத்தரும் நிறுத்தக்கூடாது பூரணம் பெரிதேயல்லாமல் சிறிதுபெரிதல்ல நீஅந்தப்புரம்போம் தம்பிலட்சுமணா

பொதுதிபிதை

போனவர்தமையேநோக்கிப் புரிகுழற்சிதையாளும்
கானகஞ்சென்றபின்பு கண்கள்நீராறுபாய
மாநிலந்தனில்விழுந்து மயங்கியேமூர்ச்சையாகி
வானவர்முனிவரெல்லாம் வந்துமேபார்த்திருந்தார்

பொது-வசனம் அந்தச்சமயத்திற் சீதாதேவி அயோத்தியைநோக்கிப்போகிற லட்சுமணப்பெருமாளைப்பார்த்து மூர்ச்சையாகி பூமியில்விழுந்ததைத் தேவஸ்திரீகளும் தேவர்களும் ஆகாயத்தில் நின்றுபார்த்து அவர்களும் விசனமடைய அப்போது சிதை மூர்ச்சைதெளிந்து புலம்புகிற விதங்காண்க.

சிதை-பிரலாபிக்கிற-கண்ணிகள்-இ-ம்-கண்டா-மிசுரதாளம்.

என்னசெய்வேன்மைத்துனரே யேதுசெய்வேன்லட்சுமணரே
லட்சுமணா தம்பி மைத்துனா
என்னையிந்தக்காட்டில்விட்டு யேகினீரோமைத்துனரே
லட்சுமணா தம்பி மைத்துனா
வன்னமதில்சூழயோத்தி மாநகர்க்குச்சென்றீராயா
லட்சுமணா தம்பி மைத்துனா
வன்னமானதேரிலேற்றி வனந்தனிலேகொண்டுவந்து
லட்சுமணா தம்பி மைத்துனா
இவ்வனத்திலென்னைவிட்டு யெவ்வனத்திற்போனீராயா
லட்சுமணா தம்பி மைத்துனா
சொன்னதொருராயர்வார்த்தை துடிக்குடனே தள்ளாமல்
லட்சுமணா தம்பி மைத்துனா
என்னைநீயிவ்வனத்தில் விளையவரோவிட்டுப்போறீர்
லட்சுமணா தம்பி மைத்துனா
விவேகமில்லாதென்னையிங்கே விட்டுநீர்போகுவீரா
லட்சுமணா தம்பி மைத்துனா
நலமுடனேகாட்டில்விட நன்மையோயுங்களுக்கு
லட்சுமணா தம்பி மைத்துனா
என்னசெய்வேன்லட்சுமணரோ யிவ்வனத்தில்விட்டுபோநீர்
லட்சுமணா தம்பி மைத்துனா
வன்னமதில்சூழயோத்தி மாநகர்க்குப்போனீராயா
லட்சுமணா தம்பி மைத்துனா

கோசலைகழுசல்யாள்தேவி சுமித்திரைகைகேசியாளும்
லட்சுமணா தம்பி மைத்துனா
ஜெகம்புகழுமாமிமார்கள் செய்தியுமறிகிலாரோ
லட்சுமணா தம்பி மைத்துனா
பரிவுடனிருந்தவென்னைப் பாவிதேசிபோலாக்கிவிட்டீர்
லட்சுமணா தம்பி மைத்துனா
ஒருவருந்துணையில்லாதேனை யுபாயமுமறிகிலேனே
லட்சுமணா தம்பி மைத்துனா
எரியுதையாவயிறுபற்றி யென்செல்வேன்ரகுநாதா
லட்சுமணா தம்பி மைத்துனா
ஒவ்வியவனத்திலென்னை யுமையாய்விட்டுத்துணிந்தீர்
லட்சுமணா தம்பி மைத்துனா
பாவியையபுதுவனமதால் கேவியமுனிபோடாயல்
லட்சுமணா தம்பி மைத்துனா
பாரவனந்தன்னிலென்னைப் பதைக்கவிட்டுப்போனீரையோ
லட்சுமணா தம்பி மைத்துனா.

சீதைசொல்விருத்தம்

அருவனந்தன்னில்விட்டு அலையவேசெய்தராமா
கருணைதான்றப்பினீரோ கர்ப்பிணியிதியின்வாறே
மருமணஞ்செய்யும்போது வந்திடும்பெரியோரெல்லாம்
இருந்தரம்வனத்திற்போவா யென்றுமேயுரைத்திட்டாரோ

வசனம்.

ஐயையோ ரகுநாயகரே என்பேரிற் கருணைதப்பினீரோ ஆதியி லே கலியாணஞ் செய்கிறபோது பெரியோர்களெல்லாம இரண்டுதர ம் வனம்போவாயென்று வாழ்த்தினரோ ஐயையோ நானும்மைவிட்டு யெப்படி பிரிந்திருப்பேன் சுவாமி

சீதைபிரலாபிக்கிற-கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்

அடர்ந்தமாமண்டபமும் அரிவையர்கள்காணேனையோ
கோடைமழுமலைபான்பாங்கி கூட்டமுங்காணேனையோ

பட்டணத்துராஜதேவி பாங்கியருங்காணேனையோ
கிட்டநின்றுவார்த்தைசொல்லுங் கிளிமொழியைக்காணேனையோ

நாதிதானுஞ்சலியாதோ யிந்தவதிதவார்த்தைகேட்டு
காதுதானுஞ்சலியாதோயிப்போ கண்டி[illegible]கைபாரோ

சின்னவபதிலென்னைச் சனகராசன்பட்டணத்தில்
பன்னவில்லைத்தாண்டி[illegible] வந்துநீரும்யாலேயிட்டீர்

என்னையிதுகாரணமோ யென்னுடையபதியினையோ
என்னையிந்தக்காட்டில்விட்டு யேகினீரோ ஆயோத்தியில்

சீதை சொல்-கொச்சகம்

மன்னன்ரகுபதிதன் வார்த்தைதனைத்தள்ளாமல்
என்னையிந்தக்காட்டில்விட்டு யேகினீரோமைத்துனரே
பின்னையொருவரில்லை புலிகள்சிங்கம்வாழிடத்தே
என்மனந்துணிந்து யிருப்பதுணிவிலையவரே

வசனம்

நம்பிமைத்துனரே உங்களண்ணன் வார்த்தையைத் தள்ளாமல் என்னை யிந்தவனத்தில் மிருகஜாதிகள் வாழப்பட்ட யிடமென்றறிந்தும் இராகாமல் இருள்சூழ்ந்து கொண்டிருக்கிற வனத்தில்விட்டுப்போக மனம்வந்ததல்லவா இந்தவனத்திலே நான்என்னமாகயிருக்கப்போகிறேன் ராகவா

சீதைசொல்-பிரலாபககண்ணிகள்-இ-ம்-கண்டா-அடதாளம்

உந்தனுக்கொருகுற்றம் ஒருநாளுஞ்செய்ததில்லை ராமராமா-இப்போ
எந்தவிதிற்குற்றமென்றறியேனே ராமராமா
எந்நாளுமுந்தனிணையடிமறவேனே ராமராமா-இப்போ
வந்துதீருமெந்தன்மனத்துயரந்தன்னை ராமராமா
உந்தனிருபதத்தையொருநாளுமறவேனே ராமராமா-இப்போ
பெந்தன்மாமியாரையொருநாளுமறவேனே ராமராமா
மைந்தனில்லையென்றுமாதவஞ்செய்தீரோ ராமராமா-அந்த
மைந்தனுடனென்னைவனதத்தில்விட்டீரோ ராமராமா
மைந்தருண்டாச்சென்றுமனதுகளித்தேனே ராமராமா-ஐயோ
வனத்திலேவந்துநான்மனதுதளர்ந்தேனே ராமராமா
எந்தனுயிரையிவ்விடத்தில்விடுவேனோ ராமராமா-ஐயோ
சந்ததியாலேநான் சாகவுமொண்ணாதோ ராமராமா
மைந்தனுடனேவனத்தில் மடிந்தாக்கால் ராமராமா-தேவர்
சுந்தரமாகியசுவர்க்கமும்வாராதே ராமராமா

சீதைசொல்-திபதை.

என்னிடவிதியின்வன்மை யிப்படியிருந்ததையோ
மன்னவர்பதியைவிட்டு வாழ்ந்திடிருக்கவோ
பின்னிபகாடுபார்க்கப் பிரியமும்விட்டராமர்
என்னிடவுயிரையிந்த யிட்சணம்விடுவேனையா

வசனம்

ஐயோபோராகுநாயகரே என்விதி எப்படியிருந்தது இந்தவனத்தில்விட்டுறைந்து நானென்னசெய்யப்போகிறேன் என்னுயிரைமாய்த்துக்கொள்ளுகிறேனையா

சீதைபுலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-அட-தாளம்

என்னசெய்வேன்தெய்வமே இனிஎதுசெய்வேன்தெய்வமேராமா
பொன்னின்பாதந்தனக்கே என்னநான்பிழைசெய்தேன்றனையயோ
விதிதனைவிதித்ததுவோ அல்லாமல்விமலாருட்படியே
பதித்திந்தக்காட்டிலேயான் இனியாக்கித்திருக்குவேனோ

தந்தைஜனகனைவிட்டேன் எஞ்சாமிபதங்களைவிட்டேன்
எந்தன்சாமியையும்விட்டேன் காட்டிலேநின்றிப்புலம்பலுற்றேன்
பரதலட்சுமணனைவிட்டேன் இந்தபாரிலயோத்திவிட்டேன்
இரள்பதிச்சேனைவிட்டேன் எந்தன்சேடியர்தன்னைவிட்டேன்
அபையமபையபமையா இதுவேளைசாமிஅபையமையா

சீதைசொல்விருத்தம்.

ஐயையோராமாராமாபிளையோனே அம்மைத்தாயேகவுசலையே
பொய்யாமொழிசேர்பரதனே போதபாவஞ்செய்தேனோ
மெய்யாயுயிரைவிடவென்றால் வேறோர்கதியுமெனக்கில்லை
செய்யகாரியங்காணுமிது ஜெனித்தகர்ப்பந்தாமே

வசனம்

அரிகரிராகவா தம்பிமைத்துனா பாதசத்துருக்னா எஞ்சாமிமார்களே நானென்னபாவஞ்செய்தேன் இப்போது உயிரைவிட்டால் சொர்க்கப்பதவியில்லை ஆனபடியினால் நானென்னசெய்வேன் நீங்கள்செய்யாதகாரியஞ்செய்துவிட்டீர்கள் நான்பெண்ஜிவன் என்னசெய்வேன் மாமிமார்களே

சீதைசொல்விருத்தம்.

இந்தநல்வனத்தில்வாழு மியலுள்ளபட்சிகளேதான்
சொந்தமாய்வனத்திலுள்ள துஷ்டவிலங்கினங்கள்
சந்தமாய்நிறைந்தென்னோடு தனிவார்த்தைசொல்லொணாதோ
வந்தனமிகவுஞ்செய்வேன் வந்தெனைக்காத்திடீரோ

வசனம்

அரிகரி நான்பெண்ஜிவன் இந்தவனத்தில் தவிக்கிறேன் உங்களுக்குக்கொஞ்சமாகிலும் இரக்கமில்லையோ நீங்கள்வந்து என்றனைக்காக்கொணாதோ நானென்னசெய்யப்போகிறேன் பட்சிகளே

சீதைபுலம்பல்-கண்ணிகள்-இ-ம்-புகார்-ஆதிதாளம்.

பூஞ்சோலைதன்னிலிருக்கும் புள்ளிமான்பைங்கிளிகளா
சாஞ்சாயேநடக்கும் சாதகமாமன்னங்களா
பஞ்சவர்ணக்கிளிகளா பன்னகமேயிவ்வனத்தில்
சஞ்சலமில்லாமலென்னைத் தற்காத்துக்கொள்வார்களேனென்
பேதாளத்துறக்கிகளே வீரியமாங்கவரிகளே
கண்டபேரண்டங்களே காண்டாமிருகங்களே
இந்தவனத்துமத்தகமே இருக்கும்பட்சிகளே
ஸ்ரீராமர்தேவியானும் தெண்டகாவனத்தில்வந்தேன்
வந்துநீங்களெந்தனோடே வார்த்தைகள்பேசொணாதோ
இருக்கிறபட்சிகளா என்றனையுங்காத்திடீரோ
பரதசத்துருக்னா பாவியிங்கேயென்னசெய்வேன்

வனப்பதிபோகினேனே வையகத்திலென்னைப்போலே
பெண்பிறந்தபாக்கியனையோ பேருலகில்நானறியேன்
மன்னவருந்தன்னை வன்காட்டில்தவிக்கவிட்டார்
சொன்னதொருவார்த்தையெல்லாம் சொற்பனத்திலுநான்மறவேன்
என்னசெய்வேன்ரகுநாதா யேதுசெய்வேன்லட்சுமணனே
பரதசத்துருக்கனே பாவியிங்கேயென்னசெய்வேன்
மாமியாரேயென்னசெய்வேன் வாழ்வசேயேதுசெய்வேன்
ஏதுசெய்வேனென்வயிற்றில் வேதனையாய்வந்துதையோ

சீதைசொல்-கொச்சகம்

ஐயையோவென்றுயரம் ஆற்றுவாரொருவரில்லேன்
மையவேலட்சுமணரும் பதறியேகாட்டில்விட்டார்
தையலாள்நானொருத்தி தவிக்கவுநீதியுண்டோ
உம்பர்வாசிகளுக்கு உரைப்பதுவுங்கேட்கிலையோ

வ. ஐயையோ இந்தவனத்தில் தவிக்கிறேனே என்றுயரத்தை ஆற்றுவாரைக்காணேன் நான்பெண்சிவன் புலம்புகிறது தேவர்களுக்கும் ரிஷிகளுக்குங் கேழ்க்கவில்லையோ இப்படிபாதவிக்கவும் நீதியுண்டோ ராகவா

பூமிதேவிவருகிற-பொதுவிதை

பூமியிற்பிறந்தசீதை புலம்பிடும்வார்த்தைகேட்டு
தாமதமில்லாமற்றான் சடுதியிற்பூமிதேவி
காமினிலட்சுமிக்கு நலமுடனுரைக்கவென்று
வாமமாஞ்சீதைமுன்னே வந்துடன்கூறுவாளே

பூமிதேவிவருகிற தரு இ-ம் ஆசாவேரி ஆதிதாளம்

பல்லவி

வந்தாளேபூமிதேவி வனத்திற்சீதையைத்தேடி
செந்தாமரைகள்போல சிலம்புகலகலென்ன — வந்

சரணங்கள்

நெற்றியிற்றிலர்ப்பொட்டு சுற்றிலுமுக்காடிமிட்டு
உத்தமவனேகுலுங்க மெத்தனநடைநடந்து — வந்
பட்டமாமுந்துளிர்க்கப் பலமலருஞ்செழிக்க
எட்டுத்திசையுந்தொழ வென்றுய்கைமிற — வந்
என்மகளேசீதையாரேயென்னதிக்குப்புலம்புகிறாய்
நம்முளவிற்சக்திவதி முறையிடலேயோவென்று — வந்

வசனம்

ஆகோவாருமம்மா நீ இந்தவனத்திலேயென்ன காரணத்தினால் தாபந்திருப்பதினாய் சொல்லுமம்மா

சீதை-வசனம்

நானென்னவென்று சொல்லப்போகிறேனை ரகுநாயகர் கோரமாய்க்காட்டில்விட்டார் நானென்னசெய்யப்போகிறேனம்மா

பூமிதேவிவசனம்

அனைல்லென்னமாயிற்றுவிதியினுடையவன்மையானாவிட்டது சந்திரவதிபுமசமயந்தியும் வனத்திலேகாபந்திரியப்படவில்லையா நீயேன் விசாரப்படுகிறாய் உனக்குரிசிகளும்வந்துதுணைசெய்வார்கள் சும்மாயிருமம்மாசீதா நான்போய்வருகிறேனம்மா

பொதுவிருத்தம்

திருவுரைகமண்டலந்தன் டன்பலவகாந்தங்கொண்டு
பருமணிருட்திராட்சம் பன்னகீசெங்கதுன்ன
அருந்தவமுனிவரின்றே யறையும்வால்மீகர்தானும்
கருணையாஞ்சீதையக்கல் கண்டிவேயவருகுவாரே

வால்மீகர் சிசியருக்குச்சொல்வசனம்

அடாவாடாமவுனசிந்தாமணி துன்மார்க்கசிந்தாமணி நம்முடைய வனத்தில்யாரோ பெண்குரலாய்கேட்கின்றது போய்பார்த்துவருவோம் தெண்டுகமண்டலமெடுத்துக்கொண்டு வாரும்பிள்ளாய்

சிஷியர்-வால்மீகருக்குச்சொல்-வசனம். அப்படியே எடுத்துக்கொண்டோம்சுவாமி

வால்மீகர்-வருகிற-கண்ணிகள்-இ-ம்-மோகனம்-மீசுரதாளம்

திருமணிதாழ்வடமும் திருநாமமொளிவுடன்
அருவரதவமுனி தோணினார்
சடைமுடியதிரவே சாஸ்திரத்தில்வல்லமுனி
திடமுள்ளநடையுடன்முனி தோணினார்
விரித்தசடையுடனே வெண்புலித்தோல்மேலணிந்து
வருத்தமாஞ்சீதையக்கல் வந்துமேதோணினார்

வால்மிகர் சிஷர்களுக்குச்சொல் வசனம்

அடாவாடாமவுனசிந்தாமணி நாம் பூசைபண்ணவேணும் நீ நந்தவனத்திற்குப்போய் புஷ்பங்கொண்டுவாரும்பிள்ளாய் அடாதுன்மார்க்கசிந்தாமணி நீ மேலண்டவனத்திற்குப்போய் புஷ்பங்கொண்டுவாரும்பிள்ளாய அப்படியே செய்கிறோம்சுவாமி

வால்மிகர் சிதைக்குச்சொல்விருத்தம்

ஆதிலட்சுமியைப்போல வனைந்தவென்றாயேயிங்கே
சோதனைப்பார்க்கவேண்டி தாய்வனம்வந்திட்டாயோ
பாருமையாளோ நீயும் வானவர்தேவிதானோ
போதனைவிபரங்களுக்கு பொருந்துமுன்பதிகள்சொல்வாய்

வ-ம். [illegible] நீ என்னகாரணத்தினால் இந்தவனத்தில் [illegible] பார்த்தால் சூரியவம்மிசப்போற் காணுது [illegible]

லுமன்றி ஆதிலட்சுமியைப்போலுந்தோணுது சோதனைபார்க்கவந்தா யோவல்லதுஉன்பேரென்ன நீஆருடையதேவிஎனக்குத்தெரியச்சொல் லுந்தாயே

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

ஆரென்றுகேட்டீரையா அறிகிலேனும்மையாளும்
பாரினிலயோத்திபாளும் பரப்பிரமசுரூபரான
காரணதசரதன்றுக் கருத்துள்ளகுமாரனை
காரணன்றேவிநானும் களிணமாஞ்சீதையென்பேர்

வசனம். ஆகோவாருஞ்சுவாமிநான்ஜெனகராஜனுடையபெண்ணெனபேர் சீதை ரகுநாயகருடையதேவி இந்தஆரண்யத்தில்வந்து தவிக்கிறேன் தேவரீருடைய நாமதேயம் அடியாளுக்குத் தெரியச்சொல்லுஞ்சுவாமி

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபிதை.

கன்னிகைசீதையேநீ கருத்தினிலஞ்சவேண்டாம்
வன்னமாம்வனத்தில்வாழும் வால்மீகரிஷியென்பேராம்
முன்னியகாரணங்கள் முடிந்தல்லோ தீரவேணும்
என்னகாரணத்தினாலே யிவ்வனம்விட்டாரம்மா

வசனம். ஆகோவாருமம்மாசீதாய்நீமனதில்வேறொன்றும் விசாரப்பட வேண்டாம் இந்தவனத்திலிருக்கப்பட்ட வால்மீகரிஷியென்பேர்முன் னேசெய்தவிதிப்பயன் தீரவேணும்ரகுநாயகர் இந்தவனத்தில் என்ன காரணத்தினால்விட்டார் எனக்குத்தெரியச்சொல்லுமம்மாசிதாய்.

சிதைவால்மீகருச்சொல்-திபிதை.

துஷ்டனிராவணனென்னைச்சிறையில்வைத்த
தோஷத்தாலவன்குலத்தைச்சுட்டிலங்கைப்
பட்டணத்தைவிபீஷணர்க்குநல்கிநானும
பரிவுடன்தீயினிற்குளித்துப்பலரும்போற்ற
திட்டமுடனயோத்திவந்துவாழுநாளிற்
றேசத்திலேளிதஞ்செய்கிறார்களென்றே
தொட்டமுடிராமனென்னைவனத்தில்விட்டார்
சுவாமியுமைக்கண்டேனென்றுயர்விண்டேனே

வசனம். ஆகோவாருஞ்சுவாமி சண்டாளராவணன் என்னைச்சிறையெ டுத்ததற்கு அவன்குலத்தையும்அவனையுஞ்சுட்டெரித்து இலங்கையையா னவிபீஷணர்க்குப்பட்டங்கட்டிநானும் அக்கினியிற்குளித்தெழுந்து அ யோத்தியில்வந்து அரசுசெய்துவரும்காலையில் அதுகுற்றமாகஉலகத்தில்வ சைசொல்லுகிறார்களென்று ரகுநாயகர் என்னைக்காட்டில்விட்டார் இவ்வி

டத்திலான்றுபரப்பட்டுக் கொண்டிருக்கையில் தேவரீரைக்கண்டே
ன்உம்முடையபாதாரவிந்தஞ் சரணஞ்சரணஞ்சுவாமி.

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை

சீதையேயுன்வயிற்றில் திருத்தவேதரித்தகெர்ப்பம்
குசலனெச்சவேதான் புத்திரனைப்பெற்று
ஆதியாமயோத்தியெல்லாம் ஆளவேகட வீசிப்போ
நீதில்லாஆசிர்மத்திற் சிக்கிரம்வாருந்தாயே

வ-ம். எழுந்திருமம்மாசீதாய் உன்வயிற்றிற்றரித்த கெர்ப்பம்அயோத்
திபாபுரியை ஆளக்கடவதுசுகமாகயிருக்கவேணும்நம்முடையஆசிர்மத்தி
ற்குப்போவோம்வாருமம்மா

சீதைசொல்-கண்ணிகள்-எதுகுலகாம்போதி-மிசுரநாளம்.

அன்னைபிதாகுருதெய்வமுநீனாயா — முனிநாதா-இன்று
அண்டினேனும்மைஅடைக்கலங்காருமையா — முனிநாதா
முன்னேயென்னபாவஞ்செய்துபிறந்தேனோ — முனிநாதா-இந்த
வன்னக்காடுதன்னில்வந்துதவித்தேனே — முனிநாதா
தசரதராமருக்குத்தயைசற்றுமில்லாமல் — முனிநாதா-என்னை
நிசமாய்வனந்தனில் நிஷ்டூரமாய்விட்டார் — முனிநாதா
வாதையாயிவ்வனம்வந்துதவித்தேனே — முனிநாதா-இந்தப்
பேதையைரட்சிக்கிற்புண்ணியமுண்டையா — முனிநாதா
நீதிதப்பிராமர்நெடுங்காட்டிலோட்டினார் — முனிநாதா-இப்போது
ஆதிமுனியேநீரும்ஆர்னீரென்றுக்கும — முனிநாதா
மாற்றிநீரெந்தன்மனதுகவலையை — முனிநாதா-இதற்கு
மாறுஉபகாரமேதுமறியேனே — முனிநாதா
உற்றாருறவின்முறைஉள்ளவர்காணேயா — முனிநாதா-இப்போ
சுற்றம்போல்வந்துதுயரத்தைதீர்த்தீரோ — முனிநாதா
வாராழிசூழுமயோத்தியைக்கண்டாற்போல் — முனிநாதா-இதற்கு
மாறுஉபகாரமேதுமறியேனே — முனிநாதா

சீதைசொல்-திபதை

மாதவமுனியேயுந்தன் வசனமேமிகநன்மையா
சூதுபோல்ராமர்செய்த துயரத்தைத்தீர்த்தீரையா
போதுகாலங்கள்வந்தாற் துணையொருவரில்லை
ஏதுநான்செய்வேனையா யிணையடிக்கமலம்போற்றி

வ-ம். அகோவாருஞ்சுவாமி எனக்குப்போதுகாலங்கள் வந்தால்பெ
துணையொருவருமில்லையே இதற்குநானென்னசெய்யப்போகிறேன்
சுவாமி.

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை

கர்ப்பிடி ஆசிர்மத்தில கன்னைகை [illegible]
செம்மையாய் [illegible] செய்வர் திருடனிருப்பதய்யா

இம்மையில்வேணபம்ப மிட்சணமழைப்பிப்பேனுன்
செம்மையாயாசிர்மத்திற் சிக்கிரம்போவோம்வாராய்

வ-ம். அகோவாருந்தாயேநம்முடைய ஆசிர்மத்தில் ஏவற்றொழில்செய்ய வேணபேர்கள் ஸ்திரிமார்களுண்டு உனக்கொரு குறைவுமில்லை ஆசிர்மம்போவோம்வாருமம்மாசிதாய்.

சீதையும்-வால்மீகரும்-ஆசிர்மம்போகிற-கண்ணிகள்

இ-ம்-எது துல்காம்போதி-மிசுரதாளம்

முனிவருஞ்சீதையை முகமாயழைக்கவே
வனிதையாராலாத்தியேந்த மாதுநடந்தாள்
வனத்தினில்வாழ்கின்ற வால்மிகராசிர்மத்தில்
மனமகிழ்ந்துசீதையும் வந்துபுகுந்தாள்
வன்னமானபூவனமும் வால்மிகராசிர்மத்திற்
கன்னிபெணுஞ்சீதாதேவி கண்டுமகிழ்ந்தாள்
கானகமயில்போற்சீதை காரியமுனிவர்பின்னே
தேனொழுகுமொழியாள்சீதை சிருடன்வாராள்
கண்டவுடன்சீதையாளைக் கானகத்தில்வாழ்மரங்கள்
சென்றுமலர்த்தான்சொரிய செந்திருவாராள்

பொது-கவிதை

வனத்தினிற்சீதைதானும் வைபோகமாகவேதான்
கனத்தநோரிஷியோர்தாமுங் கருணையாய்வைத்திருந்தார்
மனத்தினிற்றுயரந்தீர்ந்து மகாதேவியென்னுஞ்சீதை
இனந்துடனாசிர்மத்திற் சிறப்பாயிருந்தாளப்போ

வ-ம். அந்தச்சமயத்தில் சீதாதேவியிருக்கையில் பேறுகாலம்வந்து சகிக்கமாட்டாமல் தாயந்திரியப்படுகிறவிதங்காண்க.

சீதைசொல்-கெர்ப்பத்-தரு-இ-ரூபகம்-திரிபுடைதாளம்

மானினங்கள்மயிலினங்கள் வனத்திலுள்ளகுயிலினங்கள்
அன்னங்களேகிளிகளே யெந்தனடிவயிற்றைநோகுதையோ
பெண்பிறந்துபட்டகுறை போதுமையாயெந்தனுக்கு
என்னசெய்வேனுருங்காணேன் என்கணவாரகுநாதா
சந்ததியைப்பெற்றெடுத்தால் சந்தோஷமாய்வருவீரோ
அந்தவிடமோகானநீயேன் என்னுடைய அத்தையரே
வந்துநதியாவநிதனோவு வாதைபடயேதுசெய்வேன்
சுந்தரமாமாராகவரோ தொஞ்சுதொஞ்சுநோகுதையோ
கன்னியர்களாருமில்லை கட்டிப்பிடிப்பாருமில்லை
என்னாசோராயபத்திரா யேதுசெய்வேன்லட்சுமணரோ
மாதரோசநருநர்கா என்தாபந்திரியந்தெரியாதோ
ஆரிருந்தபென்னபலன் என்னடிவயிற்றைநோகுதையோ
பூமியிற்பெண்பிறந்து போதுமையாயெந்தனுக்கு

வ-ம். அரிசினின்முடையபாக்கியர்கள் அன்னைபிரிந்துபிறந்து கொண்டு உபசாரணைபண்ணுவார்கள் இவ்விடத்தில் ஆனைபுங்க... என்னசெய்வேன் ராகவா

சீதைசொல்-திபிதை

சூதுசேர்முலையாள்பாக்கி சுகத்துடனிருந்தகாணேன்
மாதவாதேவிமார்கள் வந்து இருப்பார்காணேன்
பொழுதுகாலங்கள்போவு பொறுக்கவுமுடியவில்லை
பாதகத்திர்க்கராம பத்திரரேயருகில்வாரீர்

வ-ம். என்னண்டையில் யாருங்காணேன் பொழுதுகாலம்பொறுக்கப் போகவில்லை என்னைப்பாதகயாக்கிவிட்டீரே நீராகிலும் அருகில்வாரும் ராகவா.

சீதைசொல்-சந்நிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

என்னசெய்வேனெங்கேநான்போய் யேதுசெய்வேனுதக்காணேன்
மன்னரகுநாதனென்னை வன்காட்டில்தயங்கவிட்டார்
மன்னியதோர்காலகத்தில் வயிறுமெத்தநோகுதையோ
நித்திரைகள்பண்ணவில்லை நெடுநேரமாகுதையோ
குற்றமில்லாரகுபதிக்குக் கொடும்பாவமேதுசெய்தேன்
அத்தையரேநீரும்வந்து ஆதரித்துக்கொள்ளுமம்மா

பொது-திபிதை

என்னிட அத்தையரே யெப்படிபொறுப்பேனம்மா
சென்றிடும்பரிவாரங்கள் சிர்களுமில்லையம்மா
உன்னிட அருளேயன்றி யொருவருங்காணேனம்மா
மன்னியகாட்டினுள்ளே வந்துநீதுணைசெய்வாயே

வ-ம். அகோவாருமம்மா மாமிமார்களே எப்படிபொறுப்பேன் என்னுடையசிலொலாக்குலைந்து இங்குவந்து அலைகிறேன் உங்களுடைய அருளையல்லாமல்வேறேதுணைகாணேன் நீங்களாகிலும்வந்துஎன்னைக்காப்பீரம்மா மாமிமார்களே

சீதை-வால்மிகருக்குச்சொல்-திபிதை

ஐயனே பொழுதுகாலத்தில் ஆனாயும்பிரிந்ததில்லை
உப்பவேவயிறுமெத்த வுளைக்குதுயினியென்செய்வேன்
வையகவனத்தில்வாழு மாதவமுனிவேஐயா
மெய்யதாய்பந்தனுக்கு வேணதற்கென்னசெய்வேன்

வசனம்.

அகோவாருமையாபாரவிசாரதாயெனக்கு கெர்ப்பவாதனைப்பொறுக்கப்போகவில்லை எனக்குவேண்டியதற்குயென்னசெய்யப்போகிறேன் சுவாமி.

வால்மிகர்-சிதைக்குச்சொல்-திபிதை.

சுந்தரத்தாயேநீதான் சோபங்கள்படவேவேண்டாம்
சுந்தரனருளுமேல கணமுண்டுதென்றுய்வாழ்வாய்

சிந்தையிற் றுயரம்வேண்டாம் தசரதராமர்போலே
அந்தவயோத்தியாள அரசனைப்பெறுவாயம்மா

வ-ம- அகோவாருமம்மா சீதாய் உனக்கொருகுறைவும் வருகிறதி ல்லை உனக்குவேண்டியதற்கு நான் தருவிக்கிறேன் சுப்பிரமண்ணியர் கடாட்சத்தினால் மைந்தனைப்பெற்று அயோத்தியை அரசாளப்போ றான் நீயும்பார்ப்பாயம்மா

இதுவும்வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை

காணகம்வந்தாயென்று கலக்கினிலஞ்சவேண்டாம்
வானவர்தேவிமார்கள் வந்துடனுறவேசெய்வார்
வேணகோர்பாக்கியங்கள் மிகுதியாய்த்தருவேனம்மா
ஜானகியறைந்து சஞ்சலங்கொள்வாய்நீயே

வ-ம- அகோவாருமம்மாசீதாய் இந்தவனத்திலேயிருக்கிறோமென்று தாபஞ்சியப்படவேண்டாம் இந்தகன்னிமார்களையழைத்திருக்கிறேன் நீ ஆனாயிலே போயிருமம்மா

சீதைவால்மீகருக்குச்சொல் திபதை

சஞ்சலமெனக்கில்லையா தானினைகண்டபோதே
நெஞ்சினிற்றுயரந்தீர்ந்தே னிலத்தினிறறைந்தேனையா
மிஞ்சியேகெர்ப்பந்தானும் வேதனையாகுதிப்போ
என்செய்வேன்முனிவரேயிவ்விடர்தனையறிகிலேனே

வ-ம் அகோவாருஞ்சுவாமி முனிநாதரே எனக்கொரு சஞ்சலமு மில்லை தேவரீரைக்கண்டமாத்திரத்தில் இடர்களெல்லாம் போய்விட் டது கெர்ப்பவேதனைசகிக்கவில்லை அதற்கென்னசெய்வேன்முனிநாதா

போதுதிபதை.

மானிடதேவியாரின் பணமைதந்தேறச்செய்து
வால்மீகரிஷியப்போ வன்மையாயதிபாவஞ்செய்து
மேல்முக்கணுமன்புக் கொண்டதற்கன்னிமாரை
சிலமாய்ச்சிருஷ்டிசெய்து சீதைமுன்னனுப்பினரே

வ-ம் அகோதெப்படியென்றால்சீதையின் பயவேதனைப்படுகிறத்தி வால்மீகரிஷியானவர் தம்முடைய ஞானதிருஷ்டியால் கன்னிமார்களையு ண்டாக்கி பணிவிடைசெய்து சீதைமுன்பு அனுப்பினவுடனே அந்தரண்க ரிசிகன்னிகள் வருகிற தரு-இ-ம்-எதுகுலகாம்போதி

அட்டதாளம்-பல்லவி.

வந்தனரிசிகன்னிகள் வந்தனர்பாரீர்

அனுபல்லவி.

மந்திரமிகுந்தரிசி வால்மீகர்ருளினாலே
அந்தமுள்ள சேலைகட்டி விகடையாய்ப்பொங்கிவிட்டு வந்

அனுபல்லவி

செந்திரிச்சிலர்தப்பெட்டு வைத்துவோர்கட்டுவிட்டு
சந்தனனுங்க தங்கைக்கபோலலங்கரியமி வந்

யிசை

கொடியிடை துவள்டவே அடியிணை சிலம்பசைய
கடிவாளஸ்தனங்குலுங்க குழல்தனில் மல்லிகைச்சூட்டி வங்

வால்மிகர்-கன்னிமார்களுக்குச்சொல்-திபிதை

சுந்தரக்கன்னிமாரே சொல்லுவேன் கேளீரிப்போ
அந்தங்கொள் ராமர்தேவி யானவள் துணையில்லாமல்
சிந்தையிற்றியங்குகின்றாள் சிக்கிரம் நீங்கள்சென்று
சந்துஷ்டியாகப்பக்கஞ் சார்ந்தேவல்தனைச்செய்வீரோ

வ-ம அங்கோவாருங்கள்பெண்களே ஸ்ரீராமர்தேவியாகிய சீதாங்கனி துணையில்லாமல் சஞ்சலப்படுகிறாள் ஆகையால் நீங்கள்போய் பாதுகாத்திருங்கள் பெண்களே

கன்னிகள்-சிதைக்குச்சொல்திபிதை

இந்தமாவனத்தின்மிது யேனம்மா புலம்புகின்றாய்
மந்திரகன்னிநாங்கள் வால்மிகரனுப்பவந்தோம்
உந்தனுக்கருகேநாங்க ளொருமையாயிருக்கவல்லோம்
சந்ததிபெறுவாய்நீயுஞ் சஞ்சலம் விடுவாயம்மா

வ-ம் அங்கே வாரும்மா சிதாய் இந்தவனத்தில்வந்தோமென்று நீ தாயங்கிரியப்படுகிறாய் வால்மிகரனுப்பிய மந்திரகன்னிகளாகிய நாங்கள்வந்தோம் நீ நல்லபுத்திரனைப்பெறுவாய் பயப்படவேண்டாம்பன்னகசாலைபறையே வாரும்மம்மா சிதாய்.

சிதை-கன்னிமார்களுக்குச்சொல்-சொச்சகம்

மங்கையர்க்கரசியாரோ வருத்துதே கெற்பமது
சங்கையாம்மெய்யுந் தளருதே யென்னசெய்வேன்
இங்குநீங்கட்களித்து யேதாவதொருகதையைப்
பொங்குமுடன் சொன்னார் புண்ணியமுண்டுங்களுக்கே

வ-ம் அங்கோவாருங்களம்மா கன்னிமார்களே என்னசானுல் கெற்பவேதனைச்சகிக்ககூடவில்லை ஏதாவது ஒருபுண்ணியகதைகளைச் சொல்லிக்கொண்டு வாருங்களம்மா

கன்னிமார்கள்சொல் வசனம்.

நாங்கள்காட்டில் வாழப்பட்டவர்களாச்சுதே எங்களுக்கு என்னகதைதெரியும் நீ சொன்னால் நாங்கள்கேட்டுக்கொண்டு வருகிறோமம்மா சிதா

சிதை-கன்னிமார்களுக்குச்சொல்-அகவல்-இ-ம்-மோகனம்.

ஊர்க்கரிய புத்திரத்தால் அன்றுசிதவர்மறைகேட்டு
தரணிதனில் மாயவனார் தசரதற்குப்பிள்ளையாகி
ஸ்ரீராமருடனுங்கூட லட்சுமணரும்பரதருமாய்
சரியானசத்துருக்னர் தமையாககால்வராகி
விட்டுருமையில் வாமித்திரர் வேள்விதன்னைமுடிக்கவென்னவே

தாடகையைவதைசெய்து தனியில்வேள்விதனைக்காத்து
அகலிகைதன்னைமங்கையாக்கி அட்சணமேமிதிலைசென்று
மகிமையுடன் வில்வளைத்து மாலையிட்டுவருகையிலே
பரசுராமர்கையின்வில்லை பாரியதோர்பலம்பறித்து
அரிதமுடனயோத்திவந்து சுகமுடனேவாழ்கையிலே
பிழைசெய்கைகேசியாலே பெரியவனம்போகையிலே
தனைமுடிபொடித்துஅனையுந்தித்தி தண்டகாவனஞ்சேர்ந்தோம்
பாரியதோர்லட்சுமணனும் பார்த்தடனேகூடவர
காரணமென்றெழுந்திருந்து கங்கைதனில்வந்துநின்று
பரதரும்பின்னேவரபார்த்துடனேகண்டுநின்று
பெரியஅரசன்சேதிகேட்டு பெருங்கங்கைதான்முழுகி
ராமர்பரதருக்குத் திருவடியைக்கொடுத்தனுப்பி
காரணமாய்வந்து நின்றகரதூஷணரைக்கருவறுத்து
சூர்ப்பனகைமூக்கறிந்து சுகித்திருக்கும்வேளைதன்னில்
மாரீசனானவனைவதைத்தவன்னே அட்சணமே
அச்சுதனைத்தான்தேடி லட்சுமணரும்போகையிலே
பிட்சையென்றுவந்தானே பெருமபாவிராவணனும்
பன்னசாலையுடன் பதிவிருந்துபேர்த்தெடுத்தான்
அந்நிலையிற்சடாயுதானும் அமர்பொருந்தும்வேளையிலே
திரைகடலைத்தான்கடந்து தீமைசோகவனத்திலென்னைச்
சிறையில்வைத்துராவணனுந் திரிசடையைக்காவல்வைத்தான்
ராமருமலட்சுமணரும நல்வனத்திற்றேடிவந்தார்
சேதுமஞ்சடாயுசொல்லத் திருவடியிற்சேர்த்துகொண்டார்
வாலிதன்னைமார்பிளந்தார் வடிவுள்ளசுக்ரீபர்க்குக்
கோலமுடன்கிஷ்கிந்தைக் கொற்றவனாய்ப்பட்டங்கட்டி
அனுமாரைத்தூதனுப்பி அன்றிலங்கைச்சுட்டெரித்து
கனமாகச்சேதிசொல்லக் கடல்தாண்டிவானரங்கள்
தம்புடனேராமர்சென்று கொடியலங்கைப்போய்புகுந்து
கும்பகர்ணனதிகாயன் கூடியதோரிந்திரசித்தை
சக்கிரவதைசெய்தபின்பு சிரம்பத்துடையோனுக்குச்
சகோதரனாம்விபீஷணர்தன்றமையனிடமுயிர்நிலையின்
மறைதானுபாயமெல்லாம் உகமையுடன்ராமர்கேட்டு
வெற்றியுள்ளராமபாணம் விட்டனனிராவணன்றன்
சுற்றுவிழுமார்பிளந்து அமிர்தகலசமுடைந்து
அந்நிமிஷமிராவணனைத்தாம்வதைத்து விபீஷணர்க்கு
இலங்கைதனைப்பட்டங்கட்டி ராச்சியந்தையாளுமென்று
பக்கமுடன்சிறைமீட்டி போதவேவந்தோனாத்தி
அக்கினியிற்றான்முழுகி அயோத்தியில்வாழ்ந்திருந்தோம்
இத்தேசமீதிலேதானென்று நிமுடனே லட்சுமணரும

பாரியதோர்தேதியிலெம்பிப் பாக்குடனேகொண்டுவந்து
வீசியபாய்வனத்திலென்னை விட்டவரும்போனாரம்மா
என்னுடையகுலதெய்வ [illegible] எத்திசையிலேகேட்டிரோசான்
என்னசெய்வேனம்மா [illegible] யிருக்கன் [illegible] தானே

சீதை கன்னிகளுக்குச்சொல் வசனம்

அம்மாகன்னிமார்களே [illegible] வயிறும்நோவு பொறுக்கப்போகவில்லை என்தகப்பனாகிய வால்மிகருக்குச்சொல்லி ஒருமருத்துவச்சியை அழைப்பிக்கச்சொல்லுங்களம்மா

கன்னி-வ-ம் அப்படியேசெய்கிறோமம்மா

கன்னிகள்-வால்மிகருக்குச்சொல் வசனம்

ஓகோவாருந்தசுவாமி நம்முடைய ஆசிரமத்தில் சீதைபிரசவிக்கப்போகின்ற வேதனை தாளமாட்டாமல் தாபத்திலப்படுகிறாள் சீக்கிரம் ஒரு மருத்துவச்சியை அழைப்பிக்கவேணுஞ்சுவாமி

வால்மிகர்வசனம்- அப்படியேயாகிறது அழைப்பிக்கிறேன்

வால்மிகர் சிஷர்களுக்குச்சொல் திபிதை

நீலவெனஞ்சிஷரோயிந் நிமிஷத்திலேருவரூந்தான்
மலையடியோரஞ்சென்று மருத்துவக்கிழவியைக்கண்
டலை[illegible]முனிவருன்னை இட்சணமழைத்தாரென்று
கலம்பெறவழைத்துக்கொண்டு நமதிடம்வருகுவீரே

வசனம்

அடாலடா [illegible] சிந்தாமணி அப்பாதுன்மார்க்கசிந்தாமணி நம்முடைய மலையடிவாரத்துக்குப்போய் மருத்துவக்கிழவியை அதிசீக்கிரமாய் அழைத்துக்கொண்டு வாருங்களடா

சி-வ-ம் அப்படியே அழைத்துக்கொண்டுவருகிறோஞ்சுவாமி

சிஷர் மருத்துவக்கிழவிக்குச்சொல்வசனம். அடிபாட்டி எண்டா போராணடிசுவாமி வான்மிகமாமுனி அழைத்துக்கொண்டுவரச்சொன்னார்வாடி

கிழவிவசனம். வால்மீகமுனியழைத்தால் நான்வருகிறதா

சிஷர்வசனம்- அடிபாட்டி அப்படியல்ல மகாதபோதனாகிய வால்மிகமகாரிஷி [illegible]

கிழவிவசனம்- அப்படியா இதோவருகிறேன்

போதுதிபிதை

நரைதிரைதிலையும்பினை காடியகண்ணும்வாயில்
[illegible]க்கிநீருக்கையில் நாவன்றிதா யுடன்றுபத்
திரைத்திடுமெய்யும்பிறந் சேலையக்கலையநீடிற்
[illegible]மருத்துவக்கிழவியு மிதோவந்தாளே

பொதுவசனம். ஓகோசெப்படியென்றால் மருத்துவச்சி [illegible] சேர்த்த [illegible] இருக்கப்பட்ட மருத்துவக்கிழவி வருகிறாள் [illegible]

மருத்துவக்கிழவிவருகிற-தரு இ-ம்-ஸ்ரீகல்யாணி-ஆதிதாளம்

பல்லவி.

கிழவிவந்தாளே மருத்துவக் கிழவிவந்தாளே

அநுபல்லவி.

அழைத்ததேசதியை யறிகுவோமென்று
தழைத்தஆசிரமந்தன்னிற்போகவும் கிழவி

சரணங்கள்

வனத்தில்வால்மீகரென்னையழைக்கிடுங்
கனத்தசேதியைவிரைந்துடன்கேட்க
தள்ளாதேதள்ளாதேகள்ளப்பயல்களே
துள்ளிவிழாதேநீர்மெள்ளநடவுங்கள் கிழவி

அஷ்டதிசையிலும்பிரஷ்டமாய்த்தேடினால்
சட்டமுட்டெனைப்போற்கெட்டிகாரியில்லையென்று
தூரப்போங்களடாசோரப்பசங்களே
சேரவந்தீரானாற்சீறியடிப்பேனென்று கிழவி

சுங்கானும்வாயினிற்றங்கிப்புகையெழ
தொங்குமுலையிரண்டும் அங்கனிலத்தில்விழ
துஷ்டப்பயல்களேயெட்டிநின்றிடுங்கள்
வெட்டியுதைத்திடுவேனட்டிமக்களேயென்று கிழவி

சிஷர்-வால்மிகருக்குச்சொல்-வசனம்.

சுவாமிசுவாமி மருத்துவக்கிழவியை இதோ அழைத்துக்கொண்டு வந்தேனையா

வால்மிகர்-கிழவிக்குச்சொல்-இசை.

மருத்துவக்கிழவிகேளாய்மாயவன்ராமர்தேவி
வருத்தமாய்க்கர்ப்பநோயின்வாதைகள்படமாட்டாமல்
கருத்தினிற்றுயரமாகிகலங்கினாளாசிரமத்தில்
திருத்தமாய்ப்பார்த்தாயானாற்செம்பொனுமளிப்பேனானே

வசனம்.

அடியேடி மருத்துவச்சி ஸ்ரீராமருடைய தேவியாகிய சீதாங்கனை தவித்துநோவ பொறுக்கமாட்டாமல் தவிக்கிறாள் சீக்கிரமாய்ப்போய் அவளை சந்தோஷம் வரும்படியாய்ப் பார்த்தாயானால் உனக்கு வேண்டியதருகிறேன் போய்ப்பத்திரமாய்ப்பாரடி மருத்துவச்சி

மருத்துவச்சி-வால்மிகருக்குச்சொல்-வசனம்

அப்படியே பார்க்கிறேனையா

மருத்துவச்சி-வசனம்.

ஆமாடி அம்மாசீதாதேவி ஏண்டியம்மா என்னடியம்மா அழுது கொண்டிருக்கிறாய்

சீதை-வசனம்.

எனக்கு வயிறுநோவு பொறுக்கப் போகவில்லையே யென்னசெய்யப்போறேனம்மா

மருத்துவச்சிசொல்-வசனம்

அம்மாவொருநாளும் பிள்ளைபெறாதவளாச்சே தலைச்சனானபடியினாலே அப்படிதானிருக்கும் காக்கையேறினகொம்பு அசையாதா கைபட்டகண்ணானது அறுகாதா அதுபோல வயிற்றிலே பிள்ளையிருந்தால் உளைக்காமலுந் துளைக்காமலுமிருக்குமா பத்தைப் பெற்றவர்களெல்லாம் பயப்படும்போது தலைச்சன்பிள்ளைக்காரிக்கு தைரியமிருக்குமா பயப்படாதே சும்மாயிரு இன்னஞ் சற்றுநேரத்துக்குள்ளே நின்றுபோம் பன்னகசாலை அறையிலேபோவோம் வாருமம்மாசிதா

சிதைசொல்-கெர்ப்பவேதனை-கண்ணிகள்-இ-ம்

எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

முதல்மாதந்தன்னிலேதானுமம்மாதலை
  முழுகிக்குளித்தேனடி அம்மமாரே
அதுவேகுளியதாகநின்றதடிகெர்ப்பம்
  அதிலேகறுகறுத்ததம்மமாரே
இரண்டாந்தான்மாதத்திலேயெந்தனுக்கேஅம்மா
  நல்மசக்கைகொண்டதடி அம்மமாரே
கண்டபுளிமாங்கனியும்காட்டுக்காளாய்மே
  லிச்சைகொண்டேனடி அம்மமாரே
மூணாந்தான்மாதத்திலேமுகம்வெளுத்தேயெந்தன்
  முலைநுனைகறுத்ததடி அம்மமாரே
காணப்படாதசிறுநூல்போலிடையது
  காணப்பெருத்ததடி அம்மமாரே
நாலாந்தான்மாதத்திலேயெந்தனுக்கேகெர்ப்பம்
  நாடிநிலைத்துமுலையிரண்டிலேயும்
பாலாய்சுரந்துகாந்துநுனியெழும்பிநுனி
  பசபசென்றூறச்சடி அம்மமாரே
அஞ்சாந்தான்மாதத்திலேயெந்தனுக்கேகெர்ப்பம்
  அழகொழுகியேயிருக்குமேனியெல்லாம்
மஞ்சளநிறமாச்சுதடியெந்தனுக்கேசிறு
  வயிறுகனத்ததடி அம்மமாரே
ஆறுந்தான்மாதத்திலேயுந்தனக்கேகாணும்
  அடியெடுத்தெடுத்துவைக்கவெந்தனுக்கே
யேறுதி [illegible]கடி யென்னவென்னுடைத்
  திரேகம் பாலுந்துறந்தேனடி அம்மமாரே

ஏழாந்தான்மாதத்திலேவசிஷ்டர்வந்தேகாள்பார்
தெனக்குஸ்ரீமந்தஞ்செய்தார் அம்மமாரே
தாயார்வரிசையெல்லாமெந்தனுக்கேதந்தை
தானமைத்துவாத்தாரடி அம்மமாரே
எட்டாந்தான்மாதத்திலேயெந்தனுக்கேஇந்த
யிடைபிறவா[illegible] அம்மமாரே
கட்டளைசெய்[illegible]க்கணைடி இந்தக்
காட்டில்விட்டுவிட்டாரடியெந்தனைதான்
ஒன்பதாமாதத்திலேபக்கத்துணையாயெனக்
கொருவருமில்லையடி அம்மமாரே
தென்பில்லா இவ்வனத்தில்நான் றனித்தேதஇங்கே
தேடுகின்றபெண்துணை அம்மமாரே
பத்தாந்தான்மாதமடி யிதுவெனக்கே அம்மா
பாதகவிக்கவிட்டாரடி அம்மமாரே
வெற்றிரகுராமருக்குநான்செய்தகுற்றமது
மிப்படியிருந்துதடி அம்மமாரே

சிந்தைசொல் - இ - ம் - முகாரி - ஆதிதாளம்

பல்லவி.

அண்டையில்லாருங்களம்மா கன்னிமாரே
அண்டையில்லாருங்களம்மா

அநுபல்லவி.

அண்டையில்லாருங்களம்மா பண்டுகோல் செய்தவினை
தெண்டகாரண்யத்தில் முண்டியாய்தவிக்கிறேன் அண்

சரணங்கள்.

தலையைச்சுழட்டுதம்மா தண்ணீர்தாக மெடுக்குதம்மா
தக்குமோயிந்தவுயிர் நிற்குமோபோய்விடுமோ
பக்குவமதாகநீங்கள் ஒக்கதுணையாய்க்காரும் அண்
எங்கும்வலிக்குதம்மா எந்தனிடுப்புநோகுதம்மா
யேதோவெனக்கு வேதனையாகுதே
மாதரோநீங்களெல்லாம் ஆதரவாய்க்காரும் அண்

சிந்தைசொல் - கண்ணிகள் - இ - ம் - எதுகுலகாம்போதி - ஆதிதாளம்

அம்மமாரேநானென்னசெய்வேன் - என்
னடிவயிற்றைப்புண்ணாய்நோகுதடி
தோழிமாரேநானெனன்னசெய்வேன் - என்
கொணைகளெல்லாம்புண்ணாய்நோகுதடி - அடி

பாக்கியமானதொன்னசெப்புவேன்-என்
பக்கமெல்லாம்புண்ணாய்நோகுதடி
தயிரின்மேலேயெனக்குயிச்சையடி
தாயிமாரேயிதுயென்னலச்சையடி
இந்தகண்டமாத்திரந்தப்பிப்பிழைத்தேனானால்-நான்
இனிபுருஷனோடேயென்றுஞ்சேரேனடி

கிழவி-சிசியருக்குச்சொல்-கவிதை.

அருளுடன்ஜானகிக்கு ஆனதோர்வயிற்றிற்கெர்ப்பந்
திரமுடன்றிங்கள்பத்துஞ் சென்றபூரணமதாகி
அரியமைந்தனைப்பயின்றா ளச்செய்தியைமுனிவருக்குப்
பிரியசிஷர்களேயோடி பெட்டெனச்சொல்லுவீரே

வசனம்.

அடாவாடாபோரண்டி சீதையானவள் கோடிசூரியப் பிரகாசமாய்அந்தஅயோத்தியை யாளத்தக்க புத்திரனைப் பெற்றாளென்று முனிவருக்குப்போய்ச் சொல்லுங்கள் சிஷர்களே

சிஷர்கள்சொல்-வசனம்.

ஆ-ஆ-தம்பிபிறந்தானாசந்தோஷம்சந்தோஷம் கையிலெடுப்போம் முத்தங்கொடுப்போம் இனிகுறைவில்லை இதோவோடி எங்களையாள இயவான்மிகருக்குச் சொல்லுவோம் ஆடிபாடி

கிழவிசொல்-தரு-இ-ம்-முகாரி-சாபுதாளம்.

பல்லவி.

பிள்ளைபிறந்தது நல்லதென்றுமணிபோல பிள்ளைபிறந்தது

அநுபல்லவி.

தென்னியரகுநாதர் தேவிதிருவயிற்றில் பிள்ளை

சரணங்கள்.

காலனைக்கிள்ளையசக்கிக் கண்சிமிட்டிவாய்திறந்து
கோலமுலைப்பாலுண்ணகூவாகூவாவென்று பிள்ளை
கொஞ்சிக்குலிப்பாட்டிக்கோதாட்டிசீராட்ட
வந்திசீதைதிருவயிற்றிலுச்சிதமான பிள்ளை
நல்லபிள்ளைபிறந்ததென்றுதாயமார்கூடிடவே
எல்லவருமோடிவந்துயெடுத்தெடுத்துக்கொஞ்சிடவே பிள்ளை

சிஷர்-வான்மிகருக்குச்சொல்-கவிதை

பத்[illegible]யருக்கிவார்த்த
சித்திரப்பது[illegible] ஸ்ரீராமமூர்த்தியாரின்
பத்தினிசீதையாரும் பரிவுடனிப்போநல்ல
புத்திரனைப்பெற்றாள்சுவாமி பொற்பாதம்போற்றிபோற்றி

வசனம்.

அகோவாருந்தஸ்வாமி எங்களம்மையாகிய சீதாங்கனியானவள் பத்தரைமாத்துத் தங்கம்போல் ஒரு பாலகனைப்பெற்றாள் ஸ்வாமி

பொது-திபதை.

செகதிருவானசீதை சிறுவனைப்பயின்றாளென்று
நந்துமிவாத்தியங்கள் துலங்கவேதாளமூத
இந்திரர்முதலந்தேவ ரிஷிகளும்பார்த்திருக்க
வந்துவால்மீகர்தாமும் வழங்குவார்வேணதெல்லாம்

வால்மீகர்-சிஷருக்குச்சொல்-வசனம்.

அடாவாடா மவுனசிந்தாமணி அப்பாதுண்மார்க்கசிந்தாமணி ஒருசகடையின்மேலில் சர்க்கரையும் இரண்டுசகடையின்மீது சீனியுங் கொண்டுவாரும்பிள்ளாய்

சிஷ-ஷ-ம் அப்படியே இதோகொண்டுவந்தோம்ஸ்வாமி

பொது-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி

சர்க்கரைவழங்கினாயா வால்மீகர்தானுஞ் சர்க்கரைவழங்கினாயா

அநுபல்லவி

மைக்குழலாள்சீதையாரு மைந்தனைப்பயின்றாளென்று
அக்குவலைபக்கள்முற்றும் ஆனந்தோர்விளைகளித்து சர்க்க

சரணங்கள்.

ஜனகராசன்மகளான சானகிபெண்ணும்மா
இனகரன்போற்புத்திரனைச் சீர்பெறவீன்றதினால் சர்க்

நல்லோர்முதற்பெரியோரெல்லார்களுந்தழைக்க
வல்லமைசெங்கோலதிபதிதமன்னவர்களும்பிழைக்க சர்க்க

வேதமுதற்கலைகள்விரும்பித்துதிகள்பண்ண
மாதவர்களும்வந்து மனதிற்களிப்புண்ண சர்க்க

சீதை தாலாட்டுக்கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி

ஆராரோ-ஆராரோ-ஆராரோ-ஆராரோ

சீரானஅயோத்தியில்வாழ் தசரதர்க்குப்பேரனைப்
பேரானராமரிட பிரபலத்தால்வந்தபிள்ளாய் ஆராரோ

காரணந்தொலைக்கவென்று கனமாம்பதியைவிட்டு
ஆரணியந்தனில் அலைந்தலைந்துலைவதைபட்டு ஆராரோ

பூரணமாம்வால்மீகர் புண்ணியத்தால்வந்த பிள்ளை
ஈரணுபோலிளங்கன்னையுடன்வந்தபிள்ளை ஆராரோ

௰௫

போதமிகுந்நாலம் பொக்கிஷமேமுக்கனியே
வேதமோபிள்ளையென் விளங்கவந்தகண்மணியே — ஆராரோ

சிதை-வால்மிகருக்குச்சொல்-திபிதை.

ஐயனே முனிவர்கோவே அளித்திடுபாலனுர்க்கு
வெய்யவன்குலத்தைப்போல விளங்கவேநாமகரணஞ்
செய்யவும்வலுமைதன்னில் ஸ்ரீராமர்க்கதிகமாக
வையகத்துறையவித்தை வண்மையைக்கற்பிப்பீரோ

வசனம்

அகோவாருஞ்சுவாமி முனிநாதரே அடியாள்குமாரனுக்குப்பெயர் கொடுத்து சகலவித்தை புத்திகளையும் அனுக்கிரகஞ் செய்யவேணுஞ் சுவாமி.

சிதைவால்மிகருக்குச்சொல்-தரு-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

புத்திரர்க்குப்பேரிடவேணும-சம்பிரமுடனே
புத்திரர்க்குப்பேரிடவேணும்

அனுபல்லவி

வெற்றியுள்ளமுனிநாதா விளங்கும்கமலபாதா
பத்தியுடன்பச்சரிசி பயறுதேங்காயெள்ளு மூன்றி — புத்

சரணங்கள்

இத்திசைபுரியோர்களும் மற்றுமுள்ளபெரியோர்களும்
கொற்றவரனைவருஞ்சுற்ற புத்தியுடனேநான்பெற்ற — புத்
கோத்திரங்குடிவிளங்கப் பார்த்திருந்தபேர்க்கெல்லாம்
நேத்திரமாகச்சொர்க்கத்தோனும் சாஸ்திரத்திலுள்ளபடி — புத்
எவருமெதிரியின்றி யெந்தன்வயிற்றுதித்த
தவபலசுதனுக் குத்தகுமானபோசகந்தன்னில் — புத்

வால்மிகர்-சிதைக்குச்சொல்திபிதை

தண்மைசேர்சிதாகேளாய் தாவமிப்பாலனுக்கு
உண்மையாய்ப்பெயருமிட்டு வெகுமுங்குடன்வித்தைசொல்ல
திண்மையாய்நதிக்குச்சென்று சிகிரம்ஸ்நானஞ்செய்து
வண்மையாய்த்தீர்த்தபுஷ்பம் வளமுடன்கொண்டுவாராய்

வசனம்

அகோவாருமம்மாசீதாய் உன்குமாரனுக்கு நாமகரணம் பண்ணி வைப்போம் நீ நதிக்குப்போய் ஸ்நானஞ்செய்து புஷ்பமுந் தீர்த்தமுங் கொண்டுவருவாயம்மா

சிதை-வால்மிகருக்குச்சொல்-திபிதை

ஆமகநான் டபீச னாடியினை நதிக்குமையா
சாலவுமிகுக்சென்று சனுதியில்ஸ்நானஞ்செய்து

சிலமாய்ப்புஷ்பந்தீர்த்தம் சீக்கிரம்கொண்டுசேர்ணோன
பாலனைவிட்டுச்செல்வேன் பார்த்திருமுனிவர்கோவே

வ-ம்- ஆகோவாருஞ்சுவாமி முனிநாதரே நான்நதிக்குப்போய்ஸ்நா
னஞ்செய்து புஷ்பமுந்தீர்த்தமுங் கொண்டுவருகிறேன் குமாரன்தொ
ட்டியிலிருக்கிறான் பார்த்துக்கொள்ளுஞ்சுவாமி

சிதைகெங்கைக்குப்போகிற தரு

இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்

பல்லவி

கங்கைப்போறாளே சிதாங்கனி
கங்கைப்போறாளே

அநுபல்லவி

கங்கைக்குப்போறாளே மங்கைசிதாங்கனி
தங்கக்குடங்கொண்டு மங்களமாகவே கங்கை

சரணங்கள்

காலிற்சிலம்புகலீல்கலீலென்னவே
கானகமெங்கும்சோர்கன்மின்னவே கங்கை

வால்மிகராலே தன்மகனுக்குப்பேரிட
சிலமாய்ச்சலம்புஷ்பமசிராய்க்கொண்டுவரவே கங்கை

நீரிற்குளித்துநல்ல நியமநிஷடைமுடித்து
பூரிப்புடனேராமர் பொற்பதத்தைதுதித்து கங்கை

பொதுதிபிதை

சிதைபுநதிக்குப்போகச் சிறியேகுழந்தைதானைப்
போதச்சிதைகேட்டுப் பொட்டெனவோடிவந்து
காதலாய்த்தூக்கிக்கொண்டு கடுகவேபுட்பம்நீரும்
நீதமாயெடுத்துக்கொண்டு நெறியுடன்வரவேபோனாள்

வசனம்

அகோசெப்படியென்றால், சிதைநதிக்குப்போனபோது குமார
னழுகிற சத்தங்கேட்டு சிதையோடிவந்து குமாரனையெடுத்துக்கொண்
டு புஷபமும்நீருங் கொண்டுவரப்போகிற விதங்காணக

சிதைசொல்-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி மிஸ்ரதாளம்

செங்கைகீரமகிளிமொழியாள்சிதை
தங்கநகுடங்கொண்டு தண்ணீருக்குப்போறாள்
ஆங்குமொருவானரந்தான் பிள்ளைதன்னை
யணைத்துக்கொடுக்கோடவேகண்டு
மகனையெடுத்துமார்பிலணைத்துக்கொண்டு
கொஞ்சியேமகனைநீயண்ணடா

கொந்தளமார்பனே கோசலைபேரனே
　　கோதண்டராமா போத்திக்காதே
வீட்டிற்பிறந்துநீ விற்றிருந்தாலடா
　　வேணபேர் வேதியசாஸ்திரம்பார்ப்பார்
காட்டிற்பிறக்கநீ கைபிலேந்திக்கொண்டேன்
　　கண்மணியேநீராடவாருய்
கொப்பரையிற்றண்ணீர் வைத்துவிளாவி
　　குளிப்பாட்டி திருஷ்டிசுற்றிப்பாளேமாமி
அப்பாஉன்னையர் அயோத்திக்குராமர்
　　கற்பூராலாத்தியெடுப்பாரோசாமி

பொது வசனம்

அக்சமயத்தில் வால்மீகரோடிருந்து குழந்தையை தொட்டி [illegible] ஞானல் வியசனப்படுகிற விதமெப்படியென்றால்

வால்மீகர்சொல் தரு இம் எதுகுலகாம்போதி ஆதிதாளம்

பல்லவி

எங்கேபோகாணேனே சிதாய்பிள்ளை எங்கேபோகாணேனே

அனுபல்லவி

எங்கேபோகாணேனே யிங்கேயிருந்தபிள்ளை
மங்கைசிதைவந்தால் வாய்விட்டழுவாளே　　　　எங்

சரணங்கள்

யோகநிஷ்டையானும் ஏகநிஷ்டைகள்செய்ய
　　வேங்கைகாடிபுலிதாகமெகாண்டெடுத்ததே　　　　எங்

பாதகமாகவேபாலனைபோக்கினேன்
　　மாதுசிதைவந்தால் எதென்றுசொல்வேன்　　　　எங்

செந்தாமரைமுகத்தாள் வந்தால்மிகவுமனம்
　　நொந்தழுகிறாளே எந்தன்விதஞ்சொல்வேன்　　　　எங்

வால்மீகர் சிஷர்களுக்குச்சொல் வசனம்

அடேதாவாரும்பிள்ளாய் மவனசிந்தாமணி அடா துன்மார்க்கசிந்தாமணி சீதை பிள்ளையைத்தொட்டில் வளர்த்திவிட்டு நதிக்குப்போனுளே அந்தப்பிள்ளை யெங்கேயோகாணோமே என்ன சொல்லுங்களடா

மவுனசிந்தாமணிசொல்வசனம் சுவாமி சுவாமி நான் கண்ணை மூடிக்கொண்டு [illegible] கொண்டு [illegible] எனக்கு தெரியாது சுவாமி துன்மார்க்க [illegible] சங்கரனை காணோமென்று [illegible]

தங்கப்புரிக்கிருக்கிறீர்கள் அறியமாட்டேன் சுவாமி வால்மீகர்சொல்-வசனம் அடா சீஷர்கள் குருவுக்குயிந்தின சிஷர்களோ-ஆம்-ஆம்-சுவாமி வால்மீகர் வசனம் அடா சீதைகலந்தால் பிள்ளை யெங்கேயென்று பிரலாபிக்கப்போறாளே அவ்வளவுக்குமுன்பாகத் தெர்ப்பையினால் ஒருபிள்ளையை சிருஷ்டிக்கவேணுமடா சிஷியர்களே சீ-வ-ம்-ஆம்-ஆம்-அப்படிதான் செய்யவேணுஞ்சுவாமி.

பொதுதிபிதை

பாலனுமிலாதக்தாலே பரிதியேவிசாரமிட்டு
சாலவேத தப்பையுல்லைத் தக்ஷணமங்கிரித்துக்
காலசூரியனைப்போல் நற்காந்திகொள்மைந்தனுக்கி
ஆயிதொட்டில்வந்து அலறவேயாட்டினா

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

சதுர்வேதமோர்ந்த மறைபயாதவந்தோர்க்கெல்லாம்
ஆதிபெருமுனியேயிதே தனிசயமறியேனையா
ஜோதிபோய்தொட்டில்மீது சுகமுடனிருந்தசேயைக்
கோதைநானெடுத்துப்போனேன் குழந்தைவேறேதுசொல்வீர்

வசனம்.

அகோ வாருமையா முனிநாதரே நானென்னுடைய குழந்தை அநேதசத்தங்கேட்டுவந்து எடுத்துக்கொண்டு போனேன் இந்தக்குழந்தையேது ஆச்சரியமா யிருக்கின்றது சொல்லும்சுவாமி.

வால்மீகர்-சீதைக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்மாசிதாய் நீகுமாரனை யெடுத்துப் போனதை நானறியமாட்டேனே தொட்டிலே நான்பார்க்கும்போது பிள்ளையில்லாதபடியினால் என்மந்திரத்தினால் சிருஷ்டித்தேன் இதுவும் உன்னுடைய பிள்ளைதான் எடுத்துக்கொள்ளுமம்மா சீதாய்.

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

இதுவுமுன்பாக்கியந்தானோ யென்னிடவதிஷ்டந்தானோ
சதுர்முகனருளினாலே தயவதாய்பிழைக்கவேணும்
அதனவகளாகமுன்னம் அன்புடனிவர்களுக்குப்
பதமுடன்பேருமிட்டுப் பகருவிர்வித்தைதாமே

வசனம்.

அகோவாருஞ்சுவாமி இதுவுமுன்செய்த பாக்கியந்தான் இவர்களிருவரும் நன்றாய்ப்பிழைக்கவேணும் ஆகையால் வல்லமைபொருந்தும் படியாய் சகலவித்தைகளையுந்து வித்தைகளைக் கற்பிக்கவேணுஞ் சுவாமி.

பொதுநிபிதை.

குசலவனென்றுசொல்லிக் கூறியேபெருமிட்டுத்
திசைபுகழ்சிதைகாருவுஞ் செப்பவேகிர்தஞ்பெற்று
விசமதாயமேயாச்சிபாளும் நீலிலத்தாசொன்று
இசைகொளுமுவிவர்கன்று யிபம்பியளைஅத்தகளிட்டார்

பொருகண்ணிகள்-இம்-புன்னுகவாளி-ஆதிதாளம்

பாலருடன்கூடியிவர்கள் பரிவாய்விளையாடி
கோலிகுச்சகாயாடி இவர்கள குதித்துகைகொட்டாடி
பட்டணத்துள்ளோரும் இவர்களைப்பார்த்துக்கவிபாடுறும்
கெட்டியிவர்கள்நன்றுநல்ல கீர்த்திபடைவாரென்று
சொல்லிமகிழ்வாரும் பார்த்துத்துதித்துப்புகழ்வாரும்
வல்லவனென்பாரும் ராமரிடவந்தேவேயென்பாரும்

சிதை-வாம்மீகருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி என்குமாரர்களாகிய குசலவர்க்கு ஸ்ரீராமரைப்போல் நாலுவேதமும் ஆறுசாஸ்திரமும் வில்வித்தைகளெல்லாம் அனுக்கிரகஞ் செய்யவேணும் சுவாமி வால்மீகர்-வ-ம்-ஆனாலப்படியே செல்லிவைக்கிறேன் உன்குமாரர்களை வரச்சொல்லுமம்மா சீ-வ-ம் அப்படியே வரச்செய்கிறேன்சுவாமி.

சிதை-குசலவருக்குச்சொல்-வசனம்

அப்பா என்கண்ணின்மணிகளே உங்களை ஐயராகிய வால்மீகர்வரச்சொன்னார் போங்களப்பா-குசலவர்கள்-வசனம்-அப்படியேபோகின்றோந்தாயே

குசலவர்வருகிற-கரு-இ-ம்-பைரவி-திரிபுடைதாளம்.

பல்லவி.

வந்தானே குசலன்வந்தானே லவன்வந்தார்வாசிக்கவந்தாரே

அநுபல்லவி.

செந்தாமரையுதித்த செந்தாய்சிதையாள்பெற்ற
மைந்தரிருவரும் வால்மீகரிடத்தில் வந்தானே

சரணங்கள்.

கற்றவர்போற்றிய ராமராஜனிய
சித்திரபாலர்கள் வெற்றியுடனே வந்தானே

சிற்றடியான சிறுவரிருவரும்
தத்திவார்த்தை தாங்கள்பகர்ந்துமே வந்தானே

மைக்நலக்கன்னிமேல பத்திபாய்விலைபெற்
றிரத்தனுஷியமுனி பக்கமதனிலே வந்தானே

குசலவர்கள்-வால்மிகருக்குச்சொல்-திபிதை

மும்மலமொழித்துநின்ற முனிவரேபோற்றிபோற்றி
தர்மைத்தானபிர்நஞான தத்துவப்பெருமாளேபோற்றி
எம்மைநீமறக்கச்சதி யியமபுவிர்கருணைசெய்து
செம்மையாயெமைதன்னைச் சிருடன்செய்வோஞ்சுவாமி.

வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி எங்களை யழைப்பித்தகாரியம் அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

வால்மிகர்-குசலவருக்குச்சொல்-வசனம்

வாழிவாழி குசலவர்களே உங்களுககு வித்தியாப்பியாசம்செய்யவேணும் என்செவிக் கருகாமையில் வாருங்களப்பா குசலவர்களே.

குசலவர் வசனம் அப்படியே யிதோவந்தோம் சுவமி

வால்மிகர்-குசலவர்க்குச்சொல்-உபதேச-ஓரடி-தரு

இ-ம்-புந்நாகவராளி-மிசுரதாளம்.

பல்லவி.

ஓமெனுமட்சர மொன்றே அதில்உயிரெழுத்தானது மொன்றே

அநுபல்லவி.

சோமன்சடைதனி லேநதியகர்த்தஞ்ஞ
சுகமாசிநின்றதுந் தவமாலுயர்நததும் ஓமெனு

சரணங்கள்.

மாயச்சமுசார விடு-என்று
மாதவன்பாதத்தைத் தேடு
உபாயத்தாலேக்பாவத்தைதீக்கிடு
உம்பர்போன்பாதத்தையுமை மையாய்நோக்கிடு ஓமெனு

வால்மிகர்-குசலவருக்குச்சொல்-வசனம்.

அப்போவாருங்கள்குசலவர்களே ஞானந்தெரிந்துகொண்டீர்களே இனிமேல்விலவித்தை போதிக்கிறேன் இடதுகையில் வில்லைப்பிடித்துக்கொளளுங்கள் வலதுகையில் அம்பைப்பிடித்துக்கொள்ளுங்கள் வில்லைவளைத்து நாணியேற்றுங்கள் பார்ப்போம்

வால்மிகர்குசலவருக்கு-வில்வித்தைகற்பிக்கிற-ஓரடி-தரு

இ-ம்-புந்நாகவராளி-அடதாளம்.

பல்லவி.

இடதுகையில்வில்லைப்பற்று அதில்எடுத்தொருநாணியையேற்று

அநுபல்லவி.

சந்திரியிலேஅம்பை முடுகிமேவிபதிக்கச்சொன்
சத்துராதிமார்புக்குச் சரியாகப்பார்த்துக்கொள் இட

சரணங்கள்

மார்புக்கும்நாபிக்கும்நேரு-அதன்
மத்தியிலேகுறி பாரு
பாருக்குள்ராசனை அணுவாகப்பார்த்திடு
வீறுசிங்கத்தைவேல்கொண்டுமாட்டிடு இட

வால்மிகர்-குசலவருக்குச்சொல்-வசனம்

தெரிந்து கொண்டீர்களா குசலவர்-வ-ம் தெரிந்து கொண்டோம் சுவாமி.

பொது-திபதை

இராமுடன்சாஸ்திரங்கள் சிறுவருங்கற்றபின்பு
அருள்புரிசீதைதானும் அகமகிழ்ந்திருக்குங்காலை
கருணைவால்மிகர்தன்னைக் கருத்துடனழைக்கவேண்டி
வருணராஜேந்திரன்றானு மகிழ்வுடன்வருகின்றானே

பொது-வசனம்.

அஹோதெப்படியென்றால் பாலகரிருவரும் சுகசகலைக்கியானங்களைக்கற்றபின்பு வருணராசன் யாகஞ்செய்யவேணுமென்று வால்மிகரையழைக்கவருகிற விதங்காண்க.

வருணராசன்வருகிற-தரு-இ-ம-புந்நாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

வருணராசன்வந்தான் உதார வருணராசன்வந்தான்

அநுபல்லவி.

தருணத்திலுதவி தந்திடுங்கயாநிதி வருண

சரணங்கள்

நவமணிமுடி துன்னநல்ல நாணயகிரீடமின்ன
கவலையில்ராஜனென்ன உயர்கதிமிகுமிவனென்ன
தவறிலாதுநற் றதியிலுதவிசெய்
தாயகவிசுவாசநாயகனெனறிநிம் வருண

வருணன்-வால்மிகருக்குச்சொல்-திபதை.

சித்தரோமுனிவரோ நல் லிஷ்டசேர்திரோவரோநீர்
பத்தியாய்மனமகிழ்ந்து பாதாளஉலகந்தன்னில்
உத்தமரிவழ்விதன்னை ஒன்றையாய்ச்செய்துவைக்க
சித்தராவருகவேணும் திருவுளமகிழ்ந்துதானே

வசனம்.

அகோவாருஞ்சுவாமி முனிநாதரே பாதாளஉலகத்திலே யாகஞ்செய்யவேணும் நீர்வந்து உம்முடையகையினால் அதைமுடிப்பிக்கவேண்டும் என்று சொன்னான் முனிநாதரே.

வால்மீகர்-குசலவருக்குச்சொல்-இபிதை

பாலரோகேளீர்யானும் பாதாளலோகந்தன்னிற்
சீலமாம்வருணன்பின்போய்ச் சீக்கிரம்வருவேன்யானும்
சோலைசேர்வனத்தைச் சுற்றியேகாத்திருங்கள்
சாலவேமலர்தனக்குச் சனுதியிலொருவன்போவீர்

வசனம்.

அகோவாருங்கள் குசலவர்களே வருணராஜன் பாதாள உலகத்திலே யாகஞ்செய்யப்போறானும் நாம்போகவேணும் நீங்களிருவரும் வனத்தைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொண்டிருங்கள் சாமிருக்குப்புஷ்பம் வேணுமென்றால் ஒருவன்போய்கொண்டுவந்து கொடுங்கள்பிள்ளாய்
(குசலவர்-வசனம்) அப்படியே செய்கிறோஞ்சுவாமி.

வால்மீகர்-சீதைக்குச்சொல்-இபிதை

அன்னைபேசீதாய்நீயும் அஞ்சிடவேண்டாமம்மா
என்னிட ஆசிரமத்தி லிருந்திடாய்சுமந்தமேனி
மன்னவன்யாகஞ்செய்ய வருணன்பின்சென்றியானும்
தன்மையுடனேயிங்கு சனுதியில்வருவேனம்மா

வசனம்

அகோவாருமம்மா சீதாய்வருணராசன் யாகஞ்செய்யவேணுமென்று என்னையழைக்கிறான் நான்போய்வருகிறேன் இந்தபாலகரும் நீயும்சுகமாயிருங்கள் சனுதியில்வந்து சேருகிறேனம்மா (சீதை-வ-ம்) அப்படியே போய்வாருஞ்சுவாமி.

பொது-இபிதை.

உயர்முனியும்பாதாளத் துலகினிற்சென்றபின்பு
அயல்நிறையயோத்திவாழு மன்னனும்யூகாக
இபலுடனஸ்வமேத யாகமேடண்ணவேண்டி
நயமுடன்தம்பிமார்க்குசொல்லவரும்போதுதானே

வசனம்.

அந்தச்சமையத்திலேவருணராஜன் யாகத்திறகு வல்மீகர்போனபிறகு அயோத்தியில் ரகுநாயர் வசிஷ்டரை யழைப்பிக்கிற விதங்காண்க.

ஸ்ரீராமர் லட்சுமணருக்குச்சொல் இபிதை

புடைதிரைக்கடல்சூழ்வையம்புகழ்ந்தியவிளங்கும்
அடல்கொண்டல்சகோதரனேநாம் அஸ்வயாகதனைச்செய்யத்

திடமுடன்குலம்விளங்கச் சீக்கிரம்சென்றுநீயும்
சடைமுடிவசிஷ்டர்தம்மைக் க்ஷணமழைத்துவாராய்

வசனம்.

அஹோவாருந்தம்பி லட்சுமணா நம்முடைய குலகுருவாகிய வசிஷ்டரை அழைத்துவாரும்பிள்ளாய் (லட்சுமணர்-வ-ம்) அப்படியே அழைத்துவருகிறேன் அண்ணாவே.

லட்சுமணர்வசிஷ்டருக்குச்சொல்வசனம்

அஹோவாருஞ்சுவாமி வசிஷ்டமகாமுனிவரே சரணம்சரணம் தங்களை ஸ்ரீராமர்வரச்சொன்னார்சுவாமி (வசிஷ்டர்-வசனம்) ஆனாற்போவோம் வாரும்லட்சுமணரே

வசிஷ்டர்வருகிற-பொதுஇபிதை.

கரத்தினிற்றண்டுகொண்டு காவிவேஷ்டியுந்தரித்து
இருக்கமாய்த்தர்ப்பைப்புல்லுஞ் செபமாலையொருகையேந்தி
அத்தியாய்ரவிகுலத்திற் கன்னைலாம்ராமர்முன்பு
வருத்தமில்வசிஷ்டர்தாமு மகிழ்வுடன்சேருன்றினரே

வசனம்.

வாரும்பிள்ளாய்சிஷியா தெண்டிகமண்டலம் எடுத்துக்கொள்ளும் பிள்ளாய் அப்படியே யெடுத்து வருகிறேன்சுவாமி

வசிஷ்டர்வருகிற-கண்ணிகள்-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

நரைத்ததாடியும்விரித்தசடையும் நளினமானதண்டுகோலும்
வருத்தமானநடையுடனே வசிஷ்டரும்வந்துதோணினார் நரைத்த

பருத்தபுல்லுங்கமண்டலமும் பாதக்குறடுந்தரித்துக்கொண்டு
தரித்தநாமம்பூணூலுஞ் சதாணமாரவுரியும் நரைத்த

சோதியானமாதுபாகர் பாதமேவணைசிலம்பணி
ஆதியானதேவமுனி வந்தருளினாரையா நரைத்த

வசிஷ்டர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்

அஹோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா ரகுநாயகருடனே வசிஷ்டமகாமுனிவர் வந்திருக்கிறாரென்று சொல்லும்பிள்ளாய் (கட்டியன்-வ-ம்) அப்படியே சொல்லுகிறேனையா

கட்டியக்காரன்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அஹோவாருஞ்சுவாமி நம்முடைய ஆசாரவாசலில் வசிஷ்டமகாமுனிவர் வந்திருக்கிறார்சுவாமி (ராமர்-வசனம்) மகாபாக்கியம் கட்டியக்காரா

ஸ்ரீராமர்சொல்-தரு-இ-ம்-தோடி-அடதாளம்

பல்லவி.

தெரிசனஞ்செய்வோம்வாருந் தம்பிமாரே
தெரிசனஞ்செய்வோம்வாரும்

காதிற்குண்டலமும் அழகான பிரகுமண்டலமும்
நீதியானதொரு வசிஷ்டர் திருபாதத்தில் தெரி
கோத்த சடைமுடியும் அழகான நளினத்திருமன்காப்பும்
பருத்த திருதோளும் தம்பிமாரே பண்பான செங்கைகளும் தெரி
சூரிவாதிருபத்தொரு தலைமுறைக்கும்ப தவிதருஞ்
சிரியுயர் வசிஷ்டர் திருவடி தனைப்பணிந்து தெரி

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-வசனம்

சரணஞ்சரணஞ்சுவாமி (வசி-வ-ம்) வாழிவாழி எழுந்திரும்பிள்ளாய்

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா எனையழைப்பித்த காரியத்தைச்சொல்லும்பிள்ளாய்.

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-திபிதை

எந்தனற்குருவேகேளீ ரிப்பொழுதஸ்வயாகம்
உந்தனற்றிருக்கரத்தா லுகைமையாய்முடிக்கவேண்டுஞ்
சந்தமாயதற்குவேண சாமக்கிரிகைகளைத்தாங்கள்
தொந்தமாய்ச்சொன்னால் கேசுருங்கினிற்றருவிப்பேனே

வசனம்.

அகோவாருஞ்சுவாமி வசிஷ்டரே அஸ்வயாகஞ் செய்யவேணும் அதற்குவேண்டிய சாமக்கிரிகைகளைச்சொன்னால் அழைப்பிக்கிறேன் உமதுகையினால் முடிப்பிக்கவேணுஞ் சுவாமி

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

உன்னிடதேவியன்றி யுயர்ந்திடும்யாகமிப்போ
மன்னவாமுடிந்திடாது மகிழ்வுடன்முடிக்கதோமானால்
என்னதான்சொல்வோர்மூத்தோ ரியல்பல்லவிக்ஷணத்தில்
கன்னியாஞ்சீதைதனைக் கனிவுடனழைப்பிப்பாயே

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா அஸ்வயாகஞ் செய்யவேணுமென்றால் உன்தேவியில்லாமல் முடியாது ஆகையால் அழைப்பியும்பிள்ளாய்ராமபத்திரா

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-திபிதை.

அடவிபோஞ்சீதைதன்னை யழையுமென்றீரையயா
புடர்மதிமன்னனென்னைப் போதிவகைத்திடாரோ
மடமயிற்சீதையைப்போல் வளமுடன்பொன்னாற்செய்தும்
இடமுடன்வேள்விதன்னைத் தேவரீர்முடித்திடீரே.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி கானகஞ்சென்று சீதையை நானழைப்பே [illegible] இன்னாராசார்கள் நகைபார்களா ஆனபடியால் சீதை

யைப்போல் உருவம்பொன்னாற்செய்துவைத்து யாகத்தை நிறைவேற்றிவைம் றிவையுஞ்சுவாமி

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

எங்கணும்புகழ்படைத்த யிராமரேசொல்லக்கேளீர்
துங்கமாந்துரகமொன்று துரிதத்தில்வேணுமிப்போ
இங்கதுதானுமில்லை யெப்படிவேள்விசெய்வோம்
உங்களால்முடியாதப்பா உற்றதைச்சொன்னேன்பாராய்

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா இந்தயாகத்திற்கு ஒருபுரவி வேணும்அதுகடைபாது ஆகையால் அருமையாயிருக்கின்றது ராம. (ஸ்ரீ-ரா-வ-ம்)அப்படியே யிதோ அழைக்கிறேன்சுவாமி (வ-வ-ம்)ஆனால் நம்முடைய அயோத்தியாபுரி பட்டணமுழுது மலங்கிர்தஞ்செய்யச்சொல்லும்பிள்ளாய் ராமபத்திரரே.

ஸ்ரீராமர்-லட்சுணருச்சொல்-வசனம.

அகோவாருந்தம்பி லட்சுமணா நாம்அஸ்வயாகஞ் செய்யவேணும் அயோத்தியாபுரிபட்டணத்து வீதிகளெல்லாம் அலங்காரம் பண்ணத்திட்டஞ்செய்யுந்தம்பிலட்சுமணா(லட்-வ-ம்)அப்படியே செய்து வைக்கிறேன் அண்ணாவே

லட்சுமணர்-கட்டியக்காரனுக்குச்சொல்-திபதை.

படைத்தலைவீரர் தம்மைப் பகுந்திருபுறமாய்நீக்கிக்
கடைத்தலைவாயல்நிற்கும் கட்டியக்காராகேளாய்
வடித்தயோத்திமுற்று மலங்கிர்தஞ்செய்துபின்னும
திடத்துடன்யாரும் வந்து சேரவிங்கறிக்கைசெய்வாய்

வசனம.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா ரகுநாயகர்அஸ்வயாகம்பண்ணி வைக்கப்போகிறாரென்று தம்முடைய அயோத்தியாபுரி பட்டணமும மற்றுமுண்டான தேசாதிதேசமும அறியப்பண்ணிநம்முடைய பட்டணவிதிகளெல்லாம அலங்கிர்தமபண்ணி சிறுபிள்ளைமுதல் ஆயுதமெடுத்துக்கொண்டு வரச்சொல்லித் திட்டமபண்ணும்பிள்ளாய்கட்டியக்காரா

கட்டியக்காரன்-வசனம்

அப்படியேசெய்துவைக்கிறேன்சுவாமி

கட்டியக்காரன் அயோத்தியாபுரியி லிருக்கப்பட்டவர்களுக்குத்
திட்டமபண்ணுகிற-வசனம

அகோவாருங்கள் அயோத்தியாபுரிபட்டணத்துச்சனங்களே நம்முடைய ரகுநாயகரானவர் என்னமோ யாகஞ்செய்யப்போறாராம் நீங்க

களெல்லோரும் பொழுதுவிடிகிறதற்குள்ளாகத் தெருக்களெல்லாம் அலங்காரஞ்செய்து பெண்கள்தவிர மற்றவர்களெல்லாம் ஓடிப்போங்கள் சொன்னேன்சொன்னேன் ஆ-ஆ ஓடிப் போகவேண்டாம் நம்முடைய ரகுநாயகர் யாகத்திற்கு வரவேண்டியது.

கட்டியக்காரன்-ஸ்ரீராமருக்குச்சொல-வசனம்.

அப்படியே ஆயோத்தியாபுரி பட்டணமுழுதும் திட்டம்பண்ணி வந்தேன்சுவாமி

பொதுதிபிதை

வள்ளவாமுனியுரைத்த வாய்மையைக்கேட்டுராமர்
உள்ளதோர்குதிரையெல்லா முடன்வரவந்துபார்த்து
வள்ளையாயிட்சணத்தில்ஸ்ரீரமுமுள்ளதாகத
தெள்ளியயாகத்திற்குத் தேசியைக்கொண்டுவந்தார்

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-வசனம்

அகோவாருஞ்சுவாமி நாம்யாகஞ்செய்கிரதற்கு அந்தமுள்ளதாய் சவுரியமுள்ளதாய் தேகத்திற்சுழிகளில்லாததாய் முடிக்குள்ளதாய் நாலுகாலும் நடுநெற்றியும் வெண்மையாய் செவிமுன்பார்வையாய் இப்பேர்ப்பட்ட பஞ்சகலியாணிபுரவி கொண்டுவந்தோம் இது யாகஞ்செய்யலாமோ பாருஞ்சுவாமி

வசிஷடர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை

லட்சணமுள்ளதிந்த நலமுள்ளதேசிதானும்
இட்சணஞ்சிங்காரித்து வியலபெறபட்டங்கட்டி
தெட்சணங்கிழக்குமேற்குத் திக்கினிலனுப்பிப்பார்க்க
தட்சகனுஞ்சத்துருக்கன் றன்னைநீயனுப்புவாயே

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா இந்தப்புரவி மகாலட்சணமுள்ளது இதியாகத்திற்கேற்றதுதான் இதனைச்சிங்காரித்துவீரபட்டமுங்கட்டி இதன்பின் ரதகஜதுரகபதாதிகளையுங்கூட்டி நான்குதிக்குமனுப்பி இதற்குநாயகனாக உம்முடைய தம்பிசத்துருக்கனையனுப்பிப்பார்த்துவரச்சொல்லும்பிள்ளாய்

ஸ்ரீராமர்சொல்வசனம்

அப்படியேசெய்கிறேன்சுவாமி

ஸ்ரீராமர்-சத்துருக்கனுக்குச்சொல்-வசனம்.

அகோவாருந்தம்பி சத்துருக்கா நான்சொன்னபடி யெழுதுலாய்த (சத்-வ-ம்) அப்படியே யெழுதுகிறேனண்ணாவே

அறிக்கை.

இதனால் ஐம்பத்தாறுதேசத் தாசர்களுக்கும் அறிவிப்பதுயாதெ னில் அயோத்திபாபுரியை அரசுசெய்கின்ற ஸ்ரீ ராகவிரான் அஸ்வமேத யாகஞ்செய்கின்ற நிமித்தியார்த்தமாகத் தேசியின்மேல் சத்ருபயங்கரன் தனுர்வேதசாஸ்திரன் ரணரங்கசூரனென சத்துருக்கனருகிறேன் வல்ல மையுள்ளவர்களானல் தேசியைப்பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்து வெற் றியடையலாம் அப்படியுத்தஞ்செய்யச் சக்தியற்றவர்களானல் கப்பங் கட்டவேண்டியது என்றெழுதி தமதுதேசியின் லலாடத்திற்கட்டினர் த ம்பிசத்துருக்கா.

சத்துருக்கர்வசனம்.

அப்படியே தங்களுத்தாரப்படி யெழுதிகட்டினேன் சுவாமி

ஸ்ரீராமர்-சத்துருக்கருக்குச்சொல்-திபிகை

தம்பிசத்துருக்காநீதான் சதுரங்கசேனையோடும்
செம்மையாய்வாக்பவோசை சிறந்திடச்சென்றேயிந்த
அம்புவினாலுதிக்கும் அலவத்தைபறியப்பண்ணி
சம்பிரமதாகயிங்கு சலுதியில்வருகுவாயே

வ-ம் அகோமேளுந்தம்பிசத்துருக்கா இந்தக்குதிரையை சிங்காரித்து வீரபட்டங்கட்டி ரதகஜதுரகபதாதிகளேயும் கூட்டிக்கொண்டு நீயுஞ் சென்று நான்குதிக்கில் அறியப்பண்ணிவைத்து வாரும்தம்பிசத்துருக்கா (ச-வ-ம்) அப்படியே செய்துவருகிறேன் அண்ணாவே

சத்துருக்கர்-இராசாக்களுக்குச்சொல்-திபிதை

தண்ணுறுமன்னரோயிச் சதிருளதுரகந்தன்னை
வண்ணமாயலங்கரித்து வளர்பட்டங்கட்டிவைத்தேன்
மண்ணுறுவீரசூர மன்னவரொவராலும்
திண்ணுறுமிதைப்பிடித்தாற் ஜெயம்பெறச்சண்டைசெய்வீர்

வசனம்.

அகோவாருங்கள் ராசாக்களே யாராகிலுஞ் சூராதிசூரர்கள் நம் முடையகுதிரையைப் பிடித்துக்கட்டி வந்தேதிரித்தால் நீங்களும் சண் டைசெய்யுங்கள் ராசர்களேயென்றுசொன்னர்

(ராசர்கள்-வசனம்) அப்படியேசெய்கிறேனையா

குதிரைபுறப்படுகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-சாபுதாளம்

பல்லவி.

வீரபட்டங்கட்டிவிட்டார்கள்
வீரபட்டங்கட்டிவிட்டார்கள் அஸ்வத்திற்கு

அநுபல்லவி.

வீரபட்டங்கட்டிவிட்டார் வீரருள்ளதேசிதன்னை
பாரிலுள்ளோர்வந்தெதிர்த்தால் காரியமுடிப்பேனென்று வீர

சரணங்கள்

பேரிகைமுரசுவிம்ம காரடிமுழக்குஞ்செய்ய
வாரிபோலிடிமுழக்க பாரின்மன்னவர்மயக்க — வீர

வெற்றியுள்ளராசராஞோர் யித்தலத்தில்வந்தெதிர்த்தால்
சுற்றமாகவெட்டுவேனென்று பற்றிசெயங்கொள்வேனென்று

வெப்பவல்குளம்விளங்கச் செய்யவேஅயோத்திராமர்
வையகமறியவிப்போ பையவேதுரகத்திற்கு — வீர

சத்துருக்கர்-ராசாக்களுக்குச்சொல்-திபிதை

வாருடன்குதிரைதன்னை வண்மையாய்நடத்திக்கொண்டு
போகுவீர்நான்குதிக்கும் புகழவேவருவேனியானும்
சாகசமுள்ளோரோனும் க்ஷத்திரியராகவோனும்
வேகமாய்வந்தெதிர்த்தால்விருதுகள்பறிப்பேனுனே

வசனம்.

அகோகேளுங்கள்ராசர்களே வீரியமுள்ளராசர்கள் வந்தெதிர்த்தால் அவர்களை நான்சும்மாவிடுகிறதில்லை விருதுகளைப் பறித்துக்கொண்டு துரத்துகிறேன்பாருங்கள் ராஜாக்களே

சத்துருக்கர்வருகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தானேசத்துருக்கன் வாதுகூறியே

அநுபல்லவி.

விந்தையாளபுரவிதன்னை விரபட்டங்கட்டிவிட்டு — வந்

சரணங்கள்.

சிந்தையில்மகிழ்ச்சியிபாங்கச் சேனையும்பரிகளுடன்
வந்தெதிர்த்தமன்னவனை வானுலகேற்றுவேனென்று — வந்

சேனைக்கதிகாரிவந்து தென்புசொல்வேகமாக
நானேராசனென்குலம்போல் ராசரொவருமில்லையென்று — வந்

நித்தநித்தஞ்சத்தமான வெற்றியென்குலம்விளங்க
பக்தியானநீதிபிசகாது பாயவும்குலம்விளங்க — வந்

இக்கலத்திற்பேர்பெற்றவன் ஏவிசேனைபுரவிதன்னை
நெற்றிதனில்வீரபட்டம் நீங்கள்பாருங்களென்று — வந்

பொதுதிபிதை.

தீரனெழுபெருராசர்தானுந் தனைதனிற்கால்வையாமல்
..... சேனையெல்லாம் வகைபெறவுநடத்துக்கொண்டு

நின்றிதாக்கேசமாகி வெகுண்டுமேபுரவிபோக
ஆண்டசத்துருக்கன்சேனை யலறிபேசின்றிட்டானே

சேனாதிபதி-சத்துருக்கருக்குச்சொல்-விருத்தம்

வானூறுந்தேவரோனு மறிந்துடன்பிடிக்கமாட்டார்
தானதுபூமிதில்லா தைரியவஸ்வந்தானும்
கானகமகன்றுபோச்சு கைதனிற்பிடிபடாமல்
தானதுவலறிநின்றுற் றடுத்துமேபிடிக்கலாமோ

வசனம்.

அகோவாருமையா சத்துருக்கராசாவே குதிரை யெவர்களகையிலும் பிடிபடாமல் ஆகாயமார்க்கத்திலெழும்பி வனமெங்குமோடுகிறபோது யென்னசெய்யப் போகிறேஞ்சுவாமி

சத்துருக்கர்-இராசர்களுக்குச்சொல்விருத்தம்

வனத்தினிலோடிப்போன வடிவல்லதுரகந்தன்னை
சனித்துமேகிரிச்சிக்கொட்டி கொப்பெனப்பிடித்துவாரீர்
கனத்தமேதாரியாகத்துக்குக் காரியமுசவேணும்
அனர்த்தமவந்தனுகாமுன்ன மயோத்திநாமசேரவேணும்

வசனம.

அகோகேளும்ராசர்களே யாகத்திற்குக் குதிரையுதவவேணும் எப் படியாகிலும் உபாயமாய்ப்பிடித்துவாருங்கள் பிடித்துவந்த பேருக்கு வெதுமதிசெய்விக்கிறேன் ராசாக்களே

சேனைகள்-குதிரையைத்தேடிவருகிற கண்ணிகள்
இ-ம்-எதுகுலகாம்போதி-மிசுரதாளம்

அஷ்டதிக்கதிரவேகொக்கரித்துக்கொண்டு
அஸ்வத்தைத்தேடிவாரார்
கஷ்டிவாராமலேராமபத்திரருக்கு
நாமிருந்தென்னபலன்
விட்டபுரவிதன்னை யெட்டுதிக்கிலுங்காணோம்
வேதனைக்கென்னசெய்வோம்
பட்டக்கட்டவிட்டபுரவிபிடிக்கவே
படைத்தலைமன்னவர்கள்
முன்னேசொல்லிவந்தமிடுக்குமிழந்ததாலே
மோசங்கள்வந்துதென்று அஷ்ட

பொதுவிருத்தம்

இப்படியிருக்கும்போது யிருடியாசிரமருசேர்ந்த
செப்புமாஞ்சீதைபாள்தன் சிறுவருமெழுந்திருந்து
தப்பின்றித்தாங்கள்கற்ற தனுர்வித்தைபரிட்சைபார்க்கக்
கொப்பெனவேட்டையாடக் குசலவர்வருகின்றூரே

பொது-வசனம்.

அகோவிதப்படியென்றால் வர்ல்மீகராசிரமத்தில் சீதையின்குமாரர்களாகிய குசலவாள் வேட்டைக்குவருகிறவிதங்காண்க,

குசலவர்வருகிற-தரு-இ-ம-தோடி.-ஆதிதாளம்

பல்லவி.

வருகிறார்-குசலராசர் வருகிறாரேயிதோ

அநுபல்லவி.

மருவும்லவகுமாரன் வருகையிலடிகொண்டு வரு

சரணங்கள்

அங்கியையுமேற்றரித்து வங்கியையழகாய்ப்பூண்டு
அடவுடன்வேட்டையாட ஆயுதங்கையுடனே வரு
கிரசினிற்கின்னரஞ்சு சரிகைபுநமாலைகட்டி
அரையினிற்கால்மட்டுஞ் சரிகைகிசாருமிட்டு வரு

குசலவர்-சீதைக்குச்சொல்-திபிதை.

எங்களைப்பெற்றதாயே யினியதோர்வார்த்தைகேளும்
சங்கையிலசங்கள்கற்ற தனுர்வித்தையறியவேணும்
பொங்கமிவ்வனத்தில்வேட்டைப் புகழுடனாடிவாரோம்
எங்களையனுப்புமுந்த னிணையடிசரணமம்மா

வசனம்.

அகோகேளுந்தாயேநாங்களிதுவரைக்கும் ஆயுதவித்தைகற்றதை பரிட்சைபார்க்கவேணும் ஆகையால் இன்றையதினம் இக்குண்டாகிய வனத்திற்சென்று வேட்டையாடிவருகிறோம் செலவுகொடுத்தனுப்பு மம்மாதாயே.

சீதை-குசலவர்க்குச்சொல்- திபிதை.

என்னிடமக்களேயிவ் விருள்வனமறியீர்நீங்கள்
வன்னமாம்வேற்றையாடி வனத்திலேநல்லார்பொல்லார்
முன்னமேவந்தெதிர்த்தால் மோசமாமதனிலேலே
சின்னங்களாகுமென்றன் சிந்தையில்நினைக்கிறேனே.

வசனம்.

அகோவாருங்கள் குசலவர்களே இதுவரைக்கும் நீங்கள் வேட்டைக்குப்போய் அறியமாட்டீர்கள் வேட்டைக்குபபோனால் யாராகிலும் வந்தெதிர்த்தால் சின்னமாகுமென்று நினைக்கிறேன்மைந்தர்களே.

குசலவர்கள்-சீதைக்குச்சொல்- திபிதை.

என்னென்றுசொன்னீரம்மா யிப்படிசொல்லலாமோ
உன்னிடதிருவயிற்றி லுதித்தனம்தாயேகேளும்
வன்னவால்மீகாதாமு மகிழ்ந்துசொல்லுபதேசத்தால்
வன்னிடவேட்டையாடி வருதுவோம்விசாறவிற்றானே.

வசனம்.

அகோவாருந்தாயே என்னவார்த்தைசொன்னாய் உன்னுடைய திருவயிற்றில் நாங்கள் பிறந்ததுகண்டும் இப்படிசொல்லலாமோ வால்மீகருடைய சிஷ்டை அப்படி பாழுதுவராது யாராகிலும் வந்தெதிர்த்தால் எங்கள்சகிரத்திறல் செயம்பெற்றுவந்து உன்னுடை பாதாரவிந்தஞ் சேர்வைசெய்வோமம்மா.

சீதைசொல்-வசனம்.

ஆனாற் சீக்கிரம்போய்வாருங்கள் என்கண்மணிகளே

குசலவர்-வேட்டைக்குப்புறப்படுகிற-தரு
இ-ம்-சங்கராபரணம்-மிசுரதாளம்

பல்லவி,

வேட்டைக்குப்புறப்பட்டாரையா குசலராசர்
வேட்டைக்குப்புறப்பட்டாரையா

அநுபல்லவி.

வேட்டைக்குப்புறப்பட்டார்கள் தீட்டியதோரம்புகொண்டு
போட்டியாகவந்தெதிர்த்தால் மீட்டுவோம்சாங்கமென்று வேட்

சரணங்கள்.

சாலவேமனதுபொங்க பாலகரிருவர்தாமும்
வேல்விழிமினுத்துலங்க நீலவர்ணசச்சைகட்டி வேட்
கத்திக்குட்பிடியம்பு சச்சைக்குளிருக்கிக்கட்டி
வெற்றிவீரியங்கள்பேசி வேடிக்கையாய்கைவீசி வேட்
காட்டினிற்சிலமிருகம் சரும்புலியாளிமெல்லாம்
பூட்டியேசிரந்துணிந்து தாட்டீகமாய்வருவதற்கு வேட்

குசலன்-லவனுக்குச்சொல்-திபிதை.

தம்பிலவகுமாரா சனுதியில்வாராயிப்போ
வம்பெனுமிருகசாதி வருகிறதனேகமாகச்
செம்மதாய்காணிபூட்டி துரிதமாயெயவேணும்
அம்புமேயெடுத்துக்கொள்வா யடவியில்வேட்டைபார்ப்போம்.

வசனம்,

அகோவாருந்தம்பி லவகுமாரா இந்தவனத்தில் மிருகசாதிகள் விஸ்தாரமாய்க் காண்பிக்கிறது இதுகளைப் பிடிக்கவேணும் அம்பையெடுத்துக்கொள் வேட்டையாடுவோம்.

லவன்சொல்-வசனம்.

அப்படியே யெடுத்துக்கொண்டே னண்ணாவே.

குசலவர்-வேட்டையாடுகிற-தரு-இ-ம்-காம்போதி திரிபுடைதாளம்

பல்லவி.

வனத்தில்வேட்டை யாடினாரையா குசலராசன்
வனத்தில்வேட்டை யாடினாரையா

அநுபல்லவி.

சனத்தசிங்கள் கணையுமெடுத்து
கரும்புலிகளை மிகவுமடித்து வனத்தில்

சரணங்கள்.

சிலைகள் கணையுமெடுத்துவருங்களைகள்மிகவும்பிடித்து வனத்தில்
மல்லகள்முயலையடித்துவரு மயிலினங்களைப்பிடித்து
வெல்லும் கணையையெடுத்துவரும் வேங்கைதனையுமடித்து
கொல்லு படைகளெடுத்து வருங்குயிலினங்களைப்பிடித்து வனத்தில்

பொது-திபிதை.

இருவருங்காணிற்கூடி யியலுடனன்றாய்வேட்டை
புரிந்துமெகைசலித்துப் புகழுடன்பிரிந்துபாலர்
மருவியேவனத்திற்பின்னும வாய்த்தகோர்பலாதிகொய்து
திரும்பிடும்வேளைதன்னிற் சிறுவனும்பரியைக்கண்டான்

பொது-வசனம்.

அதோதெப்படியென்றால் அந்தச்சமயத்தில் குசலவர்வனத்தில் வேட்டையாடி கைசலித்து இருவரும் இணைபிரிந்து கந்தமூல பலாதிகளைக்கொய்து வருகிறசமயத்தில் சிறியவனுகப்பட்ட லவகுமாரன் அவ்வத்தைக்கண்டு சொல்லுகிறவிதங்காண்க.

லவன்சொல்-திபிதை.

இதுயாவர்குதிரைநாம்வா ழெழில்வனம்வருவதென்ன
புதுமையாயப்பணிகள்மிக்கப் பூட்டியுந்நதலிறபட்டம்
அதிவீரசூராம ரஸ்வமென்றிருப்பதாலும்
ததியிதுவிடேன்வந்தோரைச் சண்டையில்வெல்லுவேனே.

வசனம.

ஆ-ஆ-இது யாவருடையகுதிரை அனேகமபணிகள்பூட்டி நெற்றியிலே ஸ்ரீராமருடைய பிரதாபத்தை யெழுதிக் கட்டியிருக்கின்றது ஆகிலும் நம்முடைய வனத்தில்வருவானேன் இனிவிடுகிறதில்லை இதனைத் தேடிவந்தவரை சண்டையில்வெல்லுவேன் சததுராதிகளைக்கொல்லுவேன் இதோ யிந்த வாழைமரத்திற் கட்டிவைததேன்.

சத்துருக்கர்சேனைகள் குதிரையைத்தேடிக்கொண்டு

வருகிற-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்

அந்தவேளை தன்னில்யாகாடவிதன்னிற்பரியைத்தேடி
வந்தவர்பரிகாணுமல் மனமதுதான்வளர்ந்து
சிந்தையானவைங்களெல்லாம் வேகமாகத்தேடிவாரார்
[illegible] திசைகளைத்தேடிவாரார்
[illegible] பரிதனைத்தேடிவாரார் அந்த

சேனைகள்-லவனுக்குச்சொல்-திபிதை,

இந்தமாவனத்தில்வந்த வெழிலுறுங்குதிரை தன்னை
விந்தையாய்க்கட்டி வைத்தா வனேயாம்பிள்ளையாநீ
சந்தமாம்வீரரோடு சவுரியமுனக்கடாது
அந்தமாங்குதிரைதன்னை அவிழ்த்துவிடுகுவாயே

வசனம்.

அகோவாருந்தம்பி உன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையாயிருக்கின்றா இந்தக் குதிரையைப்பிடித்து கட்டிவைத்தாயே உனக்கென்னவீராதிவீரருடன் வீம்புவேண்டாங் குதிரையை அவிழ்த்துவிடுவாய்தம்பி.

லவன்-சேனைகளுக்குச்சொல்-திபிதை.

குதிரையைப்பிடித்துக்கட்டிக் கொண்டவன்லவனென்கண்டீர்
பதறியேயெந்தனோடே பராக்கிரமஞ்செய்யவேண்டும்
சிதறியேயோடிவந்த சேனையைக்கொல்வேனுனே
மதியுடனுயிர்காப்பாற்றி வனத்தைவிட்டோடுவீரே

வசனம்.

அகோவாருங்கள் ராசாக்களே குதிரையைப்பிடித்துக் கட்டினவனான்றான் என்பேர் லவன் உங்கள் பராக்கிரமம் என்முன்னில்லாது உயிரைக்காப்பாற்றிக்கொண்டு ஓடிப்போங்கள் மன்னவர்களே.

பொது-திபிதை.

சேனைகள்கோடிகோடி திரள்பரிநாலுகோடி
யானைகளிரண்டுகோடி அணிமத்தேர்கள்கோடி
மானிலந்துளெழும்ப மலைமளும்பொடியதாக
வானவர்பார்த்திருக்க வந்தவர்பாலாமுன்னில்

லவன்-ராசர்களுக்குச்சொல்-திபிதை.

மலையெனநீங்களென்னை வந்துமேவளைத்தூக்கொண்டீர்
மலையெனபஞ்சுசேர்ந்தால் வனிமுன்னிற்குமோதான்
சலமுடன்திரிபுரத்தைச் சங்கரனெதிர்த்தாப்போலே
கலமுள்ளவாளினாலே நறுக்குவேனொடியிற்றானே

வசனம்.

அகோவாருங்கள் ராஜாக்களே என்னை நீங்களெதிர்த்தால் நான் பயப்படுவேனோ முன்னால் சிவன் திரிபுரத்தை யெரித்ததுபோல் உங்களை யெரித்துப்போடுவேன் வோடிப்போங்கள் ராசாக்களே.

ராசர்களுக்கும் - லவனுக்கும் - தர்க்கம்

இ-ம-சங்காபரணம-அடதாளம்.

ராஜாக்கள்-வோடிப்போங்களென்று வேடிக்கைபேசுகிறாய்
சொல்லல்-கூடிப்புரவிதன்னைக் கொண்டுபோவோமே

லவன் கொண்டுபோவோமென்றுகுதிக்கிறீர்வீரரே
சொல்லல்-கண்டீரோசிலைகையிற் காலனைப்போலே
ராஜாக்கள்-காலனென்றாலும் நாம்கட்டிப்போடுவோம்போடா
சொல்லல்-பாலனென்றேயஞ்சிப் பார்க்கிறோம்போடா
லவன் போடாவாடாவென்று புகல்கிறாயெங்களைச்
சொல்லல்-சாடுகிறேன்பாணத்தாற் றவித்திடப்பாரீர்
ராஜாக்கள்-பாரென்றுயெங்கள்மேற் பாணத்தைப்போடுகிறாய்
சொல்லல்-கூரம்பினாலுன்னைக் கொல்லுவோம்பாராய்
லவன் கொல்லுகிறோம்பாரென்று வல்லமைப்பேசுறாய்
சொல்லல்-கில்லுங்கள்செல்லுகிறேன் நிமிஷத்திற்பாரீர்
ராஜாக்கள்-நிமிஷத்திற்பாரென்று நெடியவிலதொடுக்கிறாய்
சொல்லல்-துமிசஞ்செய்யபாணந் தொடுக்கிறோம்பாராய்
சேனைகள் பிரலாபப்பட்டுவோடுகிற-தரு-இ-ம-மோகனம்-ரூபகதாளம்

பல்லவி.

சாத்தினான்சாத்தினானே பாணததினால் சாத்தினான்சாத்தினானே

அநுபல்லவி.

சாததினான்பாணத்தாலே க்ஷணத்தில்மனுவையெல்லாம்
ஆத்திருேபோலே அகணிசிழித்தாற்போலச் சாத்தி

சரணங்கள்.

வோடயிடங்காணோமென்னசெய்வோமையோ
கேடுகாலம்வந்து கிட்டிமுட்டி சாத்தி

வேறு-ஷீ-ராகதாளம்

சாடிசாடிவிட்டான் தரையில்வுதிரமோட்டக்
காடுசெடிகள்தன்னிற் கனக்கவோடவொட்டாமல் சாடி
வாதுபேசிவந்தவல்லாளகண்டாளரெலலாம்
போதும்போதுமென்றுபிணத்தின்கீழ்மடியவே சாடி
ஒருகோடிசேனையு மொன்றாகமடிந்தார்கள்
எருவாணராசாக்க ளெதிர்த்துப்போர்க்களத்தில் சாடி

சத்துருக்கிரிடம்-ஒருவன்வந்துசொல்-தரு
இ-ம-எதுகுலகாம்போதி-சாபுதாளம்,

பல்லவி.

தப்பிவந்தேனையா பதலமாய் தப்பிவந்தேனையா

சரணங்கள்.

தப்பிவந்தேனையா சாகப்பயந்துநான்
சொற்பனவயோத்தியிற் கூசாமல்வாழவே தப்
எப்படியுந்தேடியிங்கேவருவான்காண்
இப்படி இனியிங்கே யிருக்கவுமொண்ணாது தப்

சேனாபதி-சத்துருக்கருச்குச்சொல-திபிதை.

ஆசர்களரசேகேளீ ரறியாதபாலகனாுன்
புரவியைப்பிடித்துக்கட்டிப் போனசேனைகளையெல்லாம்

தரணியிலுருட்டிவிட்டான் தப்பினேனொருவனாக
விரைவினிலோடிவந்து விட்டேனன்சரணமையா

வசனம்.

அகோ காருண்யமையா சத்துருக்கமகாராசனே ஒருசிறுபிள்ளை யாரோ ராசவம்சமென்றிருக்கிறது அவன் நம்முடைய குதிரையைப்பிடித்துக்கட்டி எதிர்த்தவர்களெல்லாம் வெருவாய் மாய்த்துவிட்டான நான்மாத்திரந் தப்பித்துக்கொண்டோடி வந்துவிட்டேன் சுவாமி.

சத்துருக்கர்-சேனாதிபதிக்குச்சொல்-திபிதை.

சிறுபிள்ளையாலேவந்து சேனையைக்கொன்றானென்றாய்
பரிதியின்குலத்தில்வந்த பையலாமவனைநாமும்
அரிதியாய்க்கொல்லொணாது அவனையுமூர்ச்சையாக்கி
இரதத்திற்கட்டிக்கொண்டு யிட்சணம்வருவோம்வாரீர்

வசனம்.

அகோ சேனாபதியே சிறுபிள்ளையர் கொன்றவன் நல்லது அவனை நீ கொல்லாமல் மூர்ச்சையாக்கி ரதத்தைக்கட்டிக்கொண்டுவருவோம் வாரும் சேனைகளே.

பொது திபிதை.

திக்கெனச்சத்துருக்கர் தினகரனுதயம்போலப்
பக்குவரதத்திலேறிப் பரிதனையதட்டிவோட்டிக்
கொக்கரித்துரதங்கொண்டு கோபமாய்வனத்தில்வந்து
நிற்கிறலவனைப்பார்த்து நிற்புடனியம்புவாரே

பொது-வசனம்.

அகோ இப்படியென்றான் சத்துருக்கர் தேரிலேறி ரணக்களம்வந்து லவனைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

சத்துருக்கருக்கும்-லவனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்.

இ-ம-மோகனம-மிசுரதாளம்

சத்துருக்கர் ஆரடாசிறுபிள்ளாய் போரடாசெய்கிறாய்
சொல்லல் வீரிட்ச்செய்கிறேன் பாரும்வீரா
லவன் செய்யுறேனென்றுநீ வையுறாய்ராசனே
சொல்லல் எய்யுறேன்வாளினா லோடிப்போகாய்
சத்துருக்கர் வேடவேவந்துநான் உடனேபந்தனேயிப்போ
சொல்லல் வாடிடச்செய்கிறேன் பாரும்பாலா
லவன் ஆலமாலயன்கண் கோலமாய்வருகுது
சொல்லல் சாலவேயோடோயாய்ராசீவீரா
சத்துருக்கர் பாலநாம்பாம்பு கண்டாலுமோடியினால்
சொல்லல் பற்றியேஜாடுறேன்பாரும்பாலா
லவன் வெற்றியாய்க்கூடியே சுற்றியேநீவந்தாய்
சொல்லல் சற்றுநானஞ்சேனே பாரும்வீரா

சத்துருக்கர் அஞ்சிறுமென்று நீமிஞ்சியேபேசுகிறாய்
சொல்லல பஞ்சுபோற்ஜாடுகிறேன் பாரும்பாலா
லவன் என்னசெய்வேனென்று நீமிஞ்சிப்பேசுகிறீர்விறுப்
சொல்லல் பஞ்சுபோற்சாடுகிறேன் பாரும்வீரா
சத்துருக்கர் விட்டிடுபாணங்கள் பட்டுத்தெவ்வென்றுலவன்
சொல்லல் திட்டெனபூமியி விழுந்தனனே

பொது-திபிதை.

முடிகியேசத்துருக்கர் மூன்றுசாய்ப்பாணமெய்யக்
கடுகெனவதுவும்வந்து காவலாமலவன்கழுத்தில்
தொடுமலர்மாலையாகத் துன்னசத்துருக்கர்தானும்
மடமயிற்சீதைபாலனை மனதினிலெண்ணுவானே

சத்துருக்கர்-லவனைக்கட்டல-கண்ணிகள்-இ-ம்

எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

ஏரணிசத்துருக்கர் பிடித்தசோர்விலறுந்து
வீரியமாகவேதான் விளையாடயிக்குலசதி
தார்குழற்சீதைதனைனச் சதிருடன்போற்றிசெய்து
ஏரணிவில்லைவாங்கி யியலுடனேகும்போது
ஒடியேமன்னனவந்து ஒடித்ததோர்விலவினாலே
சாடியேபாலன்வீழ்ந்து சுயங்கவேசாடித்தான்
வாடியேலவகுமாரன் வலியதோர்விலலினாலே
நீடியே பூமிதன்னில நின்றவன்றான்விழுந்தான்
எடுத்தவனசத்துருக்கராசன்றுபமுராமனென்று
துடைத்தனன்மேனிதன்னைச் சுனையுளநீரினாலே
திடுக்கெனபாலன்றன்னைத் தேரினிற்கட்டிக்கொண்டு
விடுத்தனன்திரைகொண்டு வேந்தனுமயோத்திநோக்கி

சத்துருக்கர்சேனைகளைத் திருப்பிக்கொண்டுபோகிற-கண்ணி-இ-ம்

எதுகுலகாம்போதி-அடதாளம்

பல்லவி.

ஜெயங்கொண்டுவாராரே-சத்துருக்கரும்-ஜெயங்கொண்டுவாராரே

சரணங்கள்.

ஜெயங்கொண்டுவாராரோ ஜெபலவனைப்பிடித்து
மயங்கொண்டவுலகத்திலமைந்தனென்றறிந்து ஜெய
சேனைகாவலாருந்ததிமிதிமியென்னவே
திரளாய்வாத்தியஞ்ஜாட யானையாவுமிருங்க

பொது-திபிதை.

[illegible] ராஜமகாராசன் தனித்திடலவனைக்கட்டி.
அந்தமாமயோத்திநோக்கி அடவுடனடக்கும்போது

சந்தங்கொள்கன்னிமார்கள் கண்டிந்தச்சேதிதன்னைச்
சுந்தரச்சீதைமுன்போய்ச் சோபமாய்ச்சொல்லுவாரே,

வனக்கன்னிகள்-சீதைக்குச்சொல-தரு-இ-ம

எதுகுலகாம்போதி-ரூபகதாளம்

பல்லவி,

சீதாயென்னசொல்வோம்-லவன்சேதி-மாதாயென்னசொல்வோம்

அநுபல்லவி.

சீதாயென்னசொல்வோ மாதாவுன்மைந்தன்
ஏதோராஜர்காட்டிற் சூதாயெடுத்துபோறார் சீதா

சரணங்கள்.

தனியேயலவனகாட்டிலவருகவேபின்பு
தாஷ்டீகதுரகமொன்றுருகவே
முனிவன்கண்டுகோபம்பெருகமே-அதை
மூர்க்கமுடன்கட்டியிருகவே
விரிவாய்வீரர்கூடிவேகத்துறகங்கேட்கக்
குருமுனியருளாலேகொன்றானவக்களைச் சீதா
கண்டுராசர்தோமேலேறியே உந்தன்
காளைமீதிற்சரமாரியே
விண்டுபாலன்றன்னைமீறியே-நாளை
வேதைகொண்டுசோர்ந்தூறியே
தண்ணுயாளைகள்தங்கள்துரகங்களைச்
சதைக்கத்தேரிற்கட்டிப்பதைக்கக்கொண்டுபோறார் சீதா

விருத்தம,

மைந்தன்தன்வார்த்தைகேட்டு மாநிலந்தன்னிலவீழ்ந்து
சிந்தையுங்கூடுமென்னச் சிறுவனைநினைத்துவாடிச்
சுந்தரமுகங்களெல்லாஞ் சோர்ந்துமெய்மறந்துவாடிச்
சிந்தையிலராமாவென்று சீதையும்புலம்புவாளே

சீதை-பிரலாபிக்கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாயம்

ஐயையோநானென்னசெய்வேன் லவகுமாரமகனே-என்
ஞசையுள்ளகண்மணியே லவகுமாரா
என்னமாய்மனந்துணிந்து லவகுமாரா-மகனே
என்னுயிர்தரிப்பேனோ லவகுமாரா-நீ
சொன்னதொருவார்த்தைகேட்டு லவகுமாரா-மகனே
துடிக்குதையோதேகமெல்லாம் லவகுமாரா
பட்சியானவாய்மொழியா லவகுமாரா-வெகு
தாஷ்டீகங்கள்சொன்னயடா லவகுமாரா
கட்டவுன்னைராசர்வந்தா லவகுமாரா-அப்போ
வெட்டவுங்கையில்லையோடா லவகுமாரா

எட்டுத்திசைராஜரெல்லாம் லவகுமாரா-உனக்
 கீடல்லவென்றுசொன்னாய் லவகுமாரா
மன்மதனைப்போலவுன்னை லவகுமாரா-நான்
 வனத்தில்வேட்டைபோகவிட்டே லவகுமாரா
காட்டிற்குநீபோறபோது லவகுமாரா-அங்கே
 போட்டிவந்ததோநீதான் லவகுமாரா
வேட்டைக்குநீபோறபோது லவகுமாரா-வெகு
 காடைகள்கொண்டையோடா லவகுமாரா
கூடியோரவனத்திற்போனீர் லவகுமாரா-மூத்த
 குசலவனெங்கேபோனானடா லவகுமாரா

சீதைசொல்-திபிந்த.

வையநாள்வாயென்ன மனமகிழ்ந்திருந்தவென்னை
உய்யவேயடவிதன்னி லொண்டியாய்விட்டாயோடா
பையவேதேரிற்கட்டியப் பாரினிற்போரார்சோதரன்
ஐயையோமகனேநீதா னலறியேப்பத்தாயோடா

வசனம்.

அப்பா மகனே லவகுமாரா அயோத்தியைப் பட்டங்கட்டிக்கொண்டு அரசாட்சிசெய்வாயென்றிருந்தேனே இப்போது என்னை அலையும்படியாய்க் காட்டிலே தவிக்கவிட்டாய் உன்னைத் தேரிற்கட்டிக்கொண்டு போனார்களே நான்யென்னசெய்வேன் பெண்சீவன்மகனே.

சீதை-பிரலாபத்-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி.

திக்கினிவேறுமுண்டோ ஜெகந்தனில் திக்கினிவேறுமுண்டோ

அநுபல்லவி.

திக்கினிவேறில்லைச் சிறுவனுமடிந்தானே
 ஒடுக்கவேயவனுடன் உயிரைமாய்த்துக்கொள்வேன் திக்

சரணங்கள்.

பெற்றவயரெனக்கு பத்தியெரியுதடா
 இத்தரணிமீது சிவனைவிடுவேண்டா
பத்துமாசஞ்சுமந்து பெற்றவயிறெனக்கு
 மெத்தக்குழம்பியே வேதனையாச்சுதடா திக்

சீதைசொல்-திபிதை.

உந்தனைப்பெற்றபின்பு வெருந்துறைவொண்றுமற்றுன்
செந்திருவயோத்திராமர் சேதியைமறந்திருந்தேன்
பந்தமாய்குதிரைக்காகப் படைதனிலகப்பட்டாயோ
எந்தனுருயிரையிப்போ யியவுடன்விடுவேன்மைந்தா.

வசனம்.

அப்பா லவகுமாரா உன்னைப்பெற்றபின்பு என் துயரமெல்லாம் மறந்திருந்தேன் என் பிராணநாயகரான ரகுநாயகரையும் மறந்தேன்

இப்போது ஒரு குதிரைக்காகச் சண்டைபண்ணிக் கட்டுப்பட்டாயோ இனி என்னுயிரை இங்கேவிடுகிறேனடாமகனே.

சீதைபுலம்பல்-தரு-இ-ம-ஆகிரி-அடதாளம்

பல்லவி.

வந்தவேளையிதுவோ வனந்தனில் வந்தவேளையிதுவோ.

அநுபல்லவி.

வந்தவேளைதன்னில் வனத்தில்வேட்டைபோன
சொந்தமைந்தலவநான் துடிக்கக்கொடுத்தேனே வந்த

சரணங்கள்.

செந்திருவயோத்தி தசரதகுமாரர்
சொந்தநாயகனைத் துயரத்துடனேவிட்டு வந்த
மைந்தரிருவர்கள் வனத்தினிற்போகவும்
சிந்தைதளர்ந்துநான் சீவனைவிடுவேனே வந்த

சீதைசொல்.திபிதை.

என்னிடதந்தைதானு மிவ்விடம்வந்தாரானாற்
றுன்னியசிறுவரெங்கே சொலவெனமுனகேட்பாரோ
என்னென்றுசொலவேனையோ இப்பழிக்கியாதுசொல்வேன்
சின்னதோர்புத்தியாலே சிறுவரையனுப்பினேனே

வசனம்,

ஐயையோ என் தந்தையாகிய வால்மீகர்வந்து எங்கே வுன்குமாரர் இவவிடம் பூங்காவனத்தைக் காத்துக்கொண்டிருக்கவும் உனக்குங் காவலாய் வைத்துப்போனமைந்தரெங்கேயென்றால்என்னசொல்வேன் அரிகரி.

குசலன்-சீதைக்குச்சொல்-திபிதை.

என்னிடதாயேகேளா யித்தனைதுயரமென்ன
மன்னியவேட்டையாடி மகிழ்வுடன்லவனைநானு
முன்னமேயனுப்பினேனே மோசம்போனானோகாணேன்
அன்னையேயெந்தனுக்கு அருளிச்செய்திடுகுவாயே.

வசனம்.

அகோகேளுந்தாயே நாங்கள் உன்னிடத்தில் செலவுபெற்றுவேட்டைக்குப்போய் வேட்டையாடித் தம்பியாகிய லவனை முன்னம்வீட்டுக்கு அனுப்பிவைத்தேனே அவனெங்கே நீ-பிரலாபிக்கிறவிதமென்ன சொலவாய்தாயே.

சீதை-குசலவனுக்குச்சொல்-திபிதை.

பூவனந்தன்னில்வந்த புரவியைலவனுங்கட்டச்
சேவகர்திரண்டுவந்து செத்தனர்தம்பிகையாற்
பாவியாமன்னன்வந்து பார்தனில்விழவடித்துக்
சாலவே கட்டிக்கொண்டு சடுதியாய்ப்போகின்றாராம்

வசனம்.

அகோவாரார்ய்மகனே வனத்தில் ஒரு குதிரைவந்ததாம் அந்தக் குதிரையை லவன் கட்டினும்பாரோ ராசாக்கள்வந்து சண்டைசெய்து லவனைப்பிடித்துத் தேரிற் கட்டிக்கொண்டுபோறார்களாம் அது கேட்டு என்வயிறு பத்திக்கொண்டெறியுதடாமகனே.

குசலன்-சீதைக்குச்சொல்-திபிதை.

எந்தனைப்பெற்ற தாயே யித்தனைத்துயரமென்றன்
னைமந்தநானிருக்கவுந்தன் மனதிற்கிலேசமாமோ
எந்தனையனுப்புமம்மா யிட்சணமவரைக்கொன்று
சந்தமாய்லவனைக்கூட்டிச் சனுதியில்வருகுவேனே.

வசனம்.

அகோகேளுந்தாயே உனக்குத் துயரமவேண்டாம் நானிருக்க என்னகுறை என்னையனுப்பிவைத்தால் அவர்களைக்கொன்று லவகுமாரனை யிட்டுக்கொண்டு வருகிறேனம்மா.

சீதை-குசலனுக்குச்சொல்-திபிதை.

அண்டர்வந்தெதிர்த்தபோதும் அசுரர்களெதிர்த்தபோதும்
எண்டிசையுள்ளராசரெவர்கள்வந்தெதிர்த்தபோதும்
கண்டிதஞ்செய்வதாகக் கலக்கமிலலாள்நானல்
கொண்டவிக்கணையால்மன்னர் கூட்டத்தைவென்றுவாராய்.

வசனம்.

அகோவாரும்மகனே மும்மூர்த்திகளவந்தெதிர்த்தாலும் அசுரர்கள்வந்தெதிர்த்தாலும் மண்டலாதிபதியாகிய ராசாநாக்கள் வந்தெதிர்த்தாலும் நான் பதிவிரதைபாயிருக்கிறது மெய்யானல் இந்தபாணமவதிராளிகளைக் கண்டிக்கவேண்டியது நீ பத்திரமாய் லவனை மீட்டுக்கொண்டு சீக்கிரமாய் வருவாய்மகனே.

பொது-திபிதை.

பட்டயம்பரிசுகத்தி பாரியசிலைகள்பாணம்
திட்டெனவாங்கிக்கொண்டு சீருடன்கவசம்பூண்டு
மட்டறச்செல்லுஞ்சேனை வாரியைக்கொல்வேனென்று
கிட்டியேகுசலன்வந்து கிரியெனததோன்றினனே.

குசலனசொல்-கண்ணிகள்-இ-ம்-யமுனுகலயாணி-அடதாளம்.

ஆரடாவனந்தனி லானைசேனையுடன்
போரசெய்துலவனையே பிடித்துப்போரவர்கள் ஆர
பாரடாயென்னிட பாணததிறந்தனைக்
கூறுவாயவாளிறற் சொல்லுவேனுன்னையே ஆர
சேரவேவந்துஎன் சேதியைக்கேட்டுநீ
போர்செய்துகுதிரையைப் பிடித்துபோனீரோ ஆர

சமோழுலகத்தவரி யெல்லாம்செகதீரவுந்தால்
பாரில்விழுந்திடவே பாணத்தைதவிடுவேன் ஆ௫
காணிசிலையைகயி லெதிர்க்கவர்களாகில்
மாரிபோற்சரங்களை வாரிவிடுவார்போய ஆ௭

சேனாதிபதி-சத்துருக்கருக்குச்சொல்-திபிதை.

கண்டுமோராவாசேயிக் காளையின்கூடாத்தைக்
சண்டேறுவன்றியிக்குச் சங்காஅத்துதனை காட்டுறு
கொண்டலன்சுருபன முன்னு குமாரேனுவதியாமையா
அண்டமும்கெகுநித்த னைடக்கல்கருமையா

வசனம்.

அகோவாருஞ்சுவாமி சத்துருக்கமகாராசாவே இதோவருகிறவன் ஆரோ சண்டனோ அல்லவென்று மிண்டனோ காலனோ குமாரவேளோ எங்களுக்குப் பயமாயிருக்கிறது காக்கவேணுஞ்சுவாமி.

சத்துருக்கர்-சேனாதிபதிக்குச்சொல்-வசனம்.

பயம்படாதிர்கள் அவனைச்செயிக்கப்போகாதோ சேனாதிபதிகளே.

குசலன்-ராசர்களுக்குச்சொல்-திபிதை.

முந்தியவுங்கள்வீர முடுக்குஞ்சாமாத்தியமெல்லாம்
எந்தன்னைகபாணத்தாலே யேங்கியேசாகவேண்டாம்
சந்தமென்றம்பிதன்னைச் சனுதியில்விட்டுநீங்கள்
சிந்தையிற்சிவன்தப்பிச் செலனுவீர்வனத்தைவிட்டே.

வசனம்.

அகோவாருங்கள் ராசாக்களே ஏன் விருதாவிற் சாகவேணும் சுமமாய் குதிரையையும் லவனையுவிட்டு நீங்கள் உயிர்தப்பிப்பிழையுங்கள் ராசாக்களே.

சத்துருக்கர்-குசலனுக்குச்சொல்-திபிதை.

சிறுபிள்ளைபோலேவந்து சேனையைக்கொல்வேனென்றாய்
அறிவையோஎங்கட்சேனை அசுரர்கள்வலுமைதன்னைத்
திறமைசோமரின்சேதி தெரியுமேவுந்தனுக்கு
நிறையவேசொரிந்தாற்பாணம் நிலைநிற்கமாட்டாய்நீயே

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் சிறுபிள்ளைபோற்காணுது நீயா யெங்கள் சேனையெல்லாம் கொல்லுகிறவன் எங்கள் சேதியை யறியமாட்டாய் சிறுபிள்ளையானபடியால் உனக்குத் தெரியமாட்டாது வீணாய் மடிந்து போகவேண்டாம் ஓடிப்போவாய்தம்பி.

பொது-திபிதை.

மானைகள்பட்டுவீழ அட்டத்திக்கும்புரளவீழ
சேனைப்பொடியதாகத் தேராணிமடிந்துவீழ

மாளிலத்தில்ரத்தாறு மதவுகள்போலேயோட
ஜானகிலைகன்பனன்றாய்ச சாடினான் க்ஷணத்தில்தானே

சத்துருக்கர்-குசலனுக்குச்சொல-திபிதை,

ஆடா சிறுபிள்ளாய்நீ அசுரர்வங்கிஷமோ சொல்வாய்
பாரடா யென்தன் கையின் பாணத்தைத்தொடுப்பேனாகிற்
சாரவேயென்றுநீயுஞ் சரிசெய்துநிற்கமாட்டாய்
காரியந்தனைச்சொன்னேன் காலையேவிலகிப்போடா.

வசனம்.

அடா நீ சுரர்வங்கிஷம்போற் காணுது என்னுடையபாணத்தைத் தொடுத்தேனாகில் நிற்கமாட்டாய் இந்தப் பாலேவனம் அறியும்படியாய்ச் சொல்லுகிறேன் நீ அடிபட்டு விருதாவாகச் சாகவேண்டாம் சுகமாய் விலகிப்போம்பிள்ளாய்.

சத்துருக்கருக்கும்-குசலனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-மோகனம்-மீசுராதாளம்.

குசலன் சொல்லல்
விலகிப்போகாதோ என்றும்வீரியம்போசாதே
கலங்கிவிழிபாணம் நாணவிடுவேனே

சத்துருக்கர் சொல்லல்
விடுவேன்பாணமென்று வீரியம்பேசாதே
சடுதியிலுனைவிழச் சாடுவேன்பாராய்

குசலன் சொல்லல்
சாடுவேன்பாரென்று சவுரியம்பேசுறாய்
போடுறேன்பாணங்கள் பிடியடாபார்ப்போம்

சத்துருக்கர் சொல்லல்
பிடியென்றுபாணத்தை பொடியாய்கணையெடுத்து
வடிவுள்ளபாணத்தை வரவிடுபார்ப்போம்

குசலன் சொல்லல்
பார்ப்பாமென் றென்னுடன்காட்டாதே
தோர்ப்பிகெலிப்புணக்குத் தோற்றுதுபோய்போம்

சத்துருக்கர் சொல்லல்
போவென்றுபின்னேயும் பினத்துராயென்னடா
பாவம்பாலனென்று பாணமொன்றெடுத்தே

பொதுவில் சொல்லல்
எடுத்தக்கணைதொடுத்து மிடுக்குள்ளபாலகனை
அடிக்காமற்பிடிக்கச் சத்துருக்கருமவிழுந்தார்

பொது திபிகை,

தேரினிற்கட்டுப்பட்ட சிறுவனைபவிழ்த்துவிட்டார்
திரளவந்துஅண்ணன் திருவடிதெண்டனிட்டான்
போரணிகுதிரை தன்னைப் பிடித்தவர்கட்டிக்கொண்டு
வீரியமாகவேதான் விளங்கியேயிருக்கின்றாரே

இதுவுமது.

ஐயமீனாளர்க்களத்திற் பட்டவர்மேல்விழுந்தார்
செய்யமறையிறைத்தபோர்க ளோடியேவனமறைந்தார்

செய்யுவதியாதென்று திகைத்திட்டுமனமயங்கி
ஐபகோவென்றயோத்தி அட்சணமோடுற்றார்.

வசனம்.

அகோ செப்படியென்றால் சிறுபிள்ளைகையில் அடிபட்டசேனைகள் அயோத்தியைநோக்கிப் போகிறவிதங்காண்க.

தரு-இ-ம்-எ துகுலகாம்போதி-மிசுரதாளம்

பல்லவி.

ஒருமட்டாய்மடிந்தாரையா ராமர்சேனை
ஒருமட்டாய்மடிந்தாரையா

அநுபல்லவி,

ஒருமட்டாய்வனத்தனி லோடிமடிந்தபேர்க்கு
எரியிட்டுச்சுடுவோமென்றா லொருமுட்டைகிடையாது ஒரு

சரணங்கள்-

யானைகள்சேனைகள் அடாந்தபயிரினங்கள்
கானகந்தன்னிலே கனக்கவேபோர்செய
தேரணிதன்னோடே யோணிதாராசாக்கள்
ஆரணியந்தனி லடைவாகப்போர்செய்து
வலுவுள்ளராசாக்கள் காதுகூறிவந்து
ஒருவருமெதிரிலாச்சிறு பிள்ளை தன்கையால் ஒரு

சேனைகள்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை:

சீருள்ளஅயோத்தியாளுந் தசரதராமாகேளீர்
அரண்யச்சிறுவரோ அஸ்வத்தைபிடித்துக்கட்டி
பேருள்ளமன்னரோடே பெருஞ்சமர்செய்துவந்தார்
தாரணிதனிலும்பிறமபி சத்துருக்கர்விழுந்தாரையா

வசனம்.

அகோவாருஞ்சுவாமி ராமபத்திரரே ஆரணியத்தில் ஆரோ சிறுபிள்ளைகள் அஸ்வத்தைப்பிடித்துக கட்டிக்கொண்டார்கள் நாங்கள்சென்று குதிரையைவிடச்சொன்னால் விடுகிறதில்லையென்று எதிர்த்து யுத்தஞ்செயது சத்துருக்கர் மூர்ச்சையாய் விழுந்துப்போனார்சுவாமி.

ஸ்ரீராமர்-சேனைகளுக்குச்சொல்-திபிதை.

செயம்பெற்றார்சிறுவர்தானோ திருபயினோநீங்கள்தானோ
பயந்துமேசொல்கிறீரோ பயந்தாப்போர்க்களத்தில்
தங்கியசத்துருக்கன் தானுமேவிழுந்துவிட்டானோ
உயர்ந்தவர்செயித்தவாறு முழுபழமுறைத்திடீரோ

வசனம்;

அகோவாரும்சகள் சேனாபதி சிறுவரா செயித்தபேர்கள் நீங்கள் பயந்து சும்மா சொல்லுகிறீர்களா சத்துருக்கன விழுந்துபோனானு

நல்லது செயித்தவர்கள் ரூபத்தை யெனக்குத் தெரியச்சொல்லும் சேனதிபதிகளே.

சேனைகள்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

வாதுசேர்சிறுவாதங்கள் வடிவதுவுமைப்போலுற்றார்
பூதலத்தினிலுள்ளோரைப் புதல்வருக்கெதிருமில்லை
வேதனேசிறுவர்நின்று மிகுசரந்தொடுத்தாரையா
நாதனே யவர்கள்கையில் நாங்களுந்தப்பிவந்தோம்

வசனம்.

அகோவாருஞ்சுவாமி ராமபத்திரரே வனத்தில் சண்டைபண்ணு கிற சிறுவர்கள் ஐந்தெழுத்தும்பாலனையும் தங்களைப்போலிருக்கிறார்கள் அவர்களுக்கு எதிரான ராசாக்கள் எட்டுத்திக்கிலுமில்லை அவர்களால் சத்துருக்கர் மூர்ச்சையானார் நாங்கள் தப்பிவந்தது மகா அருமை சுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-சண்ணிகள்

இ-ம்-எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

என்னவிந்தைஎன்னவிந்தை தம்பிகேழ்க்க
யென்மனம்பதைக்குதடா தம்பி என்ன
மன்னவரிதையறிந்தால் தம்பி வளம்பெறநகைத்திட்டாரோ
கற்றிடும்பாணவித்தை தம்பி கடலிற்கரைந்திட்டாயோ தம்பி
சுற்றிவருஞ்சேனையோடு தம்பி சோர்ந்துமூர்ச்சையானயோடா
சிற்றடிசிறுவர்கையில தம்பி தேங்கியேமூர்ச்சையானேயோடாதம்பி

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

தம்பிலட்மணரேகேளாய் சடுக்கெனவேகியிப்போ
அம்பினுற்செயித்தபால ரவரையுமபிடித்துக்கொண்டு
தென்புள்ளகுதிரைதன்னை சீக்கிரமாயக்கட்டிக்கொண்டு
தம்பிசத்துருக்காகூட சலுதியில்வந்திடாயே.

வசனம்.

அகோவாருந்தம்பி! லட்சுமணு வனத்திற் சண்டைபண்ணுகிற சிறுவரைப் பிடித்துக்கொண்டு குதிரையையும் விடுவித்துக்கொண்டு சீக்கிரம் வருவாய்தமபி லட்சுமணு.

லட்சுமணர் - ஸ்ரீராமருக்குச்சொல் - திபிதை.

மன்னவர்க்கரசேயுந்தன் மலரடிசரணமையா
சொன்னசொற்படியேயிப்போ துய்ய[illegible]

அன்னகர்சென்றுதம்பி அஸ்வமும்பாலர்கூட
இன்னகர்கொண்டுவாரே னிணையடிபோற்றிபோற்றி.

வசனம்.

அகோவாரும் அண்ணாவே அப்படியேசென்று நம்முடைய அஸ்வமும் தம்பி சத்துருக்கனையும் அந்தச் சிறுவர்களையும் கூட்டிக்கொண்டுவருகிறேன் அண்ணாவே.

பொது-திபிதை!

தேவர்களுமூன்றுகோடி சேனைகளளவுமில்லை
வீரியயானைமாவும் வெணைத்துதேரமேவ
கூரியபாணர்வில்லுங் குவிப்புள்ளசூலம்வாளும்
சேரவேதானெடுத்துச் சீக்கிரம்பயணமானார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் லட்சுமணப்பெருமாள் ஸ்ரீரகுநாயகர்சொன்னமாத்திரத்தில் அளவில்லாதசேனைகள் தேர்கள் யானைகள் பாணம் வில் சூலமுதலாகியது மெடுத்துக்கொண்டு வருகிறவிதங்காண்க.

லட்சுமணர்-புறப்படுகிற-கண்ணிகள்-இம்-முகாரி-திரிபுடைதாளம்.

கொடிமுடியதிரவே கொக்கரித்துஆர்ப்பரித்து
கடகடென்றுதேர்களோட்டி கானகத்திற்றேடிவாரார்
கொட்டியவிருதுமேளம் கோடையிடிபோலமுழங்க
திட்டமுடனரசசேனை லட்சுமணருந்தோணினரே.
முடில்லாதராம்பாணம்ஸ்ரீவாகுடனேவில்லெடுத்து
பதினெட்டுப்படைத்தலைவர் பாங்குடனேதேர்களோட்டி
எதிரில்லையென்றுசொல்லி யெதிர்த்துடனேமுன்னடக்க
வடிவுள்ளலட்சுமணரும் வந்துமுன்றோன்றினரே.

பொது-திபிதை.

தடவரைப்பொடியதாகத் தருக்குடன்ரதங்களோட்டி
திடமுள்ளயானைசேனை தெளிவுள்ளபரிகளோட்ட
பொடியினால்மேகமேயப் புழுதியுங்கதிரைக்கப்ப
கொடியபோர்க்களத்தைதேடி கொக்கரித்துடன்வந்தாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் சேனாதிபதிகள் ரதங்களையதட்டியோட்டிப் பூமியெல்லாங் கிடுகிடென்று நடுங்கும்படியாய்தூசெழும்ப சூரியன் மறையும்படியாய் அதிவிரைத்துடனே ரணக்களத்திற்குவருகிறவிதங்காண்க.

சேனாதிபதி-குசலவருக்குச்சொல்-திபிதை.

இன்றெங்கள் பரிதன்னை [illegible] விடாமற்போனால்
[illegible]
[illegible]
பன்றிகள்போலக்கட்டிப் பதிகொண்டுபோவோம்வாரீர்.

வசனம்.

அகோராங்கள் தம்பிமாரகளே நீங்கள் பரியை விடுவதில்லைய நாங்கள் வெகுசனங்கள் வந்திருக்கிறோம் சும்மாய் குதிரையைவிட்டுப் போங்கள் பிள்ளாய்.

லவன்-இராசாக்களுக்குச்சொல்-திபிதை.

புரவியைவிடுவதில்லைப் புல்லரசர்களேகேளீர்
விரவினால்மலைகள்போலே வெணநூறுவிருவித்து
திரளினவனைவரிகூடித திக்கெணவாறுபோல
உருளவேசேனையெல்லா மொருவனேகொலவேன்பாரீர்

வசனம்.

அகோவாரு ராசாக்களே நான் குதிரையைவிடுகிறதில்லை நீங்கள் என்னைமிரட்டினால் நான பயப்படுவேனோ அப்படி பயப்படுவதில்லை இதோபாரத்தீர்களா உங்கள்சேனை போ மலைகள்போல விழுந்தது நீங் களுஞ் சாகவேண்டாம் வோடிப்போங்கள் ராசாக்களே இனியிருந்தால் நான ஒருவனை கொல்லுவேன்.

சேனாதிபதிக்கும்-குசலவருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம-சங்கராபரணம்-மிசரதாளம்.

ராசாக்கள் வோடிப்போங்களென்று வெகுகைபேசுறாய்
சொல்லவ. கூடிப்புரவிதன்னைக் கொண்டுவிட்டோமே
லவன் கொண்டுபோவோமென்று குதிக்கிறீர்வீரரே
சொல்லல் அன்டிறுங்களை அகந்செய்திடுவேன்
ராசாக்கள் அகந்செய்யுமுன்னிட அம்மனையைக்காட்டுவோம்
சொல்லல் இதக்கமாயப்பாலரென் றெண்ணினீரோம்போடா
லவன் போடாவாடாவென்று புகல்கிறீர்நீங்களும்
சொல்லல் ஈடேறபாணத்தாலே சாடுரேன்பாறீர்

பொது-திபிதை.

கவலையில்லாமல்வந்திங் காளைகளாலேநாமும்
அபசெயமானோமென்று அலறிடகாலசித்தன்
பவனியைவெட்டிவென்று பாலருங்கணைகளேவி
நவமணிதேரறுத்து நகைத்திடச்செய்திட்டாரோ

சேனாதிபதிகள்-பிரலாபித்தோடி-லட்சுமணருக்குச்சொல்

கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

என்னசெய்வோமலட்சுமணரே ஏதுசொல்வோம்லட்சுமணரே
வர்ணமானராசரொல்லா மடிந்தார்களிவனத்தில்
சிறுபிள்ளையிவர்களேதம் தேடியேகானகத்தில்
கடுகியேவருகிறார்கள் கலங்கியேயோடிவந்தோம்
மலைக்குமலைநடுவேலட்சுமணரே
மகாரிஷியெல்லையிலே லட்சுமணரே

கலங்கித்தவிக்கிறோமே லட்சுமணரே
கானகத்தில்ராசரெல்லாம் லட்சுமணரே

பொது-திபிதை.

பயப்படவேண்டாமநீங்கள் பரிவுடன்வாரீரென்று
செயப்படுலெட்சுமணருமப்போ செத்தவர்தமையெழுப்பி
தியப்புறுந்தம்பிமூர்ச்சைத் தெளிவித்துப்போரில்நின்று
நயப்புறுங்குசலவர்க்கு நன்மொழிகூறுவாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் லட்சுமணரானவர் சேனைகளுக்குத் தைரியஞ்சொல்லி போர்க்களம்வந்து இரததஜ துரகபதாதிகளுடன் எழுப்பி சத்துருக்கரையும் மூர்ச்சைதெளிவித்து குசலவர்களைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

லட்சுமணர்-குசலவர்க்குச்சொல-திபிதை.

வடிவினிலநீங்கள்க்ஷத்திரிய வம்சம்போற்காண்பாலே
திடமுடனுமஸ்திரஞ் சீருடன்றொடுக்காமுன்னம்
கடுகியேயுங்கள்பேரும் கதிந்ததாய்தந்தைபேரும்
அடவுடனறிவதாக அறைந்திடவேண்டுமிப்போ

வசனம்.

அகோவாருந்தம்பிமார்களே உன்னைப்பார்த்தால் க்ஷத்திரியவம்சம்போற் காணுகின்றது நீங்களார் உங்கள்பேரென்ன சிறுபிள்ளையாயிருக்கின்றீர்கள் சீக்கிரஞ் சொல்லுங்கள் சிறுவர்களே.

குசலவர்-லட்சுமணர்சொல-வசனம்.

அகோவாரும் ராசரே பனங்காட்டுநரி பலசலப்புக்கஞ்சுமோ அந்சாது அதுபோல எங்களைமிரட்டவந்தாய் நாங்கள் பயப்படுவதில்லை உன்னுலானதைப்பாரும்.

லட்சுமணர்-குசலவர்களுக்குச்சொல்-திபிதை.

எநதநற்புரவிதன்னை யிப்படிப்பிடிக்கலாமோ
வங்வர்புரவிகேட்டால் வப்பரிதனைவிடாமல்
தொந்தமாய்ச்சேனையெல்லாம் துணக்குறக்கொலலாமாமே
உந்தன்பேர்தநதைபேரு முறைத்திடாயினியானலும்

வசனம்.

அகோவாருஞ் சிறுவர்களே என்னுடைய குதிரையைப் பிடித்ததுமல்லாமல வந்துகேட்ட சேனைகளையும கண்டித்தீர்கள் இதுஞாயமா இனியாவது உங்கள் தாய்தந்தைபேரையும் உங்கள்பேரையும் சொல்லுவீர்கள் சிறுவர்களே.

குசலவர்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

பந்தயம்பேசிமெத்தப் படைவந்துபேசிடாமல்
எந்த தாய்தந்தை யாரோ எங்களைப்பெருமையிலும்

விந்தையாய்க்கேட்டவர்கள் விவேகமுமிம்மட்டோதான்
சந்தமாமுனக்குவீரந் தானுகிற்சண்டைசெய்வீர்

வசனம்.

அகோவாரும்ராசாவே மெத்தவுஞ் சபதம்பேசிவந்தவர்கள் மா ண்டதைக்கண்டிருந்தும் நீவந்து எங்கள் தாயதந்தைபேர் எங்கள்பேர் கேட்கவந்தாய் பகைகளத்திலெப்பாரியாகக்கூடாது உன்னால் சாமா த்தியமுண்டானால் பாரும்பார்ப்போம்.

லட்சுமணருக்கும்-குசலவருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-மோகனம்-அடதாளம்.

லட்சுமணர் சொல்லல் வாடாசிறுபிள்ளாய் வார்த்தைகள்தப்புறாய்
ஈடோநீயிப்போ யெதிர்க்துநீபேச

குசலவர் சொல்லல் எதிர்த்துப்பேசாமல்நா னிதக்கமாய்ப்பேசவோ
எதுக்கோடாவுனக்குநா னுறவுண்டோசொல்வாய்

லட்சுமணர் சொல்லல் சொல்லென்றுசிறுவாநீ மல்லாகவருகிறாய்
வல்லுயிர்தன்னைநான் மாய்க்கிறேன்பாராய்

குசலவர் சொல்லல் வல்லுயிர்தன்னைநீ சொல்லுந்தவரிடாமல்
எல்லோரும்பார்க்கவே யேகிடீர்பாணம்

குசலவர்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

என்னுடன்சொன்னவார்த்தை யினுடன்மறக்கவேண்டாம்
உன்னிடம்வலுமையுற்று வுயித்தியட்செய்யும்பார்ப்போம்
அன்னிலையில்லாவிட்டால் அடாந்திடவிப்போநானும்
மன்னியஅஸ்திரந்தனை வாகுடன்தொடுத்தேன்பாராய்

வசனம்.

அகோவாரும் ராசாவே இப்போதுசொன்னீரே அந்தவார்த்தை யை மறந்துவிடவேண்டாம் உனாலே திராணியுண்டானால் பாணந் தொடு இலலாவிட்டால் நானடிக்கிறேன்பாரும் நீரென்னை மிரட்டவே ண்டாம் நீர் வில்லெடுத்து மிரட்டினால் நான் பயப்படுவேனோ இதோ பாணந்தொடுத்தேன பாரும்ராசாவே.

லட்சுமணாசொல்-திபிதை.

என்னதான்செய்வேனையா சிறுவர்கள்பாணத்தாலே
சின்னபின்னங்களாகச் சிதைக்கிறாரிவர்கள்முன்னே
சென்னியிற்பிறைமுடித்த சிவனுமேசிற்கமாட்டார்
மன்னியவயோத்திராமர் மகிமையோவறிகிலேனே

வசனம்.

அரிகரி இந்தச் சிறுபிள்ளைகள் சற்றுகிலும்பயப்படாதவர்களோ டே என்னமாய் சண்டைசெய்வேன் ராகவா

சரு-இ-ம-புன்னாகவராளி-மீசுரதாளம்

லட்சுமணர்சொல்லல்.

புலியொரு ளிப்போலிருவென்று உன்னுடன்
போர்செய்யநான்பயப்படுவேனோ

அறிவையோ டெங்கள்தன்யானை சேனையெல்லாம்
இறைமையாய்ப் போகுறாய்சிதைக்கிறனைபாரடா பு
மெத்தமெக்கப் பேசிவிருது செலுத்தாதே
தத்திவிழுகிறாய்பாரடாவுன்னை
இத்தலமறியவேகுத்தியெறிக்கிறேன்
சித்தத்தில்வைத்துநீகூரடா
அக்குமத்திலலாமல் அதட்டுறாய்மெள்ள
யெதிர்க்குத்திக்கூறிப் பற்றிப்பிடித்திடுவேன் புர

குசலவர்சொல்லல்

ஆகட்டுமுங்களைவிடுவேனோநீங்கள்
அடாக்துவக்காம்பயப்படுவேனோ
வேகத்துடனிங்கேவிருதுபேசிவந்தீர்
சாதகிறேலேசதைக்கிறேன்சேனையை ஆகட்
காட்டில்வந்தவுன்னைவாட்டிடாமல்நானும்
கையிலாகாதென்றுபோவேனோநீ
கூட்டிவந்தசேனையைக்கொல்லாமலேயிப்போ
ஓரஞ்சத்திற்சண்டையைவிடுவேனோ
ஈட்டிபோட்டிபண்ணிமெதித்துக் குதிரையெல்லாம்
வெட்டிக்கிட்டிக்கட்டிவெட்டித்துணித்திடுவேன் ஆகட்

லட்சுமணர்சொல்லல்.

வெட்டித்துணிப்பேனென்றுமெட்டுக்கெதிறியவே
திட்டமாய்ச்சொன்னாய்கடபயலே இதோ
ஓட்டிக்குதிரையைப்பட்டணமோ உன்னை
கட்டிக்கொண்டுபோவேன்கையினாலே
கெட்டுப்போகவேண்டாந்துஷ்டப்பயல்களே
கூட்டிமாட்டிஆட்டிவாடும்வெனுயிரையும் புரவி

குசலவர் சொலலல்.

உருட்டவந்தாயென்னை மிரட்டவேண்டாமுன்
பிரட்டுகளெல்லாமறியவேண்டாமடா
திருட்டுப்பயலேநீவரட்டுதவளைபோலே
அதட்டினாலென்னபயமடா
முறுக்கியபயத்தினாலேகொழுக்கவுன்னாலாமோ
விட்டுக்கட்டுக்கட்டுக்கொட்டைபறப்பிடுவேன் ஆகட

லட்சுமணர்-குசலவர்க்குச்சொல்-திபிதை.

ஏதடாதிருபிள்ளாய்நீ யித்தனைகடினஞ்சொன்னாய
சூதடாசெய்தேனம்பால் துள்ளவேவிழவடித்தாய்
வாதடாசெய்யவேண்டாம் வன்மையாய்தூரகமவிட்டு
போதடாபோதுமுன்னை பணிந்தேயோடிப்போடா

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் எங்கள் குதிரையைப்பிடித்துக்கட்டி அதனையின்வந்த சேனைகளையெல்லாங் கொன்றவனே நீயோ நல்லது குதிரையைவிட்டுக் குடிபயோடிப்போனுலாயிற்று இல்லாவிட்டால் அனியாயமாய மடிந்துபோவாய் பாரும்பிள்ளாய்.

லவன் - லட்சுமணருக்குச்சொல் - திபிதை.

புற்றினிலீசல்கூடிப் பெரும்போக்குப்புறப்பட்டாப்போல்
இந்தச்சேனையோடே மேதடாயிங்குவந்து
சற்றுமஞ்சாமலென்முன் சாமர்த்தியம்பேசித்தோற்ற
க்ஷத்திரியநீயயானுற் சண்டையில்வென்றிடாயோ

வசனம்,

அடாவாடாராசனே புற்றிலேயீசலானது பெரும்போக்குவந்தாற்போல் சேனைகளைக் கூட்டிக்கொண்டுதோற்றும் சாமர்த்தியம்பேசுகிருய் நல்லக்ஷத்திரியனானுல் முன்னேநில்லடாபார்ப்போம்.

லட்சுமருக்கும் - குசலவர்க்கும் - தாக்கம்

இ - ப - புன்னுகவராளி - அடதாளம்

லட்சுமணர் சண்டைசெய்பவுன்னுலாகுமோசிறுபிள்ளாய்
சொலலல தனுவெடுக்கவகையுண்டோ
குசலவர் வகையொன்றுசொலலவதுமலைபொருந்தியபின்பு
சொலலல வலலமைகாணுவாய்ராசனே
லட்சுமணா வலலமைபேசிபேயிலலைநீயெடுக்கிருய
சொலலல வாணுலழிக்கப்போறேனபாலா
குசலவர் வாணுலழிப்பேனென்றுவலியவிலதொடுக்கிருய்
சொலலல வாவிடுத்தேனஸ்திரம்பாராய்ராசனே
லட்சுமணா விடுத்துடனஸ்திரகடுத்துமேலசிலைபதித்து
சொலலல வெடுகதேதொடுக்கிறேனபாலா
குசலயர் தொடுக்கிறேன்பாவென்றுதுடிக்கிருய்ராசனே
சொலலல மடிந்திடபாணமிதோபாராய்ராசனே
லட்சுமணர் மடிந்திடும்வலுமைகள்யெடுத்துநீபேசுருய்
சொலலல முடிக்கிறேன்மோகன அஸ்திரம்பாராய்
குசலவர் முடிக்கிபேராசனேமடித்திடமூர்ச்சையாய்
சொலலல தொடுத்தவன்குசலவன்பாராய்ராசனே

லவன் - குசலவனுக்குச்சொல் - திபிதை.

விட்டதோர்பாணந்தன்னை விழுந்திடவடித்தேன்பாராய்
[illegible] பூமியிற்பொடியதாகத்
[illegible] சிறுடன்சனங்களெல்லாம்
[illegible] பார்த்திடாய [illegible]

வசனம்.

அதோவாரும் அன்றோ அதிவீரபாராக்கிரமந்தானே வில்லை வளைத்து நாணியேற்றிப் பாணந்தொடுத்தான் தொடுத்தபாணத்தைத் தடுக்கும் பாணம்விட்டு அறுத்தேன் அவன்பிடித்தான் பாரும் அண்ணாவே.

சேனைகளை பிலாபித்துவருகிற-தரு-இ-ம-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

சேவகம்வேண்டாமடா அண்ணமாரே சேவகம்வேண்டாம்

அநுபல்லவி.

சேவகம்வேண்டமடா சிறுபிள்ளையவன்மெத்த
சாவுக்குத்துணிந்தலவோ சதைக்கிறான்சேனையை — சேவக

சரணங்கள்.

கூவாதேவாடாகொப்பெனவென்பின்னே
திவரமாகயோடிசெடியிற்பதுங்குவோம்
ஆவுமேய்த்துண்டாலுமடகாய்த்திரியலாம்
சாவுகளிலலாமலதனியேபிழைக்கலாம் — சேவ
வல்லாளகண்டனைவாளாலேவெட்டுறான்
யெல்லாரையுங்கொல்லுறானிந்தசிறுபிள்ளை — சேவ

சேனாதிபதி-ஸ்ரீராமருக்குச்சொல-திபிதை.

ஓடியேநாங்கள்சென்று வோராமற்சண்டைசெய்தோம்
நாடியேசிறுவரானோர் நம்மிடபடையையெல்லாம்
கூடியேசென்றுபின்பு கோலலட்மணருஞ்சோர்ந்து
வாடியேவிழுந்தார்வாச மலரடிசரணஞ்சுவாமி

வசனம்.

அதோவாருஞ்சுவாமி ரகுநாயகரே நம்முடையசெனங்களெல்லாம் அந்த சிறுவர்கையினால மடிந்தார்கள் அதில லட்சுமணரும் மூர்ச்சையானார் சுவாமி.

பொதுதிபிதை.

எங்கியேதரையிலவீழ்ந்து யிளையவர்சேதிகேட்டு
தாங்கியேமனந்தளர்ந்து சதுர்ப்பமதனையும்பார்த்து
பாங்குள்ளசீதையின்றி பணணப்போம்பாகத்தாலே
திங்கதுவந்ததென்று சிந்தையிற்றுயரமானான.

வசனம்.

அதோயிப்படியென்றால லட்சுமணர் மூர்ச்சையான சேதிகேட்டி ஸ்ரீராமர் துபரப்படுகிறவிதங்காணக.

ஸ்ரீராமா பிரலாபக்கண்ணிகள்.இ-ம-எதுகுலகாம்போதி

திரிபுடைதாளம்.

அதிகாயனிந்நிரசித்து அரக்கர்முதலசேனையெல்லாம்
மதிபாமல்கொன்றுவெட்டு வலியதோர் ம்பிநீயே

சதிரானவீரியத்தை தளர்ந்துமறந்தாயோடா
எதிரானபேருமில்லை என்றல்லவோநானிருந்தேன்
பரதரேசேதிகேளும் பாலரும்ரூபம்நானும்
திறமுள்ளசீதைதன்னைச் சினந்துநாமவனத்தில்விட்டோம்
இருவரையுந்தேறிதேற்றி யின்னகர்கொண்டுவந்தால்
தெரியுமோவவர்கள்தன்மைச் சேதியுங்கேழ்க்கலாமோ
என்னசெய்வேன்பரதரே யிளையவனும்விழுந்திட்டானும்

பரதர்-ஸ்ரீராமருக்குச்சொல-திபிதை.

போனவர்தம்மைநோக்கிப் புலம்பவும்நீதியுண்டோ
கானகமெரிந்திடாமல் கண்டதுபோலிருப்பார்
வானவரெதிருமில்லை வன்மைசேர்தம்பிமார்க்கு
யேனையாநொந்துசொன்னீ ரெந்தனையனுப்புவீரே

வசனம்.

அகோவாருஞ்சுவாமி ரகுநாயகரே தம்பியை யுத்தத்திற்கு அனுப்பிவிட்டு புலம்பலாமோ அது நல்லதல்ல அவர்களேது மூர்ச்சையாகிறது அவர்களுக்குத் தேவர்களுமீடல்ல ஆனாலும் என்னமயிற்றனென்னை யனுப்பிவைத்தால் நான்போய்செயித்துவருகிறேன் அண்ணாவே.

ஸ்ரீராமர்-பரதருக்குச்சொல-திபிதை.

பரதரேகேளாய்நாமும் பண்ணப்போமஸ்வயாகங்
குறைவறமுடியவேணுங் கொப்பெனப்படையைக்கூட்டி
இரதங்கள்துரகமியானை யித்துடனேடேயிப்போ
திறமுள்ளதம்பியோடுஞ் சிறுவரையழைத்துவாராய்

வசனம்.

அகோவாருந்தம்பி பரதா நாம்செய்யப்போகிற அஸ்வயாகங் குறைவராமல் முடிக்கவேணும் ஆகையால் சேனைகள் யானைரதங்களைக் கூட்டிக்கொண்டுபோய் தம்பிமாருங் குதிரையுஞ் சேனைகளையும் அந்தச் சிறுவர்களையுங் கூட்டிக்கொண்டுவாரும் பரதா.

பரதர்-வ-ம். அப்படியேசென்று வருகிறேன் அண்ணாவே.

பொது-திபிதை.

தேருடன்யானைசேனை திரணுமனுமாரோடுங்
காரணமானராசர் கருத்துள்ளசாம்புவந்தா
வீரியஅங்கதனுங்கூட வேணதோரிராசர்சூழ
பாரியதேரிலேறிப் பரதருந்தோணினாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீராமரிடத்தில் பரதர் செலவுவாங்கிக்கொண்டு ரணகளம் வருகிறவிதங்காணக.

பரதர்வருகிற-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-திரிபுடைதாளம்.

பரதரும் அனுமாரும் பங்குடையசாம்புவனும்
வெற்றியுள்ளராசர்களும் மற்றுமுள்ளசேனைகளும்

வீரமுள்ளரணக்களத்தை வேகமுடன்றேடிவாரார்
ராமபாணங்கையிலெடுத்து தாமிஷங்களில்லாமற்றான்
கோபமாகிப்பரதரும் கொக்கரித்துநாணிபூட்டி
அண்டபுவனமெல்லாம் அலறிடவேதேர்களோடே
தெண்டிகைதான்படைத்த தேவர்கள்தான்பார்க்க
மண்டிப்போரணக்களத்தில் வாகுடன்பரதர்வாரார்
வாகுடனேபரதரும் வடிவுடையசேனைகளும்
சேவகர்புடைசூழ தேரிலேறிபரதர்வாரார்
வெற்றியுள்ளயானைசேனை வேணபரிதன்னுடனே
சித்திரரதத்திலேறி பரதர்வந்துதோணிஞரே

பொது-திபிதை.

பட்டதோர்தம்பிமாரைப் பரதருமந்திரத்தால்
திட்டெனவேஎழுப்பிக்கொண்டு சீருடன்கவசமாட்டி
மட்டிலாரணக்களத்தை வகையுடன்வந்துபார்த்து
சட்டமாய்மனதிற்கோபங் காண்டுகொண்டுகூறுவாரே

பொது-வசனம்.

அகோவிகப்படியென்றால் பரதரானவர் போர்க்களம் வந்துபார்த்து மந்திரத்தால் தம்பிமார்களையும் மறறவர்களையும் எழுப்பிக்கொண்டுபார்த்து சொல்லுகிறவிதங்காண்க.

பரதர்-குசலருக்குச்சொல்-திபிதை.

உங்களைப்பார்த்தால்சிறுவருகமையாயிருக்குதிப்போ
இந்துள்ளானுசைவக்கொன்று யெதிரிலலாச்சூராணீர்
சங்கையிலென்கணைக்குச் சற்றுமெதிர்க்கமாட்டீர்
திங்கள்சேர்முடியானறிச் செகத்தினிலொருவருண்டோ

வசனம்;

அகோவாருங்கள் தம்பிமார்களே உங்களைப்பார்த்தால் சிறுவராசக்காணுகிறது எங்களுடைய சேனைகளையெல்லாங்கொன்று எதிரியில்லையென்றிருக்கிறீர்கள் யென்மைபாணத்தெகாடுத்தால நீங்கள் நிற்கமாட்டீர்கள் ஏன் வீணாவில் மடிந்துபோகிறீர்கள் குதிரையைவிட்டுவிடுங்கள் தம்பிமார்களே.

லவன்-பரதருக்குச்சொல்-திபிதை.

சிறியதோர்நெருப்புமல்லோ ஜெகமெல்லாந்தகனஞ்செய்யும்
பரிவுடனெங்களோடு பராக்கிரமம்பேசவேண்டாம்
உறவிமேவந்தசேனைகளைக் கொலைவேன்றப்பாமற்றான்
குறியதாயுயிர்பிழைத்துக் கொடியெனவோடிப்போவாய்

வசனம்.

அகோவாருமாராசனே சிறியவனென்று மனதிலெண்ணவேண்டாம் சிறுநெருப்பானது பெரியவூரைக்கொளுத்துவதுபோல் உங்களைப் பஸ்மீகரப்படுத்திப்போடுவேன் ராசாவே.

பரதருக்கும் குசலவருக்கும் தர்க்கம் கண்ணிகள்.

இ ம்-மோகனம் அடதாளம்.

பரதர் வாரீர்சிறுவரே வல்லாண்மைபேசுகிறீர்
சொல்லல் தேர்வேந்தனைக் கிணையல்லோபாரீர்
குசலவர் இணையல்லோபாரென்று ஏளனஞ்செய்கிறாய்
சொல்லல் கணையொன்றுவிடுக்கிறோம் கலங்கவேசிறாய்
பரதர் கலங்கவேசேனைதனைக் கண்டித்தபெரும
சொல்லல் துலங்குமஸ்திரமொன்று தொடுக்கிறேன்பாராய்
குசலவர் தொடுத்தஅஸ்திரந்தன்னை தூள்படச்சாடியே
சொல்லல் தூய்யகணைகள்மிகத் தொடுத்தனம்பாராய்.

பொது திபிதை.

குன்றெனுந்தேரினோடே கொடுஞ்சரந்தொடுத்தபோதில்
நின்றிடுஞ்சேனையெல்லாம் நெருங்கியேவிழுந்ததப்போ
வென்றியேபரதர்மீதில் வெகுசரந்தொடுத்தபோதில்
கன்றியேபரதர்தானுங் கலங்கியேமூர்ச்சையானார்.

வசனம்.

அதோதெப்படியென்றால் ஒருவர்க்கொருவர் யுத்தம்பண்ணிரதத்சேனையனைத்தும் மடிந்தது அந்தரணக்களத்தில் பரதருமூர்ச்சையானார் அதில் தப்பிபிழைத்தபேர்கள் அயோத்தியைநோக்கிப்போகிறவிதங்காண்க.

சேனைகள்பிரலாபித்து அயோத்திக்குச்செல்கிற தரு

இ ம், எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

பல்லவி.

இனியென்னசேவகந்தான சிறுவரோடே.
இனியென்னசேவகந்தான்.

அநுபல்லவி.

இனியென்னசேவகமிந்தச்சிறுவர்கள்
சனியன்போலரசரைச் சாடுறார்மடியவே. இனி

சரணங்கள்.

அனியாயமாகவே அனேகம்படைகளை
தனியாகக்கொன்றதைச்சாற்றிடலாகுமோ இனி
இங்கிருந்தாலவர்கள் இனிவிடப்போறதில்லை
பொங்கமாயோடிப்பிழைப்பதேநன்மைகாண் இனி
தேடுறார்சிறுவர்கள் சிலையிலம்புதொடுத்து
ஓடிப்போய்ராமருக்குரைப்பதேநன்மைகாண் இனி

சேனாதிபதி ஸ்ரீராமருக்குச்சொல் த்விபதை.

மன்னவர்சேனையெல்லாம் மடிந்ததுகளத்திலேபோ
[illegible]
இவ்விலக்கணில் [illegible]
[illegible]

[illegible] ல்செயிக்கமுடியாது [illegible]

ஸ்ரீராமர் விசனப்பட்டுச்சொல் த்விபதை.

இந்தமொழிகேட்க [illegible]
பந்தமாமுபிரதான பரதர்லட்சுமணரோடு
[illegible]
எந்தனுலவ்வயாகம் யெவ்வாறுமுடியுந்தானே.

அப்பா பரதா லட்சுமணா [illegible] ல்இனிநானெப்படி ஜீவிப்பேன் [illegible] ம்தம்பிமார்களே.

ஸ்ரீராமர் சுக்ரிபருடன் பிரலாபிக்கிற தரு
துவாவந்தி ஆதிதாளம்,

பல்லவி.

இனியென்னசெய்வேன்றம்பி சுக்ரிபனே
இனியென்னசெய்வேனையா.

அநுபல்லவி.

தனியேயிருந்தோம் தரணியாளலாமோ
அனியாயமாய்த்தம்பி அடவியிற்கொடுத்தேனே. (இனி)

சரணங்கள்.

[illegible]
நானேயரசாள காட்டிற்றுறப்பினேனு (இனி)
தம்பிகளைக்கொடுத்த [illegible]
அம்புவியரியவே அழுத்துமடித்துக்கொல்வேன் (இனி)
அந்தச்சிறுவர்கையி லன்னோரைக்கொடுத்தேனே
சிந்தைகலங்கித் தியங்கித்தவிக்கிறேனே (இனி)

ஸ்ரீராமர் சுக்ரீபனுக்குச்சொல் த்விபதை.

நாமினிபோ வேணும் நலமுள்ள தம்பிமார்கள்
பூமியில்விழுந்திட்டாராம் பொல்லாதபசகளாலே
[illegible]
[illegible]

வசனம்.

அசோவாருஞ்சுகாபா என்னுடைய தம்பிமார்கள் அந்தப் பசுக [illegible] பூமியில் [illegible] போகவேண்டும் தார்மேகமென்னப் பட்ட [illegible] பரதனை [illegible] தெரியும்ப [illegible] சொல்லும் [illegible] (சுபவம்) அப்படியேசெய்துவைக்கிறேன் சுவாமி.

ஸ்ரீராமர் ரணக்களம் வருகிறகண்ணிகள் இம்

எதுகுலகாம்போதி சாப்புதாளம்.

பூமியாகாயமென்றும் பொடிப்படாருகாதர்
தாமிஷமில்லாமலே தரணியில்தேனையோட்டி
பாதகவனத்திற்சென்று பாரியதம்பிமார்கள்
சேதமாயூர்ச்சைகண்ணைச் சுருக்கினிற்றீர்க்கப்போருர்
[illegible] தன் [illegible] ராமர்
வானவர்கள் போற்றிசெய்ய வனத்திற்குப்போருர்பாரீர்
ஆதியாஞ்சோதியான அயோத்தியாருமராமர்
நீதியானதேரிலேறி தெளிந்திடபூமிதானும்
வாமெதும [illegible] மார்சேனை வந்துமுன்னேறினரே.

ஸ்ரீராமர்சொல் திபிதை,

பாதலட்சுமணனே தம்பி பாங்குள்ளசத்துருக்கர்
அரசரிடையாள்வந்த அனுமந்தாசாம்புவந்தா
உரமுள்ளவரக்கர்மாய்கை யொடுங்கிடமாய்ந்துநீங்கள்
[illegible] செய்யானீர்.

வசனம்,

அப்பா பாதலட்சுமண சத்துருக்கா அனுமந்தா ஜாம்புவந்தாவெ [illegible] பராக்கிரமம்பொருந்திய ராவணனை ஜெயித்து அவாகளு [illegible] ஜெயித்தீர்களே அப்பே [illegible] எங்கேபோய்விட்டது இனிமேல பூமியிலிருக்கமாட்டேன் தம்பியார்களே.

சேனைபதி ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை.

[illegible] சகலகியுமுள்ள
[illegible] தானே
அரணிடகிருபையுண்டோ அறிகிலோமவர்கட்குற்ற
[illegible] நிலைகுதுதலையொன்றிலலே

வசனம்,

[illegible] ரகுநாயகரே இந்தப்பூமியிலிருக்கிறராஜா [illegible] சொல்லக்கூடாது ஆனாலும்இரணியகு [illegible] கிருபையுண்டோ அறியமாட்

டோம் அவர்களுடைய சுரூபம் தேவரீருடைய சுரூபத்திற்குச் சரியாயிருக்கின்றது சுவாமி.

பொதுத்திபிதை.

பிடுசுக்கிரீபர்தானும் பெரும்வெள்ளம்சேனையோடு
கூடவேகுஞ்சரங்கள் குதிரைகள்வெகுவாய்ச்சூழ
நாடியேபோர்க்களத்தில் நடந்தனருயிர்த்யமாக
நீடியேபாலர்தாமும் நிபுணராயெதிர்வந்தாரே.

ஸ்ரீராமர் குசலவருக்குச்சொல் திபிதை.

சிலையுடன்கணைகைக்கொண்ட சிறுவரேகேளீருங்கள்
குலமென்னதந்தைதாயார் குறிப்புடனுங்கடகுத்தான்
இலகியபேர்தானென்ன யிவையெல்லாமெந்தனுக்கு
நலமுடன்விபரமாக நவில்வீரிப்போதுதானே.

வ ம், அகோவாருங்கள் தம்பிமார்களே உங்கள் குலமென்ன தாய் தந்தையார் உங்கள்பேரென்ன எனக்குத்தெரியச் சொல்லுங்கள் இளைவர்களே.

குசலவர் ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை

இப்படியாகவந்தோ ரியாவருங்கேட்டுச்சண்டை
செப்பமாய்செய்துதோற்றுச் செருக்கள்மூர்ச்சையானார்
சொற்படிநீங்கள்சும்மா துரிதமாயோடிப்போவீர்
அப்படியல்லவென்று வமர்செய்வோம்வருகுவீரே.

வ ம், அகோவாரும்ராஜனே உன்னைப்போல்தான் வந்தராஜாக்களெல்லாம் என்னைக்கேட்டு வெகுவாய்சவுரிம்பேசி தங்கள்பாவைத்தினால் மூர்ச்சையானார்கள் அப்படியாகாமல் நீயும்வந்தவழியைப்பார்த்துக்கொண்டு ஓடிப்போம்ராஜனே.

ஸ்ரீராமருக்கும் குசலவர்க்கும் தர்க்கம் கண்ணிகள்

இ ம், சங்கராபரணம் அடதாளம் ஸ்ரீராமர்சொல்லல்.

ஓடிப்போகாதேகில்லு ஒரு உத்திரவாகிலுஞ்சொல்லு அடா
உன்னைகாபிலாகுமோமல்லு இதோ ஓங்கியெடுக்கிறேன்வில்லு
வேடிக்கையாகவே விளையாட்டுப்பேசாதே
வீரனுனென்முன் வில்லெடுப்பார்க்கலாம் ஓடிப்

குசலவர்சொல்லல்.

அதட்டிமிரட்டுறுயென்று உங்களாண்மைகளானதுமன்று
யானைமுன்னேசிங்கம்பின்று நீ ஆச்சரியந்தனென்னமொன்று
பனங்காட்டுநரியது சலசலப்புக்கஞ்சி
பயப்பட்டுவோடுமோ திகைப்பட்டுடுமோ. அதட்

ஸ்ரீராமர்சொல்லல்.

பிரசண்டகோதண்டமெடுத்தேன்
பிரளயமாய்ச்சரந்தொடுத்தேன் இந்த

புலியாகாயத்தையும்விடுத்தேன் உன்னைப்
போகவொட்டாமலேதடுத்தேன்
விபரீதமாய்ச்சரந்தொடுத்தேன் இனிமேல்
வில்லைப்போட்டுவிட்டுச்சொல்லாமலோடிப்போ ஓடி-

குசலவர்சொல்லல்

சிறுபிள்ளையென்னுநீபார்த்தாய் நாங்கள்.
சினத்தாலுன்னுயிர்தாரைவார்த்தாய் எங்கள்
சேவகம்நீயெங்கேபார்த்தாய் உன்னைச்
சிதைக்கிறேன்பாணங்கொண்டெய்தாய்
மிரட்டாதேபாணம்வருகுதிதோபாரு
மன்னவனே உன்னுயிர்வதைக்குமுன்னோடிப்போ அத

ஸ்ரீராமர்சொல்லல்.

வருணாஸ்திரமிதோபூட்டினேன் பின்பு
வாய்வாஸ்திரமிதோமாட்டினேன் இதோ
பிரமாஸ்திரமொன்றுநீட்டினேன் உனமேற்
பெரியதாகியமந்திரம்நாட்டினேன்
எண்ணுதஅஸ்திரமேகமாய்வருகுது
சொன்னாலுங்கேழ்க்கிலே துடித்திதோவிழப்போறாய் ஒடி-

குசலவர்சொல்லல்.

விடுத்தஅஸதிரமெல்லாந்தடுத்தேன் வந்த
வீரர்சூரர்தன்னைமடித்தேன்
தொடுத்தபாணம்அறஅடித்தேன் இப்போ
சோர்ந்துவிழராஜனேமுடித்தேன்
அபரிமிதமாகவே அலைகொண்டசேனையைக்
காற்றிலிலவம்பஞ்சாய்த்தூற்றிவிட்டேன்கேளீர் அதட்-

பொதுதிபிதை.

விளங்கியகுசலராசன் வீறுடன்கொக்கரித்து
தெளிந்தவிராண்டுபேருஞ் சீதையைப்போற்றிசெய்து
வளர்ந்தோர்சேனையெல்லா மாண்டபின்மனதுவீரி
கிளர்ந்தெழுவனத்தைநோக்கிக் கிட்டியேபார்த்திருந்தார்

லவன்சொல்-கண்ணிகள்-எதுகுலக்காம்போதி-ஆதிதாளம்,

நல்லதுகண்டாயண்ணே நம்விடபாணம்பூட்டி
கெல்லியேஉலகமெல்லாங் கீழ்மேலுஞ்சுற்றிவந்து
வல்லமையரசர்தம்மை வகையறச்சுற்றிக்கொண்டு
எல்லையில்மனிதர்மாண்டார் எத்திசைவண்மைபாராய்
தப்பிறேரிறந்தோர்போகத் தைரியமானபேர்கள்
மெத்தமேமூர்ச்சையாகி மெலிவுடன்கிடப்பாரண்ணு
...டவேபாணத்தாலே தயங்கியேவிழுந்திட்டாரோ

பொருநிபதை.

பட்டதோர்சேனையெல்லாம் பரிவுடனின்றுபார்த்து
இட்டதோர்குண்டலங்க ளியம்படியாவையெல்லாம்
திட்டெனத்தாம்பறித்து [illegible]க்குக்கட்டவேண்டி
கட்டியேதேரில்வைத்துக் கருத்துடனிருந்திட்டார்கள்

லவன் குசலனுக்குச்சொல்லுங் கண்ணிகள் [illegible] க்வரோஸ்மீகரதாளம்

பாரினிலரசர்களாபரிதனைக்காணவே
படவெண்ணிமடிந்தார்கள்பாரும் அண்ணா
சீருடனவரவர்தேசத்திலிருக்காமல்
சிந்தைமயங்கினார்பாரும் அண்ணா
ஆராகிலுமின்னம் அசகாயம்பட்டபேர்
அமர்ந்திங்கிருப்பார்கள்பாரும் அண்ணா
நேராகப்போகுவோம் நெருக்கியிருக்குஞ்சேனை
பூராயமாய்மெள்ளப்பாரும் அண்ணா
ரதத்திற்குப்புரவிகலமுடன்கட்டமற்ற
ஒருபுரவியைகன்றுய்ப்பாரும் அண்ணா
இத்தலந்தன்னிலே [illegible]ப்போலிருக்கும்
பற்றியிழுத்துப்போவோம்பாரும் அண்ணா
குத்துயிராயிருந்தாலுங்குத்துப்பட்டிருந்தாலும்
அத்தையாகிலுமொன்றுபாரும் அண்ணா

லவன் குசலனுக்குசொல்திபிதை.

இத்தனைதூரம்வந்தோ [illegible]ரிலைக்காணேனும்
சுற்றியேபார்த்துவந்தோம் துயயவேயொன்றுங்காணேம்
குத்துயிரிருந்தாலுந்தான் [illegible]போவோமென்றால்
இத்திசைதன்னிற்காணே மிகுத்தவர்முழித்தல்பாரீர்.

(வ.ம்) அகோவாரும் அண்[illegible] இத்தனைதூரம் பார்த்துவந்தோம் எனக்கும் ஒரு[illegible]காணேம் காலாள்களிருந்தாலும் பிடித்துக்கொண்[illegible] அதுவுமில்லை இந்நாடார்த்தீரா அண்ணா இருட்டி[illegible] கல்லெடுத்துமறைக்கிறார்கள் இவர்களையாவது பிடித்துக்கொண்டு சீக்கிரமாய்ப்போவோம் வாரும்அண்ணாவே.

பொருநிபதை.

இனமுடனிரண்டுபேரும் [illegible]
அனுமந்தன்சாம்புவானும் அடிக்கடிமுச்செறிந்து
மனதினிற்கபடமாகி மாண்டவர்போற்கிடந்த
தனைதாய்க்குசலவர்களானோர் [illegible]பிடித்துக்கொண்டார்

(பொ[illegible]) அகோ[illegible] அனுமானையுஞ்சாம்புவானையும் பிடித்துக்கொண்டு குசலவர்போகிறவிதங்காண்க,

லவன், குசலனுக்குச்சொல்லிக்கொண்டு ஆசிரமம்போகிற

தரு. இ.ம் கல்யாணி ரூபகதாளம். பல்லவி.

வாரும்வாருமண்ணா ஆசிரமம்போவோம வாரும் வாருமண்ணா

அநுபல்லவி.

ஆருமெதிரில்லை அடிவிட்டுநாமுஞ்
சீருடன்னையன்னை சேருவோமேயிப்போ (வாரும்)

சரணங்கள்,

வந்துவெகுநேரமாச்சுதே நாமிங்கே
சிந்தைகலங்கித் திகைக்குறுவாளோதாயும் (வாரும்)
இந்தக்கரடியும் அந்தக்குறங்கையும்
முந்திவிட்டோமாகில் சந்தோஷப்படுவாளோ (வாரும்)
இந்தப்பாடிகளெல்லாம் எடுத்துக்கொண்டுநாமும்
சிந்தைமகிழவே சீதைமுன்னேவைப்போம் (வாரும்)

குசலவர்கள் சீதைக்குச்சொல்லுகிறது.

அன்னையேயுந்தன் திவ்ய அடியிணைகமலம்போற்றி
மன்னரையெங்கள்வில்லால் வதைத்துமேகீர்த்திபெற்று
பொன்மணியாடையெல்லாம் பொருக்கவேயெடுத்துக்கொண்டு
உன்னியகரடிமந்தி யுபாயமாய்ப்பிடித்துவந்தோம்

(வ.ம்) அம்மா கேளுந்தாயே எங்கள்மேலில் சண்டைக்குவந்தெதிர்த்தராஜாக்களைவென்று அவர்களுடையகிரீடங்கள் மதாணிப்பதக்கம் ஆடையாபரணங்களெல்லாம் நாங்கள்விளையாடுகிறதற்கு எடுத்துக்கொண்டு இந்தக்கரடியும் குரங்கையும் பிடித்துக்கொண்டு வந்தோமம்மா.

சீதைசொல். கண்ணிகள் இ.ம், முகாரி மிசுரதாளம்.

ஆ. ஆ. அனுமரோ யிதென்னகுறை
ஐயையோ அனுமாரே
பாரினிலங்கைக்குப் பெருங்கடல்தாண்டிய
பலனையெங்கேவிட்டுப் பாலர்க்கடங்கினாய் (ஆ. ஆ. அனு)

அனுமார்சொல்லல்.

அன்னையேசொல்லுகிறேன் ஸ்ரீராமர்
அஸ்வயாகஞ்செய்யவே
மன்னரகுராமர்புரவியை வியாகஞ்சூழவிட்டார்
அந்தப்புரவிகட்டிசிறியவர் அரசனைமடித்தாரம்மா (அன்னை)

சீதைசொல்லல்,

சாமியும்வந்தாரோ பரதருஞ்
சமர்செய்யமுனைந்தாரோ
பூமிபிற்கீர்த்திபெற்ற லட்சுமணரும்
போர்செய்யவந்தாரோ (ஆ. ஆ. அனு)

அனுமார்சொல்லல்.

அவரும்வந்தாரம்மா சிறியவர்மேல்
ஆயுதமுந்தாரம்மா
வந்தவர்தங்களையே இந்தபாலர்
வதைத்துமேமூர்ச்சைசெய்தார் அன்னை

சீதைசொல்லல்.

மைந்தானுமா ஸ்ரீமாமர்
தநதையென்றுனைக்கொண்டோ
விஜயலட்சுமணர்பரதர் சிறிய
தந்தையென்றுனைக்கொண்டோ (ஆ-ஆ.அனு)

அனுமார்சொல்லல்,

தந்தையென்றறியேனம்மா தாயேசீதாயுன்
மைந்தரென்றறியேனம்மா
இந்தசேதியறிந்தால் கட்டுபடயெனக்
கிந்தவிதியேனம்மா அன்னை

சீதைசொல்லல்,

விதியென்றுசொல்வீரையா உம்மிட
வீரமெங்கேயொளித்தீர்
வீரியசவுரியத்தால் சிறியோனை
வெல்லவகையில்லையா (ஆ-ஆ.அனு)

அனுமார்சொல்லல்.

வெல்லவகையேனம்மா இவர்கோலம்
சொல்லமுடியாதம்மா
சண்டைமுனையிலம்மா இவர்கள்விடும்
சரங்களைமந்தானம்மா அன்னை

சீதைசொல்லல்,

சாமிதானெங்கே உடன்பிறந்த
தம்பிமார்மூவரெங்கே நீங்கள்
மாமிமாரெங்கே குலகுருவசிஷடரெங்கே
என்னகாரணமையா கட்டுப்பட்டதுஏதுகாரணமையா (ஆ-ஆ,அனு)

அனுமார்.சீதைக்குசொல்திபிதை.

அண்டர்கள்போற்றுமெங்க ளன்னையேகேளாய்சீதாய்
கொண்டல்போலிந்தராமர் கொடும்பரியாகஞ்செய்ய
மண்டலம்பரியைவிட்டு வரும்போதுபிடித்துக்கட்டி
துண்டகரானபாலர் துரைகளைமூர்ச்சைசெய்தார்

(வசனம், அகோவாருந்தாயே ரகுராமர்அஸ்வமேதயாகஞ் செய்ய ஒருபுறவினை பூமிப்பிரதட்சணம்விட்டார் அந்தப்புரவி காட்டை நோக்கி யோடிப்போச்சுது அதை இந்தப்பிள்ளை பிடித்துக்-

ட்டி வைத்திருந்தார் அவனைக்கேழ்க்கவந்த சேவகரை யடித்துக்கொன்றான் அதையறிந்து சத்துருக்கர்வர அவரையும் மூர்ச்சை செய்தான் இந்தப் பெரியபிள்ளைவந்து சத்துருக்கரையும் ராமலட்சுமணரையும் பரதரையும் மூர்ச்சையாக்கி அவர்களுடைய ஆபரணங்களையெடுத்துக்கொண்டு எங்களையும் பிடித்துக்கொண்டுவந்தார்களம்மா.

பொருதிபிதை.

சாம்புவனனுமானுக்கு ஜானகிவிடைகொடுத்து
வேம்பெனப்பாலர்செய்த வினையெனுமக்ரமத்தால்
விம்புள்ளராகவற்கு வியாகூலம்வருமேயென்றே
தீம்பினால்மதிமயங்கிச் சீதையுங்கூறுவாளே

சீதைபுலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-அடதாளம்.

தந்தைதனைவதைக்கவெந்தன்வயிற்றில்வந்தீர் பாலர்களே - இதைத்
தாரணியோர்கேழ்க்கக் காரணமாகுமோ பாலர்களே-நானும்
இந்தப்பாவக்குறையை யெந்தப்பிறப்பில்தீர்ப்பேன் பாலர்களே
எங்கையோமானமிடிக்குதென்றிருந்தேனே பாலர்களே-இப்போ
தங்காமலெந்தன் தலையிலிடித்துதே பாலர்களே
அங்கமும்பற்றி அனலாயெரியுதே பாலர்களே-இந்த
பிள்ளையுமில்லாமற் பெருந்தவமிருந்தாரே பாலர்களே - நீங்கள்
பிள்ளையிருந்து பிதாவைக்கொன்றீர்களே பாலர்களே
எள்ளளவுதாலி இருக்கமகிழ்ந்தேனே பாலர்களே என்
வள்ளலைக்கொன்று வலுமைபடைத்தீரோ பாலர்களே
வில்லுமுனையினிற்கொல்லுமரசரை பாலர்களே - உங்கள்
வல்லமையினாலே வெல்லத்துணிந்தீரோ பாலர்களே
இன்னந்தனித்துஇருக்கத்துணிவேனோ பாலர்களே - நான்
இக்ஷணமாவியைத் துக்ஷணஞ்செய்வேனே பாலர்களே

சீதைசொல்-திபிதை.

கோத்திரந்தழைக்கவென்று குழந்தைகள்பெற்றதற்குச்
சாத்திரவிதியைமீறித் தந்தையைகொல்லவந்தீர்
எத்தியதீயில்வீழ்வே னென்னுயிர்தரிக்கமாட்டேன்
போற்றியேமுனிவர்செய்த பிழையிதற்கென்னசெய்வேன்

குசலவர்-சீதைக்குச்சொல்கண்ணிகள்-இ-ம்.

எதுகுலகாம்போதி-ஆதிதாளம்,

அன்னையேயென்னசெய்வோம் அரும்பாவியானோமம்மா
தந்தையைவதைத்தவர்கள தரணியிலிருக்கொணாதே

ஆவியைவிடுவோமம்மா அன்னைநீகாண்பதற்கு
மேவியதணலைமூட்டிவேகமாய்விழுவோமம்மா
ஐயனென்றறிந்தோமானா லர்ச்சித்துத்தொழுதிடோமோ
ராமனென்றறிந்தோமானால் நாங்கள்விளையாடேமோ
அப்பனைவதைத்தபாவம் ஆர்முழுகித்தீர்த்திடுவோம-உன்
என்னளவுதாவிக்கம்மாநாங்கள் காலனாகவந்தோமேதான்

குசலவர்-சீதைக்குச்சொல்லிடுதை.

அன்னையேயென்னசெய்வோம் ஆவியைவிடுவோமிப்போ
உன்னியதந்தைதன்னை புன்மையாய்வதைத்ததாலே
பன்னியகாசிபோயும் பாவமுந்தீராதம்மா
வன்னியிற்குதிப்போமெங்கள் மாதாவேசிலவுதாரீர்

வசனம்,

ஆகோவாருந்தாயே பிதாவைக்கொன்றநாங்கள் காசியாத்திரை சென்றாலுந்தீராது ஆகையால் அக்கினிவளர்த்தி அதில்விழுகிறதேய ல்லாமல் வேறென்னசெய்வோமம்மா.

சீதைசொல்-தரு-இ-ம்.ஆகிரி-மீசுரதாளம்.

பல்லவி.

முனிநாதனைக்காணேனே இன்னமெங்கள்
முனிநாதனைக்காணேனே

அநுபல்லவி.

முனிநாதனைக்காணேன் முடுகிவராரின்னம்
அனியாயமோதெய்வ மல்லச்சல்படுத்துதே முனிநா

சரணங்கள்,

பட்டயிடத்திற்படுங் கெட்டகுடியேகெடும்
திட்டப்படியுலகிற் கட்டியகதையாச்சே முனி
ஐயர்ரகுநாதர் மெய்யைலாக்காணேனே
துய்யராம்வால்மீகர் செய்யன்வரக்காணேனே முனி
மன்றுள்பாவக்குறை யென்றுசெய்தேனேயோ
இன்றுசுவாமிக்கிந்த யிடர்வரலாச்சுதே முனி

நாரதர் பாதாளலோகம்வருகிற-பொதுதிபதை

தந்தைபோற்சீதைகானிற் றனமும்வார்த்தையெல்லாம்
உற்றுநாரதருங்கேட்டு வுளமிகமயங்கியப்போ
சித்ரபாதாளலோகஞ் சென்றுவால் மீகருக்குப்
பத்தியாயுரைப்பதாகப் பரிவுடன்வருகின்றூரே

பொது-வசனம். அகோ இப்படியென்றுல்சீதையாள்புத்திரரால் நடந்தசேதியைப் பாதாளலோகஞ்சென்று வால்மீகருக்குநாரதர்சொல்வருகிறவிதங்காண்க,

நாரதர்வருகிற-தரு-இ-ம்,பூரிகலியாணி-ஆதிதாளம்

பல்லவி,

நாரதர்வந்தாரே மகாமுனி நாரதர்வந்தாரே

அனுபல்லவி.

காரணசாரியங் கண்டறிந்திடுங்
கலத்தினில் மிகச்செறிந்திடும் நாரதர்

சரணங்கள்.

சடைமுடியசைந்தாட கரத் தாழ்வடமொலிபாட
இடையில்வேஷ்டியாட தோளி லிருக்குங்கிரீடங்கள்நீட
படைமன்னர்கள் யாவரும்பணிந்திடும்
பாதம்வருந்தவே நாதகீதத்துடன் நாரதர்
வருணனிடத்திற்போன அந்த வால்மீகர்க்கினிதான
கருணையாகியான ஞானக் காட்சியினில்மேலான
பெருமைமிகுந்த சீதையின்சேதியைப்
பிரியத்துடனே தெரிவித்திடவே

நாரதர்-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

திடங்கொள்வால்மீகரே நம் சீதையின்மைந்தன்தானும்
அடவியிற்போர்கள்செய்து அயோத்தியாளரசர்தம்மைப்
படியினில்மூர்ச்சையாக்கிப் பாலர்கள்தாய்பாற்சென்றூர்
கொடியிடையழுகின்றுளக் கோலத்தையருகிலீரோ

வ-ம், அகோவாருமையா வால்மீகமகாரிஷியே சீதாதேவிமைந்தரிருவரும் அயோத்தியையாளப்பட்ட ஸ்ரீராமனையும் அவர்தம்பிமார்களையும் மூர்ச்சையாக்கிவிட்டார் அதுகேட்டுசீதாதேவி புலம்புகின்றுள் கானதைச்சொல்லவந்தேன் நீர்சீக்கிரம் ஆசிரமம்போமையாவால்மீகமகாரிஷியே (வால்மீகர் நாரதருக்குச்சொல்லல்-வ-ம்,) அப்படியே யிதோபோகிறேன் நாரதமுனிவரே.

பொதுதிபிதை.

சீதையாள்புலம்பும்போது திருந்தநாரதருமப்போ
மேதினிவார்த்தையெல்லாம் விளம்பினுர்பாதளத்தில்
காதலாய்முனிவர்கேட்டுக் கடினவேகத்திறேடு
போதவால்மீகர்தானும் பூவனம்வருகின்றூரே

பொது-வசனம். அகோகேட்பீரென்றால் அந்தச்சமயத்திலே ராமலட்சுமணர் பரதசத்துருக்னன் குசலவர்களுடைய பாணத்தினால் மூர்ச்சையாய் விழுந்தசெய்தியைநாரதரால்வால்மீகர்கேள்விப்பட்டு தமமுடைய ஆசிரமம்வருகிறவிதங்காண்க

வால்மீகர்வருகிற-தரு-இ-ம், சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி,

வந்தனர்வால்மீசர் மனதில்மகிழ்வுகொண்டு
வந்தனர்வந்தனரே

அநுபல்லவி,

அந்தமாய்நாரதர் சொல்லியமொழிகேட்டு
அகத்தில்சஞ்சலங்கொண்டு வந்தனர்

சரணங்கள்.

காடுமலைகள்விட்டு கான்யாருவழிதாண்டி
நாடுஞ்சிதையுமுன்பு வந்தனர்
காமக்குரோதத்தை நீக்கியருட்பழுத்த
கனதிஷ்டைகளையுடைய வந்தனர்
பவமாமவினைதனைப் பரிஷ்காரஞ்செய்திடும்
பாக்கியசிலாக்கியரிதோ வந்தனர்

சிதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை,

எந்தையேமுனிவர்கோவே யென்னிடபாலகர்க்கு
தந்தையைக்கொல்வதர்க்கோ தநுவேதவித்தைசொன்னீர்
எந்தனக்குகந்தநாலி யிருக்கவேமனதுவைத்து
சுந்தரராமர்சேதி தோகைநானுரைக்கக்கேளீர்

சிதைசொல்-கண்ணிகள்-இ-ம், எதுகுலகாம்போதி-ரூபகதாளம்,

ஐயரேநீர்சேதிகேளீர் யாகஞ்செய்யப்போனபின்பு
உய்யவேவனத்திற்பாலர் உண்மையாகவேட்டைபோனார்
வையகம்புகழும்ராமர் வன்மையுடன்யாகஞ்செய்ய
துய்யவோர்புரவிதன்னைச் சீருடனேபட்டங்கட்டி
மெய்யனுஞ்சத்துருக்னர் வேந்தர்கள்திரளாய்க்கூடி
வையமுழுதுஞ்சுற்றி வருகையிலேதுரகஞ்சிறி
வெய்யவனறியாக்காட்டில் வேகமாய்குதிரைவர
பையலானவனுங்கண்டு பாங்குடனேபிடித்துகட்டி
செய்யதேசேவகர்கூட சேதிதன்னைக்கேழ்க்கலுற்றார்
கேட்டதொருதூதுவனை மாட்டினார்சரங்களாலே
தாஷடியாகச்சத்துருக்னர் தனுவெடுத்துவெட்டிவிடவே
பூட்டியசரந்தானிந்த புரியலவன்மூர்ச்சையானான்
நாட்டினிலவனைக்கொண்டு நலமுடனேபோகையிலே
தீட்டியசில்விழியாள் சேயிழையாளோடிவந்து
நாட்டியலவனார்சேதி நானறிந்தழுதும்போது
வேட்டைபோனகுசலனதேடி வில்லெடுத்துவோடியந்த

போட்டியாகவந்தெதிர்த்த புஜபலனைமூர்ச்சைசெய்தான்
சத்துருக்கலட்சுமணரும் தாவியமேகார்பரதரும்
உத்தமராமபத்ரர் ஒன்றுந்தப்பிப்போகவொட்டாமல்
வெற்றியாகச்சரங்கள்பூட்டி வேகமாகமூர்ச்சைசெய்தான்
கற்றியேயவர்பூஷணங்கள் ஞாயிறொளிகிரீடங்கள்
வெற்றியாகயானையெல்லாம விளையாடவேணுமென்று
சுற்றியேமூட்டைகள்கட்டித் துரிதமுடன்வருகையிலே
புத்தியிலுயர்ந்தவீரர் புஜபலவனுமான்றன்னை
சத்தியவான்சாம்புவனைத் தனைகையாற்கயிற்றாற் கட்டி
வெற்றியாகக்கொண்டுவந்தார் வேடிக்கையறிந்திலீரே
ஐயரேநீர்செய்தகோலம் ஆவியைவிடுவேனிப்போ
மங்கல்யபிட்சையையா மாதவரேதாருமையா
ஐயரையெழுப்புமையா அருமுனியரசர்கோவே
சாமியையெழுப்புமையா தையலாள்தழைக்கவேணும்
லட்சுமணர்பரதர்தம்பி ஞாயிறொளிசத்துருக்கர்
உத்தமரேசேனையெல்லாம் ஓதியேயெழுப்புமையா
இப்பொழுதெழுப்பினாலே யென்னுயிர்தரிப்பேனையா
பாலகர்முகத்தைப்பார்த்து யென்பத்தாவையெழுப்புமையா
சரணஞ்சரணமையா தவத்திற்சிறந்தவரே.

வால்மீகர் சீதைக்குச்சொல்-திபிதை.

அஞ்சிடவேண்டாமம்மா அமர்க்களந்தன்னிலிப்போ
துஞ்சிடும்ராமர்சேனை துரைகளையெழுப்பித்தாரேன்
மிஞ்சியேமூர்ச்சையாகி விழுந்திடுமிராமர்தன்னை
அஞ்சனவிழியாளேநா மடவுடன்பார்ப்போம்வாராய்

வ-ம், அகோவாருமம்மா நீ பயப்படவேண்டாம் ஸ்ரீராமருடைய தம்பிமாரையும் சேனைகளையும் எழுப்பித்தருகிறேன் மூர்ச்சையாயிருக்கின்றரகுநாயகரைப் பார்ப்போம் வாருமம்மா.

பொதுதிபிதை.

கண்டனள்சீதைதானுங் கார்முகில்ராமரென்னும்
விண்டுவையயர்ந்திப்பூமி விழுந்தவள்மூர்சசையாகிக்
கெண்டைசேர்விழியாள்ராமர் கீர்த்திக்குக்குறைவாமென்று
வண்டணிகுழலாள்சீதை மயங்கியேபுலம்புவாளே.

சீதைபுலம்பல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-மிசுரதாளம்.

ஐயையோநானென்னசெய்வேனுயிர்பதறுதே ராமராமா-உங்கள்
ஆண்மைகளெங்கையோ அடவியில்விட்டீரோ ராமராமா
கொடுமிராவணன்கும்பகர்ணரியரை ராமராமா-அன்று
கொன்றவனுமையையின்றுமொளித்தீரோ ராமராமா

ஆழியின்மாயனைத்தவளைத்தாற்போல — ராமராமா-இந்தச்
சூழியகாட்டில்துலங்கவிதியேனோ — ராமராமா
பாலர்கைபாணத்தால் பட்டகளோயிதோ — ராமராமா-இந்தப்
பாவியைப்பார்த்தொரு பால்மொழிபேசீரோ — ராமராமா
வாணைத்திறந்தானுன் வாய்முத்தம்கிடைக்குமோ — ராமா-உந்தன்
மாயத்தைவிட்டு மறுவார்த்தைசொல்லீரோ — ராமராமா

சீதைசொல்-கவி.

ஐயையோவென்னுயி ராகியநாதா
உய்யவேவனத்தி லுமதுபாலரால்
மெய்யெலாந்தளர்ந்து விழுந்தீரோவத்தனே
ஐயனேவுமக்கு அனந்தலோவறியோன்,

சீதைசொல்பிரலாபக்கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி மீசுரதாளம்

முகமதுவேறுரூப முக்கணிகண்கள்ரெண்டும்
செகந்தனிலட்சுமணரே செய்வதுநித்திரையோ
வனத்திற்பதினாலுவருஷம் வராதநித்திரைகள்
மகனிடவாளினாலே மயக்கமாய்விழுந்திட்டீரோ
பத்திரமாய்ப்போகமெல்லாம் பார்த்தணையானுமென்று
இத்திரத்தைவிட்டுநாங்க ளெங்கும்போதில்லாநித்திரை
சுத்தமானமைந்தராலே தூங்குறீரோபரதரே
அண்ணலேசீமையாண்டு அன்னீதம்வாராமலேதான்
சொன்னபடியிருவராகி சுகத்தாடனிருந்தீங்கள்
வர்ணமானமைந்தன்கையில மயங்கினீரோசத்துருக்கா

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை

மாதவமுனிவரேயென் மன்னவாமுதலானோரைப்
போதுபோமுன்னேயிந்தப் புனிதரையெழுப்புமையா
சீதளமுகத்தைப்பார்த்து சேனைகளாச்சுதிப்போ
ஆதியேமுனியேநீரு மனுக்கிரகஞ்செய்வீரே.

வ-ம். அகோவாருமையா முனிநாதரே பொழுதுபோமுன்னே ராமலட்சுமணர் பாதசத்துருக்கரை என்மேல் அனுக்கிரகஞ் செய்து எழுப்பவேணுஞ்சுவாமி.

வால்மீகர்-வ-ம்-அப்படியே நல்லதம்மாசீதாய்.

வால்மீகர்-சிஷருக்குச் சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் விவேகசிந்தாமணி அப்பாதுன்மார்க்கசிந்தாமணி கெண்டுகமண்டலத்தில் ஜலங்கொண்டு வாரும்பிள்ளாய்

வால்மீகர்-ராமர்முதலானவர்களைஎழுப்புகிற-கண்ணிகள்

இ-ம-பூபாளம்-மீசுரதாளம்.

ஆதிமூலத்தருளானதாற்கிருபைமெரிகுராமரே — எழுந்திரும்
ஜோதிகயிலாயர்கிருபையால்சுகந்தபரதரே — யெழுந்திரும்

இஷ்டமுடையதேவாருளினால் மிருஅக்ஷயபட்சமுறு யெழுந்திரும்
சந்திரமுனிவர்களருளில் அனுராசதநக்கந்த யெழுந்திரும
பதருமனட்டுமபடைத்தவரே நீங்கள்பாரியகுரவே யெழுந்திரும்
வாழ்விர்வாழ்விரென்றுமேவிந்த மண்ணுள்ளகாலமும் வாழ்விரோ
அக்ஷயமென்றும்வாழ்வீரேயிந்த மண்ணுள்ளகாலமும வாழ்வீரே

ராமர்-மூர்ச்சைதெளிந்தெழுந்து வால்மீகருக்குச்சொல்-திபிதை.

எங்களையெழுப்பிவிட்ட யிசைபெருமுனிமேகேளீர்
உங்கள்தன்னுமதேய முரைத்திடவேணுமிப்போ
சங்கையில்லாமலவென்ற சமர்த்துள்ளசிறுவராரோ
இங்குடன்விபரமாக யெந்தனுக்குரைசெய்வீரே.

வசனம்.

அகோவாருமையா முனிநாதரேநாங்கள் மூர்ச்சையா யிருந்தவரை யெழுப்பிவிட்டீரே நீங்களார் உங்கள்நாமதேயமென்ன மகாவீராதிவீராய்நிற்கிற இந்தயிரண்டுபிள்ளைகளார்தெரியச்சொல்லும்சுவாமி

வால்மீகர்-ராமருக்குச்சொல்-திபிதை

பலமிகுந்தாகுராமர்சீதைதன்னைப்
பகரரியகாட்டில்விட்டாயவள்மெலிந்து
ஜலம்பெருகஅழுகையிலியானுங்கண்டு
சாதங்கள்சொல்லவொருதனையனீன்றாள்
தவமிகுந்ததர்ப்பையினாலொருவனைத்தான்
சமைத்தனன்வால்மீகர்சாற்றக்கேளும்
நலமிகுந்தவிவர்களுக்குமணமியற்றி
நாடுமிளவரசுபட்டங்கட்டுவாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா உன்தேவியாகிய சீதையை அதிமோகமானகாட்டில் நீவிட்டமாத்திரத்தில் அவள்கோடுகோடென்றுபுலப்பும்போது யான்கண்டு நம்முண்டைய ஆசிரமத்திற்கு அழைத்துக்கொண்டுபோனேன் அவ்விடத்தில் இந்தமூத்தப்பிள்ளையைப்பெற்றாள் இதோ இந்தஇளையபிள்ளையைநான் தருப்பையினாற் சிருட்டித்தேன் இந்த இரண்டுபிள்ளைகளின்பெயரோ மூத்தவன்குசலன் இளையவன்லவன் என்பேர்வால்மீகர் ஆகையால் உனதுதேவியாகியசீதையையும்இப்பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டுபோய்அயோத்தியாபுரியில்இவர்களுக்குத் திருமணமுடிப்பித்து குசலனுக்கு இளவரசுபட்டங்கட்டி வாழ்ந்திரும்பிள்ளாய் ராமசந்திரா.

ஸ்ரீராமர்-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

மாதவமுனியேயுந்தன் மலரடிபோற்றிபோற்றி
காதினிலிதனைக்கேட்கக் கருத்தினிற்சந்தோஷமானேன்

ஆதலால்தேவரீரும் அயோத்திக்குவந்துதாங்கள்
ஓதியவாறேசெய்ய வுடனிருந்திடவேணும்

வசனம்.

அகோவாருஞ்சுவாமி முனிநாதரே நடந்தவிர்த்தாந்தங்களையெல்லாங்கேட்க அதிகசந்தோஷமானேன் தாங்கள்சொல்லிய வண்ணம் சிறுவர்களுக்குவிவாகமும் இளவரசுபட்டமும நடத்துவதற்குத்தாங்களும் அயோத்திக்குவரவேண்டியது சுவாமி.

வால்மீகர்-வசனம்-அப்படியே வருகிறேன்.

குசலவர்-ஸ்ரீராமர்முதலோருக்குச்சொல்-திபிதை.

மறைமுறைநெறியறிந்த மன்னவாநின்றாள்போற்றி
திறமிகுபிதாவேயிந்தச் சிறியரைக்காப்பாய்போற்றி
அறிவிலாச்சிறியோர்செய்த அபசாரம்பொறுப்பீர்போற்றி
சிறிய தந்தைகளேயுங்கள் திவ்வியமலர்த்தாள்போற்றி

குசலவர்க்கு-ஸ்ரீராமர்முதலானோர்வாழ்த்து-திபிதை

பதியினிலிணையில்லாத பாக்கியரேநீங்கள்வாழி
சதுர்மறையுணர்ந்தவெங்கள் தவங்களேநீங்கள்வாழி
மதியினிலுணர்ந்தநேத்ர மணிகளேநீங்கள்வாழி
அதிவிதரணச்சிங்கார அமுதமேநீங்கள்வாழி.

சீதை-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

என்னுயிர்க்குயிரதான யிறைவரேநின்றாள்போற்றி
தன்னுமென்கண்ணுளாடுஞ் சோதியேநின்றாள்போற்றி
மன்னவர்வணங்குகின்ற வற்புதமலர்த்தாள்போற்றி
கன்னியயோத்திவாழும் நான்மறைப்பொருளேபோற்றி.

ஸ்ரீராமர்-சீதைக்குச்சொல்-திபிதை

அஞ்சுகமொழிக்கிசைந்த அமிர்தமேவாழிவாழி
ரஞ்சிதவிளக்கேயெந்த நாயகிவாழிவாழி
வஞ்சியராருமெச்சு மதியெனும்வதனவாழி
அஞ்சிடவேண்டாஞ்சீதா யனுதினம்வாழிவாழி.

மைத்துனர்கள்-சீதைக்குச்சொல்-திபிதை.

பெற்றிடும்தாய்க்குமேலாய்ப் பெட்புறுந்தாயேயெங்கள்
குற்றங்கள்தவிர்ப்பாய்நானுங் குலமெனும்விளக்கேபோற்றி
கற்றவால்மீகர்கிருபா கடாட்சத்தாற்சிறுவர்தம்மை
பெற்றஜானகிமெய்புந்தன் பிரசமாமலர்த்தாள்போற்றி.

சீதை-மைத்துனருக்குச்சொல்-திபிதை.

பேதையான்பயின்றயிந்தப் பிள்ளைகள்செய்குற்றத்தை
ஏதொன்றுமனதில்வையா திருக்குமைத்துனரேவாழி
நீதமாயெனையெப்போது நிரந்தரம்பாதுகாக்கப்
போதமாம்மனதிலெண்ணும் புனிதரேவாழிவாழி.

ராமர்-தேரின்மேலேறிச்சொல்-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி,

போவோம்வருவீர்கள் அயோத்திக்குப் போவோம் வருவீர்கள்

அநுபல்லவி.

தீவேழர் தத்திக்குந் தியானவால்மீகரே
செப்புந்தம்பியாரே இப்போதேநாம் போவோம்

சரணங்கள்.

அனுமானே சாம்புவனே
அடல்கொளரண்ய ராஜனே காலசித்தனே
தனதாஞ்சுவேல் ராஜனே
தங்குமக்ஷ யந்தனே மகாப்பிரதாபங்
கலமிகுமாருதியின் காளையெனவுதித்த
கனிவுள்ளமட்சயந்த அநுமானேயெல்லவரும் போவோம்

படிபுகழ் தீரரே விஸ்வாசமிகும்
படைத்தக்கட்டிய வீரரே
கெடிபெருஞ்சேனை வீரரே கரிபரிதேர்க்
கெல்லாமதி காரரே
வடிவுள்ளவாள்சூலம்வளைதடிசக்கரங்கள்
வளமையுடனைக்கொண்டதளகர்த்தராஞ்சூரரே போவோ

உத்தம ஜானகியே யெந்தனுடைய
உயிராகு வைதேகியே
புத்தமுகத் தேனே அன்னமெனவே
பொருந்துமினிய மானே
இத்தரையினில்யாரு மிணையின்றியேயுதித்த
சித்தசனைபழித்த செல்வக்குசலவரே போவோம்

சீதைசொல்திபிதை.

வையகத்துள்ளோர்போற்ற மாதவர்மிகவும்வாழ்த்த
துய்யனல்லயோத்திமேவிச் சுகமுடன்வந்தோமியாரும்
பையவேயமுதுட்கொண்டு பன்மணிகொலுவிற்சேர
ஐயனும்ராமச்சந்த்ர ரப்போதுகூறுவாரே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் ராமருடன் சகலரும் கொலுவில்வந்துவீற்றிருக்கையில் ரகுநாயகர் சொலுகிற விதங்காண்க.

ஸ்ரீராமர்-சத்துருக்கருக்குச்சொல்-திபிதை.

சமையத்திலுசிதஞ்சொல்லுந் தம்பிசத்துருக்காகேளாய்
அமைவுறுமஸ்வயாகம் அன்புடன்செய்வதற்கு
நமதுபட்டணங்கள்முற்றும் நலமுடனலங்கரிக்க
விமலமாய்ச்சேருவைக்கு விளம்புவாய்விரைவிற்றானே

வசனம்.

அதிகாவாருந்தம்பி சத்துருக்கா நாம் அஸ்வயாகஞ்செய்யவேணு ம்.ஆகையால்நம்முடைய அயோத்தியாபுரிமுழுதும் பச்சைப்பந்தல் களிட்டு அலங்காரஞ்செய்யும்படியாய்ச் சேர்வைக்காரனுக்குத்திட்ட ஞ்செய்வாய் தம்பிசத்துருக்கா (சத்துருக்கர்சொல்-வசனம்) அப்படியே செய்கிறேனென்றுவே.

சத்துருக்கர்சேர்வைக்காரனுக்குச்சொல்-திபிதை

காரியாகாரியங்கள் கனமுடனறிந்தியற்றுஞ்
சேருவைக்காராகேளாய் சீக்கிரமாகச்சென்று
பாரியவயோத்திமுற்றும் பார்ப்பவர்மகிழ்வதாகச்
சீரதாயலங்கரித்துச் சீக்கிரம்வருகுவாயே.

வசனம்.

அதிகாவாருஞ்சேர்வைக்காரா நம்முடை அயோத்திமுற்றும்யா வரும் அதிசயிக்கும்படியாய் பச்சைப்பந்தல் மகரதோரணம்வாழை க்கமுகு முதலாகியதுங் கட்டும்படியாய்த் திட்டஞ்செய்து வாரும்பி ள்ளாய் (சேர்வைக்காரன்-வசனம்) அப்படியேசெய்கிறேன்சுவாமி.

நகரை-அலங்கரிக்கிற-கண்ணிகள்-இ-ம்-மோகனம்-அடதாளம.

பச்சைப்பந்தல்களை — கூட்டினார்-நல்ல
பாங்காய்வாழைக்கமுகு — நாட்டினார்
உச்சிதமாலைக — ளமைத்தார்-ஒளி
யுறவேகண்ணாடிகள் — சமைத்தார்
நவமணிமாலைகள் — பூட்டினார்-திவ்ய
ரஸ்தர்குளோப்ஷேட்டில் — மாட்டினார்
துவசங்கள்பலவிதந் — தூக்கினார்-மகரத்
தோரணமெங்குமுண் — டாக்கினார்
சந்தகதம்பத்தால் — தீற்றினார்-சந்தன
கஸ்தூரியாற்கோலஞ் — சாற்றினார்
பந்திபந்தியாய்ப்படம் — பரப்பினார்-வாத்யம்
பலவாகமுழுதும் — நிரப்பினார்

பொது-திபிதை.

தேவவாத்தியத்துடனே அஸ்வயாகஞ்
செயவதிஷ்டர்முதலோர்கள் சீராய்ச்செய்து
மூவருக்குமுனிவோருக்குந் தேவருக்கு
முயற்சிசெய்யுமஷ்டதிக்குப் பாலகர்க்கும்
யாவருக்குமினிதுடனே யவிர்ப்பாகங்க
ளயோத்திநாடாளுமன்னனளிக்கவிப்பால்
பூவிருக்குமியாவருக்குந் தெரிவதாகப்
புகலுவாராமருமே மகிழுவாரே

பொருள்-அசைசார். அகோதொம்பிடி யென்றும் ஸ்ரீராமர் அஸ்வமேத யாகத்துக்கு வந்திருக்கும் வான்மீகமுநிவராகிய பெரியோர்களால் கட்டப்பிரித் தரசாவருக்கும் ஜாதகங்கொடுத்து மகிழ்வுற்றிருக்கையில் ஸ்ரீராமர் குசலராசனுக்குத் திருக்கலியாணஞ்செய்துவைக்கிறவிதங் காண்க.

ஸ்ரீராமர்-லட்சுமணனுக்குச்சொல்-திபிதை.

இஷ்டங்கொலட்சுமணா கமபிள்ளைலாங்குசலனுக்கும்
சட்டங்கொளரண்யராசன் றன்மகள்விபுதையாட்கும்
திட்டமாயுதயத்திற்குத் திருக்கலியாணமென்று
பட்டணமுழுதும்பேரிகைதட்டுவையச்செய்வாய்.

வ-ம், அகோவாரும்தம்பி லட்சுமணா நம்முடைய குசலராசனுக்கும் அரண்யராசனுடைய குமாரத்தியாகிய விபுதை யம்மாளுக்கும் நாளைசூரியஉதயத்திற்குத் திருக்கலியாண முகூர்த்தமென்று பட்டணமுழுதும் பேரிகையறையும்படி செய்வாய் தம்பிலட்சுமணா

லட்சுமண வ-ம்-அப்படியேசெய்துவைக்கிறேனண்ணாவே

லட்சுமணர்-சேனாதிபதிக்குச்சொல்-திபிதை.

நயமிகுஞ்சேனாதிபதியேகேளாய் ஸ்ரீராமர்கள்குசலராசனுக்கும், நயமிகுந்தஅரண்யமகாராசனின்ற நற்குணஞ்சேர்விபுதையெனும் நாயகிக்கும், வையமிகுந்தநாளையுதயத்திற்கு மணமெனவேஅயோத்தி நகர்முழுதும்நீதான், கயமீதிற்பேரிகைவைத்தறிக்கைசெய்து கடிதினிலேயிங்குவந்துசமுகுவாயே.

வ-ம், அகோவாருஞ்சேனாதிபதியே ஸ்ரீராமமூர்த்தின் குமாரனாகியகுசலராசனுக்கும் வாரணபுரியையாளப்பட்ட சோமகாசமகாராசனுடையபுத்திரனாகிய அரண்யராசன்குமாரத்தி சௌபாக்கியவதிவிபுதையம்மாளுக்கும் நாளைசூரியவுதயத்தில் திருக்கலியாண மென்று யானையின்மீது பேரிகைவைத்து அயோத்திமாநகரமுழுதும் அறிக்கைசெய்வாய் சேனாதிபதியே.

சேனாதிபதி-வ-ம்-அப்படியேசெய்துவருகிறேனையா.

சேனாதிபதி-மாவுத்தனுக்குச்சொல்-கவி.

திடங்கொள்மாவுத்தனே திரள்கரியொன்றில்
அடல்கொள்சிங்காரித் தகைகொண்டுவாராய்

மாவுத்தன்சொல்-வ-ம-அப்படியேயிதோகொண்டுவந்தேனையா.

சேனாதிபதி யானையின்மீதேறி பேரிகையறைகிற-வசனம்.

அகோராசாதிராசன் ராசபபிரகாசன் அயோத்திமகாராசன்ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் திருக்குமாரராகிய குசலராசனுக்கும் வாரணபுரியையாளப்பட்ட சோமகாசமகாராசன் மூத்தபுத்திரராகிய அரண்யமகாராசன்குமாரத்தி சௌபாக்கியவதிவிபுதையம்மாளுக்கும்நாளைத்தினஞ் சூரியவுதயத்திற்குத் திருக்கலியாணமானகையால் அதுகா

ரியத்திற்கு-மச்ச-மராட-கர்நாட-காம்போச-காளிங்கருக்கு- சூட சர் மகதர்-குருதர்-சாளவர்-வங்கர்-அங்கர்-கொங்கணர்-துள்ளர் சுழர்-சவு டர்-யவுனர்முதலாகிய ஐம்பத்தாறுதேசத்து ராசர்களும் எங்கள் அ யோத்தியாபுரியிலுள்ளவர்களும்வந்துசேரவேண்டியதுதிடும் திடும் தி டும் திடும்.

பொதுதிபிதை-திருக்கலியாணஞ்செய்தல்.

துங்கமுறுமுத்து நவரத்னத்தாலுஞ் சொர்ணமரகததோரணி த்தாலும் பொங்குமுலுஞ்சதூர்ப்பந்த லமைத்துவின்னோர்புளக மேதினியோர் வியப்பதாகத் திங்கள்முகவிபுதைபெனும்பின்னுள்வ சேர்ந்தவுடனரசர்களிச் செய்திகேட்டுந் தங்கள்தங்கள் பதியைவிட வந்தெல்லோருஞ் சார்ந்திட்டார் மனக்களிப்புகூர்ந்திட்டாரே·

கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம் அட-தாளம்.

ராசர்கள்வந்து சேரவே-ரா
ராமராச்சியங்களிப் பேறவே
வாசம்பலவிதமாய் வீசவே-வர்
மறையவாறுநீளப் பேசவே
மகதர்குருதரீமூர் வருகவே-ப
வாத்தியவோசைகள் பெருகவே
ககனத்திற்பூமழை பெய்யவே-திருக்
கல்யாணச்சடங்குகள் செய்யவே
சித்திரதீபங்க ளேற்றினர்-அந்த
தெருவெங்கும்தூபங்கள் சாற்றினர்
முத்துநகைகளை யிட்டனர்-மன
மொய்க்கவேபுறப் பட்டனர்
அரண்யராசர்மனம பூரிக்க-அவ்வ
யண்டினோர்கள்மெய் பரிக்க
கருணையுள்ளவர்கள் மொய்க்கவே-சில
கணிகையர்கண்கள் பிர்மிக்கவே
மின்னார்கள்நடனங்க ளாடவும்-சில
மின்னார்கள்சங்கீதம் பாடவும்
பொன்னாற்கவரிகள் வீசவும்-சில
பூவையர்புதுமைகள் பேசவும்
மணவரைமீதினி லேறவே-பக்க
வதிஷ்டர்வால்மீகருட் காரவே
இணையிலோமாக்கினி வளர்த்தார்-தரு
மென்னும்பயிரை விளைத்தார்
சீதைமனங்களிப் பேறவும்-எங்கள்
ஸ்ரீராமர்களிப் பூறவும்

மாதவராசிகள் சாற்றவும்-வேத
மறையரட்சனதையை தூற்றவும்
திருமங்கிலியந் தரித்தார்யாவருந்
சேர்ந்தட்சதையை விரித்தார்
இருவருங்கையைப் பிடித்தார்வசிஷ்ட
ரெல்லாச்சடங்கு முடித்தார்

பொது-திபிதை,

சந்தனப்புட்பத்தோரி தாம்பூலமளித்துயார்க்கும்
பந்திபோசனங்களிட்டுப் பாங்குடனுபசரித்து
சுந்தரமனைத்தின்சேதிசொல்லிக்கொண்டிருக்கவிப்பால்
அந்தமாய்சோபனங்களதுசெயனினைந்திட்டாரோ

ராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-திபிதை.

கனமுடனெதிரில்நிற்குங் கட்டியக்காரரகேளாய்
மனையினிற்குசலனுக்கு வளர்ச்சுபசோபனங்கள்
இனிதுடநடப்பதாலே யிரவியிற்பார்ப்பனியையீயும்
மனமுடனழைத்துசோப னம்பாடச்செய்குவாயே.

வ-ம்-அகோவாருங்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடையகுசலராசனுக்குச் சுபசோபனமாகையால் இன்றிரவில் பிராமணமாதனை அழைப்பித்துச் சோபனம்பாடச்செய்குவாயே.

கட்டியக்காரன்-வசனம்-அப்படியேசெயதுவைக்கிறேன்சுவாமி

கட்டியக்காரன்-பிராமணமதருக்குச்சொல்-திபிதை

தனமிகத்தருவோமுங்கள் தன்மனங்குளுங்கயெங்கள்
இனமிகமகிழ்வதாக யிருகரங்கூப்பிநின்றுய்க்
கனமுடனிடைகுலுங்கக் கட்டியனுன்மகிழ்வதாகத்
தொனியுடன்வந்திப்போது சோபனம்பாடுவீரோ

வ-ம்-அகோவாரும்பிராமணமாதர்களேஉங்களுக்குநல்லவெகுமதிதருகிறோம் யாவருமநானுமெச்சும்படியாய் ராமர்மனையில்சோபனம்பாடவேணும் வருகுவீர் பிராமணமாதர்களே.

பிராமணமாதர்கள்-வ.ம்-இதோவருகிரோம்ஐயா,

சோபனம்-தரு-இ-ம்-புந்நாகவராளிஆதிதாளம்

சோபனமடிசோபனமே சுபசோபனம்சோபனமே,

பூபனும்ஸ்ரீ ராமருக்கும்
புண்ணியவசிஷ்டர் வால்மீகருக்கும் (சோப)
லட்சுமணருக்கும் பாதருக்கும்
நாடறியசத் துருக்கருக்கும் (சோப)
மும்மூர்த்திகளுக்குந் தும்பிமுகனுக்கும்
முருகனுக்கும் மறையவர்களுக்கும் (சோப)
முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும்
முனிவர்சந்திரர் சூரியனுக்கும்(சோப)



ஸ்ரீராமஜெயம

குசலராஜனுக்கு

இளவரசுபட்டங்கட்டல்.

(*)

பொது நிபிதை.

மாதவவஷிஷ்டர் வால்மீகர்பிறகு மகிழ்ந்லைக் கோட்டுமாமுனிவர்............*

போதகண்ணு பருங் கௌசிகர்முதலாய்ப் பூதலமன்னவர் சூழங்...........*

காதல்சேரவே போத்திரதாமமூர்த்தி காளையாங் குசலராசனுக்குப்.........*

பூதலமகிழ யிளவரசதனைப் பூணுவர்களிப்பு காணுவரே.....................*

ஸ்ரீராமர்-குசலராஜனுக்கு-இளவரசுபட்டங்கட்டுகிற, தரு-இ ம்-ஆதிதாளம்.

பல்லவி.

இளவரசுபட்டங்கொண்டானே குசலராசன் இளவரசுபட்டங் கொண்டானே

அனுபல்லவி,

துளபமுனிவர்களும் களபமனிதர்களும் உளமகிழ்ராஜர்களும் தளகர்த்தருடன்வர (இளவரசு

சரணங்கள்.

தேவதுந்துபிபோட சித்தகின்னராபட பாவலரந்தணர் பலவாள்வாழிகள்பாட இளவரசு
வசிஷ்டாவிஸ்வாமித்திரர் வால்மீகர்மகிழ்வுற இஷ்டமுடனேநாடியேகவாத்தியஞ்சாட இளவரசு
பரதசத்துருக்கருக்கும் பாங்குடனருகில்வர நரபதியோர்கள்காண நங்கையர்கடனமிட இளவரசு

வா ழி தி ரு நா ம ம்,

சீர்மிகுந்நாடகமும்வாழி ஸ்ரீராமர்வாழி யிளையோருடன்வாழி
பார்மிகுந்தஜானகியாளனவோர்வாழி பெருமைமிகுமுநிமேயார்கள்மன்னர்வாழி
பார்மிகுந்தயிந்தநன்னாடகத்தைப் பண்புடனேபாடினபேர்பார்த்தபேர்களும
ஏர்மிகுந்தவுலகிலிதைப்படிப்போர்கேட்போ ரியாவர்களுமின்பமுறவாழிமாதே,

குசலநாடக முற்றிற்று,

உ

சிவமயம்.

விளம்பரம்

இதனால் யாவருக்குந் தெரிவிப்பது யாதெனில் சென்னைபுரம் பூருக்கடுத்த குசப்பேட்டை படவேட்டம்மன் கோவில்வீதி (15) வது கதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீ பிடாரித்தாங்கள் நாராயணசாமி முதலியார் குமாரர் பி - சிதம்பரமுதலியார் சிரோன்மணிவிலாச அச்சுக்கூடத்தில நாநாவித தமிழ் தெலுங்கு கிரந்தம துலுக்கு முதலான புத்தகங்களும் வைத்திய சாஸ்திரங்களும ஜோசியங்களும் நூதனமான ஜாவளிகளும காவேலஜி புத்தகங்களும் புஷ்பரத செட்டியார் புத்தகங்களும் நாவலர்புத்தகங்களும இன்னும தேவையான புத்தகங்களும் சரசமான விலைக்கு ஷெ யாரிடத்தில் வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளாம்.

இப்பொழுது நூதனமாய் அச்சிட்டிருக்கும் தொடுகுறி அங்கக்குறி இராவணேஸ்வரன்கும்மி மலைக்கியர்சாஸ்திரம் தேவையானவர்கள் ஷெ யாரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

இப்படிக்கு,

சிதம்பரமுதலியார்